# கனவு மெய்ப்பட வேண்டும்

நாவல்



ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு மெய்ப்பட வேண்டும்

நாவல்

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கனவு மெய்ப்பட வேண்டும் |
| ஆசிரியர் | : | ச. அருளானந்தம் (கேணிப்பித்தன்) |
| வகை | : | நாவல் இலக்கியம். |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| அட்டைப் படம் | : | ச.அ.அருள்பாஸ்கரன். |
| முதற்பதிப்பு | : | 15 07 - 2009 |
| வெளியீடு | : | அருள் வெளியீட்டகம்<br>37 / 7, மத்திய வீதி, உவர்மலை-<br>திருகோணமலை.<br>தொலைபேசி இல: 026-2221507. |
| கிடைக்குமிடம் | : | லங்கா புத்தகசாலை.<br>14.1. டயஸ் பிளேஸ்.<br>குணசிங்கபுரம்.<br>கொழும்பு-12.<br>தொ.பே. இல: 011- 2341942 |
| ISBN | : | 978-955-51451-3-8 |
| விலை | : | ரூபாய் 200/= |

**சமர்ப்பணம்**

அல்லலுக்கு உள்ளாகி நித்தம் வாடும் இளைய சமூகத்தினருக்கு

- ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இந்த நாவலை எழுதவேண்டும் என்று பல ஆண்டுகளாக முனைந்தேன். சந்தர்ப்பம் கிடைக்காது போயிற்று. இது கற்பனைகலந்த உண்மை. இதில் வரும் கதாபாத்திரங்களில் பல உண்மையானவை. 'நான் பெற்ற துன்பம் பெறாதிருக்க இவ்வையகம்' என்பதற்காக இதனை எழுதத் துணிந்தேன். என்னுடன் 1983 தொடக்கம் 1991 வரை வவுனியாவில் வட்டாரக்கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. செல்வராசா கணபதிப்பிள்ளை அவர்கள் இதனை நாவலாக எழுதும்படி வற்புறுத்தி இருந்தார். அவரது **வேண்டுகோள் இந்த நாவல்மூலம் நிறைவேறுகிறது.** அவர் இப்போது எங்கிருக்கிறார் என்பதை நானறியேன்.

சம்பவங்கள் பல நிறைந்துள்ள இந்நாவலில் இன்பமும், துன்பமும், சமூக அவலங்களும் பின்னிப் பிணைந்திருப்பதைக் காணலாம். நாம் நல்லனவற்றைச் செய்தால் நன்மைதான் விளையும். சுடச்சுடத்தானே பொன் மிளிரும். அதைப்போன்றுதான், மனிதனுக்குத் துயரங்கள் வரும்போது அவற்றை நமக்கு வரும் சோதனைகளாக எடுத்துக் கொண்டால் வெற்றி காண்பது உறுதி. 'சவாலே சமாளி' என்பதுதான் தாரக மந்திரமாக இருக்க வேண்டும். 'காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்' என்று ஏன்சொன்னார்களோ தெரியாது. சிலர் அதனைத் தங்களுக்குச் சாதகமாக்கி மக்களை ஏமாற்றுவதற்குப் பயன்படுத்துவதையே காண்கிறோம்.

இந்த நாவலில் வரும் நிகழ்வுகள் 1984 - 86 வரையான காலப்பகுதிக்குரியன. அக்காலப் பகுதிக்குள் நமது நாட்டுநிலையைச் சொல்வதாக இருந்தாலும் அதற்கு முன்னர் 1959-1976 வரையான காலப் பகுதிகளிலும், பின்னரும் நடந்தேறிய சில சம்பவங்களும் சுவையூட்டுவனவாக உள்ளன. நமது இளைஞர்களின் துயரங்களும் அதனால் அல்லலுற்ற பெற்றோரின் அவலங்களும் விபரிக்கப் படுகின்றன. இந்த நாவலூடாகச் சில வரலாற்றுப் பதிவுகளையும் சேர்த்துள்ளேன். நானில்லாத காலத்தில் எனக்குப் பின்வரும் சந்ததியினருக்காகச் சில தடயங்களைச் சொல்லிவைப்பது எனது கடமையென உணர்ந்ததால் அவ்வாறு செய்தேன். படித்து அறிந்து கொள்வது வாசகர்களாகிய உங்களது கடமையாகும். 'நான் பட்ட துன்பம் பெறாதிருக்க இவ்வையகம்'. சிறப்பாகத் தமிழ் இளைஞர்கள் பெறாதிருக்கப் பிராத்திக்கின்றேன். 'சேரசோழ பாண்டியர்கள் சேர்ந்தொன்றாய் வாழா'த தமிழினத்தில் 'தமிழனுக்குத் தமிழனே எதிரி' என்பதனையும் 'தமிழர்கள் என்று ஒன்று படுவார்களோ அன்றுதான் தமிழினத்துக்கு விடிவுநாளாகும் என்பதனையும் உணர்ந்து செயற்படுங்கள். இந்நூலுக்கு அணிந்துரை தந்துதவிய கலாநிதி செங்கை ஆழியான் அவர்களுக்கும் பின்னட்டையில் அறிமுகம் செய்யும் "தேசகீர்த்தி" வ. கலைச்செல்வன் அவர்களுக்கும் அட்டைப்படம் வரைந்த எனது மகன் ச.அ. அருள்பாஸ்கரன், செவ்வை பார்த்துதவிய உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. செ. விபுணசேகரம், ஆசிரியர் திரு. நாகலிங்கம், B.A., அவர்களுக்கும் அழகுற அச்சிட்ட நிஷான் பிரின்டர்ஸ், சந்தைப்படுத்த உதவும் லங்கா புத்தகசாலை முகாமையாளர் திரு. கே. சதீஸ், மற்றும் அலுவலர்களுக்கும் வாசக அன்பர்களுக்கும் மனமார்ந்த நன்றி.

ஆலங்கேணி
கிண்ணியா

கேணிப்பித்தன் ச.அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ஈழத்தில் இன்றுவரை 500 வரையிலான நாவல்கள் பல்வேறு களத்தில், பல்வேறு உள்ளடக்கத்தில், பல்வேறு வடிவங்களில் வெளிவந்துள்ளன. 1856இல் வெளிவந்த காவலப்பன் கதையிலிருந்து 2009இல் வெளிவந்துள்ள அருளானந்தத்தின் இந்த நாவல்வரை 500 வரையிலான நாவல்கள் என்கணிப்பின்படி வெளிவந்துள்ளன. தி.ச.சரவணமுத்துப்பிள்ளை (மோகனாங்கி-1896) மங்களநாயகி தம்பையா (நொறுங்குண்ட இருதயம் -1914) இடைக்காடர் (நீலகண்டன் -1925) ம.வே.திருஞானசம்பந்தம்பிள்ளை (கோபால நேசரத்தினம் -1927) ஆகியோரிட்ட ஈழத்து நாவல் மாளிகையின் அத்திவாரத்தின் மேல் வ.அ.இராசரத்தினம் (கொழுகொம்பு -1955) தேவன் -யாழ்ப்பாணம் (கேட்டதும் நடந்ததும் -1956) ஆகியோர் அத்திபாரத்துக்கு நீர்மட்டம் இட்டனர். இதன்மீது சுவர் எழுப்புகின்ற பணியை இளங்கீரன் (நீதியே நீ கேள் -1959) நந்தி (மலைக்கொழுந்து -1964) செ.கணேசலிங்கம்(நீண்ட பயணம் -1965) கே.டானியல் (பஞ்சமர் -1967) ஆகியோர் ஆற்றினர். செங்கைஆழியான் (காட்டாறு 1977) முதலாக நாவலிலக்கியத்தில் ஈடுபட்டுழைக்கும் இன்றைய படைப்பாளிகள் ஈழத்து நாவல் மாளிகையைக் கூரை மட்டத்திற்கு எடுத்துச் சென்றவர்களாவார்.

அம்மாளிகைக்குக் கூரையிடுகின்ற பணி பாக்கியுள்ளது. புதிய பரம்பரையினர் அப்பணியை ஆற்றுவர் என்பதில் ஐயமில்லை. கூரை மட்டத்துக்கு எடுத்து வந்தவர்களில் ஒருவர் அருளானந்தம் ஆவார். மாட்டின் விக்கிரமசிங்க என்ற புகழ்பூத்த சிங்கள நாவலாசிரியர் எழுதிய 'கிராமப் பிறழ்வு' என்ற நாவல் 1964 இல் ம.மு.உவைஸ் தமிழாக்கத்தில் வெளிவந்தது. ஒருகிராமம் எவ்வாறு நகரமாகப் பிறழ்கிறதென்பதை அந்த நாவல் சித்தரிக்கிறது. அந்தவகையில் ஒரு பிற்போக்கான கிராமம் உயிர்ப்போடு விழித்தெழுந்து முழுமையான வசதிகள் நிறைந்த ஒரு கிராமமாக மாறுவாதைப் பொருளாகக் கொண்டு 'வாக்கினிலே இனிமை வேண்டும்' என்ற நாவலை அருளானந்தம் தந்திருந்தார்.

'கனவு மெய்ப்பட வேண்டும்' என்ற இந்த நாவலை இப்போது உங்கள்முன் தந்துள்ளார். நாவலில் கதையம்சம் இதுவரை முக்கியம் பெற்று வந்திருக்கிறது. பாத்திரங்கள் தம் பலத்தோடும், பலவீனத்தோடும் நாவலில் வலம்வரும் இந்தப் பாரம்பரிய வரண்முறையை அருளானந்தம் இந்தப் புனைகதையில் தகர்க்கிறார். உள்ளடக்க உருவ மரபுக்கட்டவிழ்ப்பு என்பது பின் நவீனத்துவத்தின் இன்றைய முக்கிய பண்பாகும். படைப்பனுபவத்தின் வெளிப்பாடான இந்தக் கட்டவிழ்ப்பை அவர் தெரிந்து செய்தாரா அல்லது தற்செயலான ஆழ்மன உந்துதலின் விபத்தா? என்ற மனவுணர்வு எனக்கு ஏற்படுகிறது. எவ்வாறாயினும் புனைகதைத் துறையில் புதியதொரு அறுவடையை அவரது நாவல்கள் ஊடாக அருளானந்தம் அறிமுகப்படுத்தியுள்ளார்.

மக்களால் எதுவும் முடியும். சரியான வழிகாட்டல் அமையும்போது சமூகப்புரட்சி உருவாகும். ஒரு படைப்பு படிப்பவர்களுக்கு ஒரு சமூகப்பயனைச் சுட்டவேண்டும் என்ற ஆதங்கத்தை உடையவர்களுக்கு இந்த நாவல் சுவைதரும் மாங்கனி. இந் நாவல் நமது சமூகக் கட்டமைப்பின் தன்மையைப் படம்பிடித்துக் காட்டுகிறது. இங்கும் கல்விப்பணியாற்றும் ஒரு அதிகாரி தனது புரட்சிகரப் போக்கினால் கல்விச் சமூகத்தை இயக்கி வழிப்படுத்துகிறார். அதனால் அவலத்துக்கு உள்ளாகுவதையும், சாத்வீகத்தின் ஊடாக வெற்றியடைவதையும் சித்தரித்துக் காட்டுகிறார். அவரது அனுபவம் இத்தகைய நாவலுக்குக் களம் அமைத்துக் கொடுத்துள்ளது. படைப்பில் புதிய முயற்சி. கதை அம்சத்தோடு இந்த நாவலை இன்னமும் முழுமையாகத் தர அருளானந்தத்தால் முடியும். ஒரு சமூகத்தின் அபிவிருத்திக்கான பங்களிப்பு என்ற ஒரு பக்கத்தோடு நில்லாது அச்சமூகத்தின் வாழ்வியற் கோலங்களையும் இந்தப் படைப்பில் இணைத்திருப்பது ஒரு நிறைவைக் கொடுக்கிறது.

செங்கை ஆழியான் க.குணராசா.
75/10A பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

ஆனந்தனுக்கு அந்த நீல ஜீன்ஸ் எடுப்பாகத்தான் இருந்தது. உடலொட்டிய டெனிம் ஜீன்ஸ்சுக்குப் பொருத்தமான மெல்லிய நீலநிற சேட். அவனது செம்மஞ்சள் மேனிக்குக் கச்சிதமாக இருந்தது. இடுப்புப் பட்டி மின்ன அவன் நடப்பது அழகாக இருந்தது. இடக்கண்ணுக்கு நேரே உச்சியிலிருந்து ஒரு அங்குல இடை வெளியில் எடுத்துவிட்ட வகிடு. நெற்றியில் சுருளாக விழுந்து காற்றில் அலையும் சுருள்முடி. அழகிய அரும்பு மீசை. எந்த நேரமும் முறுவல் ஓடும் இதழ்கள். கனிவான பேச்சு. கம்பிரமான ஒலி. நடையில் ஒரு மிடுக்கு. அனைவரையும் மதிக்கும் பண்பு. அன்போடு உறவாடும் தன்மை. இது ஆனந்தனின் இயல்பு.

அதனால் அந்தத் திணைக்களத்தில் அவனுக்குப் பெருமதிப்பு ஏற்பட்டதில் வியப்பில்லை. அவன் உயர்பதவி வகித்தாலும் அதிகாரத்தைப் பயன்படுத்துவதும் இல்லை. எல்லாரோடும் சகஜமாகப் பழகுவான். அவன் வவுனியா நகருக்கு இடமாற்றம் பெற்று வந்து ஆறுமாதங்கள்தான் ஆகின்றன. இந்த ஆறுமாதங்களில் நல்லதொரு உயரதிகாரி தமக்குக் கிடைத்து விட்டதாக அனைவரும் உணரத்தொடங்கி விட்டனர். அவனை உயரதிகாரியாக நினைத்ததே இல்லை. தங்களுக்குக் கிடைத்த உறவினனாகவே அனைவரும் கருதினர்.

அது மார்கழி மாதம். மாதங்களில் சிறந்தது மார்கழி என்பார்கள். இயற்கையின் அழகு துள்ளி விளையாடும். மார்கழியில் மயிர் நனையாத் தூறலாமே? மழைத்தூறல்களைக் கையிலேந்திப் பார்க்க ஆசை. பார்த்தால் என்ன? கைகளை நீட்டினான். கைகளில் குளிர்தடவி விட்ட உணர்வுமட்டும் புரிந்தது. இரு கைகளையும் சேர்த்துத் தேய்த்துக் கொண்டான். மழையோடு பனி கலந்து இறைக்கும் அற்புதம். குளிர் காற்று வீசி முகத்தில் அறையும் சிலிர்ப்பு. அது இங்கிதத்தை அள்ளி இறைக்கும் பக்குவம். மார்கழியில்தான் வருடத்துக்கான பரீட்சைகள் பள்ளிகளில் நடைபெறும். இலங்கையில் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை முக்கியமானது. கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்தது. இக்காலங்களில் கல்வி சார்ந்த அலுவலர்களும், அதிபர், ஆசிரியர்களும் மாணவர்களும் இயந்திர கதியில் இயங்குவார்கள். நகரம் சுறுசுறுப்பாக இயங்கும். பரீட்சைகள் முடிவுற்றதும் நகரம் சோபை இழந்ததுபோல் காட்சிதரும்.

வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்று விளையாடிக் கொண்டிருந்தது. வவுனியா மாவட்டம் மாரியில் நீந்திக் கொண்டிருந்தது. குளங்கள் நிறைந்து வளம்பெருக வேண்டும். இது அக்கால மன்னர்களது வைராக்கியமாகும். அக்கால மன்னர்கள் ஏராளமான குளங்களைக் கட்டி வைத்திருந்தனர். மன்னர்களுக்குள் தமிழர் சிங்களவர் என்ற பாகுபாடு இருக்கவில்லை. அவ்வாறுதான் ஆட்சி செய்துள்ளனர். சிங்கள மன்னர்களானாலும், தமிழ் மன்னர்களானாலும் அவர்கள் அனைவரும் பதவி ஆசை கொண்டவர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு அரச பரம்பரையில்தான் கரிசனை. அரசர்களுக்கு மொழி, இனம். நாடு முக்கியமல்ல. திருமணங்கள் அரச பரம்பரையில்தான் செய்து கொள்வார்கள். தூய்மையான அரச பரம்பரை எந்த நாட்டிலும் இல்லை. ஆனால் சாதாரண பிரசைகள் தங்களது சாதி, மொழி, இனங்களை விட்டுவிலகாது இருக்கவேண்டும். இதில் கரிசனை காட்டினார்கள். நாடு செழிக்கவும் தமது பரம்பரை நல்லநிலை பெறவும் கவனம் செலுத்தினார்கள். அதற்காகப் பாடுபட்டார்கள். குளங்களை அமைத்தார்கள்.

வவுனியாவிலும் குளங்கள் ஏராளம் உண்டு. இப்போதுள்ள வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கப்பாலும் வன்னி இராச்சியம் பரந்திருந்தது. வர்ணாச்சிரம தர்மம் என்பார்களே அது அக்காலத்தில் நிலவியது. அதற்கேற்பக் குளங்களும் அமைக்கப் பட்டன. அவ்வாறு அமைந்த குளங்கள் வன்னிப்பிரதேசத்திலும் உண்டு. இந்த மாரியில் அவை நிறைந்து வழிந்து கொண்டிருந்தன. மரங்கள் மதாளித்துச் சிலிர்த்தன. குரங்குகள் கொப்புகளில் குளிர்காய்ந்தன. வீதிகளில் குறுக்கறுத்து மழைநீர் சலசலத்தது. வழிந்து சிறுகால்வாய்களூடாக ஓடியது. அதில் அடையல்கள் சவாரி செய்தன. குடைகள் உலா வந்தன. வாகனங்கள் மழைநீரை வாரியடித்துச் சென்றன. இராணுவ வாகனங்கள் வேகமாக வரும். மக்கள் ஒதுங்கிக் கொள்ள வேண்டும். தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். தற்செயலாக மோதுண்டால் அவ்வளவுதான். இராணுவத்தைத் தாக்க முயன்றதாகக் குற்றம் பதியப்படும். மக்களையும் இராணுவத்தினர் வாட்டி வதைத்தெடுத்தனர். அடாவடித் தனம் தலைவிரித்தாடியது. பாரதி சொல்வானே 'பேயரசாண்டால் பிணந்தின்னும் சாத்திரம்' என்று. அவ்வகை இனவாத ஆட்சி. நாட்டு நடப்பு அப்படி இருந்தது. பெரும்பான்மை இனத்தவரின் ஆட்சி. அதனால் சிறுபான்மை மக்கள்மேல் அராஜகம் கட்டவிழ்க்கப் பட்டிருந்தது. தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் இராணுவத்தினர் குவிக்கப் பட்டிருந்தனர். அவர்களின் அட்டகாசம் அதிகரித்திருந்தது.

வவுனியா வடக்கையும் தெற்கையும் இணைக்கும் சந்தைப் பெருநகராக விளங்குகிறது. வவுனியா நகரின் சந்தி முக்கியமானது. அச்சந்தியில் இருந்து இலங்கையின் எந்தப் பகுதிகளுக்கும் செல்வதற்கான போக்கு வரத்துச் சேவைகள் உண்டு. தெற்கின் விளைபொருட்கள் வந்து குவியும். வடக்கிலிருந்து புகையிலை, வெங்காயம், வாழைக்குலைகள் என ஏராளம் வரும். லொறிகளில் ஏற்றப்பட்டதும் தெற்குநோக்கி விரையும். தெற்கின் பண்டங்கள் வடக்கு நோக்கிப் பயணமாகும். சந்தை இரைந்து கொண்டிருக்கும். புகைவண்டிச் சேவைகள் வடக்கு நோக்கியும், தெற்கு நோக்கியும் விரைந்து கொண்டிருக்கும். மூவின மக்களும் ஒன்றுகூடி மகிழும் இடமாக வவுனியா திகழ்கிறது. அரச, அரசசார்பற்ற, தனியார் நிறுவனங்கள் நகரில் ஆங்காங்கு தத்தம் நாளாந்த நடவடிக்கைகளில் மூழ்கியிருந்தன. அதேபோல் இராணுவத்தின் கெடுபிடிகளும் தொடர்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி வீதியால் அந்த லாண்ட்றோவர் விரைந்து கொண்டிருந்தது. கல்வித் திணைக்கள வளாகத்தினுள் வாகனம் நுழைந்தது. லாண்ட்றோவரில் இருந்து ஆனந்தன் இறங்கினான். அவனது கையில் பல ஆவணங்கள் இருந்தன. அவை யாவும் பரீட்சை சம்பந்தமான ஆவணங்கள். ஆனந்தன் பல பரீட்சை நிலையங்களின் இணைப்பாளராகச் செயற்பட்டுக் கொண்டிருந்தான். பரீட்சைத் திணைக்களத்தில் இருந்து வினாத்தள்கள் அடங்கிய பொதிகள் வந்திருந்தன. அவற்றைப் பெற்றுக் காவல்துறையினரின் நிலையத்தில் பத்திரமாக வைத்திருந்தான். காலையில் வினாப்பொதிகளை எடுத்துவருதல், பரீட்சை நிலையங்களுக்குப் பகிர்ந்து கொடுத்தல், பரீட்சை முடிவுற்றதும் விடைப்பொதிகளை ஒன்று சேர்த்து மத்திய இணைப்பு நிலையத்தில் ஒப்படைத்தல் ஆகிய கடமைகள் ஆனந்தனிடம் கொடுபட்டிருந்தன.

மழை அனைவரையும் ஆட்டிப்படைத்தது. ஆனந்தன் மட்டுமல்ல பரீட்சைக் கடமையில் ஈடுபட்ட அனைவரும் களைத்திருந்தனர். காலையில் வழமைபோல் வினாத்தாள் பொதிகளை எடுத்துக் கொண்டான். எங்கும் மழைநீரின் அட்டகாசம். பெருவெள்ளக் காடாய் வவுனியா காட்சி தந்தது. வாகன வசதி போதுமானதாக இல்லை. ஒரு வாகனத்தில் இரண்டு பகுதிகளுக்குச் செல்லவேண்டும். கடந்த நான்கு நாட்களாக இவ்வாறு சமாளித்தாகி விட்டது. ஆனால் இன்று பெருஞ்சவாலை எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஓமந்தை அழகானதொரு சிறிய நகர். மருதநிலத்தின் அழகு தலைவிரித்தாடும். நிலம் விளைந்து நெற்கதிர்கள் சாய்ந்து படுத்திருக்கும். ஆநிரைகள் கூட்டங்கூட்டமாய்த் திரியும். படித்தவர்களின் முயற்சியால் பெரியதொரு உயர்நிலைப் பள்ளிக்கூடம் நிமிர்ந்து நின்றது. அந்தப் பள்ளிக்கூடம் ஒரு பரீட்சை மத்திய நிலையமாக இயங்கியது. ஓமந்தைப் பரீட்சை நிலையத்துக்குச் செல்வதே பெரும்பாடாய் இருந்தது. நேரம் ஓடிக்கொண்டிருந்தது. காலை எட்டரை மணிக்குப் பரீட்சை தொடங்கும். அதற்குமுன் வினாத்தாள் பொதிகளை ஒப்படைக்க வேண்டும். ஒரு வாகனத்தை வாடகைக்கு அமர்த்தினான்.

உதவிப்பணிப்பாளர் செல்வம் வினாப் பொதிகளுடன் தயாராக நின்றார். அவர் ஒரு மேதை. அதிகாலை மூன்றுமணிக்கு எழுந்து விடுவார். குளித்து தேநீர் தயாரித்துக் குடிப்பார். ஆங்கிலப் புத்தகங்களை வாசித்து இரசிப்பார். இரசித்துச் சுவைத்தவற்றை அழகாக எடுத்து விளக்குவார். சேக்ஸ்பியரின் யூலியஸ்சீசர் நாடகம் அற்புதமானது. அதில் அந்தனியின் பேச்சு மிகவும் சுவாரஸ்யமானது. அந்தப் பேச்சு அவருக்குத் தண்ணிபட்ட பாடம். நடித்தவாறு பேசிக்காட்டுவார். பாராளுமன்றத்தில் அன்றைய உறுப்பினர்களின் வாதப்பிரதிவாதங்களைப் படித்துவிட்டு பேசிக்காட்டுவார். வழக்கறிஞர் அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களது நீதிமன்ற வாதங்களை அப்படியே பேசுவார். ஆங்கிலம் ஆற்றொழுக்காக ஓடும். செல்வராசா அவரது பெயர். ஆனால் அவர் தனது பெயரின் முதல் எழுத்தை மட்டும் எழுதி தனது அப்பாவின் பெயரான கணபதிப்பிள்ளை என்பதையே எழுதுவார். தனது தந்தையின் பெயரால் அழைக்கப் படுவதையே பெரிதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பினார். தந்தையை இளமையிலேயே இழந்துவிட்டார். தனது தாயையும், தம்பிமார்களையும் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுவிட்டார். திருமணம் செய்யாத கட்டைப் பிரமச்சாரி. அவரை அந்த வாடகை வாகனத்தில் அனுப்பி வைத்தான். அவர் ஓமந்தைப் பரீட்சை நிலையத்துக்கு உரிய வினாப் பொதிகளோடு சென்று விட்டார். மற்ற வாகனத்தில் பாவற்குளம் பரீட்சை நிலையத்துக்கு விரைந்தான்.

பாவற்குளம் பண்டையப் பெருமைகளுக்கு உதாரணமாய் விளங்கியது. வன்னிவள நாட்டின் பொருளாதாரத் தொட்டில் அது. குளம் தொட்டு வளம் பெருக்கும் பூமி. பயிர் செழித்து விளைச்சலைக் கொடுக்கும் வளமான மண் நிறைந்தது. நாடு சுதந்திரம் பெற்றபின் குடியேற்றத் திட்டங்கள் என்ற பெயரால் பெரும்பான்மை மக்களைத் தமிழ்ப் பிரதேசங்களைக் கைப்பற்றி அவர்களை குடியேற்றும் நோக்குடன் செயற்படுத்திய திட்டங்களில் ஒன்றுதான் பாவற்குளம் குடியேற்றத் திட்டம். தமிழர்கள் பெரும்பான்மையாகக் குடியேற வேண்டிய பகுதிகளில் பெரும்பான்மை இனத்தவர்களைக் குடியேற்றி சகல வசதிகளையும் அரசு செய்து கொடுத்திருந்தது. பாவற்குளம் பாரிய குளமாகும். அது உடைப்பெடுத்து வீதியின் குறுக்காகப் பாய்ந்து கொண்டிருந்தது. அதிலிருந்து அரை கிலோ மீற்றர் தூரத்தில்தான் பரீட்சை நிலையம் இருந்தது. ஆனாலும் எப்படிப் போவது. பேரிரைச்சலோடு வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது.

அவனுக்குச் சிந்திக்க அவகாசமேது? அந்தக் குளிரிலும் வியர்த்துக் கொட்டியது. நேரத்தைப் பார்த்தான். ஒன்பதைத் தாண்டிவிட்டது. சாரதி காசிம் வானத்தைப் பார்த்தான். அது இருண்டு கறுத்து உறுமியது. இடைவிட்ட மின்னல். இடையிடையே இடியோசை காதைப் பிளந்தது. "காசிம் வாகனத்தைத் திருப்புங்கள். மதவாச்சி வழியாகப் போவோம்." கூறிமுடிக்குமுன் வாகனம் திரும்பியது. காசிம் தனது கடமையில் கண்ணானவர்.

வழிநெடுகிலும் மழைநீர். நீரைக் கிழித்து வாகனம் விரைந்தது. ஈரற்பெரியகுளத்தைத் தாண்டி மதவாச்சிச் சந்தியில் வலப்பக்கமாகத் திரும்பி மன்னார் வீதியால் வாகனம் சென்றது. சரியாகப் பத்து மணிக்குப் பரீட்சை நிலையம் வந்துவிட்டான். ஆனந்தனைக் கண்ட அதிபர் சீனிவாசகம் முகம்மலர்ந்து வரவேற்றார். சீனிவாசகம் கட்டுமஸ்தான உடலுடையவர். மகாபாரதத்தில் வரும் பீமனின் சாயலை அவரில் காணலாம். சிரிக்கும் போது கன்னத்தில் ஒரு குழி விழும். சிறிதாகக் கண்ணிமைகள் மூடியிருக்கும். பாதிவிழிகள் தெரியும். பாடசாலைக்காகவும், மாணவர்களது எதிர்காலத்துக்காகவும் உழைப்பவர். கடமை உணர்ச்சி உள்ளவர். வவுனியா மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபடுபவர். உரிய நேரத்துக்குப் பரீட்சை நடைபெறுவதில் அக்கறை உள்ளவர். வினாப் பொதிகளை பெற்றதும் இயந்திரமயமானார். வினாத்தாட்களை பரீட்சார்த்திகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநியோகித்தார். செல்வராசா அதிபர் அற்புதமான மனிதர். பிறருக்கு உதவுவதில் முன்நிற்பவர். அவர் சீனிவாசகத்தின் உதவிப் பரீட்சகராகச் செயற்பட்டார். இருவரும் சுறுசுறுப்பானார்கள். கடுகதியாக வினாத்தாள்களைப் பரிமாறினார்கள். ஏனைய உதவியாளர்களும் விரைந்து செயற்பட்டார்கள். வினாத்தாள்கள் கொடுபட்டன. வினாத்தாள்கள் கொடுபட்டபின்தான் ஆனந்தனுக்கு நிம்மதிப் பெருமூச்சுப் பறந்தது.

சீனிவாசகம் பரீட்சை நடைபெறுவதற்குரிய ஒழுங்குகளைச் செய்திருந்தார். பதகளிப்பால் சீனிவாசகத்தின் மூக்குக்கண்ணாடி கீழே விழுந்து விட்டது. அதிர்ஸ்ட்டவசமாக ஒரு கண்ணாடி தப்பிப் பிழைத்தது. 'இஸ்றெயில்' நாட்டின் முன்னாள் அமைச்சர் மோசிதயான் போல் ஒற்றைக் கண்ணாடியில் காட்சியாகிக் கொண்டிருந்தார். நமது நாடு பிரித்தானியரின் ஆட்சியில் இருந்தது. அப்போது சோல்பரிப்பிரபு ஆளுநராக இருந்தார். அவர் ஒற்றைக்கண்ணில் மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தார். எதற்காகக் கண்ணாடி அணிந்தாரோ தெரியாது. ஆனால் அப்போது நமது மக்கள் பேசிக்கொண்டார்கள். மக்கள் அனைவரும் தனது ஒரு கண்போன்றவர்கள். அவர்கள் அனைவரையும் ஒருகண்ணால்தான் பார்க்கவேண்டும் என்று அவர் ஒரு கண்ணுக்குக் கண்ணாடி அணிந்து நோக்கினாராம்.

அதேபோல் சீனிவாசகமும் கல்வி உலகத்தை ஒரு கண்ணாக மதித்தார். சீனிவாசகத்துக்கு ஒரு கண்ணாடி இல்லாதது குறையாகத் தெரியவில்லை. அவருக்குக் கடமைதான் முக்கியம். ஆனந்தனின் மனதில் சீனிவாசகத்தின் உருவம் படிந்து கொண்டது. அனுமானின் உள்ளத்தில் இராமனின் உருவம் எப்படி இடம்பிடித்ததோ அப்படியே சீனிவாசகத்தின் உருவம் பதிந்து கொண்டது. வானத்தில் இருள் சூழ்ந்து மூடிக்கொண்டது. பகற்பொழுது போல் இல்லை. பரீட்சை மண்டபத்துள் போதிய வெளிச்சம் இல்லை. ஊரவர்களின் உதவி அவருக்கு நிறையவே இருந்தது. பல 'பெற்றோமக்ஸ்' விளக்குகள் விரைந்து வந்தன. ஒவ்வொரு அறையிலும் பெற்றமக்ஸ். உரிய இடங்களில் ஒளிபரப்பிக் கொண்டிருந்தன.

முதல்நாள் நடைபெற்ற பரீட்சையின் விடைத்தாள் பொதிகளைப் பாதுகாப்பாகச் சீனிவாசகம் வைத்திருந்தார். அவற்றை அவர் ஆனந்தனிடம் ஒப்படைத்தார். அவற்றைப் பெற்றுக் கொண்டு திரும்பினான். மழை கொட்டிக் கொண்டிருந்தது. பசி வயிற்றைப் பிசைந்தது. தான் கொண்டு வந்த விடைத்தாள் பொதிகளை இணைப்பு நிலையத்தில் ஒப்படைத்தான். பதிவேட்டுப் பற்றுச் சீட்டுக்களைப் பெற்றான். நிம்மதிப் பெருமூச்சோடு மீண்டும் 'லான்ட் றோவரில்' ஏறிக் கொண்டான். செல்வமும் சேர்ந்து கொண்டார்.

"காசிம் நேரே சுத்தானந்தா ஹோட்டலுக்கு விடுங்கோ. சாப்பிடுவோம்." ஆனந்தன் முடிக்கவில்லை. ஜீப்வண்டி ஹோட்டல் பக்கம் திரும்பியது. மாற்றமாகிச் செல்லவிருந்த நண்பர் ராஜசுந்தரத்தின் நினைவு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரும் எதிரே வந்தார். அவரையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான். வாகனத்தின் ரயர்கள் மழைநீரைக் கிழித்து இரைந்து சென்று சுத்தானந்தா ஹோட்டலை அடைந்தது. உள்ளே சென்றார்கள். ஹோட்டல் அழகாக இருந்தது. சுத்தமாகவும் இருந்தது. மேசையில் இருந்த உணவுக்குரிய பட்டியலைப் பார்த்தான். விரும்பிய உணவு வகைகளைச் சுட்டிக்காட்டினான். உணவு மேசையில் குவிந்தது.

சாப்பிடும்போது யாரும் கதைக்கவும் இல்லை. அவ்வளவு பசி அவர்களுக்கு. உணவுக்கு மேல் வாழைப் பழத்தையும் விழுங்கினார்கள். ஆனந்தன் கட்டணத்தைச் செலுத்தினான். வெளியே வந்தார்கள். "இன்று யார் முகத்தில் விழித்தோம்?" செல்வம்தான் பேச்சைத் தொடங்கினார். "யார் முகத்தில் விழித்தாலும் கடமையைச் செய்ததில் மனத்திருப்தி ஏற்பட்டது. அல்லவா? அதற்காக நாம் கடவுளுக்குத்தான் நன்றி கூறவேண்டும்." ஆனந்தன் சொல்லிக் கொண்டு வாகனத்தில் ஏறினான். கண்டி வீதியில் அவர்கள் தங்கும் விடுதி இருந்தது. அந்த விடுதிக்கு வாகனம் சென்றது. வழியில் ராஜசுந்தரம் இறங்கிக் கொண்டார். அந்த விடுதி தூரத்தில் உள்ள மாணவர்கள் தங்கிப் படிப்பதற்காகக் கட்டப்பட்டது. விடுமுறைக் காலங்களில் பரீட்சை எடுக்கும் மாணவர்கள் மட்டும் தங்கியிருப்பார்கள். மற்றவர்கள் விடுமுறைக்காகத் தங்கள் வீடுகளுக்குப் போய்விடுவார்கள். ஒரு அறையோடு சேர்ந்த சிறிய மண்டபம் இவர்களுக்காக ஒதுக்கப் பட்டிருந்தது. செல்வம் மட்டும் சிறிய அறையில் ஓய்வைக் கழிப்பார். மற்றவர்கள் மண்டபத்தில் உள்ள கட்டில்களைப் பயன்படுத்துவார்கள். நேரம் பிற்பகல் மூன்று மணியிருக்கும். விடுதியினுள் நுழைந்து சற்றுக் களைப்பாற எண்ணினார்கள். செல்வம் அறையினுள் சென்றார். மேசையில் தினசரிகள் கிடந்தன. ஆனந்தன் அவற்றைப் பார்த்து விட்டு உடைகளை மாற்ற எண்ணினான். கட்டிலில் சாய்ந்தவாறு ஆனந்தன் அன்றையத் தினசரிகளைப் புரட்டினான்.

வாகனங்களின் இரைச்சல் கேட்டது. விடுதியின் முன்னால் இரண்டு வாகனங்கள் வந்து நின்றன. தடதடவென பூட்ஸ் சத்தங்கள். தொடர்ந்து ஸ்ரீலங்கா ராணுவத்தினரின் சுற்றி வளைப்பு. ஆனந்தன் வெளியில் வந்தான். அவனது கண்கள் சுழன்றன. கட்டிடங்களைச் சுற்றி இராணுவத்தினர் நின்றிருந்தனர். அவர்களின் கைகள் துப்பாக்கிகளை ஏந்தியிருந்தன. அசைந்தால் துப்பாக்கிகள் குண்டுகளைக் கக்கும். உயிர் பறிக்கும். ஒன்றும் புரியாது விழித்தான். ஒரு இராணுவக் கப்ரன் வாகனத்தில் இருந்து இறங்கினான். மெதுவாக நடந்து வந்தான். அவனைப் புடைசூழ பல இராணுவ வீரர்கள் பின்தொடர்ந்தார்கள். அவர்களை நோக்கி ஆனந்தன் எதிர்கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

"குட் ஆப்ரநூன். மாலை வணக்கம்" ஒரு முறுவலை வீசிவிட்டுக் கூறினான். "கான் ஐ ஹெல்ப் யூ பிளீஸ். உங்களுக்கு நான் உதவலாமா?" மிகப் பௌவியமாக ஆனந்தன் கேட்டான். சிப்பாய்களைக் கைகளால் விலக்கியவாறு கப்ரன் செனிவரத்ன முன்னே வந்தான்.

"மே..கத்தாவ எப்பா. ஓகொல்லோ கௌத? இந்தக் கதையெல்லாம் வேண்டாம். நீங்கள் எல்லோரும் யார்"? கப்ரன் கேட்டான். ஸ்ரீலங்கா அரசு சிங்கள இளைஞர்களையே இராணுவத்தில் சேர்த்துள்ளது. சிறுபான்மையாக சில முஸ்லிம் இளைஞர்களையும் உள்ளீர்த்துள்ளனர். சிங்களம் ஆட்சி மொழி என்பதனை வலியுறுத்தி சிங்களத்திலேயே கடமையாற்ற ஏற்பாடு செய்துள்ளனர். மேலிடம் தொடக்கம் அடித்தளம்வரை உள்ள அனைத்து அலுவலர்களும் சிங்களத்தில் கையெழுத்திடும் மனப்பக்குவத்தை ஏற்படுத்தியிருந்தனர். அது இன்றுவரை கடைப்பிடிக்கப் படுகிறது. தமிழும் அரசகரும மொழி என்று கூறினாலும் நடைமுறையில் அது பேணப்படுவதில்லை. இதற்கு விதிவிலக்காக தமிழர்கள் ஆங்கிலத்தில் கையெழுத்திடுவது கௌரவமாகக் கருதப்படுகிறது. ஒரு தமிழன் தனது கையொப்பத்தினை தமிழில் இன்றுவரை இடுவதில்லை. அனைவரும் பாரதி கூறியதுபோல் நடிப்புச் சுதேசிகள்தான். ஆனந்தன் மண்டபக் கதவுகளை அகலத் திறந்து விட்டான். அவர்களை அழைத்தான். "கம் இன். சிற் டவுண் பிளீஸ்." கதிரைகளைக் காட்டி அவர்களை அமரும்படி கேட்டுக் கொண்டான். "நாங்கள் கல்விப் பணிப்பாளர்கள். பரீட்சை நடத்துகிறோம். விடைத்தாள் பொதிகளை ஒப்படைத்து விட்டு இப்போதுதான் வந்தோம்" ஆங்கிலத்தில் ஆனந்தன் கூறினான்.

கப்ரன் செனிவரத்னவுக்கு ஆங்கிலம் தெரியும். எனினும் அவனும் சிங்களத்தில்தான் கதைத்தான். வேட்டையாட வந்த இடத்தில் மரியாதை. அவர்கள் இதனை எதிர்பார்க்கவில்லை. சிப்பாய்கள் ஆளையாள் பார்த்துக் கொண்டனர். "இராணுவத்தைக் கண்டால் பயங்கரவாதிகள் சுட்டுவிட்டு ஓடுவார்கள். மிகக்கவனமாகப் பதுங்கி, ஆயத்தம் செய்து பிடிக்க வேண்டும். தமிழர்கள் அனைவரும் பயங்கரவாதிகள். அவர்களை நம்பவே கூடாது." பயிற்சியின் போது வழங்கப்பட்ட அறிவுரைகள் அவை. சிப்பாய்களுக்கு ஏமாற்றம். சுற்றி வளைத்து மிகஅவதானத்தோடு வந்தால் இப்படியொரு வரவேற்பா? அந்தக் கப்ரனுக்கு அதிர்ச்சி. தன்னைச் சுதாகரித்துக் கொண்டான். "மே.. ஆனந்தன் கௌத? ஆனந்தன் யார்"? கப்ரன் கேட்டான்.

"வெல். யேஸ்.. இற்ஸ் மி. நான்தான் ஆனந்தன். டிப்பியூட்டி டிறெக்டர் ஒப் எடியுகேசன். பிரதிக்கல்விப் பணிப்பாளர்" ஆனந்தன் விடையளித்தான். ஆனந்தனை உற்றுப் பார்த்தான். "ஆனந்தனைப் பிடித்து வா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப்பயங்கரமான பயங்கரவாதி. முரட்டு ஆசாமி. மடக்கிப் பிடிக்க வேண்டும்.'' ஆனந்தனை அந்த மேலதிகாரியும் இதுவரை நேரில் பார்த்ததில்லை. வாய்க்கு வந்தபடி அவனது மேலதிகாரி கட்டளை இடடிருந்தான். கப்ரன் செனிவரத்தின உள்ளத்தில் பெரும் போராட்டம். அவர் கூறிய கில்லாடி எப்படி இருப்பான்.? தனது மேலதிகாரியை நினைத்தான். ''சேர் ஆனந்தன் எப்படி இருப்பான்.'' கப்ரன் செனிவரத்ன கேட்டான். ''கறுத்து உயரமாக இருப்பான். குறும்தாடி வைத்துள்ளான். படு கில்லாடி. துப்பாக்கியை லாவகமாகக் கையாளுவான். மிகக் கவனம்.'' தான் எதிரிகளைக் கற்பனையில் எவ்வாறு பார்த்தானோ அவ்வாறே அந்த அதிகாரி கப்ரனுக்கு கூறிவைத்தான். உண்மையில் அவன் கண்டதே இல்லை. தனது உயரதிகாரி கூறியவற்றுக்கு எதிர்மாறாக இருக்கிறதே. மேலதிகாரி கூறிய ஆனந்தன் கறுப்பு. உயரமானவன். எண்ணிப் பார்த்தான்.

ஆனந்தனை உற்றுப் பார்த்தான். ''இவன்தானா அவன். இல்லையே. இவனுக்குச் சிவந்த மேனி. இவன் அவர் கூறியது போல் உயரமில்லையே. முரட்டுத் தன்மையும் இல்லையே. மிகவும் மரியாதையாக நடந்து கொள்கிறான். மிகச் சாதுவாக இருக்கிறான். அவன் தோற்றத்திலேயே பண்பாடு விளங்குகிறது. இவன் உயரதிகாரியாக அரசாங்கத்தில் கடமை செய்கிறான். அதுவும் கல்விச் சேவையில். எதனை நம்புவது.?'' அவர்களால் நம்ப முடியவில்லை. அந்த இராணுவக் கப்ரனுக்குச் சந்தேகம். மேலதிகாரியின் கட்டளையை நிறைவேற்றியாக வேண்டும். தன்னைச் சுதாகரித்துக் கொண்டான். மீண்டும் அவனே தொடர்ந்தான்.

'' மே .. ஆனந்தன் கௌத. மட்டக் கியான்ட. கூ இஸ் ஆனந்தன்.? பிளீஸ் ரெல் மி'' கப்ரன் செனிவரத்ன வாயிலிருந்து ஆங்கில வார்த்தைகள் வந்தன. ஆனந்தன் புன்னகைத்தான். ஆங்கிலத்தில் '' நான்தான் ஆனந்தன்.'' ஆணித்தரமாகக் கூறினான். தனது அடையாள அட்டையைக் காட்டினான். கப்ரன் செனிவரத்னவுக்கு தலை சுற்றியது. வேறு வழியில்லாது வாகனத்தில் ஏறுமாறு உத்தரவிட்டான். ஆனந்தன் ஏறிக்கொண்டான். வாகனம் திரும்பியது. செல்வம் கப்ரனிடம் ஓடி வந்தார். அவரது கண்கள் சிவந்திருந்தன. கோபம் ஒருபக்கம். துயரம் ஒரு பக்கம். ''ஏன் அவரைக் கூட்டிப் போறியள். டு யூ ஹாவ் எனி அறஸ்ற் வாரண்ட்.'' இந்தக் கேள்வி கப்ரனைத் தாக்கியது. பெரும்பான்மை மக்களின் ஆட்சியில் இவர்களது கேள்விக்கு இடமில்லை. சிறுபான்மை மக்கள் வெறும் புழுக்கள். அடிமைகள் என்ற நினைப்பு. அதனால் அவசரகாலச் சட்டத்தை அமுலாக்கம் செய்தனர்போலும். அவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ''மே நாக்கியோ கட்ட வாகென இன்ர. ஏய் கிழவா வாயை மூடிக் கொண்டு கிட''. அவன் அதட்டலோடு சத்தமிட்டான். ''செல்வம் பேசாதிருங்கள். நான் போய் வாறன்.'' ஆனந்தன் கைகாட்டினான். செல்வம் செய்வதறியாது தடுமாறினார். அவரது கண்கள் குளமாயின. வாகனம் வீர் என்று விரைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை பொழிந்த வண்ணம் இருந்தது. மக்கள் போவதும் வருவதுமாக இருந்தனர். இராணுவ வாகனத்தைக் கண்டு ஒதுங்கினார்கள். வாகனத்தினுள் செல்பவர்களைப் பார்ப்பதற்கு அவர்களுக்குத் தைரியம் கிடையாது. ஆனந்தனை யாரும் கண்டு கொள்ளவில்லை. வாகனம் படைமுகாமுக்குள் நுழைந்தது. ஈரற்பெரியகுளம் இராணுவ முகாம் பரந்திருந்தது. அது வவுனியாவுக்கும் மதவாச்சிக்கும் எல்லையாக உள்ளது. அது சிங்களச் சிப்பாய்களின் சாம்ராச்சியம். இராணுவ வாகனங்களின் இரைச்சல். போவதும் வருவதுமாக அசைந்தவண்ணம் இருந்தன. ஆனந்தன் வாகனத்தில் இருந்து இறக்கப் பட்டான். அவனைச் சூழ்ந்து துப்பாக்கிகளுடன் இராணுவச் சிப்பய்கள். பெரிய பயங்கரவாதியைப் பிடித்த சந்தோசம் அவர்களுக்கு. ஆனந்தனைப் பார்ப்பதற்காகப் பல சிப்பாய்கள் எட்டிப் பார்த்தார்கள். ஆனந்தனுக்குச் சிங்களம் தெரியும். ஆனால் சரளமாகப் பேசவராது. சிங்களம் புரியாதவனாகவே காட்டிக் கொண்டான். சிப்பாய்கள் பேசிக்கொண்டார்கள். "பெரிய புலியைப் பிடித்துவிட்டீர்கள். எப்படி முடிந்தது?" ஆச்சரியத்தோடு கேட்டார்கள். "அதுதான் மச்சான் நம்ம கெட்டித்தனம்." பிரமாதமாகப் புளுகினான் ஒருவன். "மச்சான் இவன் புலியில்ல. எலி. இவனை ஏன்பிடிச்சாங்கள். பாவம்டா." அனுதாபத்தோடு இன்னொருவன் கூறினான்.

"ஏய். கோப்ரல்.. பொல்லாத புலி இது. இப்படித்தான் இருக்கும். தெரியுமா"? வேறொரு சிப்பாய் உளறினான். கப்ரன் செனிவரத்ன முன்னால் நடந்தான். சிறிய கட்டிடம் வந்தது. அதன் வாசலில் ஹேமசிறி நின்றான். கப்ரனைக் கண்டதும் சலூற் அடித்தான். "மே சார்ஜன் ஹேமசிறி ..மெயாவ பாரகண்ட". கப்ரன் செனிவரத்ன ஆனந்தனைப் பொறுப்பெடுக்கும்படி கட்டளையிட்டான். ஹேமசிறி திறப்புகளுடன் வந்தான். கையில் சில பத்திரங்களையும் கொண்டு வந்தான். அவற்றில் கப்ரன் கையெழுத் திட்டான். இரும்புக் கதவைத் திறந்தான். அது கிறீச்சிட்டுத் திறந்து கொண்டது. ஹேமசிறி கப்ரனைப் பார்த்தான். கப்ரன் ஆனந்தனைக் கைகாட்டி அழைத்தான். அவன் வந்தான். உள்ளே போகுமாறு கட்டளை வந்தது.

ஆனந்தனை அந்த அறையினுள் தள்ளி விட்டார்கள் அவன் உள்ளே நுழையும்போது பின்னாலிருந்து உதைத்தார்கள். ஆனந்தன் இதனை எதிர்பார்க்கவில்லை. எதிரேயிருந்த சுவரில் போய் விழுந்தான். தாமாகவே கைகள் சுவரிலிருந்து அவனைக் காப்பாற்றின. அவன் திரும்புமுன் அறை அடைக்கப்பட்டது. பெரிய பூட்டினால் பூட்டப்பட்டது. ஆனந்தனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. உடல் நடுங்கி நொந்தது. அவன் கண்கள் சுவர்களை நோட்டம் விட்டன. எங்கும் ரத்தக்கறை படிந்திருந்தது. பிணவாடை அடித்தது. ஏழடி நீளமும் ஏழடி அகலமும் கொண்ட காவலறை அது. காற்று உட்புக முடியாதபடியான வடிவமைப்பு. இரண்டரையடி அகலத்திலான இரும்புக் கம்பிகள் போட்ட கதவு. அதன் உயரம் ஐந்தடி. தூசிநிறைந்து அசுத்தமாக இருந்தது. சொல்லப்போனால் அது ஒரு இருட்டறை. மெல்ல இருள் பரந்தது. நேரம் மெதுவாகவே நகர்ந்தது. அடிக்கடி சிப்பாய்கள் வந்தார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டிப்பார்த்தார்கள். பல்லைக் கடித்துக் கெட்ட வார்த்தைகளால் சிங்களத்தில் ஏசினார்கள்.

நேரம் நகர்வது கடினமாக இருந்தது. அவனது உள்ளத்தில் நாளை நடைபெறவிருக்கும் பரீட்சையே நிறைந்திருந்தது. எப்படியாவது பரீட்சை நடைபெற வேண்டும். ஏழை மாணவர்கள் பாதிக்கப் படக்கூடாது. காவலுக்கு நின்ற சிப்பாயை அழைத்தான். அவன் பல்லைக் கடித்தவாறே "மொக்கத்த"? "என்ன" என்று கேட்டான். நாளைய பரீட்சை பற்றித் தெரிவித்தான். அவன் பதில் கூறாது போய்விட்டான். கம்பி எண்ணுவது பற்றி கேள்விப்பட்டிருக்கிறான். ஆனால் இதுதான் அவனது முதல் அனுபவம். கம்பிகளைப் பிடித்தவாறு வாசலையே பார்த்திருந்தான். எங்கும் கும்மிருட்டு. அறையினுள் இருளாகவே இருந்தது. மழை பெய்து கொண்டிருந்தது. நிலம் ஈரமாகக் கசிந்திருந்தது. நுளம்பின் விளையாட்டு. அவை பறந்து காதுகளில் ரீங்காரம் செய்தன.

சரியாக மாலை ஏழரை மணியிருக்கும். சிப்பாய்கள் சிலர் வந்தனர். ஒருவன் பூட்டைத் திறந்தான். அது கிரீச்சிட்டுத் திறந்து கொண்டது. "மே எலியட்ட என்ர" வெளியில் வருமாறு பணித்தான். ஆனந்தன் கையில் அவனது தினக்குறிப்பேடும் பேனாவும்தான் இருந்தன. அவற்றை எடுத்துக் கொண்டான். சிப்பாய்கள் புடைசூழ ஆனந்தன் நடந்தான். அவர்களது கைகள் துப்பாக்கிகளை ஏந்தியிருந்தன. எச்சரிக்கையுடன் நடந்தார்கள். நாளை பரீட்சை. அதனால் எப்படியும் விடுவார்கள் என்ற நம்பிக்கையுடன் சென்றான். நூறு மீற்றர் தொலைவில் பெரிய கட்டிடத் தொகுதி இருந்தது. அதற்குள் நுழைந்தார்கள். பெரியதொரு மண்டபம். அதனைத் தொடர்ந்து இரண்டு அறைகள். அந்த மண்டபத்தில் இரண்டு மேசைகள் கிடந்தன. நான்கு கதிரைகளும் தென்பட்டன.

மெல்லிய பச்சை வெளிச்சம் மண்டபத்துள் பரவியிருந்தது. மண்டபத்துள் ஆனந்தன் நின்றான். ஆனந்தனைச் சூழ சிப்பாய்கள் நின்றார்கள். அவனை நோக்கி மூன்றுபேர் வந்தார்கள். முன்னால் வந்தவனைக் கண்டதும் நின்றவர்கள் சலூற் அடித்தார்கள். அவன்தான் இவர்களுக்கெல்லாம் பெரியவன் போல் தெரிந்தது. ஆனந்தனைக் காட்டி ஏதோ சொன்னார்கள். அவன் ஆனந்தன் பக்கம் வந்தான். அவன் வரும்போதே ஆனந்தன் "குட் ஈவினிங்" என்றான் ஒரு முறுவலோடு. பதிலுக்கு அசட்டுச் சிரிப்பு மட்டும் தெரிந்தது. மேசைமேல் ஏறி இருந்தான். ஒரு கதிரையைப் பற்றினான். பக்கத்தில் இழுத்து அதன்மேல் காலொன்றை ஊன்றினான். மேசைமேல் வசதியாக இருந்தான். ஆனந்தனும் ஒரு அரசாங்க உயரதிகாரி. இந்த இராணுவ அதிகாரியும் உயரதிகாரிதான். இருவரும் பல்கலைக்கழக பட்டதாரிகள். ஆனாலும் இராணுவ அதிகாரி காரமாக இருந்தான். பெரும்பான்மை இனத்துவ மேலாதிக்கம் அவனிடம் தெரிந்தது. அவனிடம் மரியாதை என்பதே இல்லை. சிங்களத்தில் மட்டுமே உரையாடினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நம மொக்கக்த? உன்ர பேரென்ன"? மேலதிகாரியின் குரல்.
"ஆனந்தன்" பெயரைக் கூறினான். "சரி. உன்னை விடுகிறேன். உண்மையை ஒப்புக்கொள்". அந்த இராணுவ அதிகாரி இப்படித்தான் தொடங்கினான். ஆனந்தனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் எதனைக் கேட்கிறான்?

"எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. எதைப்பற்றிக் கேட்கிறீர்கள். சொன்னால் விளக்கமாகக் கூறுகிறேன்". என்றான். அந்த இராணுவ அதிகாரி அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். 'தமிங்களத்தில்' சொன்னான். 'தமிங்களம்' என்பது இங்கே தமிழ்கலந்த சிங்களம். "அடோவ் செய்வதையெல்லாம் செய்து கதையளக்கிறது.? "மே கப்ரன்! மெயா மொனவத கரே. கியான்ட. கப்ரன். இவன் என்ன செய்தவன்? சொல்." என்றான். கப்ரன் செனிவரத்ன தனது குறிப்புப் புத்தகத்தை விரித்தான். சிங்களத்தில் உளறிவைத்தான். "ஏய் நீ புலிகளுக்குச் சல்லி சேர்த்து கொடுத்தது. மீற்றிங் நடத்தினது. சாப்பாடு கொடுத்தது. கப்ரன் சரியாக சொல்லியிருக்கிறது. புரியுதா? உண்மையை ஒத்துக்கொள்." அந்த அதிகாரி அடுக்கிக் கொண்டு போனான். ஆனந்தனுக்குச் சிரிப்பு ஒருபுறம். வேதனை இன்னொரு புறம். கனவிலும் நினைக்காத வற்றைக் கூறுகிறானே? இவனெல்லாம் கற்றவனா? கல்வி என்பது இதுதானா?

கல்வி என்பது என்ன? சரியானவற்றைத் தேர்ந்தெடுத்து வாழ்க்கையில் கடைப்பிடிப்பதுதானே? நிலையில்லா வாழ்க்கையில் நல்லனவற்றைச் செய்வதுதானே?. ஆனந்தன் கண்கள் சிவந்தன. கண்ணீர் பொங்கியது. ஆத்திரம் உடலை உலுக்கியது."வட் நொன்ஸன்ஸ். என்ன இது.? ஐ ஆம் ஏ டிப்பியூட்டி டிறக்ரர் ஒவ் எடியுகேசன். நான் ஒரு பிரதிக் கல்விப் பணிப்பாளர். உங்களைப்போல் நானும் ஒரு உயர் அதிகாரி. என்னிடம் இப்படிக் கேட்கலாமா? வேதனையோடு ஆங்கிலத்தில் கூறினான். அந்த அதிகாரி ஆணவத்தோடு எழுந்தான். "அப்ப நீ உண்மை சொல்ல மாட்டாய். கதிரையைக் காலால் உதைத்து எழுந்தான். "மே சார்ஜன், மெயாட்ட கொந்த பாடமக் தெமு" கூறி வெளியில் சென்றான்.

அவ்வளவுதான். சுற்றிநின்ற சிப்பாய்கள் சாடினார்கள். ஆனந்தனின் உடலில் அடி விழாத இடமில்லை. கீழே சுருண்டு விழுந்தான். எப்படி இவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டான். தமிழனாய் இந்த நாட்டில் பிறந்தது அவன் செய்த குற்றமா? கல்விக்காகத் தன்னையே அர்ப்பணித்துச் சேவையாற்றும் உயர்அதிகாரிக்கு ஸ்ரீலங்கா அரசு கொடுக்கும் பரிசு இதுதானா? அவன் மனம் கலங்கியது. அவன் கண்விழித்து நிமிர்ந்தபோது மீண்டும் அந்த உயர் அதிகாரி உள்ளே வந்தான். அவன் இப்போது சீருடையில் இல்லை. அரைக்காற் சட்டையும் ரீ சேட்டும் அணிந்திருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தனை நோக்கி வந்தான். ஆனந்தன் வெறும் தரையில் கிடந்தான். அவனால் எழுந்திருக்க முடியவில்லை. தலையை நிமிர்த்திப் பார்த்தான். அதிகாரி கதிரையை இழுத்து ஆனந்தன் பக்கத்தில் இருந்தான். "ஹலோ.. மிஸ்டர்.. உண்மையை ஒத்துக் கொள். இதில கையெழுத்துப் போடு". தாளை எடுத்து நீட்டினான். அந்த அதிகாரியின் கண்கள் சிவப்பேறி இருந்தன. மதுவின் மணம் வீசியது. ஆனந்தன் தாளைப் பார்த்தான். தனிச்சிங்களத்தில் ஏதோ எழுதப்பட்டிருந்தது. ஆனந்தனுக்கு ஆத்திரம் பொங்கியது.

"ஆர் யூ அன் எடியூகேற்றற் ஒவ்பிசர். இஸ் திஸ் த வே யூ ரீற் அன் ஒவ்பிசர்?" ஆனந்தன் வேதனையோடு கூறினான். அது அந்த அதிகாரிக்கு வெறியைக் கூட்டியது. "அடோவ்.. கனக்கக் கதைக்கிறாய் நீ. பற தெமழ. நீதான் சரியான கொட்டியா. கிழட்டுப் புலி. உன்ன சும்மா விடமாட்டம். மே சார்ஜன்! புட் கிம் டவுண். விமட்ட தாண்ட" கட்டளை பிறந்தது. ஆங்கிலம், சிங்களம், அரைகுறைத்தமிழ் கலந்து அதிகாரி பேசினான். அந்த சார்ஜன் ஆனந்தனை அலக்காகத் தூக்கிக் கீழே போட்டான். ஆனந்தனின் முதுகுப்புறம் தரையில் அடிபட்டது. அவன் எதிர்பார்க்காதது நடந்தது. ஒரு கட்டுமஸ்தான சிப்பாய் வந்தான். ஆனந்தனின் நெஞ்சில் குந்தி அமர்ந்தான். ஆனந்தனின் கைகளைச் சிப்பாய் இழுத்தான். தனது இரண்டு முளங்கால்களுக்குள் மடக்கி இறுக்கினான். மேசையொன்று நகர்த்தப்படும் சத்தம் கேட்டது. ஆனந்தனின் கால்கள் இழுத்து உயர்த்தப் பட்டன. பாதங்கள் இரண்டும் மேசையின் விளிம்பைத் தொட்டன. குதிநரம்பு விளிம்பில் பதிந்திருந்தது. சிப்பாயின் முதுகுப்புறம் ஆனந்தனுக்குத் தெரிந்தது. அவன் நெஞ்சு வலித்தது.

சிப்பாயின் இரண்டு முரட்டுக் கைகளும் ஆனந்தனின் இரு கால்களையும் இறுக்கிக் கெட்டியாகப் பிடித்தன. இரண்டு சிப்பாய்கள் இருபுறமும் நின்றார்கள். அவர்களது கைகளில் மணல் நிறைத்த 'எஸ்லோன் பைப்' இருந்தன. ஆனந்தனின் முகம் மட்டுமே அசைந்தது. கைகள் சிப்பாயின் கால்களுள் சிக்கியிருந்தன. யோகாசனப் பயிற்சி நிலையில் ஆனந்தன். அந்த அதிகாரி ஆனந்தனின் முகத்துக்கு அருகே கதிரையில் இருந்தான். "இப்ப சொல். உண்மையை ஒத்துக் கொள்கிறாயா? இல்லையா?" ஆனந்தனுக்கு மூச்சு விடுவதே சிரமமாக இருந்தது. சேர்! ஐ ஆம் இன்னசன்ற். எனக்கு ஒன்றுமே தெரியாது. நம்புங்கள்." ஆங்கிலத்தில் கூறினான்.

அந்த அதிகாரி ஆணவமாக எழுந்தான். "காப்பாங்.. அடியுங்கள்." கட்டளையிட்டான். எழுந்து அப்பாற் சென்றான். வேட்டை நாய்களுக்கு விருந்து. காத்திருந்த சிப்பாய்கள் விளையாடினார்கள். 'எஸ்லோன் பைப்' ஆனந்தனின் பாதங்களை முத்தமிட்டன. அடிமேல் அடி. ஒவ்வொரு அடியும் உச்சந்தலையில் உறைத்தது. காய்ச்சிய இரும்புக் கம்பியால் சுடுவதுபோல் சுட்டது. ஒவ்வொரு அடிக்கும் கைவிரல்கள் இறுக்கி மூடி விரிந்தன. தலை அரை வட்டத்தில் மின்விசிறியாக ஆடியது. கால்கள் மரத்து விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிகால் நரம்புகளை மேசை விளிம்பு வெட்டியது. தோல் கிழிந்து இரத்தம் கசிந்து கீழ் நோக்கி வழிந்தது. கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. வாய்தடுமாறி புலம்பியது. உடலெங்கும் வியர்த்து மூச்சுத்தடுமாறி …மரண அவஸ்த்தையில்.. திணறி மயக்கம் வந்தது. மயங்கிவிட்டான்.

அறியாத உலகத்தில் அந்தரத்தில் பறந்து விழுவதுபோன்ற உணர்வில் வாய் அரற்றியது. உடல் அசைவற்றுக் கிடந்தது. மனிதனாகப் பிறப்பது அரிதாம். அதிலும் அரிது கூன், குருடு நீங்கிப் பிறப்பது அரிதாம். ஆனால் அரிதான மனிதப்பிறவியில் இப்படி ஒரு இக்கட்டான கேவலமான அவல நிலையா? துன்பங்களையும் துயரினையும் நீக்கி மனிதன் உன்னத நிலையை அடையவேண்டும் என்பதற்காகத்தானே புத்தபெருமானும், ஜேசு, நபிகள் போன்றோரும் அவதரித்துப் போதித்தார்கள். புத்தனைப் பின்பற்றும் மனிதர்களா இப்படியான ஈனச்செயல்களில் ஈடுபடுகிறார்கள். அந்த அடிவதை வேதனையின் மத்தியிலும் ஆனந்தனின் மனதில் கேள்விகள் எழுந்தன. விடைகாணமுடியாது அலைகளாக விரிவடைந்து சென்று கொண்டிருந்தன. கனவுலகில் சஞ்சரித்தான். ஒரு மயக்கநிலையில் ஆனந்தன் இருந்தான். சூழலில் நடப்பது புரியாத புதிராகத் தெரிந்தது.

அதிகாரி வந்தான். பார்த்தான். “மே... சுட்டக் வத்துற தாண்ட“ தண்ணீரை ஊற்றுமாறு சொன்னான். சிப்பாய்கள் ஆனந்தனின் முகத்தில் தண்ணீரை அடித்தார்கள். தண்ணீரில் அப்படியென்ன சக்தி இருக்கிறது. தண்ணீர் பட்டதும் ஆனந்தனுக்கு நினைவு துளிர்விட்டது. மெதுவாக விழிகளைத் திறந்து பாத்தான். அவனைச் சுற்றி இருவர் காவல் நின்றார்கள். மற்றவர்கள் வெளியில் சென்று வந்தார்கள். அவனது தலை அசைந்தது. அந்த அதிகாரி ஏதோ கட்டளை இட்டான். ஆனந்தனை அப்படியே விட்டுக் கதவைத் தாளிட்டார்கள். வெளியில் காவல் இருந்தார்கள். ஆனந்தன் அரற்றினான். அவனது வாய் "மேரி..மேரி..“ என முணுமுணுத்தது. மேரி அவனது மனைவி. காதலித்துத் திருமணம் செய்துகொண்ட அன்புப்பெடை. ஆனந்தனுக்குச் சற்றுத் தலைவலி என்றாலே தாங்கமாட்டாது துடிப்பாள் மேரி. ஆனந்தன் மயங்கிக் கிடந்தான். அவனது நினைவுகள் சிறகடித்துப் பறந்து உலாவந்தன.

## 3

இருள் பரவிக் கொண்டிருந்தது. இருளை விரட்டி மின்விளக்குகள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. இயந்திர கதியில் இயங்கும் மக்கள் கூட்டம் அசைந்த வண்ணமிருந்தது. வாகனங்கள் வருவதும் போவதுமாக இயங்கின. கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையம் பயணிகளால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. அடிக்கடி ஒலிபெருக்கிகள் அலறிக் கொண்டிருந்தன. சிங்களத்தில் எப்படி அறிவிப்பார்களோ அப்படியே தமிழின் மொழி பெயர்ப்பை சிங்களத்தில் எழுதி அரைகுறைத் தமிழில் வாசித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தார்கள். புகையிரத நிலையங்களில் ஒலிபரப்புச் சேவை வித்தியாசமானதாக இருக்கும். எந்த மொழியும் சரியாக உச்சரிக்கப் படாது. ஒரு ததிங்கிணத்தோம் மெட்டில் சொல்லுவார்கள். பயணிகள் மனதுக்குள் திட்டிக்கொள்வார்கள்.

"இரவு எட்டு மணிக்கு திருகோணமலைக்குப் புகைவண்டி புறப்படும்." அறிவிக்கப்பட்டது. இன்னும் ஐந்து நிமிடங்கள்தான் இருந்தன. ஆனந்தன் ஓடோடி வந்தான். மூன்றாம் வகுப்புப் பெட்டியில் தொற்றிக் கொண்டான். பயணங்களிலகூட வகுப்புவாதம் உண்டு. ஏழைகளும், உழைக்கும் வர்க்கமும் மூன்றாம் வகுப்பில்தான் செல்லமுடியும். வெயர்த்துக் கொட்டியது. ஒரு மூலையில் இருக்கை கிடைக்குமா என்று தேடினான். மூலை இருக்கை கிடைத்தால் தலைசாய்த்துச் சரிந்து கொள்ள வசதியாக இருக்கும். மூலை இருக்கைகளுக்குத்தான் போட்டி அதிகம். முந்தி வருபவர்களுக்கே மூலை இருக்கை கிடைப்பதரிது. இறுதி நேரத்தில் வருபவருக்குக் கிடைக்குமா? மூலை இருக்கை கிடைக்கவில்லை. ஒரு இருக்கையில் இடம் தென்பட்டது. மெதுவாக நகர்ந்தான். அந்த இருக்கையில் இருவர் இருந்தார்கள். மூன்றாவதாக அவன் அமர்ந்து கொண்டான். இருக்க இடமாவது கிடைத்ததே. நிம்மதிப் பெருமூச்சுப் பறந்தது. மணி ஒலித்ததும் புகைவண்டி புறப்பட்டது.

புகைவண்டி மருதானையைத் தாண்டி ஓடிக்கொண்டிருந்தது. கையிலிருந்த சூட்கேஸ் பெட்டியைத் திறந்தான். அதனுள் இருந்து சில சஞ்சிகைகளை எடுத்தான். சூட்கேசை மூடி இருக்கையின் கீழ் வைத்தான். சஞ்சிகைகளை மேலோட்டமாகப் பார்த்தான். புகைவண்டி களனியைத் தாண்டிக் கொண்டிருந்தது. சஞ்சிகை திறந்தபடியே இருந்தது. யன்னல் வழியே எட்டிப்பார்த்தான். களனி நதியில் மின்விளக்குகளின் ஒளி சிதறிக்கொண்டிருந்தது. அந்தக் காட்சியில் மெய் மறந்தான். கல்யாணி நதி களனிநதியாகப் போய்விட்டதை யோசித்தான். "பழையன கழிதலும் புதியன புகுதலுமா' இவை? ஒரு காலத்தில் சோழப் பெருமன்னர்களும், பாண்டியர்களும் ஆட்சி செய்தார்கள்தான். அவர்கள் இலங்கையர்கள் இல்லை.

இங்குள்ள வளங்களைச் சுரண்டித் தங்கள் தாய்நாட்டை வளமாக்கினார்கள். இந்தியாவில் இருந்து துரத்தப்பட்ட விஜயன் ஆட்சியையே கைப்பற்றி ஆளும் அளவுக்கு பண்டைய மக்கள் இருந்துள்ளார்கள். இன்று இலங்கையிலேயே காலங்காலமாக வாழ்ந்து வரும் தமிழர்கள் நசுக்கப் படுகிறார்கள். ஆட்சியாளர்கள் மட்டுமல்ல சமயங்களும் வந்து புகுந்து கொண்டன. சிவபக்தனான இராவணன் ஆண்ட பூமி. இராமர்களின் பக்தர்களால் பறிபோயிற்று. மனதில் எண்ணம் தலைதூக்கியது. சிந்தனையில் ஆழ்ந்தான். பக்கத்தில் இருந்த பெரியவர் கதை கொடுத்தார். "தம்பி திருகோணமலைக்கா போகிறீர்கள்". சத்தம் வந்ததும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டான். சஞ்சிகையை மூடினான். அந்தப் பெரியவரைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தான். அவர் ஒரு புன்னகையோடு பதிலுக்காகக் காத்திருந்தார்.

"ஆமாம்" என்றான். "நீங்கள்?" வினா தொடுத்தான். "நாங்களும் திருகோணமலைக்குத்தான் போகிறோம்." என்றார். நாங்களும் என்றாரே. அப்படியானால் முன்னால் இருப்பவர்கள் அவரது குடும்பத்தவர்கள்தான். புரிந்து கொண்டான். ஒரு இருக்கையில் மூன்றுபேர் அமர்ந்து பயணிக்கலாம். ஆனால் இரவுப் பயணம் மிகக் கஸ்டமானது. அவரது பக்கத்தில் ஒரு மகள் இருந்தார். அவள்தான் கடைக்குட்டி. முன்னால் அவரது மனைவியும் இரண்டு மகள்களும் இருந்தார்கள்.

பெரியவர் "என்ன புத்தகங்கள்?" என்றார். அவரிடம் மூன்றைக் கொடுத்தான். அவன் கையில் ஆனந்தவிகடன் இருந்தது. பெரியவர் ஒவ்வொன்றாகப் பார்த்தார். குமுதம், கற்கண்டு, கல்கி என அழகான அட்டைப்படங்களோடு அவரது கைகளில் புரண்டன. அவரது மகள்மார் ஒவ்வொன்றைப் பற்றிக் கொண்டார்கள். பெரியவருக்குப் புத்தகத்தில் அவ்வளவு நாட்டமில்லை. இடைக்கிடை கதை கொடுத்துக் கொண்டிருந்தார். பயணத்தில் கதைப்பது நல்லதுதான். பொழுதும் போகும். பயணமும் அலுப்பிருக்காது. "தம்பி! சொந்த ஊர் திருகோணமலையா? வினா பறந்தது. தலையை அசைத்து ஓமோம் சொன்னான். "நீங்கள்."? ஆனந்தவிகடனைப் பார்த்தவாறே பதிலுக்கு அவனும் கேட்டான். நாங்கள் கொழும்பிலதான் இருக்கிறம். இப்ப திருகோண மலைக்குப் போகிறம்." என்றார்.

கதை தொடர்ந்தது. தனது பெயரைச் சொன்னார். அவன் காது கொடுத்துக் கேட்டான்.
"தம்பி பேராலய வீதி தெரியுமோ?" இமைகளை உயர்த்தியவாறு அந்தப் பெரியவர் கேட்டார். "ஓம்" பதில் சொன்னான். ஏன் இப்படிக் கேட்கிறார். ஒருவேளை இதுதான் திருகோணமலைக்கு அவரது முதற்பயணமோ? மனதினிலே நினைத்துக் கொண்டான்.
"ஓம். நல்லாத் தெரியும்." மீண்டும் பதிலளித்தான்.
"உங்களுக்கு மிஸ்டர் டேவிட்டைத் தெரியுமோ?"
"எந்த டேவிட் என்றால் சொல்லலாம்." அவன் பதிலளித்தான். "துறைமுகக் கூட்டுத்தாபனத்தில வேலை செய்கிறார். சிவப்பாக ஒல்லியாக இருப்பார்." பெரியவர் தொடர்ந்தார்.
" நல்லா வெத்திலை போட்டு தமாசாகப் பேசுவார். அவரா?
"ஓமோம். அவர்தான்."
" நல்லாத் தெரியும். அவரது வீட்டுக்குப் போயிருக்கிறன். நல்ல மனிசன். அவருக்கு மூன்று பிள்ளைகள். இரண்டு ஆண்கள். இருவரும் வேலை செய்கிறார்கள். மற்றது பெண். அவர் படித்துக் கொண்டிருக்கிறார். பெயர் ஆன்மயூரி. நான் அடிக்கடி அவங்கட வீட்டுக்குப போறனான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தனின் பதில் அவர்கள் அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. குறிப்பாக எதிரே மூலையிருக்கையில் இருப்பவரின் மனதில் மலர்ச்சியைக் கிளறிவிட்டிருந்தது. தற்செயலாக நிமிர்ந்தவனின் கண்கள் தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும் அந்த இரு விழிகளைக் கவனித்தான். அந்தப் பார்வை அவனது உள்ளத்தை ஊடறுத்துச் செல்வதை உணர்ந்தான். அவனது பார்வை பட்டதும் அந்த விழிகள் வேறுபக்கம் பார்த்தன. கடைந்தெடுத்த அழகான சிலையாக அவள் இருந்தாள். மொனாலிசாவின் சாயல். சாயல் என்ன? மொனாலிசாதான். கள்ளங்கபடமற்ற அந்த அழகுச் சிலிர்ப்பு. வசீகரப் பார்வை. பக்கம் திரும்பும்போது ஏற்றவாறு அசைந்து விழும் இரட்டைப்பின்னல். பிறை நெற்றியில் தொட்டுக் கொஞ்சும் சுருள் முடிகள். அவற்றை அடிக்கடி பின்னால் ஒதுக்கித் தள்ளும் தளிர்க்கரங்கள்.

மன்மதனின் கைகளின் வளைத்த வில்லொத்த புருவங்கள். அதன்கீழ் கயல்போன்ற நீண்டமடல்கள். அதில் பூட்டிக் குறிபார்க்கும் அம்புகளாய் கருநாவற் கண்கள். தக்காளிக் கன்னங்கள். வலக்கன்னத்தில் அழகுக்கு மெருகேற்றும் கருமச்சம். காண்பவரைக் கவரும் புன்னகை. ஆனந்தனைக் கவர்ந்தெடுக்கும் அழகுச் சிலையாக அவள் இருந்தாள். மங்கிய ரெயிலின் வெளிச்சத்தில் அவள் ஜொலித்தாள். 'மங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்.' பாரதியின் கவிதைவரிகள் உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்து நாவழியே வந்து எட்டிப் பார்த்தன. அடக்கமான இந்தப் பெண் எனக்குக் கிடைத்தால்? நான் அதிர்ஸ்டசாலிதான். மனதில் ஒரு கற்பனையை வளர்த்துப் பார்த்தான். சுகமாக இருந்தது.

அந்தக் கற்பனையைத் தகர்ப்பதுபோல் பெரியவர் தொடர்ந்தார்.

“தம்பி உங்கட பேரென்ன?

“ஆனந்தன்” சொன்னான். சற்று மௌனம் தொடர்ந்தது. அவனே பேசினான்.

"ஐயா! நீங்கள் மிஸ்டர் டேவிட் வீட்டுக்கு போகவேணும். சரி. அவரை எப்படித் தெரியும்”?

"அவர் என்ர மனிசியின்ர தாய்மாமன். அவரைச் சந்தித்துக் கனகாலம். எங்களுக்குத் திருமணம் முடித்துவிட்டுப் போனார். பிறகு சந்திக்கவே இல்லை. இப்ப உறவைப் புதுப்பிக்கப் போறம்.” பெரியவர் தொடர்ந்து பேசிக்கொண்டு போனார். அவரது மனைவி மார்கிரட் புன்னகையோடு காட்சியளித்தார்.

"அவர் ஸ்ரேசனுக்கு வருவாரா?“

"நாங்க போறதே அவருக்குத் தெரியாது. ஒரு அதிரடி சிகிச்சை மாதிரி கொடுக்கப் போறம்.” சிரித்துக் கொண்டே கூறினார். அவரது பதில் ஆனந்தனைக் கவர்ந்தது.

"அப்படியா? சரி அவரது வீட்டைக் காட்டுவது எனது பொறுப்பு."ஆனந்தன் பதிலளித்தான்.

"மார்கிரட்! உனக்கும் தெரியாது. எனக்கும் தெரியாது. பார்த்தாயா? இந்தத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பியை கடவுள்தான் அனுப்பியிருக்கிறார்" ஒரு புன்னகையோடு கூறினார். ஆனந்தன் தலை கவிழ்ந்து கொண்டான். புகைவண்டி கூவிக்கொண்டு ஓடிக்கொண்டிருந்தது.

வண்டியின் குலுக்கல் புரட்டி எடுத்தது. பயணிகளைப் பேயாட்டம் ஆட்டிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு நிலையத்திலும் வண்டி நிற்பதும் புறப்படுவதுமாகச் சென்றது. பெரியவர் தூங்கி விழுவதும், கண்களைத் திறந்து பார்ப்பதுமாக இருந்தார். ஆனந்தன் அடிக்கடி ஓரக்கண்ணால் எதிர்மூலையை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான். ஓரவிழிகள் அவனை மேய்ந்தன. 'யான் நோக்கும் கால் தான் நோக்கும். நோக்காக்கால் நிலம் நோக்கி மெல்ல நகும்' திருக்குறளை நினைவு கூர்ந்தான். வாசுகியை இப்படித்தான் அனுபவித்திருப்பானோ? வள்ளுவனின் ஆராய்ச்சியையும், அனுபவத்தையும் மெச்சிக் கொண்டான். "ஏன் திருக்குறளில் காமத்துப்பாலை இறுதியில் வைத்தான்?. சே.. என்ன முட்டாள்தனம். அவன் இறுதியிலா வைத்தான். அறம், பொருள், இன்பம் என்று நிறைவாகவல்லவா வைத்துள்ளான். அறவழி நின்று பொருள் தேடி, அதன்பின் இல்வாழ்க்கை வாழ்வதுதான் இன்பம் பயக்கும். ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் வாழ்க்கைதான் பயனுள்ள வாழ்க்கை." மனதினுள்ளே வினா விடைகள் முளைத்தெழுந்து மறைந்தன.

மாகோ சந்தி வந்து விட்டது. ரெயில்பெட்டிகளில் ஏறுவதும், இறங்குவதுமாக மக்கள் கூட்டம் திணறிக் கொண்டிருந்தது. ரெயில் பெட்டிகளுக்குள் வியாபாரம் நடத்துபவர்களின் ஒலி வான்முட்டியது. களைத்து வரும் மக்களுக்கு அது ஒரு சேவைதான். சேவையளிப்பதன்மூலம் தங்கள் வருவாயை பெருக்கிக் கொள்வது ஒரு நோக்கம். அது அவர்களுக்குத் தெரியாமலேயே பயனாளிகளுக்குச் சேவையாகப் போய்ச் சேர்ந்து விடுகிறது. பயணிகள் கைகால்களை நீட்டி, நிமிர்த்தி அசதி நீக்கவும் வசதியாக இருந்தது. பெரியவர் விழித்துக் கொண்டார். "மேரி! எந்த ஸ்ரேசன்..பார்"

"இது மாகோ ஸ்ரேசன்"
எதிர் மூலையில் இருந்து இசைக்கோலமாகப் பதில் வந்தது. தன்முன்னால் இருக்கும் தேவதையின் பெயரைத் தெரிந்து கொண்டான். அதில் தன்னைமறந்த சந்தோசத்தில் இருந்தான்.
"அப்பா! தேநீர் குடிப்பமா?" தேனாய் இனிக்கும் குரல்.
"ஓம் .. "
இருக்கையின் கீழிருந்த கூடை இழுக்கப் பட்டது. அதற்குள் சுடுதண்ணீர் குடுவை இருந்தது. சில குவளைகளும் இருந்தன. யாவும் வெளியில் வந்தன. குவளைகளுக்குள் தேனீர் ஊற்றப் பட்டது. முதற்குவளை பெரியவருக்குப் பரிமாறப் பட்டது. அதனை அவர் "தம்பி தேனீர் குடியுங்க"ஆனந்தனிடம் நீட்டினார்.
"தாங்க்ஸ் நீங்கள் குடியுங்கோ" ஆனந்தன் மரியாதையாகச் சொன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா அதை நீங்கள் குடியுங்கோ. இதனை நான் அவருக்குக் கொடுக்கிறேன்." ஒரு குவளையை மென்கரம் தாங்கி நீண்டது. இவ்வளவு நேரமும் கண்களால் கதையளந்த பெண் இப்போது அன்போடு நீட்டும் தேநீரை வாங்காது விடலாமா? அது அநாகரீகம். எனினும் "உங்களுக்கு ஏனிந்தச் சிரமம்."? சொல்ல நினைத்தான். அவள் அதனைப் புரிந்து கொண்டதுபோல் "பரவாயில்லை. குடியுங்கள்." நீட்டினாள். "தம்பி என்ன யோசிக்கிறீங்க....குடியுங்க" தமாசாய்ப் பெரியவர் உற்சாகப் படுத்தினார். வேறு வழியின்றி பெற்றுக் கொண்டான். குடிக்கும் போது மேரியையும் அவதானித்தான். தேநீர் அவளது தொண்டை வழியே செல்வதே ஒரு அழகுதான். ஏன் இவ்வளவு மென்மையைப் பெண்களுக்கு இறைவன் படைத்தான். குவளையில் இதழ்கள் மொய்த்து சத்தமில்லாது வாய்க்குள் இழுத்து விழுங்குவதே ஒரு கலைதான். மேரியின் பார்வை, அனுசரிப்பு, ஒரு புன்னகை எந்நேரமும் குந்தியிருந்து வேடிக்கை காட்டும் அழகு. அன்பான தொனியில் அடக்கமாகப் பேசும் பண்பு. அனைத்தையும் அவன் இரசித்தான். அவன் தேநீரை அருந்தியவாறே கற்பனை உலகில் சஞ்சரித்தான். இவள் எப்படிப் பட்ட பெண். அவனது உள்ளத்தில் பெரியதொரு ஆராய்ச்சி நிகழந்து கொண்டிருந்தது.

திருகோணமலைக் கடற்கரையில் அவன் உள்ளம் உலா வந்தது. கடற்கரை மக்களை நிரப்பிக் களிப்புற்றது. காற்று வீசி ஒரு கலகலப்பை ஏற்படுத்தியது. பெரும்புலவர் சிவசேகரனாரின் அருமையான உரை நிகழ்ந்து கொண்டிருந்தது. காது கொடுத்துக் கேட்டான்."ஆண் இந்த உலகில் சிறந்த வாழ்க்கை வாழ வேண்டுமானால் அதற்கு நல்லதொரு பெண்ணின் துணை வேண்டும். அதேபோல் ஒரு பெண்ணுக்கு ஒரு ஆணின் துணை அவசியம் தேவை. அதனைத்தான் இல்வாழ்க்கை என்று நம்முன்னோர் அழைத்தனர். இல்வாழ்க்கை மூலம்தான் அறவாழ்க்கை வாழ்ந்து பிறவிப் பெருங்கடலைக் கடக்கலாம். துறவிகளை ஆதரித்து அவர்களுக்குத் துணை போகலாம். பரம்பரையை உருவாக்கலாம். பாரினில் நல்லனவற்றை நிலை நாட்டலாம்." அவரது உரை அவன் காதுகளில் ஒலித்தது.

"அவ்வாறு இவ்வுலகில் இல்வாழ்க்கை வாழ்ந்து உதாரண புருசர்களாகப் புகழேணியில் பூத்தவர்கள் பலர். திருவள்ளுவர், ஸ்ரீஇராமகிருஷ்ண பரமகம்சர், உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தி, போன்றோர்களது வாழ்க்கை உன்னதமாக இருந்ததற்கு அவர்களுக்கு வாய்த்த இல்வாழ்க்கைத் துணைகளே காரணம் என்பார்கள். திருவள்ளுவர் உலகமறை எனப் போற்றப் படும் திருக்குறளை உலகுக்கு அளித்தவர். வாசுகி அம்மையார் திருவள்ளுவரின் துணைவியாராவார். திருவள்ளுவர் திருக்குறளை எழுதுவதற்கு உந்துசக்தியாக விளங்கியவர் வாசுகி அம்மையார். திருக்குறளில் 133 அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு அதிகாரத்திலும் 10 பாடல்கள் உண்டு. எல்லாமாக 1330 பாக்கள் உள்ளன. தேர்ந்தெடுக்கப் பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்களால் ஆனவை. இரண்டு அடிகளில் ஏழு சொற்களில் சொல்லவேண்டியவற்றை சுருக்கி அழகாகக் கூறியுள்ளார். இவ்வாறு எழுதுவதற்கு உரிய சூழல் வேண்டும். அதனை வாசுகி அம்மையார் ஆக்கிக் கொடுத்தமையினாற்தான் வள்ளுவரால் எழுத முடிந்தது. திருக்குறள் ஒரு வாழ்க்கைத் தத்துவ நூல். அந்த நூலில் வாழ்க்கை அனுபவத் தத்துவ முத்துக்கள் நிரவியுள்ளன. திருவள்ளுவர் குறள் ஊடாக இன்றும் வாழ்கிறார். வாசுகி மறைந்ததும் திருவள்ளுவர் ஆடிப்போய் விட்டார். அவர் வாசுகியின் பிரிவைத் தாங்காது தவித்தார். நெஞ்சுருகப் பாடினார். நினைந்து நினைந்து உருகினார். அவர்கள் இருவருக்கும் இடையே இருந்த நெருக்கமான பிணைப்பின் மகத்துவத்தை என்னவென்பது.

ஸ்ரீஇராமகிருஷ்ண பரமகம்சர் அவர்கள் சற்று வித்தியாசமானவர். திருமணம் செய்தும் துறவியாக வாழ்ந்தவர். பெண்ணினுள்ளே சக்தியைக் கண்டவர். அன்னை சாரதா தேவி பரமகம்சரின் தேவைகளை நிறைவு செய்தார். ஆனால் அவர்களிடையே தாம்பத்திய வாழ்க்கை இருக்கவில்லை. சாரதாதேவியைப் பராசக்தியாகவே போற்றினார். அவரது துறவற வாழ்க்கைக்கு இடைஞ்சலாக இருக்க வில்லை. மாறாக பரமகம்சரின் புகழ் ஓங்கச் செயற்பட்டார். அவரை உலகம் போற்றுகிறது.

மகாத்மா காந்தியின் வெற்றிக்குப் பின்னால் அன்னை கஸ்தூரிபாய் இருந்தார். அவர்களிடையே தாம்பத்திய உறவு இருந்தது. வாரிசுகள் உருவாகினர். ஆனால் அந்த வாரிசுகள் 'சுயம்' அற்றவர்களாக உருவாகினர். அன்னை கஸ்தூரிபாயால் பிள்ளைகளைச் செம்மையாக வளர்த்தெடுக்க முடியவில்லை. அதனால் நாடு எதிர்பார்த்த சேவைகளை அவர்களால் கொடுக்க முடியவில்லை. ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறாள் என்பது அறிஞர்களது முடிவாகும். சிவசேகரனார் அவன் உள்ளத்தில் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார்."

"சிலபெண்கள் பெண்ணுரிமைக்காகப் போராடும் போது தமது குடும்பப் பொறுப்புக்களில் இருந்து விலகிப் போவதைக் காண்கிறோம். ஆனால் பெண்ணுரிமை என்றால் வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் சமமான பங்கு கொண்டு ஆணுக்குச் சமமாக ஈடுகொடுத்து அவனையும் அணைத்துக் கொண்டு பிறவிப் பெருங்கடலைக் கடக்க வேண்டும். அப்படியான பெண்ணையே பெருந்தகைப் பெண் எனலாம். இந்தவகையில் எந்தப் பெண், சிறந்த குடும்பப் பெண்ணாய், இல்லத் தலைவியாய், உன்னதமான தாயாய், கணவனைப் போற்றும் உத்தமியாய், சமூகசேவையில் தன்னை அர்ப்பணித்து, அநாதைச் சிறார்களுக்கு அடைக்கலம் தரும் பெண்ணாய், அபலைப் பெண்களின் வாழ்க்கையில் ஒளியேற்றும் தீபமாய், முதியோர்களையும் காப்பாற்றும் ஏழை பங்காளியாய் விளங்கி வாழுகிறாளோ அவளைப் பெருந்தகைப் பெண் என அழைத்தல் சாலப் பொருத்தமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைப் பெண்ணையே,

'தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகை சான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்'.

என வள்ளுவர் பெருமையோடு கூறியிருக்கிறார். ஒரு பெண் தான் பிறந்த வீட்டுக்கும் புகுந்த வீட்டுக்கும் பெருமை தேடித்தர வேண்டும். இல்வாழ்க்கை எனும் அதிகாரத்தில் வள்ளுவர் இதனை அழகாகச் சொல்லி இருக்கிறார். இந்த இல்வாழ்க்கைக்குச் சில வரையறைகள் உண்டு. அந்த வரையறைகள் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானவை. பண்டைமாற்றுப் பொருளாதார அமைப்பில் இல்லற வாழ்க்கைக்குத் தேவையான பொருளீட்டல் சிறப்பாக ஆணிடமே ஒப்படைக்கப் பட்டிருந்தது. இல்லறத்தை மாண்புடையதாக ஆக்கிக் கொள்ளும் பொறுப்புச் சிறப்பாகப் பெண்ணிடம் இருந்தது. பெண் உயர்ந்த இடத்தில் வைக்கப் பட்டுள்ளதை இங்கு நோக்கலாம். வருவாயை அறிந்து அதற்கேற்பக் குடும்பத்தைக் கொண்டு செல்லும் பக்குவம் உடையவளாகப் பெண் கருதப் பட்டாள். அந்த ஆற்றல் பெண்களிடம்தான் உண்டு. அதனாலேயே வள்ளுவர் வாழ்க்கையின் துணையாகப் பெண்ணை உயர்த்தியுள்ளார்.

'மனைத் தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை'.

இவ்வாறு பெண்ணின் பெருமைகளை வள்ளுவர் அடுக்கிக் கொண்டே சென்று ஒரு உச்சக் கட்டத்தைக் காட்டுகின்றாரே. அது எப்படி? அதனைத்தான் 'பெய்யெனப் பெய்யும் மழை' என்று முடித்து விடுகிறார். ஒரு பெண் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தால், 'மழையே! பெய்' என்று சொன்னால் மழை பெய்யும் என்று அறுதியிட்டுக் கூறுகிறார்." எனப் புலவர் பேருரை நிகழ்த்தினார். புலவர் சிவசேகரனாரிடம் பாடம் படித்தவன். அவரது சொற்பொழிவுகளைக் கேட்டு ரசிப்பவன் ஆனந்தன். அவனது கண்கள் மூடியிருந்தன. "என்ன நித்திரையா? தேநீரைக் குடித்து விட்டு நித்திரை கொள்ளலாமே"? "நித்திரை இல்லை. ஒரு அற்புதமான கற்பனை". பதிலளித்துத் தேநீரை ஒரு மிடர் உள்ளிழுத்தான். சுவைத்தது. மௌனம் தொடர்ந்தது.

## 4

கண்களை மெல்ல மூடி இருந்தான். அவன் சிந்தனைக்கு வேலை கொடுப்பது போல் திருவள்ளுவர் முன்னே நின்றார். 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள', என்றொரு வினாவைக் கேட்டுவிட்டு வள்ளுவர் வந்த வழியே சென்று மறைந்துவிட்டார். சிந்தனை விரிந்தது. மூளை துருவித் துருவி ஆராய்ச்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டது. இந்தப் பரந்த உலகில் ஒரு பெண்ணைவிடவும் உயர்ந்தது இல்லையா? வேறு ஏதேனும் உண்டா? ஏன் இந்த வினாவைக் கேட்டார்? அவனது உள்ளம் தேடலில் ஈடுபட்டது.

அவர் கூறிய விடையும் திருக்குறளில் உண்டு. அவரது விடை 'கற்பெனும் திண்மை உண்டாகப் பெறின்', என்பதாகும். ஆனால் அவரது விடை சரியான விளக்கத்தை உடையதா? இன்றைய நவீன யுகத்தில் வேறுவகையான விளக்கங்கள் உண்டா? ஆனால் அந்த வினாவினுக்கு ஏதோ ஒரு புது வடிவத்தைக் காணவேண்டிக் கேட்டிருக்கலாம். பெண்ணாகப் பிறப்பதற்குப் பெருந்தவம் செய்திருக்க வேண்டும் என்பது கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்களது கருத்தாகும்.

மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா.
பங்கயக் கைநலம் பார்த்தலவோ - இந்தப்
பாரில் அறங்கள் வளரும் அம்மா.

ஒரு பெண் இந்த உலகின் ஆக்கத்துக்கும் அழிவுக்கும் காரணம் ஆகின்றாள். நமது இதிகாச புராண வரலாறுகள் இதற்குச் சான்றுகளாகின்றன. இந்த மண்ணில் அறம் தழைத்தோங்கப் பெண்ணின் தயவு தேவைப் படுகிறது. இல்வாழ்வில்தான் இன்பத்தைக் காணமுடியும் என்பது ஆன்றோர் வாக்கு. இந்த இன்பம் இருவகைத்து. ஒன்று சிற்றின்பம். அது உடலாலும். உள்ளத்தாலும் பெறுவது. அல்லது அடைவது. இது நிலையில்லாதது. அடுத்தது பேரின்பம். முக்தி நிலைக்கு வித்திடுவது. இவை இரண்டும் ஒரு நல்ல பெண் மூலம்தான் பெறமுடியும். நாட்டில் அறம் ஓங்கவும், அமைதி நிலவவும், நன்மக்களைப் பெற்று நலம்காணவும் பெண்களே பெருந்துணை ஆகின்றார்கள். அதனால்தான் 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என வள்ளுவர் கேட்டார் போலும்.

"நித்திரைபோல் தெரியவில்லை. அப்படி என்ன கடும் யோசனை"? மேரிதான் கேட்டாள். ஆனந்தன் அதளபாதாளத்தில் விழுந்தெழும்பிய உணர்வினைப் பெற்றான். மெல்லத் தன்னைச் சுதாகரித்துக் கொண்டான். " அப்படி ஒன்றுமில்லை. சும்மா கண்ணை மூடியபடி யோசித்தேன் அவ்வளவுதான்.." ஒருவாறு சமாளித்தான். மேரி புன்னகைத்தாள். அந்தப் புன்னகையில்தான் எத்தனை கோடி அர்த்தங்கள் புரண்டோடின. அவற்றுள் எதனை அவன் பற்றிக் கொள்வது? ஏதாவது சொல்ல வேண்டும்போல் தோன்றியது. "நீங்கள் ரீச்சரோ"? ஆனந்தன் உளறிவிட்டான்.. "பார்த்தால் அப்படித்தான் தெரிகிறதா"? மேரி தொடர்ந்தாள். "உங்களைப் பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது." சமாளித்தான். "ரீச்சராகத்தான் நினைத்தேன். சந்தர்ப்பமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. ஆனால் நான் வேலை செய்வது அம்மம்மாவுக்குப் பிடிக்காது. அதனால் வேலைக்குப் போவதில்லை. வீட்டில்தான் இருக்கிறேன்.'' மேரி பதிலளித்தாள்.

''எப்படிப் பொழுது போகிறது''?. ஆனந்தன் தொடர்ந்தான். '' ''நமக்காகப் பொழுது ஒருநாளும் காத்திருக்காது. அது தானாகவே போகும். அதன் அசைவில்தான் உலகின் இயக்கம் இருக்கிறது.'' ஒரு வேடிக்கைக்காகச் சொன்னாள். பின்னர் அவளே தொடர்ந்தாள். ''வீட்டில் எனது பொழுது போக்கு தையல் தைப்பது. அருமையான, பயனுள்ள பொழுது போக்கு. அக்கம் பக்கமுள்ள ஏழைகள் தைப்பதற்கு வழியில்லாது தவிப்பார்கள். தைத்துக் கொடுப்பேன். அதற்கும் அம்மம்மா ஏசுவார்''.?
''ஏன்.''?
''காசு வாங்கித் தைத்துக் கொடு என்பார். நான் அதற்கு உடன்படுவதில்லை. அதனால்.'' மெல்லென மின்னல் வெட்டியது போன்ற பிரமை. அவளது செவ்விதழ்கள் அசைந்து மூடிக்கொண்டன. அதனை வெகுவாக இரசித்தான்.
''அவர் சொல்வதும் ஒருவகையில் சரிதானே''? ஆனந்தன் பதிலிறுத்தான்.

''எது சரி? வசதியுள்ளவர்களிடம் வாங்கலாம். ஆனால் அன்றாடம் காய்சிகளிடம் வாங்குவது சரியா? போடுவதற்கே உடுப்பில்லாத சனங்கள். அவர்களிடம் வாங்கலாமா''? மேரி கேள்வி மூலம் விடையளித்தாள். ஆனந்தன் மேரியின் காருண்ய மனதை வியந்தான். ''உங்களுக்குத் தாராள மனது''. புன்னகையூடே பதிலளித்தான். அவர்களது உரையாடலை பெரியவர் ரசித்திருக்க வேண்டும். அவர் குறுக்கிட்டார். ''தம்பி மேரி இரக்க சுபாவமுள்ளவள். அவளோட கதைக்க முடியாது. பெரிய மாக்சிஸ்சியவாதி போல் கதைப்பாள்.'' ஆனந்தன் பெரியவரை ஆச்சரியமாகப் பார்த்தான். பெரியவர் மாக்சிஸ்யம் பற்றிப் பேசுகிறாரே.

''அப்பா நான் உண்மையைத்தான் சொன்னேன்.''
''அதைத்தான் நானும் சொல்லுறன்.'' அவர் சிரித்தவாறே சொன்னார். ஆனந்தன் தனக்குள் சிரித்துக் கொண்டான். புகைவண்டியின் இரைச்சல் செவிப்பறைகளை அதிரச் செய்தது. றெயிலின் கூவல் நீண்டொலித்தது. அவர்கள் கதைப்பதைக் காற்றும் இரைச்சலும் இழுத்துச் சென்றன. மேரி காதுகளில் கைகளை வைத்து அழுத்திப் பொத்திக் கொண்டாள். ஆளையாள் பார்த்துக் கொண்டார்கள். பயணிகள் தம்மை மறந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். கொஞ்சநேர அமைதி நிலவியது.
மேரியின் பதில்களும், சொல்லும் அழகும் ஆனந்தனை வசீகரித்தன. அவன் தன்னை மறந்து வேறு உலகத்தில் சஞ்சரித்தான்.

இதிகாச புராண வரலாறு போற்றும் பெண்களை நினைவு கூர்ந்தான். தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் சமுதாயத்தில் உள்ள பெண்களையும் மேரியோடு இணைத்துப் பார்த்தான். வரலாற்றில் இடம்பெற்ற மொண்டிசோரி அம்மையார், புலோறன்ஸ் நைற்றிங்கேல், அன்னை திரேசா, சமகாலத்தில் வாழ்ந்த செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி போன்றோரும் வந்து நின்றனர். இந்த உலகத்தில் உள்ள உன்னதமான அத்தனை பெண்களையும் எண்ணிப்பார்த்தான். தனது சிந்தனையில் அரசியலில் ஈடுபட்ட, அல்லது ஈடுபடும் பெண்கள் பற்றிய பட்டியல் மெல்ல மறைந்து போய் விட்டது. சமூக நலனுக்காக, நலிவுடையோருக்காகத் தமது வாழ்க்கையை அர்ப்பணித்த, அர்ப்பணிக்கும் பெண்களின் பெருந்தன்மையை எண்ணிக் கொண்டான். விழிப்புலனற்ற ஹெலன்கெல்லர், விழிப்புலன் அற்றோருக்காகச் செய்த சேவையை எண்ணிப் பார்த்தான். மொண்டிசோரி அம்மையாரின் குழந்தைகளை நற்குடிகளாக ஆக்க வேண்டிய கல்வித் திட்டத்தை முன்வைத்தமை பற்றியும் சிந்தித்தான்.

உலகப் போரின்போது காயப்பட்ட போர்வீரர்களைக் கண்துஞ்சாது தனது கைகளிலே விளக்கொன்றை ஏந்தி அவர்களது துயர்களைந்த புளோறன்ஸ் நைரிங்கேலின் வரலாற்றையும் எண்ணினான். யாழ்ப்பாணத்தில் போரினால் அனாதைகள் ஆக்கப்பட்ட சிறுவர்களுக்குத் தன்னை அர்ப்பணித்துச் சேவை செய்யும் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களையும் நினைவு கொண்டான். தமிழ் மக்களுக்காய், அவர்களது உரிமைக்காக உண்ணா நோன்பிருந்து தனது உயிரை விட்ட அன்னை பூபதியையும் கருத்தில் கொண்டான். அன்னை திரேசா கன்னியர் மடத்தில் சேர்ந்து துயருறும் அடிமட்ட ஏழைகளுக்காய் உழைத்ததையும், அவர் மறைந்தபின், அவருக்கு ரோமாபுரியில் வத்திக்கான் நகரில் போப்பாண்டவர் சின்னப்பர் அருளப்பரால் முத்திப்பேறு பட்டத்தை வழங்கி கௌரவித்ததையும் வியந்து ஒப்பு நோக்கினான்.

இவற்றை எல்லாம் தன்மனக் கண்முன் நிறுத்தி ஒரு தேடலில் ஈடுபட்டான். அகத்தின் அழகை முகத்தில் காணும் சக்தி கொண்டவன். மேரியை அவன் தேடும் பெருந்தகைப் பெண்ணாகக் கண்டு கொண்டான்..

மேரி ஒரு சமூகசேவகியாய், தனது கணவன் கொள்கையில் வீறுநடை போட்டு வெற்றி வீரனாய் உலகில் உலாவர உழைக்கும் நல்லதொரு மனைவியாய், தான்பெற்ற பிள்ளைகளை சமூகசேவைகளில் ஈடுபடுத்தி, செயற்கரிய செயல்கள் பல செய்யப் பாடுபட்டு உழைக்கும் அன்புடன் கூடிய தாயாய், ஆதரவற்ற பெண்களினதும், பிள்ளைகளினதும் பாதுகாவலுக்கான அடைக்கலத் தாயாய், வலது குறைந்த பிள்ளைகளின் ஊன்று கோலாய், முதியோர்களுக்கு ஆதரவளிக்கும் அன்னையாய், செல்விருந்தோம்பி, வருவிருந்து காத்திருக்கும் இல்லத்' தரசியாய், சிறப்பாகக் கூறின் இனியன பேசி, இனியன செய்து, யாவுமாகி எங்கும் நிறைந்து நிற்கும் பெரும் சக்தியாய்த் திகழும் ஒரு பெண்ணாகக் கண்முன்னே கண்டுகொண்டான். இந்தக் 'கனவு மெய்ப்பட வேண்டும்'. அப்படி மெயப்பட்டால் நான் பாக்கியசாலிதான். நல்ல எண்ணங்கள் மனிதவாழ்க்கையில் நிறைவேறும் வல்லமையுடையன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்ன இன்னும் கொஞ்சம் தேநீர் தரட்டுமா?” குரல்கேட்டு மீண்டும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டான். விழிகள் அவனையே நோக்கியிருந்தன. அவன் அந்தப் பார்வையில் சிக்குண்டுவிட்டான். “நன்றி. இப்போது வேண்டாம்.” அவன் சமாளித்தான். புகைவண்டி தடபுடத்து ஓடிக்கொண்டிருந்தது. பயணிகள் அதன் அசைவுக்கும், இரைச்சலுக்கும் ஏற்றவாறு தள்ளாடிக் கொண்டிருந்தனர். ஆனந்தன் மணிக்கூடு கட்டுவதில்லை. நேரத்தை எப்படி அறிவது? மேரியைப் பார்த்தான். அவனது செயலை அவனது பார்வை காட்டியது. “சரியாக நாலு மணி” சட்டென்று பதில் வந்தது. நான் நினைத்ததை இவள் எப்படிப் புரிந்து கொண்டாள். நன்றி கலந்த புன்னகையை வீசினான். அவள் அதனை பெற்று உள்ளத்தில் ஏற்றுக் கொண்டாள். “இப்போது கல்லோயாச் சந்தி வரும். எப்படியும் ஐந்து மணிக்குத்தான் கல்லோயாவில் இருந்து புறப்படும்.” சொல்லியவாறு யன்னலைத் திறந்து எட்டிப்பாரத்தான். கல்லோயாச் சந்தி நிலையம் தெரிந்தது. ஆனந்தன் சலித்துக் கொண்டான். வண்டி கிறீச்சிட்டு முன்னும் பின்னும் அசைந்து நின்றது.

“சரியாக ஐந்துமணிக்குப் புறப்படும்.” எழுந்து கைகால்களை அசைத்தான். வெளியில் இறங்கினால் நல்லது. இறங்கினான். பெரியவரும் எழுந்து நின்றார். இறங்கிப் பார்த்தால் என்ன? இறங்கினார். “அப்பா கவனம்.” மேரி தந்தையை எச்சரித்தாள். “நானும் வரட்டா அப்பா? சின்னவள் கேட்டாள். “சரி வா.” அழைத்தார். இறங்கினார்கள். “இவவின் பேரென்ன?” “எலிசபெத்” சின்னவள் தனது பெயரைச் சொன்னாள். “எலிசபெத்.. ரீ விருப்பமா? குடிப்பமா?” கேட்டான். “ஓம் குடிப்பமே..” பதில் வந்தது. “அக்காவிடம் பிளாஸ்கை வாங்கி வாங்கோ”. அதுக்குள்ள ரீ இல்லை. முடிஞ்சிட்டு” “அதுதான் வாங்கி வாங்க. நாங்க ரீ குடிச்சிட்டு அதற்குள் ரீ வாங்கிக் கொண்டு வருவம். சரியா”? எலிசபெத் ஓடினாள். “அக்கா பிளாஸ்கைத் தாங்க. ரீ வாங்கி வாறம்.” “அப்பா கேட்டாரா”? கேள்வி வந்தது. தயங்கினாள். என்ன சொல்வது. தீர்மானித்துவிட்டாள். “ஓமோம்” என்றாள். மேரி பெரிய பிளாஸ்க்கை எடுத்துக் கொடுத்தாள். எலிசபெத் பிளாஸ்க்கோடு வந்தாள். கன்ரீனை நோக்கி நடந்தார்கள். கன்ரின் பயணிகளால் நிறைந்து வழிந்தது.

பனி கொட்டிக் கொண்டிருந்தது. குளிர் சேர்ந்து உறைத்தது. புகைவண்டி. முன்னால் போவதும், பின்னால் நகர்வதுமாக இரைந்து கொண்டிருந்தது. மட்டக்களப்புக்கும் .திருகோணமலைக்கும் ஒரு புகையிரத வண்டிதான் உண்டு. திருகோணமலைப் பயணிகளுக்குச் சில பெட்டிகளும், மட்டக்களப்பிற்குச் சில பெட்டிகளும் இருக்கும். திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பிற்குச் செல்வதற்கு ஒரு பெட்டி கொழுவப்பட்டிருக்கும். மட்டக்களப்பிருந்து திருகோணமலைக்கு ஒரு பெட்டி போடப்பட்டிருக்கும். இவை இரண்டு பெட்டிகளும் கல்லோயா சந்திவரை சென்று தரித்து நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பிலிருந்து வரும் புகைவண்டி மட்டக்களபபு நோக்கிப் புறப்படும். அப்போது திருகோணமலையிலிருந்து வந்த பெட்டி அதில் கொழுவப்படும். அதோபோல் மட்டக்களப்பில் இருந்து வந்த பெட்டி திருகோணமலை என்ஜினோடு கொழுவப்படும். இந்த இடங்களுக்குச் செல்லும் பயணிகளுக்கு இருக்கைகள் கிடையாது போகும். அப்போது வேறு பெட்டிகளில் பயணம் செய்வார்கள். கல்லோயாவில் இறங்கிவிடுவார்கள். கல்லோயாவில் பிரிந்து செல்லவிருக்கும் பயணிகள் இருக்கைகளைத் தேடிப்பிடிப்பதில் இறங்கினார்கள்.

தேநீரோடு சுடச்சுட அப்பமும் வாங்கினான். எலிசபெத்தின் கைகளில் அப்பத்தைக் கொடுத்தான். அவளுக்கு அது கனத்தது. பெரிய பார்சலாக இருந்தது. தான் பிளாஸ்கை எடுத்துக் கொண்டான். சனநெருக்கடி அதிகம். பெரியவரால் முண்டியடித்து முன்னேற முடியாதிருந்தது. ஆனந்தன் இளைஞன். அவன் புகுந்து விளையாடினான். பணத்தையும் அவனே கொடுத்தான். பெரியவர் பணத்தை நீட்டினார். பிறகு பார்க்கலாம் என்று மழுப்பி விட்டான். எலிசபெத் பார்சலோடு விரைந்து நடந்தாள். யன்னலூடாகப் பார்சலைக் கொடுத்தாள். "இது என்ன இவ்வளவு பெரிய பார்சல்." மேரி வாங்கிக் கொண்டே கேட்டாள். "அப்பாதான் வாங்கினார்." எலிசபெத் வண்டியினுள் ஏறி இருக்கையில் இருந்தவாறே பதிலிறுத்தாள். "சுடச்சுட அப்பம். சாப்பிடுவோம்". பெரியவரும் இருக்கையில் இருந்தவாறே கூறினார். "அப்பா முகம் கழுவாமல் சாப்பிடுவதா? எனக்கு வேணாம்." மேரி பின்னிழுத்தாள். "வண்டி இப்போது புறப்படாது. அது புறப்பட நேரமிருக்கு. பக்கத்தில் பைப் இருக்கு. தண்ணீர் தாராளமாக வருது. இறங்கிக் கழுவுங்க. பிறகு சாப்பிடலாம்." ஆனந்தன் ஆலோசனை வழங்கினான். அம்மா மார்க்கிரட் பிள்ளைகளோடு இறங்கினார். மேரியும் இறங்கிக் கொண்டாள். குழாயடிக்குப் போய் முகம் கழுவி வந்தார்கள்.

## 5

அப்பம் சுவைத்தது. தேநீர் குடித்தார்கள். வண்டி புறப்படும் நேரம் வந்துவிட்டது. அறிகுறியாக நீண்ட விசில் ஒலித்தது. மெதுவாக ஊர்ந்து கடுகடுத்து விரைந்தது. அதன் அசைவிற்கேற்ப பயணிகளும் அசைந்து ஆடிக்கொண்டிருந்தார்கள். இருள் கலைந்து கிழக்கில் ஒளிக்கீற்றுக்கள் கோலமிட்டன. பார்த்திருக்க இருள் விரைந்து மறையத் தொடங்கியது. வண்டி நின்றது. "இது எந்த ஸ்ரேசன்"? மேரி கேட்டாள். "கந்தளாய். அடுத்தது தம்பலகாமம்." என்றான். "இன்னும் எவ்வளவு தூரம் இருக்கு."? பெரியவர் தொடர்ந்தார். "சரியாகச் சொல்லமுடியாது. எப்படியும் ஏழு மணிக்குத் திருகோணமலை போய்விடும்." என்றான். "கந்தளாய் குளம் எங்கே இருக்கு? பார்க்கமுடியுமா"? எலிசபெத் குறுக்கிட்டாள். "இங்கிருந்து பார்க்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஸ்சில் போனால் பார்க்கலாம்.''

"மிச்சந்தூரமா''?

"இல்லை. இங்கிருந்து மேற்காக மூன்று மைல் தொலைவில் உள்ளது. எப்போது கொழும்பு போறீங்க''? ஆனந்தன் அறிய விரும்பினான். "எப்படியும் நாலஞ்சு நாளாகும். எல்லாம் நாங்க போகும் இடத்தைப் பொறுத்தது. ஒரு கிழமை லீவு போட்டிருக்கிறன்". பெரியவர் பதிலிறுத்தார். வண்டி ஒலியெழுப்பிப் புறப்பட்டது.

சூரியன் புறப்பட்டு விட்டான். ஒளிக்கற்றைகள் கண்களைச் கூசச் செய்தன. உறக்கத்தைத் தொலைத்த விழிகளில் சோர்வு தெரிந்தது. உலகத்தின் இயக்கம் தொடங்கி விட்டது. இருபக்கமும் வயல் பரந்து பசுமையை விரித்திருந்தது. பனித்துளிகள் மரஞ்செடி கொடிகளின் இலைகளில் தூங்கி வழிந்தன. நீர்நிலைகளில் சூரியகதிர் பட்டு வண்ணமாக ஜொலித்தது. வண்டி நீண்டு கூவியது. அதன்விரைவைக் கட்டுப்படுத்தி மெதுவாக ஊர்ந்தது. தம்பலகாமம் பெயர்ப்பலகை தெரிந்தது. வண்டி தம்பலகாமத்தில் தரித்து நின்றது. மேரி பெரியவரைப் பார்த்தாள். "தயிர் வாங்குவமா அப்பா''? குறிப்பறிந்த ஆனந்தன் தயிர் விற்கும் பையனை அழைத்தான். வாங்கிக் கொண்டார்கள். வண்டி புறப்பட்டது. அடுத்தது சீனக்குடா நிலையம். வண்டி ஓடிக்கொண்டிருந்தது. பாலம்போட்டாற்றைத் தாண்டிக் கொண்டிருந்தது. பற்றைக் காடுகளும் அவற்றால் மூடியபடி இடிபாடுகளுடன் பழைய கட்டிடங்களும் தெரிந்தன. "என்ன காட்டுக்குள் பழைய இடிந்த கட்டிடங்கள்''. மேரி கேட்டாள். அவையெல்லாம் பிரித்தானியாரின் கட்டிடங்கள். இப்போது கவனிப்பாரற்ற நிலையில் அழிஞ்சுபோய்க் கிடக்கு''. ஆனந்தன் விளக்கினான்.

சீனக்குடா விமான நிலைய வளாகம் பரந்து படுத்திருந்தது. அதுதானா விமானநிலையம்? பெரியவர் கேட்டார். "ஓம்'' பதிலிறுத்தான். "ஏன் சீனக்குடா என்று பேர் வந்தது.? சீனர்கள் இங்கிருக்கிறார்களா? பெரியவர் தொடர்ந்தார். ஆனந்தன் முறுவலித்தான். அவனே விளக்கினான். "பிரித்தானியர் காலத்தில் அதோ தெரிகிறதே அந்த எண்ணெய்க் குதங்கள். அவற்றை அமைப்பதற்குப் பலநாட்டு மக்களையும் பிரித்தானியர் வேலைக்கு அமர்த்தியிருந்தார்கள். இந்தப் பகுதியில் சீனர்கள் இருந்து வேலைசெய்தார்கள். பெருவாரியாக சீனர்கள்தான் வேலையில் ஈடுபட்டார்கள். அவர்கள் இருந்த இடத்துக்கு சீனக்குடா என்று பெயர் வந்ததாகச் சொல்லுவார்கள்''. அவனே விளக்கினான். வாகனங்கள் வீதிகளில் உலாவந்தன. தூரத்தே துறைமுகம் தெரிந்தது. அப்பா சீனக்குடாவில்தான் ஸ்ரனிஸ் சித்தப்பா இருக்கிறார். இல்லையாப்பா? எலிசபெத் வினவினாள். "ஓமென்று நினைக்கிறன்.'' பெரியவர் சொன்னார். "அவர் ஸ்ரேசனில்தான் நிற்பார்''. அம்மா மார்க்கிரட் கூறினார். "யார்? டேவிட் அங்கிளின் இளைய மகன் ஸ்ரனிஸ்லாஸா''? ஆனந்தன் இடைமறித்தான். "ஓமோம்" பதில் வந்தது. வண்டி சீனக்குடா நிலையத்தில் நின்றது. ஆனந்தன் வண்டியைவிட்டுக் கீழே இறங்கினான். நேரே புகைவண்டி நிலையத்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுந்தான். அனைவரும் ஆவலோடு நடப்பதைக் கவனித்தார்கள். போனது போல் வந்தான். "இன்டைக்கு இரவு டியூட்டியாம். வீட்டுக்குப் போய்விட்டாராம். வீட்டில் நிற்பார்." அவசரமாக ஏறிக்கொண்டான். "அங்கு போய்ப் பார்ப்போம்." வண்டி புறப்பட்டது.

விரைந்து சென்ற வண்டி வேகத்தைக் குறைத்து மெதுவாக ஊர்ந்தது. மனிதர்கள் அரைவிழி மூடி இருக்கையில் இருந்து பயணித்தார்கள். அவ்வளவு உயிர்களையும் பத்திரமாகச் சுமந்து கொண்டு கும்மிருட்டில் முன்விளக்கேந்தி, நின்றும், ஊர்ந்தும், விரைந்தும், பத்திரமாகச் சேர்த்த பெருமை அதற்கு. அப்பாடா என்பதுபோல் பெருமூச்சு விட்டு வண்டி நின்றது. அது நிலையத்தை அடையுமுன்னே சனங்கள் தங்கள் உடைமைகளைத் தூக்கியவாறு நெரிசலை ஏற்படுத்தினர். ஆக்கப் பொறுத்த மக்கள் ஆறப் பொறுக்கமாட்டார்கள்போலும். அவ்வளவு அவசரம் அவர்களுக்கு. வண்டி நின்றபின்னர்தான் மார்க்கிரட்டுக்கு நெஞ்சு படபடத்தது. மாமா என்ன சொல்வாரோ? இவ்வளவு காலமும் இல்லாத கரிசனை இப்பதான் வந்ததோ? என்றால் என்ன செய்வது? இவர் அதனைத் தாங்கமாட்டாரே? "என்ன மார்க்கிரட் யோசிகிறாய்? இதை முதலில் யோசித்திருக்க வேணும். ஆற்றில இறங்கினால் நீச்சலடிக்கத்தான் வேண்டும். போவோம். பயப்படாதே. ஏதாகிலும் என்றால் ஸ்ரேசனில் ஒரு அறையை எடுத்து இரண்டு நாள் ஊரைச் சுற்றிப்பார்த்து விட்டுப் போவம். மற்றவர்களுக்குக் கேட்காதபடி காதோடு காதாகப் பெரியவர் கூறினார். "சரி ஸ்ரேசன் வந்தாச்சி. எல்லாத்தையும் எடுங்க" கட்டளையிட்டார். சனங்கள் இறங்கிக் கொண்டிருந்தார்கள். நிலையத்தில் வருகிறவர்களை எதிர்பார்க்கும் கூட்டம் நிறைந்திருந்தது.

ஆனந்தன் தனது உடமைகளைத் தோளில் மாட்டினான். இறங்குவதற்கு உதவினான். அவர்களது பொருட்களையும் சுமந்தான். வெளியில் வந்தார்கள். வாடகைக்கு வண்டி கிடைத்தது. வண்டிக்காரர் பழக்கமானவர். "பேராலய வீதிக்குப் போவோம். ஏன்.சி. ரோட்டால் போய்த் திரும்பிப் போவம். வீடுங்க" என்றான். வாகனம் விரைந்தது. இடப்பக்கமாகத் திரும்பி ,குவாட்டலுமாதா' கோயிலைத் தாண்டி சின்னக் கடைத் தெருவால் மணிக்கூட்டுக் கோபுரத்தைச் சுற்றி டொக்யாட் வீதியால் சென்றது. "இந்தப் பெரிய முற்றவெளியா? அழகான கட்டிடம், அது என்ன கட்டிடம்"? பெரியவர் கேட்டார். "அதுதான், நகரசபை மண்டபம்." விளக்கினான். வண்டி வலப்பக்கம் திரும்பி பேராலய வீதியால் சென்றது. "அந்தச் சந்திக்கு அடுத்து இரண்டாவது வீடு". என்றான். "அட நமது டேவிட் ஐயா வீடு. இத முதலிலேயே சொல்லியிருக்கலாமே தம்பி." சாரதி அன்புடன் கடிந்து கொண்டான். வண்டி நின்றது. பொருட்கள் இறக்கப்பட்டன. அவர்களும் இறங்கினார்கள்.

சில பொருட்களை எடுத்துக் கொண்டு ஆனந்தன் "ஐயா" அழைத்தவாறே முன்னே சென்று நின்றான். டேவிட் சாய்மனைக் கதிரையில் சரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையில் மூழ்கியிருந்தார். அவர் பத்திரிகையில் மூழ்கினால் யாரையும் பார்க்கமாட்டார். படிப்பார். அதேவேளை குரலை மதித்து பதிலும் சொல்வார். அவருக்கு யாருடைய குரல் என்று தெரியும். "ஆனந்தன் விறுவிறு என்று வாறதுதானே? அது என்ன இண்டைக்கு ஐயா... என்ற இழுப்பு. எங்க போனநீ. கொஞ்சநாளாக் காணல்ல". பேப்பரை மூடியபடி பார்த்தார். அவருக்கு அதிரடி வைத்தியம் கொடுக்கவேணும். மனதில் நினைத்தான். "ஐயா என்னோட எங்கட அங்கிள் குடும்பத்தோட வந்திருக்கிறார். கூப்பிடட்டா"? பதிலுக்காகக் காத்திருந்தான்.

"ஆனந்தன் என்ன விசர்வேலை பார்க்கிறாய்". அவரது முகம் கடுகடுப்பாகியது. ஆனந்தனுக்கு தூக்கி வாரிப்போட்டது. அதிர்ச்சிக்குள்ளானான். "வந்தவங்கள வாசலில நிற்பாட்டிப் போட்டு நீ மட்டும் வந்திருக்கிறாய். அவங்க என்ன நினைப்பாங்க. கூட்டிவா. பிள்ள.. மயூரி சனங்கள் வந்திருக்கு. இந்த இடத்தைக் கொஞ்சம் துப்பரவாக்கு." அவர் வரவேற்க உசாரானார். ஆனந்தனுக்குக் கனவு காணுகின்ற பிரமை. தன்னைச் சுதாகரித்துக் கொண்டான். வெளியில் போனான். "வாங்க, ஐயா வரச்சொன்னார்". என்று அவர்களை அழைத்தான். அவர்களது பொருட்களையும் எடுத்துக் கொண்டு போனான்.
ஆனந்தன் என்ன விசர்வேலை பார்க்கிறாய்". அவரது முகம் கடுகடுப்பாகியது. ஆனந்தனுக்கு தூக்கி வாரிப்போட்டது. அதிர்ச்சிக்குள்ளானான். "வந்தவங்கள வாசலில நிற்பாட்டிப் போட்டு நீ மட்டும் வந்திருக்கிறாய். அவங்க என்ன நினைப்பாங்க. கூட்டிவா. பிள்ள.. மயூரி சனங்கள் வந்திருக்கு. இந்த இடத்தைக் கொஞ்சம் துப்பரவாக்கு." அவர் வரவேற்க உசாரானார். ஆனந்தனுக்குக் கனவு காணுகின்ற பிரமை. தன்னைச் சுதாகரித்துக் கொண்டான். வெளியில் போனான். "வாங்க, ஐயா வரச்சொன்னார்". என்று அவர்களை அழைத்தான். அவர்களது பொருட்களையும் எடுத்துக் கொண்டு போனான்.

டேவிட் உள்அறையில் இருந்து வெளியே வந்தார். அவரைக் கண்டதுதான் தாமதம். மார்க்கிரட் அவரது கால்களைப் பிடித்துத் தாரைதாரையாகக் கண்ணீர் விட்டழுதார். பிள்ளைகளும் தேம்பி அழத் தொடங்கினார்கள். பெரியவர் மூலையில் ஒதுங்கி நின்று கொண்டார். அவரது கண்களும் கலங்கின. ஆனந்தனுக்குச் சங்கடமாகப் போய்விட்டது. டேவிட் ஐயாவைப் பார்த்தான். அவரும் விக்கித்தார். கண்கள் குளமாயிருந்தன. காலில் விழுந்த மார்க்கிரட்டைத் தூக்கி "அழாதே ... என்னிலும் பிழையுண்டு. நான் வந்து பார்த்திருக்க வேணும். இயலாமல் போயிற்று. செபஸ்தி. .நீங்களும் என்னை மன்னித்துக் கொள்ளுங்க. எப்படியென்றாலும் என்னைத் தேடி வந்திற்றீங்க... வாங்க. இருங்க." பிள்ளைகளைப் பார்த்தார். அவர்கள் அவரது அன்புப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையில் கட்டுண்டார்கள். "தாத்தா" என்றவாறே அவரிடம் ஓடினார்கள். அவர் அணைத்துக் கொண்டார். என்றோ பிரிந்த உறவுகள் சங்கமித்த காட்சி ஆனந்தனை ஈர்த்து விட்டது.

"ஐயா! நான் வீட்டுக்குப் போய் பின்னேரம் வாறன்". ஆனந்தன் புறப்பட்டான். "அண்ணன் ரீ போட்டிட்டன். இந்தாங்க குடிச்சிட்டுப் போங்க" மயூரி ஓடிவந்து கொடுத்தாள். வாங்கிக் கதிரையில் இருந்து குடித்தான். பிள்ளைகள் எல்லோரும் உறவு கொண்டாட ஆன்மயூரியிடம் போய்விட்டார்கள். குடித்து முடிந்ததும் "ஐயா நான் வாறன்." புறப்பட்டான். "ஆனந்தன் பின்னேரம் வா. என்ன"? டேவிட் அன்போடு விடைகொடுத்தார். சத்தம் கேட்டு மேரி வெளியே ஓடோடி வந்தாள். "கொண்டுவந்து விட்டுப் போட்டுச் சொல்லாமல் போனால் என்ன அர்த்தம்" உரிமை கொண்டாடினாள். "உங்களை எங்கு சேர்க்க வேண்டுமோ அங்கு சேர்த்து விட்டேன். கடமை முடிந்தது. அடுத்த கடமை இருக்குதல்லவா? அப்பா அம்மா தேடுவார்கள். பின்னேரம் வாறன்." புறப்பட்டான். ஆன்மயூரி வெளிகேற் வரை வந்தாள். அவளோடு மேரியும் வந்து வழியனுப்பினார்கள். அவன் நடந்தான். மேரிக்கு ஏதோ இழந்ததைப் போல் இருந்தது.

"மயூரி! ஆனந்தனை எப்படி உங்களுக்குத் தெரியும்.? இங்கே அடிக்கடி வருவாரா"? கேள்விமேல் கேள்வி கேட்டாள். "மேரியம்மா! சுற்றி வளைக்காதீங்க. நீங்க நினைக்கிறமாதிரி இல்லை. அவர் எனது அண்ணன். ஐயாவுக்கு அவர்மேல் அன்பு அதிகம். எங்கள் அப்பா சுகமில்லாது ஆஸ்பத்திரியில் இருக்கும் போதுதான் பழக்கமேற்பட்டது. அவரின் அப்பாவும் ஆஸ்பத்திரியில் பக்கத்துக் கட்டிலில் இருந்தார். அப்பாவுக்குப் பக்கத்தில் இருப்பதற்கு உதவியில்லை. இருவருக்கும் ஆனந்தன் அண்ணாதான் துணையாக இருந்தார். வேண்டிய உதவிகளைச் செய்தார். தனது பிள்ளையைப் போல் உதவிகள் செய்த பிள்ளையென்று நன்றியோடு அப்பா கூறுவார். அடிக்கடி வீட்டுக்கு வந்து அப்பாவைப் பார்த்துப் போவார். இது நீண்டகாலப் பழக்கம். போதுமா"? பெரிய விளக்கம் அளித்தாள். மேரியின் ஆழ்மனதை ஆன்மயூரி புரிந்து கொண்டாள். ஒரு பெண்ணின் மனதை ஒரு பெண் எவ்வாறு இலகுவாகப் புரிந்து கொள்ள முடிகிறது.?

சொன்னமாதிரி மாலை நாலரை மணிக்கு ஆனந்தன் வந்தான். வீடு களைகட்டியிருந்தது. பலஆண்டுகளாகப் பிரிந்திருந்த சொந்த உறவுகள் குதுகலித்தன. வீட்டின் பின்புறம் கொய்யா காய்த்துக் குலுங்கியது. பழத்தைவிடவும் செங்காய் ருசித்தது. இனிப்பும் புளிப்பும் கலந்த சுவை. ஆன்மயூரி மரக்கிளைகளில் தாவி ஏறினாள். மேரியும் கிளைகளைப் பிடித்துத் தாவினாள். முடியவில்லை. எப்படி ஏறுவது? எலிசபெத் ஏறிவிட்டாள். காய்களைப் பறித்து வந்தாள். சாப்பிட்டார்கள். "அண்ணா! கடற்கரைக்குப் போவம். என்ன"? ஆன் மயூரி முதலிலேயே திட்டமிட்டிருந்தாள். "அதற்கென்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவம். நான் தயார். போவோமா? என்றான். "இதோ ஒரு நொடியில் வருகிறோம்". எல்லோரும் புறப்பட்டார். ஸ்ரனிஸ் வெளியில் வந்தார். "என்ன ஸ்ரனிஸ். நீங்க வரல்லையா"? ஆனந்தன் வினவினான். "எனக்கு நைற் டியூட்டி. நீங்க போங்க. நாளைக்கு நான் சேர்ந்து கொள்கிறேன். சரியா?" ஸ்ரனிஸ் புறப்பட்டார்." அண்ணாவை வழியனுப்பி விட்டு வருகிறேன்". கூறிக் கொண்டு ஆன் மயூரி குசினிப் பக்கம் போனாள். இரவுச் சாப்பாட்டைக் கட்டி ஸ்ரனிஸின் பையில் வைத்தாள். "அண்ணா எல்லாம் சரியாக இருக்கு. நேரத்துக்குச் சாப்பிடுங்க. என்ன"? கட்டளை பிறப்பித்தாள். ஸ்ரனிஸ் சிரித்துக் கொண்டார். "சரியம்மா. உங்கள் கட்டளையை மீறியிருக்கிறேனா? நான் வாறன்". ஸ்ரனிஸ் மோட்டார் சைக்கிளில் ஏறிப் போய்விட்டார்.

கடற்கரை அழகாகக் காட்சியளித்தது. கடல் மெல்லிய அலைகளைத் தள்ளிய வண்ணம் இசைபாடியது. "குடிகளை நெருக்கி பெருக்கமாய்த் தோன்றும் கோணமாமலை இதுதான்". ஆனந்தன் பெருமையாகக் கூறினான். மேரி ஆவலோடு அவன் காட்டிய திசையில் பார்வையைத் திருப்பினாள். கோணேசர் கோயில் குடிகொண்ட மலைத்தொடர் ஒருபுறம் அழகூட்டியது. மறுபுறம். அரசாங்க அதிபரின் அரச விடுதியோடு இணைந்த கடற்படை மலைத்தொடர் மெருகூட்டியது. பூவரசு மரங்கள் வீதியோரங்களில் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. நகரசபை ஒலிபெருக்கியூடாக இனிய பாடல்களை ஒலிபரப்பியது. கடற்கரை மணல் விரிந்து பரந்து சிரித்தது. எங்கும் மக்கள் கூட்டம். சிறுவர்கள் கடலை, கச்சான் என்று விற்றவண்ணம் திரிந்தனர். கடற்கரை மணலில் சிறுநண்டுகள் படம் வரைந்தன. சிறுவர்கள் நெருங்குமுன் வளைகளில் ஓடி ஒளிந்து கொண்டன. சிறுவர்கள் ஈரமணலில் வீடுகள் கட்டி விளையாடினார்கள்.

காற்று மெல்ல இசை மீட்டியது. கதை சுவாரஸ்யமாக இருந்தது. கடலைச் சுருள்கள் கைகளில் சுழன்றன. ஐஸ்கிறீம் இனித்தது. பொழுது விரைந்து போனது. டேவிட் கலகலத்து உரையாடினார். தனது அக்காவின் சாயலை மார்க்கிரட் கொண்டிருந்ததை டேவிட் இடைக்கிடை கூறிக் கொண்டிருந்தார். தனது தாயின் சாயலை மேரி கொண்டிருப்பதாக வர்ணித்தார். எலிசபெத், மரியா, ஏஞ்சல் ஆன்மயூரி கடலலையோடு விளையாடினார்கள். மணலில் உருண்டைகள் செய்து எறிந்தார்கள். அவை கடலில் விழுந்து கரைந்தன. வாழ்க்கையும் இப்படித்தானே. நீர்மேல் குமிழியாக, நிலையற்றதாக இருக்கிறது. பெரியவர் மனந்திறந்து பேசினார். டேவிட் மனம் குளிர்ந்து போனார். குடும்பங்களை ஒன்று சேர்த்த பெருமையை ஆனந்தன் தேடிக்கொண்டான். அத்துடன் நல்லதொரு குடும்பத்தின் அன்பினையும் பெற்றுவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

பனிகலந்து குளிர்காற்று வீசியது. விடிகாலைப் பொழுது. சரியாக ஆறுமணி. அன்புவழிபுரம் சந்தியைத் தாண்டி வாகனம் கன்னியா வெந்நீர் ஊற்றை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. இயற்கையின் அழகு கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தது. வீதியோரம் பசும்புற்தரை பசுமை விரித்து வரவேற்றது. உயர்மரங்களில் குரங்குகளின் குதூகலிப்பான பாய்ச்சல். இளைஞர் யுவதிகளின் சைக்கிள் பவனி. கன்னியா வெந்நீரூற்று திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. ஒரு பதிவான இடத்தில் சிறுமதில் சூழந்திருக்க அதனுள் ஏழு சிறு கிணறுகள். ஓவ்வொன்றும் வித்தியாசமான வெப்பத்தில் நீரைக் கொண்டிருந்தன. சுமார் மூன்றடி ஆழத்தில் நீர் இருந்தது. ஒரு கிணற்றுநீர் அளவான சூடாக இருக்கும். அடுத்தது அதைவிடவும் சூடாக இருக்கும். அந்த நேரத்தில் இளஞ்சூடு இங்கிதத்தை அளித்தது. மேரிக்கு புதுவித அனுபவம். எப்படித் தண்ணீர் சூடாகிறது? அவர்கள் யாருமே வெந்நீரூற்றைப் பார்க்கவில்லை.

ஆசைதீரக் குளித்தார்கள். டேவிட் படுசந்தோசமாகக் காணப்பட்டார். செபஸ்தியார், மார்கிரட். பிள்ளைகள் அனைவரும் சந்தோசத்தில் மிதந்தார்கள். கிணறுகளில் வெந்நீரை அள்ளி மாறிமாறி உடலில் ஊற்றிக் குளித்தார்கள். சிரிப்பும் கும்மாளமும் கொலுவிருந்தது. டேவிட்டுக்குச் சொந்தங்கள் மறந்து பல வருடங்கள் பறந்து விட்டன. இப்படி மீண்டும் சந்திக்கும் வாய்ப்பையே மறந்திருந்தார். அவர் நினைத்துப் பார்க்காதது நடந்து கொண்டிருக்கிறது. மனித மனதுக்கு மட்டுந்தானே உணர்வுகளை அனுபவிக்கவும், அதனை அசைபோட்டு ரசிக்கவும். நினைவில் தோய்ந்து சந்தோசிக்கவும் முடியும். "தம்பி ஆனந்தன்! உன்னாலதான் நான் இண்டைக்குச் சந்தோசமாக இருக்கிறன்". டேவிட் மனம்விட்டுப் பேசினார். "ஐயா மனிதனுக்கு மனிதன் செய்யும் உதவியைச் செய்யவேணும். உங்கள் சந்தோசத்தைப் பார்க்க எனக்குப் பெரிய சந்தோசமாக இருக்கு. அதைவிடச் சந்தோசம் தங்கைச்சி ஆன்மயூரிக்கு. அங்க பாருங்க. அவ சொந்தங்களோட எவ்வளவு சந்தோசமாக விளையாடுறா. அவ இப்படிச் சந்தோசமாக இருந்ததை நான் பார்த்ததே இல்லை." கைகளால் காட்டியவாறு கூறினான். நேரம் போனதே தெரியவில்லை.

குளித்து வெளியே வந்தார்கள். உடைகளை மாற்றினார்கள். பக்கத்தில் கடைகள் இருந்தன. அரியரத்தினம் ஆனந்தனின் நண்பன். இருவரும் ஒன்றாகப் படித்தவர்கள். அரியன் ஆனந்தனைக் கண்டதும் மகிழ்ந்து போனான். கன்னியாவுக்கு வந்தால் வீட்டுக்கு வரும்படி அழைத்திருந்தான். அரியனின் அப்பா உணவுக்கடை வைத்திருந்தார். அந்தக் கடைக்குள் நுழைந்தார்கள். அரியன் ஆனந்தனைக் கண்டுவிட்டான். "டேய் ஆனந்தா வா..வா.. எப்ப வந்தநீ." கேள்வியோடு வரவேற்றான். "அரியன்.. சரியான பசி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேவிட் ஐயாவைத் தெரியும்தானே? இவர்கள் அவரின் சொந்தக்காரர். கன்னியா பார்க்க வந்தார்கள். குளிப்பு முடிந்து விட்டது. இனிச் சாப்பாடுதான்.“ அரியனின் அப்பா புன்னகையோடு வந்தார். அவரிடம் அரியன் ஏதோ சொன்னான். அவரே பக்கத்தில் வந்து விட்டார். இருக்கைகளில் இருந்தார்கள். ருசியான தோசை கமகமத்தது.

அரியனும் அவர்களோடு அமர்ந்து கொண்டான். சாம்பார், சம்பல் எனப்பரிமாறப்பட்டன. சுவைத்து உண்டார்கள். செபஸ்தியார் இவ்வாறான உணவு உண்டதே இல்லை. "நல்ல ருசியான தோசை". என்றார். சுத்தமான காய்ச்சிய பசும்பால் கிடைத்தது. புண்ணிய தீர்த்தம் ஆடிய திருப்தியில் இருந்தார்கள். சற்று ஓய்வெடுத்தார்கள். அரியனின் அப்பா அற்புதமான மனிதர். பார்த்த மாத்திரத்திலேயே ஆட்களை எடைபோட்டு விடுவார். அவருக்கு அனைவரையும் பிடித்து விட்டது. தங்களோடு பகல் பொழுதைக் களிக்கும்படி அன்பாக வேண்டுகோள் விடுத்தார். அவரது வற்புறுத்தலைத் தட்டமுடியவில்லை. அன்று மாலைவரை அவர்களது வீடு கலகலத்தது. பொழுது இன்பமாகக் கழிந்தது. கொழும்புக்குப் போவதை நினைக்கும்போதுதான் துக்கமாக இருந்தது.

மாலை நான்கு மணியிருக்கும். பிரிய மனமில்லாது புறப்பட்டார்கள். ஒருகிழமை விரைந்தோடியது. திருகோணமலை புகைவண்டி நிலையம் பொலிவிழந்து கிடந்தது. ஆனால் பயணிகள் நிறைந்திருந்தனர். வெறுமையை உணர்வதும், முழுமையைக் காண்பதும் அவரவர் மனதிற்கேற்ப நிறைபவை. பயணிகள் நிறைந்திருந்தாலும், அல்லது பலர் நம்மோடு அருகிருந்தாலும், நமது மனதில் நிறைந்திருப்பவர்கள் இல்லாதபோது வெறுமையை உணரமுடியும். பயணிகள் துரிதமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். மெல்லிய இருள் பரவிக் கொண்டிருந்தது. டேவிட் ஐயாவின் கண்கள் குளமாகியிருந்தன. புகைவண்டி புறப்பட இன்னும் பத்து நிமிடங்கள்தான் இருந்தன. ஆனந்தனை இன்னும் காணவில்லை. அவனது வருகையைப் பலர் எதிர்பார்த்த வண்ணம் இருந்தனர். ”எங்கே இந்த அண்ணன் போனார்.“? ஆன்மயூரி மனதுக்குள் கேட்டவண்ணம் இருந்தாள்.

மேரியின் கண்கள் ஒரு நிலையில் இல்லை. அவை அலைபாய்ந்து கொண்டிருந்தன. மனம் வெறுமையை உணர்ந்து கொண்டிருந்தது. அவளது மனம் அவளிடம் இல்லை. மக்களின் கனத்த உள்ளங்களை ஒன்று சேர்த்துப் பிரியவைப்பது இயற்கையின் வேடிக்கை விளையாட்டா? நம்மீது அன்பு செலுத்துபவரின் வருகை எதிர்பார்த்தது போல் கிடையாது விட்டால் மனம் எவ்வாறெல்லாம் சிந்திக்கும். மனச்சுமை கூடி இதயத்தை அழுத்தும். இதயம் பிழிபட்டுக் கடுக்கும். மேரிக்கு இதயம் கடுத்தது. ஒரு கிழமை ஓடிப்போயிற்று. "எப்படி இந்த நேரம் பறக்கிறது.? நான் தனிமையில் இருக்கும் போது மெதுவாக நகரும் நேரம், விரும்பியவர்களுடன் இருக்கும் போது எப்படி விரைந்தோடுகிறது“? அதிசயித்துக் கற்பனையில் மேரி ஆழ்ந்து விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஹலோ... என்ன... யோசனையா"? மேரி சத்தம் கேட்டுத் திடுக்கிட்டாள். தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள். வாடியிருந்த முகம் மகிழ்ச்சி கண்டது. அவளது கண்களில் மலர்ச்சி குடிகொண்டது. முகமெல்லாம் பூத்து மலர்க்கொத்தாகக் காட்சியாகியது. தன்னை மறந்து புன்னகையை இதழ்கள் சுமந்தன. ஆனந்தன் அவளது அழகை அப்படியே அள்ளிப் பருகினான். தேனுண்ட வண்டாகத் திளைத்தான். "அண்ணா! இவ்வளவு நேரமும் எங்கே போனீர்கள்"? அழாக்குறையாக ஆன்மயூரி கேட்டாள். "அதையேன் கேட்கிறாய் மயூரி? ஆஸ்பத்திரிக்குப் போய்வர நேரமாச்சு. நான் என்ன செய்வது?"

"யாருக்கண்ணா சுகமில்லை" பதட்டத்தோடு மயூரி கேட்டாள்.

"அப்பாவுக்கு"

"அப்பாவுக்கு என்ன"

"அவருக்குக் காய்சல் வந்திருக்கு. அவர் கவனியாது இருந்திருக்கிறார். உரமான காய்ச்சல். ஆஸ்பத்திரியில் காட்டி மருந்தெடுத்துத் கொடுத்து வீட்டில் கொண்டுபோய் விட்டிட்டு வாறன். கொஞ்சம் பிந்திப்போச்சு". "இப்ப அப்பாவுக்கு எப்படி இருக்கு"? மேரி ஆவலோடு விசாரித்தாள். "பரவாயில்லை. ஓய்வெடுத்தால் சுகமாகிவிடும்". மேரியைப் பார்த்தவாறே பதிலிறுத்தான். செபஸ்தியாரோடு அளவளாவிய டேவிட் அப்போதுதான் ஆனந்தனைக் கண்டார். செபஸ்தியாரும் ஆனந்தனை அன்போடு விசாரித்தார். "ஐயா...இனி எப்போது திருகோணமலைப் பக்கம்.". கேட்டுவிட்டு மேரியின் பக்கம் பார்த்தான். அவள் தலைகுனிந்திருந்தாள்.

"லீவு கிடைக்கும்போதெல்லாம் வருவோம்" செபஸ்தியார் புன்னகையோடு பதிலளித்தார். டேவிட் அட்டகாசமாகச் சிரித்தார். பிள்ளைகளும் சிரித்தார்கள். மேரிமட்டும் சிரிக்கவில்லை. அவளுக்கு இதயம் கனத்தது. கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு வரும்போது அவளது மனம் வெறுமையாக இருந்தது. ஆனால் கொழும்புக்குத் திரும்பும் போது கனக்கத் தொடங்கியது. அவளை அறியாத சோகம் ஆட்கொள்வதை உணர்ந்தாள். ஒரு கிழமையாகக் கேலியும், கிண்டலுமாக உள்ளம் மகிழ்ந்து கிடந்தது. ஆனால் பிரியும் நேரம் நெருங்கும்போது வெந்து வெடிக்கிறது.

புகைவண்டி புறப்படுவதற்கான மணி ஒலித்தது. பயணிகள் இருக்கைகளில் அமர்ந்து விட்டார்கள். "மேரி .. என்ன முகம் வாடிக்கிடக்கு. சந்தோசமாகப் போய்வாங்க.. என்ன,"? மயூரி முறுவலை வரவழைத்துக் கூறினாள். உண்மையில் அவளது மனமும் இருண்டு கிடந்தது. கொஞ்சநாட்களாக வீடு கலகலத்துக் கொண்டிருந்தது. எந்த நேரமும் சந்தோசம் நிறைந்திருந்தது. சந்தோசம் அதிக நாட்களுக்கு நீடிப்பதில்லையோ?. இன்பமும் துன்பமும் ஒருவகைச் சக்கரம்தான். அது வருவதும் போவதுமாகத்தான் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோசம் வரும்போது துள்ளி மகிழ்வதும், துன்பம் சூழும்போது துவண்டு வாடுவதும் ஏன்?. இன்ப துன்பங்களைச் சரிசமமாக எடுத்துக் கொள்ள முடிவதில்லையே. ஞானிகளால்தான் சாதிக்கலாம். நாங்கள் சாமான்யமானவர்கள்தானே. மேரி முறுவலிக்க முனைந்தாள். அகத்தின் அழகு முகத்தில் தெரிந்தது. அவளால் முடியவில்லை. ”அக்காவுக்கு திருகோணமலை பிடித்துவிட்டது“. ஆனந்தனைப் பார்த்தவாறு எலிசபெத் கூறினாள்.

புகைவண்டி கூவி விசிலடித்தது. பச்சை வெளிச்சம் தூக்கிக் காட்டப்பட்டது. புகைவண்டி மெதுவாகத் தனது பயணத்தைத் தொடங்கியது. ஆனந்தன் கையை அசைத்தான். மேரியும் அசைக்கக் கையை எடுத்தாள். இருகைகளும் முட்டிக் கொண்டன. மின்கம்பியில் பட்ட இரும்புத்துண்டம் போல் ஒட்டியமாதிரி இருந்தது. மின்னலின் அடி விழுந்தது போன்ற பிரமை. கைகள் இரண்டும் பேசிக்கொண்டன. புகைவண்டி நகர்ந்து கொண்டிருந்தது.

கைகள் விடுபடுவதாக இல்லை. மனமில்லாது கைகள் பிரிந்து கொண்டன. பெரியதொரு சுமையைத் தாங்கிய வண்ணம் மேரி இருளில் மறைந்து கொண்டிருந்தாள். தனிமையை இன்றுதான் ஆனந்தன் உணர்ந்தான். வேதனை என்பதென்ன? சிலையாக நின்று தூரத்தே கூவிச் செல்லும் புகைவண்டியை வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தான். "அண்ணா ... போவோமா“? மயூரியின் குரல் கேட்டதும்தான் ஆனந்தன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டான். "மயூரி .. .நான் வீட்டுக்குப் போறன். அப்பாவைப் பார்க்க வேணும். நாளைக்கு வந்து பார்க்கிறன். ஐயா! ..நான் வாறன்.“ விடை பெற்றான். "அண்ணா நாங்க நாளைக்கு வீட்டுக்கு வாறம். சரியா“? மயூரி கூறினாள். அவன் தனது வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்தான்.

புகைவண்டி ஓடிக் கொண்டிருந்தது. மேரியின் மனம் போட்டி போட்டு ஓடியது. இருளைக் குடைந்து ஆனந்தனைத் தேடி அலைந்தது. ஒவ்வொரு புகைவண்டி நிலையத்திலும் மேரியின் விழிகள் ஆனந்தனைத் தேடின. எதைப்பார்த்தாலும் அதில் தான் தேடும் பொருளைத்தான் தனது கண்கள் தேடியதை மேரி உணர்ந்தாள். இந்த மனம் ஒரு குரங்குதான். ஒரு நிலையில் இருப்பதில்லை. சந்தோசம் வந்தால் துள்ளும். துக்கம் வந்தால் துவண்டு சோர்ந்து சுருண்டுவிடும். சீ... என்ன மனம். கண்களை மூடியபடியே விழித்திருந்தாள். தலை மட்டும் புகைவண்டி இருக்கையின் பின்புறமாகச் சாய்ந்திருந்தது. கடுந்தவமிருக்கும் ஞானியைப்போல் கண்மூடி மௌனித்துக் கனவுகண்டாள்

”மார்கிரட்...என்ன யோசிக்கிறாய்? எனக்கு ஆனந்தனை நல்லாப் பிடிச்சிருக்கு. நமது மேரிக்குப் பொருத்தமான பொடியன். நீ என்ன சொல்லுறாய்“? செபஸ்தியார் மனைவியிடம் கதை கொடுத்தார். அப்பா ஆனந்தனைப் பற்றிச் சொல்லிக்கொண்டதை மேரி கண்திறக்காது கேட்க ஆயத்தமானாள். அது மேரியின் காதுகளில் தேனாய் இனித்தது. தான் எண்ணுவதைத் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் உணர்ந்து தெரிவிப்பது மகிழ்ச்சியை ஊட்டியது. கண்களை மூடியவாறே காது கொடுத்துக் கேட்டாள். "எனக்கும் புடிச்சிருக்கு. ஆனால் அதில ஒரு சிக்கல் இருக்கும்போலத் தெரியுது". மார்கிரட் மெல்ல இழுத்துச் சொன்னார். மேரி உசாரானாள். அவளது மனம் திக்திக் என அடித்துக்கொண்டது. "என்ன சிக்கல்?" செபஸ்த்தியார் வினவினார். "நாம கத்தோலிக்க வேதக்காரர். அந்தப் பொடியன் சைவம். சமயச்சிக்கல் வருமென்றுதான் யோசிக்கிறன்." மார்க்கிரட் சிக்கலை வைத்தார். மேரிக்குத் தூக்கிவாரிப் போட்ட உணர்வு. சமயம் எனக்குத் தடையாகுமா? விரும்பிய மனங்களைப் பிரிக்குமா? அவளது மனம் சங்கடப்பட்டது. போராட்டமாக உருவெடுத்தது.

மேரியின் உள்ளம் போர்க்களமாகியது. சமயம் தடையாக வந்தால் என்ன செய்வது?. முன்பின் யோசிக்காது மனதைப்பறிகொடுத்து விட்டேனே. சமயத்தை விட்டுக் கொடுத்தால் என்ன? சமயத்தை எப்படி விட்டுக் கொடுக்க முடியும்? விழிகள் மூடியிருந்தன. ஆனால் உள்ளம் போராடிக்கொண்டிருந்தது. உடலெங்கும் வலித்தது." மார்க்கிரட்.. தூக்கமா"? செபஸ்த்தியார் தொடங்கினார். "நான் ஒரு முடிவுக்கு வந்திற்றன். மேரிக்கு ஆனந்தன்தான். என்ன வந்தாலும் அதனைச் சரிசெய்யலாம். நம்பிக்கை இருக்கு". செபஸ்தியார் கூறிக்கொண்டிருந்தார். மேரிக்கு ஐஸ்கிறீம் சாப்பிட்டமாதிரி இருந்தது. மேரி...உள்ளத்தால் குளிர்ந்து போனாள். அப்பா முடிவெடுத்தபின் அப்பீலேது? நடப்பது நல்லதாக இருக்கும். இமைகளை இறுக்கி மூடிக்கொண்டு தியானத்தில் ஆழ்ந்தாள். அப்படியே உறங்கிவிட்டாள்.

இரவிரவாக ஓடிக்களைத்த வண்டி பெரிய நீண்ட கூவலோடு வேகத்தைக் கட்டுப்படுத்தியது. மெதுவாக ஊர்ந்து கொழும்புக் கோட்டையில் நின்றது. பொருட்களைக் கைகளில் எடுத்துக் கொண்டு இறங்கினார்கள். வெளியில் வந்தார்கள். வாடகைக் கார் தயாராக நின்றது. ஏறி வீட்டையடைந்தார்கள்.

## 7

ஆனந்தனுக்கு நினைவு திரும்பியிருந்தது. மழை பெய்துகொண்டிருந்தது. குளிர் சில்லிட்டது. வெறும் சிமெந்துத் தரையில் குறுகிக் கிடந்தான். எழும்பமுடியாது உடல் வலித்தது. "நான் எங்கே இருக்கிறேன். இதெல்லாம் கனவா"? அவசரமாக கழிவறை அழைத்தது. எப்படிப்போவது? மெதுவாக இரும்புக்கதவின் கம்பிகளைப் பிடித்து எழுந்தான். முனங்கலோடு "சேர்" சத்தமிட்டான். சிப்பாய் வந்தான். "மொக்கத்த ...என்ன?" சிங்களத்தில் கூறிப் பின் தமிழிலும் சொல்லிச் சத்தத்தோடு வந்தான். இவன் சொன்னான். " மட்ட ஹரி..கறதறபாங்" சரியான கரைச்சல்.... சிப்பாய் முணுமுணுத்தான். திறப்பை எடுத்து வந்து இரும்புக்கதவைத் திறந்து விட்டான். "யன்ட...போ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னான். மெதுவாகத் தவழ்ந்து கழிவறைக்குள் சென்றான். சுவரைப்பிடித்து ஒருவாறு நின்று சிறுநீர் கழித்தான். மெதுவாகத் திரும்பினான். தடுமாறி விழப்போனவனை அந்தச்சிப்பாய்தான் தாங்கிக் கொண்டான். ஆனந்தனை அறையினுள் விட்டுப் பூட்டிவிட்டான். ஆனந்தன் அப்படியே சுருண்டு கொண்டான்.

ஆனந்தன் மேரியைத் திருமணம் செய்த நாளில் இருந்து படுக்கையை அவன் விரித்ததில்லை. உணவு தயாராக இருக்கும். கை கழுவுவதற்குத் தண்ணீர் தயாராய் இருக்கும். கை அலம்புவதும் உண்பதுவும்தான் அவனது வேலை. படுக்கை விரித்திருக்கும். படுத்தெழும்புவதுதான் அவனது கடமை. மேரி அவனது வேலைகளை எல்லாம் தானே முன்னின்று செய்வாள். இன்று வெறும் சிமெந்துத் தரையில் கிடக்கிறான். அவனது வாய் அடிக்கடி மேரியின் பெயரை முணுமுணுக்கும். நெஞ்சு விம்மி அழும். ஆனந்தனைத் தனது குழந்தையாகவே மேரி கவனித்தாள்.

சற்று நேரத்துக்குள் அந்தச் சிப்பாய் வந்தான். "மே... மேக்க பொண்ட...இதைக்குடி" என்று தேநீர் கோப்பையைக் கொடுத்தான். ஆனந்தனுக்கு ஆச்சரியம். ஆனந்தன் நன்றியோடு வாங்கிக் கொண்டான். அந்தக்குளிருக்கும், கடும் பசிக்கும் தேநீர் அமிர்தமாக இருந்தது. குடித்தான். சிப்பாய் வந்து கதை கொடுத்தான். தன்னை அறிமுகம் செய்தான். அரைகுறைத் தமிழில் உரையாடினான். தனது மனைவி ஒரு ஆசிரியர் என்றான். கல்விக்கடமை செய்பவர்கள் நல்லவர்கள் என்று அந்த ஆசிரியை கூறியதைப் பலதடவைகள் சொன்னான். "நான் என்னால் முடிந்த உதவியைச் செய்வேன். நான் கடமையில் இருக்கும் போது அடிக்கவிட மாட்டேன்" என்றான். அவன் சொன்னதுபோல் அவன் கடமையில் உள்ளபோது யாரும் அடிக்கவில்லை. அவனது டியூட்டி முடிந்து விட்டது. அவன் ஆனந்தனிடம் வந்தான்.

"மாத்தையா.... மம யனவா. கியலாத்தமாய் யன்னே. பயவெண்ட எப்பா" என்றான். "நான் போகிறேன். இவர்களிடம் சொல்லி விட்டுத்தான் போகிறேன்." என்றான். ஆனந்தனுக்கு ஆச்சரியம். தன்னை இவனொருவனாவது மதிக்கிறானே. மரியாதையாகக் கதைக்கிறானே. அவனுக்கு மானசீகமாக நன்றி தெரிவித்தான். அவனை அழைத்தான். "உங்க மனைவியின் பெயரென்ன"? கேட்டான். "தயாவதி. மூன்றுமுறிப்புப் பாடசாலயில படிப்பிக்கிறார்". சொல்லிவிட்டு அவன் சென்றுவிட்டான். தயாவதியை நினைவிருத்திப் பார்த்தான். அவன் சென்றபின் பலர் வந்தார்கள். போனார்கள். ஒவ்வொரு இரண்டு மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை காவல் கடமை மாறும். இரவு நடுச்சாமம் கழிந்து சரியாக மூன்று மணி. இரும்புக் கதவு கிறீச்சிட்டது. "அடோவ் ... உம்ப கொட்டியாத? பலமு" நீ புலியா? பார்ப்போம்" கூறிக்கொண்டு பல சிப்பாய்கள் அறையினுள் புகுந்தார்கள். சரமாரியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்தார்கள். ஆனந்தன் மெதுவாக அறையின் மூலைக்குள் ஒதுங்கினான்.

விலா எலும்புகளை மறைத்து முழங்கைகளால் பாதுகாப்புக் கொடுத்தான். முதுகு, பிறடி, எங்கும் சரமாரியாக அடிவிழுந்தது. என்ன கொடுமை? இவர்கள் மனிதர்களா? தமிழரெல்லாம் புலிகளா? இவர்கள் புலிகளை உருவாக்குகிறார்களா? புத்தபிரான் இதற்காகவா புத்ததர்மத்தை உருவாக்கினார்? மனிதர்களுக்கு அஞ்ஞானத்தைப் போக்கி அறக்கருத்துக்கள் ஊடாக மெய்ஞானத்தைப் போதித்த போதிமாதவனைப் பின்பற்றுபவர்களா இவர்கள்? சாக்கிய இனத்தவரான புத்தர் எங்கே? இலங்கைச் சிங்களவர்கள் எங்கே.? எல்லாச் சிங்களவர்களும் அப்படியா? இல்லையே. தன்னோடு சேவைசெய்யும் உதவிப்பணிப்பாளர் திசநாயக்க அதிபர் அப்புகாமி. இவர்களெல்லாம் அற்புதமான மனிதர்கள். அவன் யோசனை விரிந்தது.

நானும் எனது மூதாதையரும் இந்த இலங்கைத்தீவில்தான் பிறந்தோம். இந்த நாட்டுக்குடிமக்கள் நாங்கள். இலங்கை சிங்களவர்களுக்குரியதா? சிங்களவர்கள் எங்கிருந்து வந்தவர்கள்? சிங்கபாகு யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவன்? விஜயன் யார்? தனது தந்தையாலே மொட்டை அடித்து நாடு கடத்தப்பட்டவன். எப்படி இலங்கைக்கு வந்தான்? குவேனியை ஏமாற்றி தம்பபன்னியைக் கைப்பற்றினான். இயக்கர். நாகர் எங்கே? புத்தர்தானும் இலங்கையர் இல்லை. சிங்கம் இலங்கையில் இல்லை. இதுவே சிங்களவருக்கோ அல்லது புத்தருக்கோ சொந்தமில்லாத தீவு. "மகாவம்சம்' சோடிக்கப் பட்டுள்ள கற்பனைகள் நிறைந்த பாளிமொழியில் எழுதப்பெற்ற நூல்தான். உண்மையான வரலாறு கொண்ட நூலல்ல. மகாவம்சத்தில் கூறப்பட்டிருக்கும் செய்திகள் பல இதிகாசப் புராணக் கதைகள். ஹம்சனின் கதை புராணக் கதையாகும். ஹம்சனின் உயிருக்கு அவனது தங்கையின் வயிற்றில் உருவாகும் ஆண்குழந்தையினால் அழிவு எனக் கூறப்பட்டுள்ளது. மகாவம்சத்தில் பாண்டுகபாயனின் வரலாறாக திரிபுபடுத்தப் பட்டுள்ளது.

வாலகம்பாகு பல தோல்விகளைக் கண்டுள்ளான். தோல்வியோடு குகையில் தங்கியிருந்த போது ஒரு சிலந்தி வலைபின்னுவதைப் பார்த்தான். அது ஒரு இடத்தில் இருந்து மறுமுனைக்குப் பாய்ந்து வலையினைப் பொருத்தவேண்டும். பலமுறைகள் முயற்சித்தது. அந்த முயற்சிகளைக் கணக்கிட்டான். ஏழுதடவைகள் முயற்சித்தது. எட்டாவது முறை அது வெற்றி கண்டது. அவனும் ஏழு முறை முயன்றான். போரில் வெற்றி பெறமுடியவில்லை. சிலந்தியின் முயற்சியை எண்ணிப் பார்த்தான். அவனது உள்ளத்தில் புத்துணர்ச்சி பொங்கியது. எட்டாவது தடவையாக படையெடுத்தான். வெற்றி பெற்றான்.

இக்கதை 'றொபட் புறூஸ்' மன்னனது கதையைப் பிரதிபலிக்கிறது. இலங்கை தனியே தமிழருக்குச் சொந்தமானதுதானா?. விஜயன் பாண்டிய இளவரசியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணந்ததாகவும் அவனது சந்ததியினர்தான் சிங்கள மக்கள் எனவும் கூறப்படுகிறது. அப்படியாயின் சிங்களவர்கள் தமிழ்த்தாயின் பிள்ளைகள் அல்லவா? இலங்கையின் கடைசிமன்னன் யார்? எப்படிச் சிங்களவர்கள் இந்த நாட்டைச் சொந்தங் கொண்டாடலாம். ஐரோப்பியர் இந்த நாட்டுக்கு ஏன் வந்தார்கள்.? யார், எப்படி இந்த நாட்டைப் ஐரோப்பியருக்குக் காட்டிக் கொடுத்தார்கள். பதவிக்காகச் சிங்களப்பிரதானிகளே காட்டிக் கொடுத்தார்கள். சிங்களவர்களை ஆங்கில அரசு சிறையிட்டபோது சிங்களவர்களைச் சிறை மீட்டது யார்? ஆனந்தனுக்கு சிப்பாய்கள் அடித்தது வலிக்வில்லை. அவனது மனம் இறுகிக் கொண்டு வந்தது. கிரேக்க, ரோமானிய புராண இலக்கியங்களைப் படித்திருக்கிறான். அந்த இலக்கியங்களில் காணப்படும் அதியற்புதக் கதைகள் பலவற்றை மகாவம்சம் கொண்டுள்ளதை அலசினான்.

ஆளப்பிறந்தவர்களின் சதிவலைகளை அவன் இருளில் கிடந்தவாறே கிளறிப்பார்த்தான். எந்தநாட்டிலும் இந்தச்சதி நடக்கத்தான் செய்கிறது. மண்ணாசை, பெண்ணாசை, பதவியாசையால்தான் சதிவலைகள் உருவாகின. இலங்கைமேல் படையெடுத்த மன்னர்களையிட்ட சிந்தனை வந்தது. வந்த அத்தனை மன்னர்களும் தமிழரின் நலனுக்காக என்ன செய்தார்கள்?. ஆண்டபரம்பரை என நாம் மார்தட்டிக்கொள்ள நமக்கு என்ன அருகதையுண்டு. நாங்கள் சாதாரண குடிமக்கள்தானே. ஆண்டவர்கள் ஆண்டு போய்விட்டார்கள். சாதாரண குடிமக்கள் சண்டையிடுகிறோம். இந்தியக்குடியினரா நாங்கள். தமிழ்மொழிதானே தென்னிந்தியாவோடு எம்மை இணைத்துள்ளது. தமிழர்களை ஓரணியில் சேர்க்க உதவுகிறது.

போத்துக்கீசரும், ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் ஆண்டபோது நாம் அடிமைகளாகக் கிடந்தோம். அப்போது ஆட்சியாளர்களுக்குக் கைகட்டி ஆமாம்போட்டவர்களது வாரிசுகள் இன்று சுகபோகத்தை அனுபவிக்கக் கற்றுக் கொண்டார்கள். அதனால் வந்த வதையிது. ஆனந்தனின் மனம் போர்க்களமானது. சிந்தனை நாலாபக்கமும் சிதறியது. சந்தர்ப்பவாத அரசியலில் குளிர்காயும் போலிகள் இன மத மொழியினை வேறுபடுத்திக் காட்டி மக்களை ஏமாற்றி வருகிறார்கள். இன்றைய அமெரிக்கர்கள் யார்? ஐரொப்பியர் அமெரிக்காவில் குடியேறி, அங்கு காலங்காலமாக வாழ்ந்த பழங்குடியினரான செவ்விந்தியர்களை கொன்றழித்து விட்டு தங்கள் நாடென்று தனித்துவம் பேசுகிறார்கள். மாயா, இன்கா இனமக்கள் பேரும்புகழோடும் வாழ்ந்த நாகரீகம் மிக்க பழங்குடியினர். இன்று அந்த இனங்களின் தடயமே இல்லை. அதேபோல் இலங்கையில் வாழ்ந்த நாகர், இயக்கர் இனங்களும் வரலாற்றில் மட்டுமே பேசப்படுகிறார்கள்.

இந்த இலங்கைத் தீவில் காலங்காலந் தொட்டு இரு இனமான சிங்களவர்களும், தமிழர்களும் வாழ்ந்து வந்துள்ளார்கள். காலகதியில் முஸ்லிம்களும் சேர்ந்து விட்டார்கள். இலங்கை எவ்வளவு அழகான நாடு. இன்று இங்கு மூவின மக்கள் வாழ்கிறார்கள். இவர்களை ஒற்றுமைப் படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி அபிவிருத்தி காணலாம். என்ன வளமில்லை இந்த இலங்கை நாட்டில். சிறிதும் பெரிதுமாய் நூற்றுக்குமேல் நதிகள் பாய்கின்றன. வற்றாது ஓடுகின்ற பெரும் நதிகளுண்டு. நல்ல மண்வளமுண்டு. உழைக்கும் மக்களுண்டு. எல்லோரும் மனம் வைத்தால் வல்லரசாக மாற்றலாம். ஆனால் சுயநலக்கும்பல் இனமத, மொழியின் பெயரால் பிரிவினையைக் காட்டி அழிவுப்பாதையில் செல்கிறார்கள். இவர்களை என்ன செய்வது.?

"இந்தச்சிப்பாயின் துப்பாக்கியைப் பறித்து அழித்துவிட்டுப் புரட்சிவாதியாய் மாறினால் என்ன? எனக்கு என்ன தெரியும்? துப்பாக்கியை என்னால் ஏந்தமுடியுமா? என்னால் இன்னொரு உயிரைப் பறிக்க முடியுமா? நான் படித்த கல்வி எனக்குக் கோழைத்தனத்தைத் தந்திருக்கிறது. எங்களை வளர்த்தெடுக்கப் பாடுபட்ட அம்மாவைக் காப்பாற்றவேண்டும். அப்பா இல்லாத தம்பிமார், எனது மனைவி பிள்ளைகளும், இந்தச் சமூக அமைப்பும் எனக்குத் தடையாக உள்ளன. சீ... நானும் மனிதன்தானா‘‘? மனதுக்குள் கேள்விகள் வேள்வியாகக் கொழுந்துவிட்டெரிந்தன. மனம் இடிந்து அழுதது. அடித்துக் களைத்தவர்கள் கதவை இழுத்து மூடிவிட்டுச் சென்றார்கள்.

நுளம்பின் தொல்லை தொடர்ந்தது. ஆனந்தனுக்கு உறக்கம் இல்லை. இரத்தக்கறை படிந்து காய்ந்த சுவரில் சாய்ந்திருந்தான். சாய்ந்தபடி உறங்குவதும் எழுவதுமாகக் கனவுலகில் இருந்தான். இருக்கும் இடங்களை மாற்றி மாற்றி அந்தச் சின்ன இருள்படிந்த அறைக்குள் கிடந்தான். அவனது உடல் சிறைப்பட்டுக் கிடந்தது. ஆனால் அவன் மனம் இந்தப்பிரபஞ்ச இரகசியங்களை அறியும் ஆசையில் உலாவந்தது. மூலையில் சாய்ந்தவாறே கால்களை நீட்டிச் சாய்ந்திருந்தான். அவனது உடமைகளான டயறியும், பேனாவும் பக்கத்தில் கிடந்தன. வாகனங்கள் இரைந்து கொண்டிருந்தன. நுளம்பு மட்டும் இசைபாடிச் சுதந்திரமாக இரத்தம் குடித்துச் செல்கின்றன.

“ஏய் ..ஏய் ..நுளம்பே
உனக்குள்ள சுதந்திரம்
எனக்கில்லை - நீ
இரைந்து வருகிறாய்
இரத்தம் குடிக்கிறாய்
பறந்து போகிறாய் - நான்
பகலிரவு தெரியாப்
பாவியாய் கிடக்கிறேன்.
போ... போ.. அப்பால்
பிடித்து உன்னையும்
போடுவார் சிறையில்.

கவிதையாய் வரும். டயறியில் கிறுக்குவான். அலுப்பும், அழுகையும் அவன் துணையாகும். கடும் மழை பெய்து கொண்டிருந்தது. நடுச்சாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிந்துவிட்டது. கும்மிருட்டில் மின்சார வெளிச்சத்தின் ஊடுருவல். இரும்புக்கம்பிக் கதவிடுக்கால் மழைவீழ்ச்சி தெரிந்தது. வெள்ளித்தாரைகள் கொட்டிய வண்ணமாகத் தெரிந்தது. குளிர்காற்று வீசிக் கொண்டிருந்தது. குடித்த தேநீர் உடலுள் சென்று சிறுநீரைப் பெருக்கியது. மெதுவாக எழுந்தான். கதவினைப் பிடித்தவாறு "சேர்" என்றான். கடமையிலிருந்தவன் கடுப்போடு வந்தான். சைகைமூலம் காட்டினான். முணுமுணுத்தவாறே கதவினைத் திறந்தான். தாரைதாரையாக மழைநீர் கொட்டிக் கொண்டிருந்தது. கழிவறையை நோக்கி நடக்க முயற்சித்தான்.

"ஒத்தன யன்ட எப்பா மெத்தன தாண்ட" அங்கே போகாதே. இதிலே அடி" சிப்பாய் சிங்களத்தில் சொன்னான். கூரையால் வடியும் நீரை சுழன்றடிக்கும் காற்று விறாந்தையெங்கும் வாரி விளாசியது. விறாந்தையின் விளிம்பில் நின்றவாறே சிறுநீரைக் கழித்தான். நிலத்தில் இருந்து விறாந்தை ஒன்றரை அடி உயரமுடையது. மழைநீர் பரவி எங்கும் வெள்ளக்காடாய்த் தெரிந்தது. ஆனந்தன் அதனை எதிர்பார்க்க வில்லை. பின்னாலிருந்து இடுப்புக்குக்கீழ் விழுந்த உதையால் ஆனந்தன் மழைநீரில் குப்புற விழுந்தான். மழைநீரும், சகதியும் அவனைக் குளிப்பாட்டியது. அந்தக் குளிரில் மெதுவாகக் கைகளை நிலத்தில் ஊன்றி எழுந்தான். படிந்த சேற்றை மழைநீரிலேயே கழுவினான். தொப்பாய் நனைந்து நடுங்கினான்.

## 8

விறாந்தையின் விளிம்பைக் கெட்டியாய்ப் பிடித்து சிரமப்பட்டு ஏறினான். நனைந்து குளிர் உதறத் தொடங்கியது. உதைத்தவன் மெதுவாக மறைந்து விட்டான். "அய் வட்டுனே"? ஏன் விழுந்தாய். கேட்டவண்ணம் கதவைத்திறந்து விட்டவன் வந்தான். இவனும் சேர்ந்து செய்த வேலையென்பது ஆனந்தனுக்குப் புரிந்தது. சிப்பாயின் கபடச்சிரிப்புக் காட்டிக் கொடுத்தது. ஒன்றும் பேசாது தனது அறையினுள் சென்றான். சிப்பாய் கதவைத் தாளிட்டான் சென்றுவிட்டான். குளிர் வாட்டியெடுத்தது. "கையது கொண்டு மெய்யது பொத்தி"ய நிலையில் தன்னுடல் சூட்டால் ஈரத்தைக் காயச்செய்து கொண்டிருந்தான். மழை விட்டபாடில்லை. எதையோ நினைத்தவனாக அதிலே ஆழ்ந்தான். உடலில் இந்த உயிர் ஒட்டியிருக்கும்போதுதான் வலிகளை உணர்கிறோம். ஆன்மா உடலைவிட்டு அகன்று அப்பால் தூரத்தில் நின்றால் உடலின் உபத்திரவம் உணரப்படுவதில்லை. ஆனந்தனுக்கு அந்தத்துன்பமான வேளையிலும் பல்கலைக்கழக நிகழ்வு வந்து உசுப்பியது. தக்க நேரத்தில் அது கைகொடுத்து உதவியது. சிரிப்பு வந்தது. சற்றுத் தன்னை மறந்து அந்த நிகழ்வில் ஊறிப்போனான்.

பேராதனைப் பல்கலைக்கழகம் பனிமலைகளிடைப் பதுங்கிக்கிடக்கிறது. புதியமாணவர்களது அனுமதி தொடங்கி மூன்றுநாட்கள் பறந்தோடிய நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'றாக்கிங்' எனும் பகிடிவதை நடந்து கொண்டிருக்கிறது. மகாவலி சலசலத்து ஓடிக்கொண்டிருக்கிறது. இயற்கை தனது அழகையெல்லாம் அள்ளிக் கண்டிநகரையும் அதன் எல்லைப்புறங்களையும் சோடித்து அழகு பார்க்கிறது. இருளில் மின்மினிப்பூச்சிகள் பாட்டம்பாட்டமாகப் பறப்பதைப் பார்ப்பதற்கே ஆயிரம் கண்கள் வேண்டும். இந்திரலோகமாக பேராதனை பல்கலைக்கழக வளாகம் யொலிக்கிறது. "சீனியர்ஸ்ருடன்ஸ்" வேட்டைநாய்களாகி "ஜூனியேர்ஸ்' என்ற புதியமாணவர்களின் பெயர்ப்பட்டியல்களோடு அவர்களைத் தேடி வளாகக் ஹொஸ்ரல் அறைக் கதவுகளைத் தட்டிக் கொண்டு வருகிறார்கள். அதிகாலை மூன்றரை மணிதொடக்கம் இரவு பத்துப் பதினொரு மணிவரை இது தொடர்கதையாகும். தொடர்ந்து இரண்டு கிழமைகளுக்கு பகிடி வதை நடக்கும். தமிழ்மொழி பேசும் மாணவர்களைச் சிங்கள மாணவர்கள் பகிடிவதை செய்வதில்லை. தமிழ், முஸ்லிம் மாணவர்களே செய்தார்கள்.

பல தொடர்மாடிக் கட்டிடங்களை இணைத்துக் ஹொஸ்ரல் கட்டியிருந்தார்கள். கட்டிடங்களுக்கிடையில் சுமார் இருபதடி அகலமான இடைவெளியிருக்கும். புல் ஆளுயரத்துக்கு வளர்ந்திருக்கும். இரவில் பனியில் தோய்ந்து குளித்துக் கொண்டிருக்கும். ஒரு கட்டிடத்தொகுதியில் சுமார் எண்ணூறு மாணவர்கள் தங்கியிருக்கும் வசதிகள் கொண்டிருந்தன. ஒரு அறையில் இரண்டுபேருக்கான வசதியிருந்தது. பின்னர் இது மூன்றுபேர்களை உள்வாங்கிக்கொண்டது. இவ்வாறான ஏழெட்டுக் ஹொஸ்ரல்கள் பரந்திருந்தன. பெண்களுக்கு வேறான ஹொஸ்ரல்கள். ஆண்களுக்கு வேறான ஹொஸ்ரல்கள் இருந்தன. அதிகாலை மூன்றரைமணிக்கு நல்லுறக்கம் உடலில் ஊர்ந்து தழுவி ஆட்கொள்ளும் நேரம். பெரிய ஆரவாரமாக இருந்தது. புதியவர்களை வெளியில் அழைத்தார்கள். உடைகளைக் களைந்து தலையில் கட்டச்சொன்னார்கள். புதியவர்கள் அனைவரும் ஆதிமனிதர்களாக அம்மணக் கோலத்தில். கட்டிடங்களுக்கு இடையில் உள்ள புல்லினை மடக்கி அதன்மேல் வரிசையாக உருளச் சொன்னார்கள். ஒரு ஐந்து நிமிடங்களில் நிமிர்ந்திருந்த புற்கள் தரையோடு படுத்திருந்தன. வெறும் உடலில் புற்களின் சுணை அப்பிக் கொண்டது. நமது மூதாதையரின் செயல் தொடங்கியது. அதுதான் சொறிச்சல். அனைவரது கைகளும் உடலைச் சொறியத் தொடங்கின. கட்டிடத் தொகுதியினுள் பல செயற்கைத் தடாகங்கள் இருந்தன. அவற்றைப் பார்க்கும்படி சுற்றி நிற்கவைத்தார்கள். தண்ணீர் தேங்கி பளிங்குபோல் தெரிந்தது. தாங்கள் பிறந்தமேனியோடு நிற்பதைப் பார்த்துக் கொண்டார்கள்.

பின்னர் நடக்கப் போவது அவர்களுக்குத் தெரியாது. அவ்வளவுதான். பின்னால் இருந்தவர்கள் தடாகத்தினுள் தள்ளி விட்டார்கள். தடாகம் ஆழமில்லை. ஆனால் தண்ணீர் ஐசாகக் குளிர்ந்தது. தோல் விறைப்புற்றது. உடல் நடுங்கியது. பற்கள் கிடுகிடுத்தன. புல்லின் சுணைக்கு இதமாக இருந்தது. அதேபோல் இந்தச் சிப்பாய்களின் சித்திரவதையின் வலியை மழைநீர் குறைத்துவிட்டது போன்ற உணர்வு அவனுக்கு. மெல்லத் தனக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்துக் கொண்டான்.

விடிந்து விட்டதற்கான அறிகுறி தெரிந்தது. சூரியக்கதிர்கள் உலகை உய்விக்கப் புறப்பட்டு விட்டன. சூரியன் இல்லையேல் இவ்வுலகில் இயக்கம் இல்லை. சூரியக்கடவுள் வல்லமை படைத்தவர். அவரது மனைவி சந்திரனாம். நட்சத்திரங்கள் எல்லாம் இவர்களது பிள்ளைகளாம். சூரியன் தனது பிள்ளைகளைப் பிடித்து விழுங்கிவிடுமாம். அதற்காக தந்தை சூரியனுக்கும் தாய் சந்திரனுக்கும் இடையில் தகராறு. இரவில் சூரியன் உறக்கம் கொள்ளும். சந்திரன் இரவு முழுவதும் தனது குழந்தைகளுக்குக் காவலாக இருந்து விளையாடும். பகலில் சூரியன் வானில் பவனிவரும். நட்சத்திரக் குழந்தைகள் ஓடி ஒளிந்து கொள்ளும். இவை கிரேக்க இதிகாச புராணக்கதைகள் கூறும் செய்திகள். ஆனந்தன் கதைகளை நினைவு கூர்ந்தான். சூரியக் கதிர்கள் ஆனந்தனையும் எட்டிப்பார்க்க முயற்சித்தன. ஆனால் முடியவில்லை.

தன்னை இந்தச் சிறையில் அடைத்து வைத்ததால் சந்திரன் கவலையில் தன்னை எட்டியும் பார்க்கவில்லைப்போலும். மனதினுள் நினைந்து கொள்வான். இருள் அவனிருக்கும் அறையினுள் பதுங்கிக் கொண்டது. பகல் இரவாகும். இரவு பகலாகும். சிப்பாய்கள் வருவார்கள். சிறைப்பட்டிருப்போரை ஆசைதீரமட்டும் அடித்து நொருக்குவார்கள். போவார்கள். அறையினுள் எப்போதும் இருளாகவே இருக்கும். காலை வரும். பகலாகும். மாலை மலரும். பட்டிகளில் மாடுகளை கொண்டு வந்து அடைப்பதுபோல் தமிழ் இளைஞர்களைப் பிடித்து வருவார்கள். அடைப்பார்கள். நினைத்த நேரம் வந்து வதைப்பார்கள். முடிந்ததும் அறைகளில் பூட்டுவார்கள்.

இரவு மெல்லப் படரும். விரும்பிய நேரங்களில் சிப்பாய்கள் வருவார்கள். ஐயர் மூலஸ்த்தானத்தைப் பூசைக்காகத் திறப்பதுபோல் இரும்புக் கதவைத் திறப்பார்கள். சுவாமிக்குப் பூசை செய்வதுபோல் அடியுதைப் பூசைகள் செய்வார்கள். பூசை கொடுத்தபின் களைத்துப் பூட்டிவிட்டுப் போய்விடுவார்கள். இது நித்தியம் நடக்கும் “சா'பாட்டுக்கான கால அட்டவணை.

சரியாக மாலை ஆறுமணியிருக்கும். இராணுவச் சிப்பாய்களின் அட்டகாசமான அதட்டல்களும், கேலிச்சிரிப்புகளும் அந்தக் காவலறைக் கட்டிடத்தினுள் எதிரொலிக்கிறது. மெதுவாக எழுந்து இரும்புக்கம்பிக் கதவருகே நின்று நடப்பதை பார்த்தான். பல இளஞர்களை இழுத்து வந்தார்கள். அவனது பக்கத்து அறையினுள் விட்டுப் பூட்டிச் சென்றார்கள். அந்த இளஞர்களின் முகங்கள் சரிவரத் தெரியவில்லை. சுவர்மணிக்கூடு ஏழுமணி காட்டியது. சிப்பாய்க் கூட்டம் அட்டகாசமாக வந்தது. பக்கத்து அறை திறக்கப்படும் சத்தம் கேட்டது. இரண்டு இளஞர்களை அறையிலிருந்து இழுத்து வந்தார்கள். அவர்களது சேட்டைக் கழற்றினார்கள். கைகளைப் பின்புறமாக இழுத்துப் பிணைத்தார்கள். சிலர் இளஞர்களை இறுக்கமாகப் பிடித்தார்கள். ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளஞனைத் தூக்கிக் கீழே குப்புறப் போட்டார்கள். கீழே கிடந்த இளஞனின் முதுகில் பூட்ஸ் காலை வைத்துத் திருகினார்கள். அவன் ஓலமிட்டு அழுதான். மற்ற இளஞனின் இமைகளை அகல விரித்துப் பிடித்தார்கள். ஒருவன் சரையில் இருந்த மிளகாய்த் தூளை அள்ளிக் கண்களுள் விசிறி அடித்தான். இளஞன் வீரிட்டமுதான். கைகள் பின்புறமாகக் கட்டுப்பட்டுக் கிடந்தன.

மிளகாய்த்தூள் கண்களை எரித்தது. துடிதுடித்துக் கதறியழுது கண்ணீரைப் பொழிந்தான். அவன் துடிப்பதைப் பார்த்துச் சிரித்தார்கள். சிப்பாய்களின் கைகளில் பலவித தடிகள் இருந்தன. சிப்பாய்கள் மாறிமாறி அடித்தார்கள். யார் அடிப்பது என்று அவர்களால் பார்க்க முடியவில்லை. அவன் சுருண்டு விழுந்து அலறினான். கீழே கிடந்த இளஞனை நிமிர்த்தினார்கள். அவனது கண்களிலும் மிளகாய்த் தூள் வீசப்பட்டது. இளஞர்கள் துடிதுடித்துக் கதறினார்கள். ஆனந்தனால் பொறுக்க முடியவில்லை. அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கதவோரமாகச் சாய்ந்து தன்முன்னால் நடக்கும் கொடுமைக் காட்சிகளைக் கண்டு சிலையாகித் திகைத்து நின்றான். சில சிப்பாய்கள் அறையைத் திறந்து உட்சென்றார்கள். அடைபட்டுக்கிடந்த இளஞர்களைப் பதம் பார்த்தார்கள். இள்ஞர்கள் எதனைத் தாங்குவார்கள். ஏன் இப்படி சித்திரவதை செய்கிறார்கள்.? அவர்கள் என்ன செய்தார்கள்?

ஆனந்தனை நோக்கி சிப்பாய் ஒருவன் வந்தான். "அடோவ் ஒயா கௌத? ஆருடா நீ "? முறைத்தபடி கேட்டான். சிப்பாயின் கண்கள் சிவந்திருந்தன. அவன் போதையில் இருந்தான். ஆனந்தன் பதில் சொல்ல வில்லை. பேசாதிருந்தான். அப்படியே சென்றுவிட்டான். வந்த சிப்பாய்க் கூட்டம் சென்றுவிட்டது. காவல் கடமையில் இருந்தவன் வந்தான். அடிபட்ட இளஞர்களது கட்டுக்களை அவிழ்த்து விட்டான். வாளியில் தண்ணீரைக் கொண்டுவந்து கொடுத்தான். கண்களைக் கழுவ உதவினான். இருவரையும் அறையினுள் விட்டுப் பூட்டினான். தனது இடத்துக்குச் சென்றுவிட்டான். மயான அமைதி நிலவியது. பக்கத்து அறையில் இருந்து விசும்பல் ஒலிகேட்டவண்ணம் இருந்தது. அரைவிழி மூடி நினைவினில் மூழ்கியிருந்தான். அறைதிறபடும் சத்தம் கேட்டு எழுந்து நின்றான். தன்னை முறைத்துப் பார்த்தவன் முன்னால் நின்றான். அவனது கையில் கதவினை அடைப்பதற்கான "பார்' தடி இருந்தது.

"அடோவ் ... பற கொட்டியோ... உம்பலாட்ட ஈழம்த ஓன?" உங்களுக்கு ஈழமா வேணும்? சத்தமிட்டு அடித்தான். கைகால், முதுகு எங்கும் அடித்தான். இரத்தம் கசிந்தது. தலையில் அடிவிழாது இரு கைகளாலும் மூடியபடி அறையின் மூலையில் ஒதுங்கினான். அடி தாங்கமுடியாது ஆனந்தன் சுருண்டான். காவலுக்குப் பொறுப்பான சிப்பாய் பாய்ந்து வந்தான். அவனைப் பிடித்துத் தள்ளினான். "உம்ப மொன மோட வட கறன்ன"? நீ என்ன மடவேலை செய்கிறாய்? கூறியவாறு அவனை இழுத்து வெளியில் தள்ளினான். கதவினை இழுத்துப் பூட்டினான். அவன் திமிறிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தான். "கோப்ரல், தங் மகே டியூட்டி வெலாவ. மெயாட்ட மொனவாஹறி உனுத். மமத்தமாய் வககியான்ட ஒன. ஒயாட்ட தன்னவத"? "சிப்பாய் இப்ப எனது டியூட்டி நேரம். இவனுக்கு ஏதாவது நடந்தால் நான் வகை சொல்லவேண்டும். தெரியுமா உனக்கு?. அவன் அரசாங்க ஊழியன். கையெழுத்திட்டு பாரம் எடுத்திருக்கிறன். அவனைத் திருப்பிப் பாரம் கொடுக்கும் வரை நான்பொறுப்பு."? அவனைத் தள்ளிக் கொண்டு வெளியில் சென்றான். ஆனந்தன் செயலிழந்து கிடந்தான். அவனால் எழுந்து நிற்கத் திராணியற்ற நிலை. வாய் மேரியை நினைத்து முணுமுணுத்தது. மயங்கிய நிலையில் கிடந்தான். அவன் கனவில் மிதந்தான்.

## 9

ஆன்மயூரி அழைத்திருந்தாள். ஆனந்தன் மயூரி வீட்டுக்குச் சென்றான். "அண்ணா அப்பா உங்களைப் பார்க்கவேணும் என்று சொன்னவர். அப்பா கடைக்குப் போயிருக்கார். இப்ப வருவார். இருங்க தேநீர் கொண்டு வாறன்". சொல்லிவிட்டுப் போனாள். ஒரு நொடிப்பொழுதில் தேநீரோடு வந்தாள். தேநீரைக் கொடுத்தாள். "நல்ல ருசி" பாராட்டினான். "அண்ணா.. மேரி உங்கட சுகம் கேட்டு எழுதியிருந்தா... என்ன பதில் எழுதுவதென்று யோசித்தேன். என்ன எழுதுவது? சொன்னால் எழுதுவேன். அண்ணா ... மேரி உங்களை நம்பியிருக்கிறாள். உங்கட விருப்பத்தச் சொல்லுங்க... பிளீஸ். அண்ணா.." மயூரி ஆவலோடு காத்திருந்தாள். அவனுக்கு வெட்கமாக இருந்தது. டேவிட் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வந்தார். ஆனந்தன் அவரது சைக்கிளை வாங்கி ஓரமாக வைத்தான். "தம்பி ஆனந்தன் உன்னோட கதைக்கவேணும். அதுதான் வரச் சொன்னனான். வா இருந்து கதைப்பம்". கூறிக் கொண்டு இருக்கையில் அமர்ந்தார்.

"தம்பி ..நீ என்ர பிள்ளை மாதிரி. நான் சொல்வதைத் தப்பாக எடுக்காதே.. என்ன"? நிறுத்தினார். "மயூரி அண்ணனுக்குத் தேத்தண்ணி கொடுத்தனியோ"? அக்கறையுடன் கேட்டார். "ஓமப்பா" மயூரி பதில் சொன்னாள். "ஆனந்தா... இதுதான் சொல்லப் போறன். மேரி ...என்ர பேர்த்தி. நல்ல குணமான பிள்ளை. அவள் உன்னை விரும்புறாள். உன்ர கருத்த அறியவேணும். என்ன சொல்லுறாய்.? விருப்பமில்லாட்டிச் சொல்லிப்போடு. பிரச்சினை இல்ல. அண்ணனுக்கு மேரியைக் கட்டி வைக்க வேணுமெண்டு இவள் மயூரிதான் ஒத்தக்காலில நிற்கிறாள். எனக்கும் அவள் சொல்வது சரியாகப் பட்டது. அதனாலதான் கேட்கிறன். குறை எண்ணாதே...சரியா"? கேட்டுவிட்டுப் புன்னகைத்தார். ஆனந்தன் அமைதியானான். அவனுக்கு என்ன சொல்வதென்று தெரியாது தவித்தான். மேரியை நினைத்தான். அவளது குணநலன்களையிட்டு அலசினான். அவன் ஏற்கனவே தீர்மானித்ததுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் அவனுக்குச் சொல்லத் தைரியம்மில்லை.

"என்ன அண்ணா யோசனை? மேரி வடிவில்லையா? அல்லது அவவப் பிடிக்கல்லையா"? ஆன்மயூரி அவனையே உற்றுப்பார்த்தாள். மயூரியின் முகத்தைப் பார்க்க ஆனந்தனுக்குக் கூசியது. "மயூரி ... என்னைப் புரிந்த என்ர தங்கைதான் நீ. மேரியை எனக்குப் பிடித்திருக்கிறது என்பது. தெரியும்தானே? பிறகு ஏன் என்னிடம் கேட்கவேணும்?. "இல்லையண்ணா. எனக்குத் தெரியும். ஆனாலும் உங்களிடம் ஒருசொல் சொல்லிப் போட்டு அவவிட்டச் சொல்வது நல்லதல்லவா? அதுதான் கேட்டேன். கோபம் இல்லையே அண்ணா". அன்போடு கேட்டாள். "என்ன மயூரி நான் எப்பவாவது கோபித்திருக்கிறேனா"? "ஆனந்தா... எங்களுக்குத் தெரியும். மேரி நல்ல பிள்ள.. நீயும் எங்கட பிள்ளதான். நீங்க இரண்டு பேரும் சேர்ந்து வாழவேணும் என்பதுதான் எங்கட விருப்பம்". டேவிட் சந்தோசத்தோடு சொன்னார்.

"உங்களுக்கு விருப்பம் என்றால் எனக்கும் சம்மதந்தான். நீங்க முடிவெடுத்தால் சரி. ஆனால் ஒரு சிக்கல் வரும் என்று யோசிக்கிறன". ஆனந்தன் கவலையோடுதான் சொன்னான். "என்ன அண்ணா சிக்கல்.? சிக்கல் ஒன்றும்வராது. எல்லாம் சரியாய் வரும். அப்பா இருக்கிறார். அவர் பார்த்துக் கொள்வார். அப்பா! என்ன சிக்கல் வரும்? சொல்லுங்கோ"? அப்பாவைப் பார்த்தாள். "ஆனந்தன் சொல்லுறது எனக்கு விளங்குது. அதப்பற்றி பெரிது படுத்தத் தேவயில்ல. சமயம் ஒரு தடையாக அமையாது. அதுக்கும் வழியுண்டு." டேவிட் இழுத்து இழுத்து முடித்தார். "இதைப்பற்றி நான் செபஸ்தியாரிடம் விசாரிக்கிறன். மார்கிரட் சம்மதிப்பாள். நல்ல முடிவு கிடைக்கும்." கூறிவிட்டு அறையினுள் சென்றார். "ஓ...இதுதானா"? அவள் மனதினுள் நினைத்துக் கொண்டாள். ஆனந்தன் இதைப்பற்றி ஏற்கனவே புரிந்திருந்தான்.

"அண்ணா மேரிக்காக எதையும் செய்யத் தயார்தானே"? நேரடியாகவே மயூரி கேட்டாள். மயூரியின் அந்தத் துணிச்சலான கேள்வியை ஆச்சரியத்தோடு பார்த்தான். "அண்ணா நான் எங்கட வேதத்தச் சொல்லித்தாறன். படித்தால் என்ன? சமயங்கள் எல்லாம் ஒன்றுதான். மனிசனாக வாழவேணும் என்பதற்காகத்தான் சமயங்கள் தோன்றின. சமயங்கள் என்பது ஒரு வாழ்க்கை முறைதானே? நாளையில் இருந்தே படிப்பம். சரியா?. நான் அருட். தந்தை ஜெபநேசனிடம் விசாரிக்கிறன்." அவள் கூறிக் கொண்டே சென்றாள். மயூரியின் துணிச்சலை மனதுக்குள் வியந்தான். அவனது உள்ளத்தில் அவளை எடைபோட்டான். இவள் ஏன் மேரிக்காகவும், எனக்காகவும் வாதாடுகிறாள். ஒரு சீண்டலை விட்டுப் பார்த்தான்.

"அன்பான தங்கச்சியே! சும்மாதான் கேட்கிறன். இதில உங்களுக்கேன் அதிக அக்கறை"? கூறிவிட்டு அவளது முகத்தையே உற்றுப் பார்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அண்ணா.... வீணான கற்பனைக்குப் போகாதீங்க. சத்தியமாகச் சொல்லுறன். எனது அண்ணனுக்கும், அண்ணிக்காகவும்தான் இதனைச் செய்யிறன். நீங்க என்ன நினைக்கிறீங்க என்பது எனக்குத் தெரியும். அண்ணா...நீங்க ..எங்கட அப்பா ஆஸ்பத்திரியில இருக்கும்போது செய்த உதவிய என்னால் மறக்க முடியாது. தன்ர பிள்ளயள் செய்யாத உதவிய நீங்க செய்ததை அப்பா என்றும் சொல்லிக்காட்டுவார். என்னோட கூடப்பிறந்த சகோதரங்களைவிடவும் உங்களை என்ர அண்ணனாக மதிக்கிறன். அதுமட்டுமல்ல.. அப்பாவின் சொந்தங்களை எங்களோடு சேர்த்து வைத்த பெருமை உங்களுடையதே. அண்ணா... என்னை வித்தியாசமாக எண்ணவேண்டாம்.'' மயூரியின் கண்கள் கலங்கி விட்டன.

ஆனந்தனுக்குச் சங்கடமாகிவிட்டது. "என்ன மயூரி.. சும்மாதான் கேட்டேன். உங்களத் தெரியாதா ..எனக்கு? சரி...மேரியைச் சேர்த்து வைப்பது உங்கள் பொறுப்பு.. சரிதானே? அப்பாவிடம் சொல்லிவிடுங்க" அவன் சொல்லி முடிக்குமுன் டேவிட் அறையினுள் இருந்து வெளியே வந்தார். "ஆனந்தா.. நான் எல்லாத்தையும் கவனிப்பன். இப்ப செய்யிற வேலையெப்படி? ஆனந்தனைப் பார்த்தார். "அந்த வேலை எனக்குப் பிடிக்கல்ல. என்ன செய்வது. வேற வேலையும் தேடுறன்". "வனத்திணைக்களத்தில் நல்ல வேலைதானே? ஏன் பிடிக்கல்ல? டேவிட் வினாவினார். "ஐயா கஞ்சிமடச் சந்திக்கு அப்பால் குடிசனமே இல்லை. நாலாங்கட்டச் சந்தியில இருந்து மங்கிபிறிஜ் வரை சைக்கிளில் விடியவும் போகவேணும். ஒரே காடுதான். பனியும் குளிரும் வாட்டும். காட்டு யானைகள் கூட்டமாக நிற்கும். எனது மனதுக்குப்பிடிக்காத வேலை. சந்தோசமில்லை. அதுதான் வேறு வேலை தேடுறன்'' விளக்கினான்.

"என்ன வேலையை எதிர்பார்க்கிறாய்?
"எனக்கு ஆசிரிய சேவைதான் பிடிக்கும். அதற்காகத்தான் மனுப்பண்ணியிருக்கிறன். அது கிடைக்கும்". உறுதியாகச் சொன்னான். "வருங்காலத் தலைவர்களான சிறார்களுக்குச் சேவை செய்வது பெருந்தொண்டல்லவா? அதோடு நான்பிறந்த கிராமத்துக்கு ஏதேனும் செய்யவேணும். நான் பட்ட கஸ்டத்தை என்ர ஊர்பிள்ளைகள் படக்கூடாது. அதுக்காக நாங்க நாலஞ்சு பேர் உழைக்கப் போறம். அதுக்கு ஏற்றது ஆசிரியர் சேவைதான். அது எனக்குப் பிடித்தது". தனது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தினான். "உன்ர குறிக்கோள் நல்லதுதான். நமது மனதுக்குப் பிடித்த வேலையைச் செய்வதுதான் நிம்மதி. சந்தோசமாகவும் இருக்கும். "சரி நடப்பது நல்லதாகவே நடக்கும். நான் செபஸ்தியாருக்கு அறிவிக்கிறன். டேவிட் முடித்தார். "அண்ணா நாளைக்குப் பின்னேரம் வாங்கோ என்ன''? ஆன்மயூரி விடைகொடுத்தாள். ஆனந்தன் சைக்கிளில் ஏறிப் புறப்பட்டான்.

இரண்டு வாரங்கள் பறந்தோடின. பிபிலிய வேதம் தண்ணிபட்ட பாடமாக வந்துவிட்டது. அதனை மயூரி மேரிக்கு அறிவித்தாள். மேரிக்குத் தலைகால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாத சந்தோசம். கொழும்புக்குப் புறப்படத் திட்டமிட்டிருந்தார்கள். திடீரெனப் போய் இறங்கி அதிர்ச்சியைக் கொடுக்க மயூரி வியூகம் வகுத்து விட்டாள். வெள்ளிக்கிழமை இரவு புறப்படுவது என்று தீர்மானிக்கப் பட்டுவிட்டது. ஸ்ரனிஸ்லாஸ் இருக்கைகளைப் பதிந்து கொடுத்திருந்தார். அத்துடன் ஞாயிறு திரும்புவதற்கான ஏற்பாட்டையும் செய்திருந்தார். மாலை எட்டு மணி. திருகோணமலை புகைவண்டி நிலையம் பயணிகளால் தன்னை நிறைத்துக் கொண்டு களைத்திருந்தது. வண்டி புறப்படத் தயாராய் நின்றது. மயூரி முதலில் ஏறிக் கொண்டாள். டேவிட்டைத் தொடர்ந்து ஆனந்தன் ஏறினான். குதூகலத்தோடு வண்டி கூவிக்கொண்டு புறப்பட்டது. மூன்று பேர்களது மனங்களும் மகிழ்ச்சியில் திளைத்திருந்தன.

ரெயில் மெதுவாகவே போவதுபோன்ற ஒரு பிரமை. சீனக்குடா புகைவண்டி நிலையத்தில் ஸ்ரனிஸ்லாஸ் காத்திருந்தார். ஒரு பொட்டலத்தை மயூரியிடம் கொடுத்தார். தனது கடமைகளோடு வழியனுப்பி வைத்தார். "அப்பா தம்பலகாமத்தில் தயிருக்குச் சொல்லியிருக்கிறன். ஸ்ரேசன் மாஸ்ரர் தருவார். காசு கொடுக்கவேணாம். எஸ்ஸெம்முக்கு உங்களத் தெரியும். மறக்காம வாங்கிக்கொள்ளுங்க. சரியா? போயிற்று வாங்க". வண்டிநகர்ந்து கொண்டிருந்தது. ஸ்ரனிசும் நடந்தவாறே கூறிக் கையசைத்தார். "சரி நாங்க வாறம்". டேவிட் விடைபெற்றார். அண்ணா உடம்பப் பாத்துக் கொள்ளுங்க. சரியா"? மயூரி கையசைத்தாள். ஆனந்தனும் புன்னகையூடாக தனது கருத்தைத் தெரிவித்தான்.

தம்பலகாமத்தில் எஸ்ஸெம் சொல்லி வைத்ததுபோல் தயிரோடு காத்திருந்தார். நன்றியோடு மயூரி பெற்றுக் கொண்டாள். தம்பலகாமத்துத் தயிர் நல்ல ருசி. தயிர் முட்டிகளை இருக்கையின் கீழ் வைத்தாள். ஆனந்தன் உதவினான். தயிர் கமகமத்தது. பாலைக்காய்ச்சி உறைபோட்டுவிட்டால் தயிர். கறந்தபாலில் ஒருவித மணம் இருக்கும். அதனைக் காய்ச்சியதும் இன்னும் மணக்கும். தயிராக உறைந்ததும் கமகமக்கும். இளமுறைத் தயிர் நல்லருசியானது. ஆனந்தன் வீட்டில் ஒவ்வொரு நாளும் தயிர் இருக்கும். தனது அம்மாவை நினைந்து கொண்டான். "அண்ணா நீங்க கொண்டுவரும் தயிர் இதைவிடக் கமகமக்கும். அது எப்படி? எப்படி பெரியம்மா தயிர் காச்சிறவர்"?. மயூரி கேட்டாள். மெல்லெனச் சிரித்தான்.

அரும்பு மீசை நீண்டு குறுகியது. "அம்மா பாலைக் காய்ச்சுவது புதுமையாக இருக்கும். பெரியமண் சட்டியிருக்கும். அதை நாங்க குண்டான் என்று சொல்லுவம். பாலை அதற்குள் முறுகக் காய்ச்சியதும், அகப்பையால் அள்ளி உயர்த்தி குண்டானுக்குள்ளேயே விடுவார். பால் நுரைத்துப் பரவும். பால் குண்டான் அடுப்பிலேயே இருக்கும். நெருப்பைக் குறைத்துவிடுவார். விறகை எடுத்து விடுவார். தணல் மட்டும் தகிக்கும். வீட்டில் உமியிருக்கும். உமியில் கொஞ்சம் எடுத்து அடுப்பில் போட்டுவிடுவார். தணலில் உமிபுகையும். உமிப்புகை பாலின் மணத்துக்கு மெருகேற்றும். வெப்பம் கைச்சூடு அளவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததும் உறையைப் போடுவார். பின்னேரம் தயிர் தயார். இதுதான் அம்மாவின் தொழில் நுட்பம்". ஆனந்தன் விளக்கினான். "ஓ... இவ்வளவு இருக்கா... பெரியம்மாட்டத்தான் படிக்கவேணும்". சொல்லிக் கொண்டே எட்டிப்பார்த்தாள். கல்லோயாச் சந்தி வந்து விட்டது.

கல்லோயாச் சந்தி கலகலத்தது. மட்டக்களப்பிலிருந்து புறப்படும் வண்டி வந்து விட்டது. இரண்டு வண்டிகளின் பயணிகளும் ஒரு இடத்தில் சந்திப்பதால் ஆரவாரமாக இருந்தது. குளிர் காற்று வீசிக் கொண்டிருந்தது. மேரியோடு கதைத்துக் கொண்டிருந்த பசுமை நினைவுகள் துள்ளி வந்தன. அவளது முகம் மனத்திரையில் மலர்ந்து விரிந்தது. கற்பனையில் மூழ்கினான். "அண்ணா என்ன யோசனை.."? திடுக்கிட்டு உசாரானான். தன்னைச் சுதாகரித்துக் கொண்டான். "எவ்வளவு சனம். ஒவ்வொரு நாளும் சனங்கள் பிரயாணம் செய்கிறார்கள். எல்லாருக்கும் ஏதோ ஒரு வேலையிருப்பதை எண்ணிக் கொண்டேன்". சமாளித்துக் கொண்டான். அவள் புன்னகைத்தாள். அண்ணியை நினைச்சிங்களோ என்று எண்ணினன்." எங்கோயோ பார்த்தவாறு கூறினாள். மயூரிக்கு மனித உளவியல் தெரியுமோ? வியந்து கொண்டான்.

வண்டி நெடுநேரத்தின்பின் புறப்பட்டது. ஆடியசைந்து கூவியபடி விரைந்தது. வண்டியின் ஆட்டம் தாலாட்டியது. மெல்லக் கண்கள் அயரத் தொடங்கின. கண்களை மூடியபடி கற்பனைத் தேரை ஓடவிட்டான். வண்டி நிற்பதும் ஓடுவதுமாகச் செயற்பட்டது. அவனது மனமும் அப்படித்தான். புகைவண்டி நிலையங்களில் வண்டி நிற்கும்போது விழிப்படலைகள் திறக்கப்படும். பின்னர் மூடிவிடும். கண்கள் மூடுவதும் கனாக் காண்பதுபோல் தெரிவதும், பின்னர் அவை திறபடுவதுமாக இரவு பயணத்தில் கழிந்தது.

அதிகாலை ஐந்து மணி. "கொழும்புக் கோட்டையை வெற்றிகரமாக அடைந்துவிட்டேன்" என்ற கூவலோடு வண்டி நின்றது. வாடகைக் காரில் ஏறினார்கள். போகவேண்டிய இடத்தை டேவிட் சொன்னார். கார் விரைந்தது. வீட்டின் வாசலில் நின்றது. செபஸ்தியார் காலை ஆறரை மணிக்கு வேலைத்தலத்தில் நிற்பவர். ஆறுமணிக்கே புறப்பட்டு விடுவார். கணவனை வேலைக்கு அனுப்பவேண்டும். நகராட்சி மன்றத்தில் சுப்பவைசராகக் கடமை பார்ப்பவர். அவர் வேலைக்குச் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தார். ஆட்கள் இறங்கும் சத்தம் கேட்டு மார்கிரட் கதவைத் திறந்தார். மாகிரட்டுக்குப் பெரிய அதிர்ச்சி. "மாமா! மயூரி வாங்க வாங்க". மாக்கிரட் வாய்மலர வரவேற்றார்.

## 10

செபஸ்தியார் புன்னகையோடு அதிசயித்தார். ஆனந்தன் வெளியில் நின்று கொண்டான். அம்மாவின் குரல் மேரியைச் சுறுசுறுப்பாக்கியது. வரவேற்பறைக்கு ஓடிவந்தாள். "மயூரி எப்பவந்தீங்க? சொல்லியிருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரேசனுக்கு வந்திருப்பம்.'' ஒரு துள்ளலோடு குதூகலித்தாள். அவள் கண்கள் பேசின. "அவர் வரவில்லையா''? மயூரி புரிந்து கொண்டாள். மயூரியின் கண்கள் விளையாடின. தெரியாததுபோல் வேறுதிசையில் துளாவின. சிரிப்பும், பரிதாபமும் ஏற்பட்டது. செபஸ்தியார் நேரத்தைப் பார்த்தார். "மார்கிரட் எனக்கு நேரமாகிறது. தெரிந்திருந்தால் லீவு போட்டிருக்கலாம். ஒருக்காப் போய் சமாளிச்சிட்டு பத்து மணிபோல வந்துவிடுவேன். எல்லாத்தையும் கவனித்துக் கொள்''. செபஸ்தியார் டேவிட்டிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டார்.

டேவிட் விடைகொடுத்தார். செபஸ்தியார் வெளியில் வந்தார். அதிசயித்துப் போனார்." மார்கிரட், இங்கபார் ஆனந்தன் வந்திருக்கார். ஆனந்தன் உள்ள வாங்க'' மேரி பாய்ந்து வெளியில் வந்தாள். ஆனந்தன் நின்றிருந்தான். கண்டதும் பூரித்துப் போனாள். "என்ன வெளியிலேயே நிக்கிறீங்க...உள்ள வாங்க'' அவனது சூட்கேசை வாங்கிக் கொண்டாள். வீட்டினுள் அழைத்தாள் பெட்டிப்பாம்பாக ஆனந்தன் உள்ளே சென்றான். பெரிய அதிசயம் நடந்து கொண்டிருந்தது. பிள்ளைகள் விழித்துக் கொண்டார்கள். வீடு கலகலப்பாகியது. சூரியன் போகும் திசையெல்லாம் சூரிய காந்திப்பூ திரும்புவது போல் மேரியின் முகமும் கண்களும் ஆனந்தனில் மொய்த்தன.

ஆளுக்கொரு வேலை என அள்ளிப்போட்டுச் செய்தார்கள். தேநீர் பரிமாறப்பட்டது. கதைத்துக் கொண்டே குடித்தார்கள். குளியல் அறையைக் காண்பித்தார்கள். இரண்டு குளியல் அறைகள் இருந்தன. குளியலுக்கு வேண்டிய பொருட்கள் அனைத்தும் இருந்தன. முதலில் ஆனந்தனைக் குளிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். டேவிட் ஆறுதலாகக் குளிக்கச் சென்றார். மயூரி மேரியோடு கதைத்துக் கொண்டே குளித்து முடித்தாள். குளியல் முடிந்ததும் உணவு தயாராக மேசையில் இருந்தது. சாப்பிட்டார்கள். அடுக்களையில் மேரியும், மயூரியும் கதையில் மூழ்கியிருந்தார்கள். கதையும் சிரிப்பும் கலந்தினித்தது.

"மயூரி! இன்டைக்குத்தான் வீடு கலகலக்குது. இவ்வளவு நாளும் சோம்பலாக்கிடந்தது.'' மேரியின் உள்ளத்தின் வெளிப்பாடு புரிந்தது. நாம் விரும்பியவர்கள் நமது வீட்டுக்கு வந்தால் இந்த மனம் என்னமாதிரித் துள்ளுது. உள்ளம் பூரித்து உவகை கொள்கிறது. அடுக்களையில் சமையல் ஆகிக்கொண்டிருந்தது. சமையலுக்கு வேண்டிய ஒத்தாசைகளை அம்மாவுக்குச் செய்து கொடுத்தார்கள். அடிக்கடி ஆனந்தனிடம் வந்தார்கள். எதைக்கதைப்பது? ஆனந்தன் அந்தப் பெரிய அறையின் ஒருமூலையில் இருந்து அன்றையத் தினசரியில் மூழ்கினான். மேரி மயூரியோடு ஆனந்தனிடம் வந்தாள். அவர்களைக் கண்டதும் புன்னகைத்தான். நினைப்பவற்றைச் சொல்ல வார்த்தைகளைத் தேடினாள். ஆனந்தனைக் கண்டதும் அவை மறந்து பறந்து போயின. ஏதேதோ கதைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தனியாக இருக்கிறீங்க... எப்படிச் சுகம்? அப்பா நலமா"? மேரி விசாரித்தாள். அவளே தொடர்ந்தாள். "நான் எதிர்பாரக்கல்ல..." மேரி தொடங்கினாள். இடையில் மயூரி புகுந்து கொண்டாள்.

"எதை....எதிர்பார்கல்ல"? கடைக்கண்ணால் மேரியை அளந்தவாறே மயூரி கேட்டாள்.

"நீங்கள் வாறதைத்தான்... "

"நீங்கள் என்றால்.... யாரை"?

"என்ன மயூரி ...... ?."

"அண்ணி ... பொய் சொல்லாதீங்க ... அண்ணனைத்தானே ...எதிர்பார்கல்ல... நான் எவ்வளவு கஸ்டப்பட்டுக் கூட்டி வந்திருக்கிறன். அதப்பற்றிச் சொல்லாமல் ...."

"ஐயய்யோ... மறந்தேவிட்டன். ...என்ன இப்படி என்னைக் குழப்புறீங்க.. வாறதப்பற்றி தகவல் ஏதும் இல்லையே.. அதுதான்" சொல்லிக் கொண்டே கரம்போட்டைக் கொண்டுவந்தாள். ரீபோவில் வைத்துவிட்டுக் காய்களை அடுக்கினாள். இப்போது கதைப்பது சுலபமாக இருந்தது. நேரம் பறந்து போனது.

ஆனந்தன் பேப்பரில் மூழ்கியிருந்தான். "அண்ணா ஒருகை ஆடுவோம் வாங்க..." அழைத்தாள். ஆனந்தனுக்கு அசதியாக இருந்தது. மேரி கண்களால் அழைத்தாள். அந்தக் கண்கள் அவனைக் கவ்வி இழுத்தன. எலிசபத் வந்து சேர்ந்தாள். அவள் ஆனந்தனுக்கு சோடி. மேரியும், மயூரியும் ஒரு சோடி. விளையாடினார்கள். மேரியின் ஓரவிழிப் பார்வை ஆனந்தனைக் கிறுங்கடித்தது. அவளது விரல்கள் காய்களில் மொய்ப்பதை அழகுபார்த்தான். மோதிரவிரலை காயின் பக்கம் வைத்தாள். சுண்டுவிரலை மோதிரவிரல்மேல் வைத்து சுண்டித் தட்டுத்தட்டினாள். இரண்டு விரல்களும் அசையும்போது மற்ற விரல்கள் நர்த்தனமாடின. ஒவ்வொரு விரலும் பேசின. ஆனந்தனின் கண்கள் விரல்களை மேய்ந்தன. நகத்தின் அழகில் சொக்கிப் போனான். எவ்வளவு தூய்மையாக வைத்திருக்கிறாள். அளவாக வெட்டி, நிறத்துக்கேற்ற கியூரெக்ஸ் பூசி பளபளப்பாக வைத்திருந்தாள். விரல்கள் பட்டதும் காய் சரியாக எதிர்மூலைக் குழியில் விழுந்தது. நேரம் போனதே தெரியவில்லை. நேரம் பறந்து போனது.

செபஸ்தியார் சொன்னதுபோல் பத்து மணிக்கே வந்துவிட்டார். முன் மண்டபத்தில் டேவிட் இருந்தார். அந்த இடத்துக்குச் செபஸ்தியார் சென்றார். வரவேற்பறையில் டேவிட்டும் செபஸ்தியாரும் இருந்து கதைத்தார்கள். கதையோடு கதையாகத் தொடங்கினார். செபஸ்தியாரிடம் கொழும்பு வந்ததற்கான காரணத்தைக் கூறினார். "நான் மேரிவிசயமாகக் கதைக்கத்தான் வந்தனான். ஒருமாதிரியாகச் சமாளித்து ஆனந்தனையும் கூட்டிவந்திருக்கன். நல்ல பொடியன். சந்தர்ப்பத்த விடக்கூடாது. நல்ல சோடிப் பொருத்தம். உங்கட சம்மதம் தெரிந்தால் போதும். மற்றதெல்லாம் நான் பார்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுவன்''. டேவிட் அடுக்கிக் கொண்டு போனார். செபஸ்தியாருக்கு மனம் துள்ளி ஆடியது. செபஸ்தியார் சமையலறைக்குச் சென்று வந்தார். மார்கிரட்டின் முகத்திலும் சந்தோசம். இவர்கள் என்ன கதைக்கிறார்கள்? அடிக்கடி அப்பா சமையலறைப்பக்கம் போய்வருவதையும் மேரி அவதானித்தாள். அறியும் ஆவலில் உள்ளம் செவிப்பறையில் குந்தியது.

"மேரி..'' மார்க்கிரட்டின் அழைப்பு. "இதோ வந்திற்றன் அம்மா''. எழுந்து சென்றாள். தேநீர் தயாராக இருந்தது. தேநீர்த் தட்டில் வைத்து எடுத்துவந்தாள். மண்டபத்தில் இருந்தவர்களுக்குப் பரிமாறினாள். அப்படியே ஆனந்தன் பக்கம் வந்தாள். "எடுங்க''. ஆனந்தனிடம் நீட்டினாள். எடுத்துக் கொண்டான். எலிசபெத்தும் எடுத்தாள். தானே தன்கையால் எடுத்து மயூரியிடம் கொடுத்தாள். அவள் புன்னகையுடன் பெற்றுக் கொண்டாள். "என்ன அண்ணி... எனக்குமட்டும் தனிமரியாதை? இதெல்லாம் சரிவராது''. சீண்டினாள். "என்ன மயூரி... கிண்டல். இது அன்பின் அடையாளம்''. கொடுத்துவிட்டு இருந்தாள். "என்ன அண்ணி உங்கள மறந்திட்டிங்க.. எங்க உங்கட பங்கு? ...நான் எடுத்து வாறன்''. மயூரி எழுந்து அடுக்களைப் பக்கம் சென்றாள்.

"ஏன் நீங்க தேநீர் குடிக்கல்லயா''? ஆனந்தன் திருவாய் மலர்ந்தான். ஒரு புன்னகையை எறிந்து "குடிக்கிறதான். ஆறட்டும் என்று குசினியில் வச்சிப்போட்டு வந்திற்றன்''. "ஏன் எங்களோட சேர்ந்து குடிக்க விரும்பல்லையோ''? தைரியமாகக் கேட்டான். "என்ன அண்ணனும் தங்கையும் ஒரேவிதமாகச் சொல்லுறீங்க. அப்படியில்ல ஆறட்டும் என்டுதான்''. பதில்வரமுன் மயூரி தேநீரோடு வந்தாள். "அண்ணி இதைப்பிடியுங்க. சேர்ந்து குடிப்பம். கொடுத்துவிட்டு இருந்தாள். நால்வரும் சேர்ந்து குடித்தார்கள். எலிசபெத்துக்கு வேடிக்கையாக இருந்தது. வேலை செய்வதும் விளையாடுவதுமாக நேரம் விரைந்தது. சமையல் முடிந்து விட்டது.

மார்கிரட் மண்டபத்தினுள் வந்தார். அவரும் சேர்ந்து கொண்டார். டேவிட் தொடக்கத்தில் இருந்து விபரித்தார். "மாமா! சமயம்பற்றித்தான் யோசிக்கிறன். ஏனென்டால் எங்கட சனங்களும், சூழலும் அப்படி. வாய்க்கு வந்தபடி தூற்றுவாங்க''. கவலையோடு மனத்தாங்கலை இறக்கினார். "இதொன்டுக்கும் கவலப்படாத. அதெல்லாம் சரியாய் நடக்கும். ஆனந்தன் நல்ல குணசாலி. அனுசரித்துப் போகக் கூடிய பிள்ள. உங்கட சம்மதம்தான் தேவை. உங்களுக்குப் பூரண சம்மதமென்றால் சொல்லுங்க. மிச்சத்த நாங்க பார்த்துக் கொள்ளுவம். என்ன சொல்லுறீங்க'' டேவிட் நிறுத்தினார். "எங்களுக்கு நல்ல விருப்பம். கொழும்பில கலியாணத்த வச்சால் நல்லது. இஞ்சதான் எங்களுக்கு வசதி''. செபஸ்தியார் சொல்ல மார்கிரட் ஆமோதித்தார். டேவிட் சந்தோசத்தோடு சிரித்தார். "அந்தக்கடவுள் கிருபையால எல்லாம் நல்லபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கும். இனி கவலய விடுங்க. ஒருக்கா மேரியையும் கேட்டுப்பாருங்க". சொல்லிவிட்டு எழுந்து வெளியில் போனார்.

விளையாட்டு முடிந்து எழுந்து உலாவினார்கள். ஆனந்தன் வெளியில் வந்து பார்த்தான். வீடுகள் புறாக்கூடுகள்போன்று தெரிந்தன. காற்றுப்புக முடியாத சந்துகள். எப்படி இந்தச் சனங்கள் வாழுதுகள்.? கொழும்பு வித்தியாசமான நகரம்தான். மயூரியும் வெளியில் வந்தாள். "அண்ணி" மேரியை அழைத்தாள். குரல் கேட்டதும் ஓடோடி வந்துநின்றாள். பக்கத்து வீட்டுப் பாத்திமா எட்டிப்பார்த்தாள். ஒரு புன்னகையை எறிந்து கண்களால் வினாவினாள். இரண்டு வீடுகளையும் ஒரு சுவர்தான் பிரித்திருந்தது. "என்ன மேரி. இன்டக்கி விருந்தாளிகள் போல. கலகலப்பாகக் கிடக்கு. என்ன விசேசம்? கேள்வியாக விரித்தாள். "ஆமா பாத்து. பகல் சாப்பாட்டுக்கு வாறீங்களா? எல்லோரும் சேர்ந்து சாப்பிடுவம்". மேரி அழைத்தாள். "வரலாம்தான் நம்மட பிறன்ட் இவள் லதா வாறன்டு சொன்னதுதானே... அதுதான் பார்க்கிறன்." பாத்திமா பதிலிறுத்தாள். "நல்லதாச்சி. அப்ப எல்லாரும் சேர்ந்து சாப்பிடுவம். சரியா"? மேரி அழைப்பு விடுத்தாள். "அதோ லதா வாறா" லதாவைக் காட்டி பாத்திமா சொன்னாள்.

லதா வந்து கொண்டிருந்தாள். அவளது நடையில் ஒரு நடனம் துள்ளியது. மேரி மெல்லெனப் புன்னகை எறிந்தாள். "பாத்து! லதாவையும் கூட்டிவாங்க.. என்ன.."? லதாவுக்குச் சைகை செய்துவிட்டு உள்ளே சென்றாள். அம்மா உணவு மேசையை ஒழுங்கு செய்தார். உதவிக்கு மேரியும், மயூரியும், எலிசபெத்தும் உதவினார்கள். பத்துப்பேர் இருந்து சாப்பிடக்கூடியதாக அமைப்பு இருந்தது. "சாப்பிடலாம் வாங்க" மாகிரட் சாப்பிட அழைத்தார். டேவிட்டும் செபஸ்தியாரும் மேசைக்கு வந்துவிட்டார்கள். "எலிசபெத்... எல்லோரையும் கூப்பிடு" அம்மா கனிந்தார். "அம்மா சாப்பிட வரட்டாம்" எலிசபெத் செய்தியைப் பரப்பினாள். "வாங்க சாப்பிடுவம்.மேரி ஆனந்தனையும், மயூரியையும் அழைத்தாள்.

"பாத்து' லதா எங்கே?...கூட்டிட்டு வாங்க எல்லாம் ரெடி..." மேரி சத்தமிட்டாள். பாத்திமா லதாவோடு வந்தாள். வாசலில் நின்றபடியே வரவேற்று அழைத்தாள். நேரே சாப்பாட்டு மேசைக்குச் சென்றார்கள். மேரி தனது நண்பர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தாள். ஆனந்தனுக்கு வியப்பாக இருந்தது. இந்த சாப்பாட்டு மேசையில் மூவினப் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள். இங்கு ஒருதாய்ப் பிள்ளைகளாய் வாழ்கிறார்கள். ஏன் தமிழர்கள் பெரும்பான்மையாய் வாழுமிடங்களில் இந்தக் கெடுபிடி. பாத்திமா ஒரு முஸ்லிம். லதா ஒரு சிங்கள யுவதி. தமிழர் வீட்டில் ஒருகூரையின் கீழ் சந்தோசமாய் உணவை உண்கிறார்கள். அந்த முகங்களைப் பார்வையிட்டான். எந்தவித வித்தியாசமும் இல்லை. அன்புதான் சேர்த்து வைத்துள்ளது. இதைத்தானே புத்தரும், யேசுவும், நபிகள்நாயகமும், நாயன்மார்களும், பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தர்களும் போதித்தார்கள். இதைத்தானே சமயங்களும் வற்புறுத்துகின்றன. வழிகாட்டுகின்றன. இந்த நிலை நமது நாட்டில் தொடர்ந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும். சாப்பிடும்போது சிந்தனையில் ஆழ்ந்தான்.

"நல்லாச் சாப்பிடுங்க" செபஸ்தியாரின் குரல் அவனை நினைவுக்குக் கொண்டு வந்தது. மேரியின் நடத்தையில் மாற்றத்தைக் கண்டுகொண்டார்கள். பாத்திமாவும், லதாவும் கண்களால் கதைபரிமாறினர். அதனை மயூரி அவதானித்துச் சிரித்தாள். "பாத்திமா உங்கள் பார்வையின் அர்த்தம் எனக்கு விளங்கிவிட்டது". எனச் சிரித்தாள். லதாவுக்கும் மயூரி தனக்குத் தெரிந்த சிங்களத்தில் கூறினாள். லதா கொஞ்சம் தமிழ் தெரிந்தவர். பாத்திமாவுக்கு மூன்று மொழிகளிலும் பரிச்சயம் இருந்தது. சில விசயங்களைக் கண்டுபிடிப்பதில் பெண்கள் படுகில்லாடிகள். காதல் என்பதை எவ்வளவுதான் பொத்திப் பாதுகாத்து மனதுக்குள் ஒளித்து வைத்தாலும் அது விஸ்வரூபம் எடுத்து மற்றவருக்குக் காட்டிக் கொடுத்துவிடும்.

மயூரியும், மேரியும் பரிமாறினார்கள். அந்தப் பரிமாற்றத்தில் கனிவும் சேர்ந்து கொண்டது. கனிவும் கவனிப்பும் பரிவோடு சேர்ந்து கொள்ளும். இவற்றை உற்றுக்கவனிப்பவர்கள் இனங்கண்டு கொள்வார்கள். தனிப்பட்டவர்மேல் கொண்ட பரிவு வெளியாகப் பரவி நிற்கும். எவரிடம் அன்பு அதிகம் காட்டப்படுகிறதோ, அவர்மேல் கரிசனையும், கவனிப்பும் அலாதியாக இருக்கும். இது சிறப்பாக ஆண்பெண் இருபாலாரிடைத் தோன்றும் ஒரு பிடிப்பு. இதனை மற்றவர்கள் கண்டுகொள்ள மாட்டார்கள் என்றுதான் நினைப்பார்கள். ஆனால் அது தானாகவே வெளிப்பட்டு நிற்கும். அதுதான் காதலோ? அதனைத்தான் காதலுக்குக் கண் இல்லை என்பார்கள். பெண்களை எடைபோடுவதில் பெண்கள் கெட்டிக்காரர்கள்தான். பாத்திமாவும், லதாவும் சாப்பிடும்போது கவனித்துக் கொண்டார்கள். பரிபாசையில் புன்னகையுடன் பரிமாறினார்கள். மேரி நாணத்தோடு பொய்க்கோபம் காட்டினாள்.

பாத்திமா அழகாயிருந்தாள். அவளது பார்வை ஒவ்வொன்றும் அர்த்தமுள்ளதாக இருந்தது. லதா விழிகளாலேயே பேசினாள். இருவரில் யார் அழகுடையவர் என்று மதிப்பிட முடியாத அளவோடு பளீச்சிட்டார்கள். ஆனந்தனுக்கு மேரிதான் அழகுச்சிலையாகத் தெரிந்தாள். "நல்ல சாப்பாடு" பாத்திமா புகழ்ந்தாள். ' ஹொந்த காம. ஹறிம ரசாய்" லதா நன்றியுடன் சொன்னாள். மேரி அம்மாவைப் பார்த்தாள். "மாக்கிரட்டின் கைவண்ணம் எனக்குத் தெரியும். ருசியான சாப்பாடு" டேவிட் புகழ்ந்தார். "இண்டைக்குத்தான் ருசியாக நானும் சாப்பிட்டன்". நகைச்சுவையுடன் செபஸ்தியார் கூறினார். "அம்மாக்கு இண்டைக்கு உச்சி குளிரும். அப்பாவும் ருசியெண்டு புகழ் பாடுறார்". மேரி சிரித்துச் சிரித்துச் சொன்னாள். "உங்கட அப்பா எப்பதான் ருசியெண்டு சொன்னவர்". மாகிரட் பொய்க்கோபத்தோடு விளாசினார். "எங்கட அக்கா இதவிட ருசியாகச் சமைப்பா" எலிசபத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையில் புகுந்து கொண்டாள். மரியாவும், ஏஞ்சலும் ஆமோதித்தார்கள். ஆனந்தனின் புருவங்கள் நிமிர்ந்து நெளிந்தன. மேரி நாணினாள்.

அவளது நாணத்தை வெகுவாக ரசித்தான். "தம்பி எப்படிச் சாப்பாடு? சத்தமில்லாமல் சாப்பிடுறீங்க". ஆனந்தனின் அமைதியை செபஸ்தியார் கலைத்தார். "சொல்லவா வேண்டும்? சாப்பாடு மிகவும் நல்லது." அளவோடு சாப்பிட்டதுபோல் அளவோடு பதிலளித்தான். "அண்ணி இன்னும் கொஞ்சம் அண்ணனுக்குப் போடுங்க". மயூரி சீண்டி விளையாடினாள். "அய்யய்யோ...போதும். இதற்குமேல் தாங்காது". கூறிக்கொண்டு எழமுயன்றான். மேரி கையலம்பும் பாத்திரத்தை நீட்டி "இதற்குள் கழுவுங்கள்" என்று கொடுத்தாள். மயூரி ஐஸ்கிறீம் நிறைந்த கோப்பைகளைப் பரிமாறினாள். சுவைத்துச் சாப்பிட்டார்கள்.

"அப்பா எல்லோரும் பின்னேரம் தெஹிவள போவமா."? எலிசபத் தூபம்போட்டாள். "நல்ல ஐடியா.. எனக்கும் மிருகக் காட்சிச் சாலை பார்க்கச் சரியான ஆசை". கூறிக்கொண்டே மயூரி ஆனந்தனைப் பார்த்தாள். அவன் புன்னகைத்தான். "அதற்கென்ன...போவம்". செபஸ்தியாரின் அனுமதி கிடைத்தது. "சரியாக மூன்று மணிக்குப் புறப்படுவோம். ஆயத்தமாக இருங்க." செபஸ்தியார் கூறிவிட்டு எழுந்தார். சாய்மனைக் கதிரையைக் காட்டி "இதிலகொஞ்சம் ஓய்வெடுங்க...பிரயாண அலுப்புப் பொல்லாதது". கூறிக்கொண்டே சாய்கதிரையை நகர்த்திக் கொடுத்தார். டேவிட் அதில் ஓய்வெடுத்தார். பாத்திமாவும் லதாவும் புறப்பட்டார்கள். "பாத்து.. மூன்றுமணிக்கு எங்களோட வாங்க. ஜொலியாக இருக்கும். லதாவும் வருவா. கூட்டி வாங்க என்ன"? மேரி அழைப்பு விடுத்தாள்.

மேரியின் நெருங்கிய நல்ல நண்பிகள். ஏற்கனவே பரிமாறப்பட்ட பல இரகசியங்கள் அவர்களது மனக்கிடங்குகளுக்குள் புதைந்து கிடந்தன. திருகோணமலைக்குப் போய்வந்த செய்திகளையும் பரிமாறியிருந்தாள். ஆனால் ஆனந்தனைப் பற்றிய செய்தியை அந்தரங்கமாகவே மனப்பெட்டியில் பத்திரமாகப் பூட்டி வைத்திருந்தாள். அவர்கள் வருவதாகச் சொன்னார்கள். புறப்பட்டார்கள். மயூரியும் சேர்ந்து வழியனுப்பி வைத்தாள். பாத்திமா வீட்டுக்குள் போகும்வரை காத்திருந்தாள். மண்டபத்தில் வானொலி மெல்லிய இசையைப் பரப்பிக் கொண்டிருந்தது. ஆனந்தன் ஒரு இருக்கையில் அமர்ந்தான். குட்டி உறக்கம் வந்தது. சற்றுநேரம் இருந்தபடியே கண்களை மூடினான். கலகலப்போடு மயூரி மேரியுடன் வந்தாள். அவனை எலிசபத், மரியாவுடன் ஏஞ்சலும் சூழ்ந்துகொண்டார்கள். செபஸ்தியார் மாக்கிரட்டோடு விவாதித்தார்.

"மூன்று மணியாகப் போகிறது. வெளிக்கிடுவம். என்ன.."? மயூரி முதல்மணியை ஒலித்தாள். அவளுக்கு மிருகக் காட்சிச் சாலையைப் பார்க்க ஆசை. ஆனந்தன் அறையினுள் சென்று ஆயத்தமானான். அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புக்கு வந்திருந்தாலும் மிருகக்காட்சிச் சாலையைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவனுக்கும் மனதினுள் சந்தோசந்தான். பாத்திமாவும் லதாவும் வந்துவிட்டார்கள். எல்லோரும் புறப்பட்டார்கள். தெகிவளை போகும் வஸ்வண்டி வந்தது. ஏறிக்கொண்டார்கள். அரைமணி நேர ஓட்டம். தெகிவளை விலங்ககத்தின் முன்னால் வஸ்வண்டி நின்றது. கட்டணத்தைச் செலுத்தி அனுமதிச் சீட்டைப் பெற்று உள்ளே சென்றார்கள்.

## 11

நல்ல அமைதியான சூழலில் விலங்ககம் இருந்தது. அம்புக்குறிகளைப் பொருத்தமாக இட்டு வழிகாட்டியிருந்தது. அதனைப் பின்பற்றிச் சென்றார்கள். எத்தனை வகைப் பறவைகள், விலங்குகள். ஒவ்வொன்றாகப்பார்த்துச் சென்றனர். மயூரி தனது சாதுரியத்தைக் காட்டினாள். மெதுவாக மேரியையும் ஆனந்தனையும் நெருக்கமாக்கினாள். அவர்களை கலந்துரையாட வழிசெய்தாள். புரிந்து கொண்ட பாத்து, லதாவைத் தன்பக்கம் இழுத்து மெல்ல மெல்ல பார்த்தபடி சென்றாள். சிம்பன்சியின் கேளிக்கை சந்தோசத்தை ஊட்டியது. எவ்வளவு சனக்கூட்டம். பொழுது போனதே தெரியவில்லை. மேரி முன்னாள் சென்றாள். மயூரி நடுவில் சென்றாள். ஆனந்தன் பின்னால் நடந்தான். மயூரி இப்போது மேரியின் முன்னால் விலகி நகர்ந்தாள். மேரியின் பின்னால் ஆனந்தன். "என்ன பேசாமல் வாறீங்க." "இல்லையே நான் உங்களோடு பேசிக்கொண்டுதான் வாறன்." புன்னகையோடு பதிலை வீசினான். "என்னோடவா...அது எப்படி? எனக்குக் கேக்கல்லையே." அவள் சொன்னாள். "பொய் சொல்லாதீங்க.. உங்க மனதக் கேளுங்க... நான் பேசியதைச் சொல்லும்." மேரிக்குக் குழப்பமாக இருந்தது. "மேரி நீங்க போகும்போது என்ன நினைச்சீங்க...அதில ஒன்டச்சொல்லுங்க.." அவன் சொல்ல மேரி யோசித்தாள்.

"உங்களப் பற்றித்தான் நினைத்தன்". சட்டெனச் சொன்னாள். "சரி நான் சொல்லட்டா.."? மெதுவாகச் சொன்னான். "ம்...சொல்லுங்க..." அவள் சொன்னாள். "மேரி உங்கள் அழகு, குணம் எனக்கு நல்லாப் பிடிச்சிருக்கு". கேட்டதும் மேரியின் முகம் குப்பென்று நாணத்தால் சிவந்தது. அவன் தொடர்ந்தான். "அதவிட மயூரிக்குப் பிடிச்சிருக்கு. மயூரி என்ர உடன்பிறவாத தங்கச்சி. அவ உங்களப்பற்றி நிறையவே சொல்லியிருக்கா. இங்க வாறதுக்கான ஏற்பாடும் அவதான் செய்தவ. டேவிட் ஐயா என்ர அப்பா மாதிரி. அவர் என்னில நல்ல கரிசன கொண்டிருக்கிறார். உங்கட சமயத்தப்பற்றி எல்லாம் எனக்குக் கவலயில்ல. மனம்தான் எல்லாம்." நமது மனங்கள் நல்லாயிருந்தால் போதும் மெல்ல நடந்து கொண்டே சொன்னான்.

"சரி...ஒன்டுகேக்கிறன். சொல்லட்டா? கோவிக்கக்கூடாது..". "சொல்லுங்க..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் சொன்னாள். "என்னை உங்களுக்குப் புடிச்சிருக்கா"? தயங்கியபடியே சொன்னான். மெதுவாக ஆனந்தனின் பக்கத்தில் சென்றாள். அவனது கைகளை இறுகப் பற்றினாள். "எப்ப உங்களச் சந்தித்தேனோ அன்றே தீர்மானித்து விட்டேன்." கலங்கிய கண்களுடன் கூறினாள். "என்னென்று"? கேட்டான். "வாழ்வதென்றால் உங்களோடுதான் வாழ்வதென்று" சொல்லிக்கொண்டு தலை கவிழ்ந்தாள். அவன் அவளது முகத்தையே பார்த்தவாறு நின்றான்.

"அண்ணா... நாங்க இங்க நிக்கிறம். வாங்க.." மயூரி அழைத்தாள். தங்களைச் சுதாகரித்துக் கொண்டு விரைந்தார்கள். "அண்ணி.... என்ன இடம் பொருள்...ஏவல் மறந்த நிலையோ"? மயூரி கிண்டலடித்தாள். "என்ன மயூரி.. இதுதானே கூடாது". மேரி சிணுங்கினாள். "சரி..சரி.. என்ன செய்யலாம். சிலநேரங்களில் அது தானே வந்திரும் அண்ணி. ஆமா..அண்ணன் என்னவாம்"? கேள்விக் கணை தொடுத்தாள். பதிலிறுக்கமுன் பாத்திமா நெருங்கினாள். "மேரி.. உங்க 'போய்பிறண்ட்' நல்ல சிமாட். நல்ல பொருத்தம். வாழ்த்துக்கள். எப்ப வெடிங்கேக் கிடைக்கும்." கைலாகு கொடுத்து வாழ்த்தினாள். லதா மேரியின் காதுக்குள் குசிகுசித்தாள். மேரி கொடுப்புக்குள் குமிண்சிரிப்பை உதிர்த்தாள்.

டேவிட் செபஸ்தியாரோடும் மாகிரட்டோடும் அளவளாவினார். மாகிரட் சமயத்தில்தான் கண்ணும் கருத்துமாக இருந்தார். அத்துடன் அயலவர்களின் விமர்சனங்களுக்கும் மதிப்புக் கொடுத்தார். "இஞ்சபார் மாகிரட்... வாழப்போறது அந்தப்பிள்ளயள். நீயேன் அயலவரப் பற்றிக் கவலப்படுறாய். எல்லாம் நல்லாகத்தான் நடக்கும். ஆனந்தன் மிச்சம் நல்லபிள்ள. அவனுக்கு சமயத்தால பிரச்சின இல்ல. நீ விரும்புறமாதிரி கொழும்பிலேயே கலியாணத்த வைப்பம். ஆனால் இன்னும் இரண்டொரு மாதம் செல்லவேணும். மேரியின்ர விருப்பம் என்னவாம்.? கேட்டியளே"? டேவிட் விளக்கத்தோடு வினாவையும் தொடுத்து விடைக்காகப் பார்த்திருந்தார். "மேரிக்கு நல்ல விருப்பம். பார்த்தாலே தெரியுதே. கேட்டும் பார்த்திட்டன்." மாகிரட் பதில் சொன்னார்.

அரிய பல காட்சிகளைப் பார்த்து ரசித்த கலகலப்போடும் கூடவே நடந்த களைப்போடும் வெளியேறும் வாசலுக்கு வந்தார்கள். "நேரம் ஏழுமணியாகிறது. போவம்". செபஸ்தியார் ஆயத்தமானார். வெளியில் வந்தார்கள். வஸ்வண்டி ஆயத்தமாக நின்றது. ஏறிக்கொண்டனர். இறுதியாக ஆனந்தன் ஏறினான். மேரிக்குப் பக்கத்தில் மட்டும்தான் இருக்கை இருந்தது. தயங்கினான். "பரவாயில்லை. வாங்க" மேரி அழைத்தாள். பக்கத்தில் அமர்ந்தான். வஸ்வண்டியின் ஓட்டத்தில் உடல்கள் உரைசிக் கொண்டன. உரைசல் உறவுக்குப் பாலமிட்டது. "மேரி நாளைக்கு நாங்கள் போகவேணும். எனக்கு ஒரு "இன்ரவியு' இருக்கு. நான் எதிர்பார்த்த வேலையது. மனதுக்குச் சந்தோசத்தைக் கொடுக்கும்." மெதுவாகச் சொன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாளைக்கே போகவேணுமா? எப்ப இன்ரவியு"? மேரி கேட்டாள். " ஓம். போறதுதான் நல்லது. புதன்கிழமை இன்ரவியு. அதோட ஞாயிறு இரவு போவதற்கான இருக்கை வசதியும் செய்தாகிவிட்டது. இன்ரவியு பற்றி டேவிட் ஐயாட்டக்கூடச் சொல்லல்ல. மயூரிக்குத் தெரிந்தால் சந்தோசப்படுவாள். இனித்தான், திருகோணமலைக்குப் போய்த்தான் சொல்லவேணும்." ஆனந்தன் விளக்கினான். "இரண்டு மூன்று நாட்களாவது நிற்பீங்க என்றுதான் எதிர்பாத்தன். ஞாயிறு இரவு போவதற்கான இருக்கை வசதியும் செய்து விட்டிங்க. பரவாயில்ல. நமக்கு வேலையும் முக்கியம்தான். நீங்க விரும்பும் நல்ல வேலையென்ற படியால் போகத்தான் வேணும். மறக்கமாட்டிங்கதானே"? "எதைச் சொன்னீங்க மறக்க மாட்டிங்கதானே என்று"? கிண்டல் வினாவை வீசினான். "அதுக்குள்ள மறந்திட்டிங்களா? என்னைத்தான்". நிலத்தைப் பார்த்தவாறே கூறினாள்.

அவளை உற்றுப் பார்த்தான். கண்கள் கலங்கியிருந்தது. அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இன்னும் திருமணப்பேச்சே வரவில்லை. அதற்குள் "நமக்கு வேலைதான் முக்கியம்" என்றாளே. இருவரையும் ஒன்றாக்கிவிட்டு மறக்கமாட்டிங்கதானே என்று கேட்கிறாளே. அவளை நினையும் தோறும் வேதனையாகவும் அதேவேளை சந்தோசமாகவும் இருந்தது. வஸ்வண்டியில் சனம் முட்டிமோதி வழிந்தது. "அடுத்த தரிப்பில் இறங்கவேண்டும்". ஆனந்தனைச் சுயநினைவுக்கு இழுத்தாள். செபஸ்தியார் மணியை ஒலிக்கச் செய்தார். வஸ் நின்றது. இறங்கினார்கள். இறங்கியதும் லதா விடைபெற்றாள். அவளது வீடு அதேதெருவில் வேறுபக்கம் இருந்தது.

சற்றுத் தூரம் நடந்தார்கள். வீடு வந்தது. பாத்திமா கையசைத்துத் தனது வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே சென்றாள். கதவைத் திறந்து கொண்டு வீட்டுக்குள் நுழைந்தார்கள். மாகிரட் அடுக்களைக்குள் போனார். பிள்ளைகளும் பின் தொடர்ந்தனர். சுடுநீர்ப் போத்தலில் தேநீர் இருந்தது. மேரி தேநீரைக் கோப்பைகளில் ஊற்றிப் பரிமாறினாள். "களைப்புக்கு எங்கள் அக்கா தரும் ஒருகப் ரீயைச் சுவையுங்கள்". மரியா விளம்பரம் செய்தாள். கலகலத்துச் சிரித்தவாறே குடித்தார்கள். சற்று களைப்பாறியதும் குளியல் தொடங்கியது.

எந்தவிதக் களைப்பையும் ஒரு குளியல் குணப்படுத்தும் என்பது எவ்வளவு உண்மை. ஆனந்தனுக்குச் சுகமாக இருந்தது. உற்சாகத்தோடு ஒன்று கூடினார்கள். பார்த்து ரசித்தவற்றை அவரவர்களுக்கு ஏற்றவற்றைச் சொல்லி ரசித்தார்கள். மாகிரட் சமையலில் ஆர்வமாக இருந்தார். அடிக்கடி மேரியும், மயூரியும் உதவினார்கள். "சாப்பிடலாம்." அறிவித்தல் வந்தது. மேரி வந்து ஆனந்தனை அழைத்தாள். மயூரியும் எலிசபெத்தும் சாப்பாட்டு மேசையில் ஆயத்தமாக நின்றார்கள். களைப்பு பசியைக் கொடுத்தது. சுவையான உணவு பசியைத் தணித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவின் பின் மண்டபத்தில் அமர்ந்து உரையாடினார்கள். டேவிட் வெற்றிலைப் பிரியர். எந்தநேரமும் வெற்றிலை போடுவார். அரசாங்கத்தில் பெரிய உத்தியோகம் பார்த்தவர். ஆங்கிலத்தில் வல்லவர். ஷேக்ஸ்பியரின் புலமையில் நாட்டங்கொண்டவர். சிவந்த மேனியை வேட்டி, சேட், சால்வை அலங்கரிக்கும் ஆங்கிலேயரின் உடையை அவர் உடுத்ததே இல்லை. வெற்றிலையைப் போட்டபடி கதைத்தார். "நாங்க வந்த விசயம் ஒருமாதிரி முடிஞ்சிற்றுது. நல்ல சந்தோசம். நாளை இரவுக்குப் புறப்பட இருக்கிறம்". அவர் முடிக்கவில்லை. மாகிரட் "அதுக்குள்ளாகவா"? ஆச்சரியத்தோடு கேட்டாள். "அங்க வேல கிடக்கு மாகிரட். போட்டது போட்டபடி விட்டிட்டு வந்திற்றம். ஆனந்தனுக்கும் வேலையிருக்கு. போய் மிச்சவேலைகள முடிச்சிற்று ஆறுதலாக வாறம்". டேவிட் ஆறதலாக விளக்கினார்.

"அவருக்கும் இன்ரவியு இருக்காம்" மேரி சொல்ல வாயெடுத்தாள். தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். ஆனந்தன் அதனைக் கண்டுகொண்டு புன்னகைத்தான். தான் இன்ரவியு பற்றி இன்னும் வாய்திறக்கவில்லை. இவள் சொல்லிவிட்டால்... என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்? ஆனந்தனின் கவலை பறந்தோடியது. நிம்மதிப் பெருமூச்சு விட்டான். மயூரி "அண்ணி என்ன யோசனையா? கவலைப்படாதிங்க. உங்களுக்காகத்தான் வந்தநாங்க. வந்த வேலை முடிஞ்சிவிட்டது. இனி நடக்கப் போறதக் கவனிக்க வேண்டும்". கண்களை உருட்டி நெளித்து சொற்களை உதிர்த்தாள். சந்தோசம் குடிகொண்டிருந்தது. எவ்வளவு நேரம்தான் கதைப்பது? எல்லோருக்கும் களைப்பு. உறக்கம் கண்களை ஆட்கொள்ளத்துடித்தது. மயூரியும், மேரியும் ஒரு அறையுள் சென்றார்கள். அந்த அறையில் இரண்டு படுக்கைகள் இருந்தன. படுக்கையை உதறி விரித்தார்கள். அவர்களுக்குரிய படுக்கை தயாரானது. "அப்பா! என்ன உறக்கம் வருதா?. படுக்கை ரெடி." மயூரி குரல் கொடுத்தாள்.

"அப்பா தண்ணீர் மேசையில் இருக்கு. நாங்க நித்திரைக்குப் போறம். விடியவும் ஐந்துமணிப் பூசைக்குப் போகவேணும். அண்ணா நீங்களும் வாறீங்களா"? சிரித்துக் கொண்டே மயூரியும், மேரியும் வந்தார்கள். "ஆட்சேபனை இல்லை. நீங்க அழைத்தால் நான் வருகிறேன்". நயம் நெளியக் கூறினான். " சரி நானும் வாறன். எல்லாரும் போவம். என்ன"? டேவிட் கூறிக்கொண்டே எழுந்தார். "தம்பி ஆனந்தன் நித்திரை வருது. படுப்பமே" டேவிட் களைத்துத்தான் இருந்தார். அறுபத்திரெண்டு வயது இளைஞன் அவர். ஆனந்தனும் எழுந்து அவரின் பின்னால் அறையுள் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12

எவற்றை மனம் விரும்புகிறதோ, அவற்றைச் செய்யும்போது களைப்பும் சலிப்பும் ஏற்படுவதில்லை. எந்தக் கடினமான வேலையென்றாலும் அதனை விரும்பிச் செய்தால் இலகுவாகிவிடும். வாழ்க்கையை விளையாட்டாக எடுத்துக் கொள்ளவேண்டும். அதில் வரும் சவால்களை விளையாட்டாக எடுத்துக் கொண்டு செய்யத்துணிந்தால், அதனை நாம்தான் செய்தோமா என்று நமக்கே ஆச்சரியமாக இருக்கும். விளையாடிக் கொண்டே சவால்களைச் சமாளிக்கப் பயின்று கொள்ளவேண்டும். மனதைப் பொறுத்ததுதான் வாழ்க்கை. அதற்கேற்றாற்போல்தான் வெற்றியும் அமையும். தனது ஆசிரியர்களது அமுத மொழிகளை ஆனந்தன் அசைபோட்டு அதன்படி நடந்து பார்ப்பவன். அன்றைய நிகழ்வுகளை அசைபோட்டபடியே ஆழ்ந்து உறங்கி விட்டான்.

டேவிட் எப்போதும் அதிகாலை நான்கு மணிக்கே எழுந்துவிடுவார். எழுந்ததும் குளித்துவிட்டு சற்று நேரம் தியானத்தில் ஆழ்ந்து விட்டு நிமிரும்போது மாதா கோயில்மணி ஒலிக்கும். ஆனந்தன் கண்விழித்ததும் குளியறைக்குள் புகுந்தான். டேவிட் கட்டிலில் தியானத்தில் இருந்தார். "அப்பா தேநீர் குடியுங்கள். அண்ணா எங்கே" கூறியவாறு மயூரி இரண்டு கோப்பைகளில் தேநீர் கொண்டு வந்து தந்தாள். "அவர் குளிக்கிறார். மேசையைக் காட்டி "அதில வை. வரட்டும்". அவள் வைத்துவிட்டுச் சென்றுவிட்டாள். ஆனந்தன் நீராடிவிட்டு வந்தான். சுடச்சுடத் தேநீரைக் குடித்தான். அவனது மனம் சந்தோசத்தில் துள்ளியது. டேவிட் வெளியே வந்து மண்டபத்தில் இருந்தார். ஆனந்தன் உடையணிந்தான். அவனும் வெளியில் வந்தான். அவனைக் கண்டதும், " புறப்படுவோமா? வாங்க போவம்". புறப்பட்டார்கள். செபஸ்தியார் வீட்டில் நின்று கொண்டார். அவர் வழமையாக ஆறரை மணிக்குத்தான் போவார். நடந்தார்கள்.

காலையில் நடப்பது சுகமாக இருந்தது. வீதி பரந்து கிடந்தது. வாகன நெரிசல் இல்லை. கண்ணைக்கூசும் வெளிச்சத்தைப் பாய்ச்சிக் கொண்டு வாகனங்கள் விரைந்தன, "அண்ணி கோயில் தூரத்திலா இருக்கு"? மயூரி கேட்டாள். "ஒரு கூப்பிடு தூரந்தான். நடந்தே போயிடலாம்". பிரதான வீதியைத்தாண்டி இடப்பக்கமாகத் திரும்பி நடந்தார்கள். முஸ்லிம் ஹோட்டல்கள் திறந்திருந்தன. பள்ளிவாயில்களில் தொழுகை நடந்து கொண்டிருந்தது. தூரத்தில் இந்து ஆலயத்தில் இருந்து மணியோசை காற்றில் கலந்து காதுகளில் இனித்தது. "அதோ அதுதான் கோயில்" மேரி சுட்டிக் காட்டினாள். சிலுவையின் வெளிச்சம் பளிச்சிட்டது. கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் பெரும்பான்மையாகக் கோயில்களுக்குச் செல்வார்கள். அதனைக் கட்டாயக் கடமையாகவும் கொண்டவர்கள். கோயில் விசாலமாக இருந்தது. கோயில் நிறைந்து மக்கள் குழுமியிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலையிலும் மாதா கோயிலுக்குச் சென்றிருக்கிறான். எங்கும் ஒரேவிதமான பூசையை கண்டிருக்கிறான். அவைகள் யாவும் ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பைக் கொண்டிருப்பதை அவதானித்தான். மக்கள் பயபக்தியாக மன்றாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். பூசைநேரத்தில் அமைதி குடிகொண்டிருப்பதை அவதானித்தான். கிறிஸ்தவம் மேற்கு நாட்டிலிருந்து வந்தாலும் பல அரிய பழக்க வழக்கங்களையும் வழங்கிருந்தது. தேவையில்லாத இரைச்சல் இல்லை. தூய்மை பேணப்படும். வேண்டியபோது நின்றும், வாங்குகளில் இருந்தும், முழந்தாளில் நின்றும் வணங்குவார்கள். ஒன்றாகச் சேர்ந்து பாடுவார்கள். குருவானவர் அறிவுபூர்வமான பிரசங்கங்கங்கள் செய்வது பிடித்தமான செயல்களாகப் பட்டன.

திருப்பலிப் பூசையின்போது ஒரு மணியொலிக்கும். அப்போது அனைவரும் தலைகுனிந்து மன்றாடுவார்கள். மறுமணி ஒலிக்கும் வரை தலைகள் அப்படியே இருக்கும். பூசையின் நிறைவின்போது ஆளையாள் வணங்கி வணக்கம் சொல்வது ஆனந்தனுக்குப் பிடித்த செயல்களாகின. பூசை முடிந்து வெளியில் வந்தார்கள். மனங்களில் அமைதி குடிகொண்டிருந்தது. அதனை அவர்களது முகங்கள் காட்டின. "எப்படிப் பூசை? அனுபவித்தீர்களா"? கேட்டபடியே மேரி முன்னால் நடந்தாள். "மனதுக்கு நிம்மதியாக நல்லாயிருந்தது. திருப்தியோடு சொன்னான். டேவிட் முன்னால் சென்றார்". தொடர்ந்து மாகிரட்டும் சின்னதுகளும் சென்றார்கள். பின்னால் மயூரி தொடர்ந்தாள். "அண்ணி என்ன கேட்டீங்க"? மயூரி கேட்டாள். " நான் ஒண்ணும் கேக்கல்ல". மேரி பதிலளித்தாள். "அப்ப ஏன் அண்ணி கோயிலுக்குப் போறீங்க"? மயூரி கேட்டாள். "இறைவனுக்கு நன்றி சொல்ல. மயூரி இந்த மனிதப்பிறவியைத் தந்தவனே அவன்தானே? அவனருளாலே அவன்தாள் வணங்கவும், அவனருளாலே உலகம் உய்யவும், மக்கள் ஒற்றுமையாக வாழவேண்டியும் யாசிக்கப் போனேன்." மேரி விளக்கினாள். "அண்ணா! அண்ணியின் தத்துவம் புரிந்ததா? எனக்கு விளங்கல்ல. உங்களுக்குப் புரிந்ததா"? மயூரி நடந்து கொண்டே கூறினாள்.

மேரியின் பதில் ஆனந்தனை ஈர்த்தது. இவள் இவ்வளவு தத்வாத்துவமாகப் பதிலளிக்கிறாளே? தனக்காக மட்டும் வேண்டிப் பிராத்தனையில் ஈடுபடும் மக்களிடையே இவள் வேறுபட்டு நிற்பதை உணர்ந்து கொண்டான். பிறருக்காக எவர் வாழ்கிறாரோ அவர் உயர்ந்தவராகிறார். ஆனந்தனும் இதைத்தானே பிரார்த்தனையின் போது நினைத்தான். அருவமும் உருவமும் இல்லாத ஒளிமயமான இறைவனை எப்படிவேண்டுமானாலும் யாசிக்கலாம். கற்பனை கடந்த சோதி வானவன், அணுவுக்குள் மூன்று மூலங்களை வைத்து அதனூடாக ஆற்றலைப் பெருகச் செய்யும் இறைவனது சக்தி மகத்தானது. அணுவுக்குள் புறொட்டோன், நியுற்றோனை வைத்து அதனைச் சுற்றி இலத்திரோனையும் வைத்து இயக்கத்தை உருவாக்கிய அற்புதச் சிருஷ்டிகர்த்தா இறைவன். தன்னுள் எண்ணி வியந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அண்ணா! என்ன ஆழ்ந்த யோசனை? அண்ணி சொன்னது விளங்கல்லயா? அல்லது குழப்புகிறதா"? குறும்பு கலந்து கேட்டாள். அவன் சிரித்துக் கொண்டான். கதையை வேறுபக்கம் இழுத்தான். "மயூரி! ஒன்று கேட்க மறந்திட்டன். நாங்க கொழும்புக்கு வரும்போது கவனமாக வைக்கும்படி ஒரு பெரிய என்வலப் கொடுத்தனான். நினைவிருக்கா"? "ஓம் அது அலுமாரி லாச்சியில் இருக்கு. அதுக்கென்ன இப்ப"? "வாற அவசரத்தில சொல்ல மறந்திற்றன். அதுக்குள்ள இன்ரவியுக்கு வந்த கடிதம் இருக்கு. இப்பதான் நினைவுக்கு வந்தது. போனதும் நினைவாக எடுத்துத் தரவேணும். புதன்கிழமை இன்ரவியு". ஒருமாதிரிச் சொல்லித் தப்பினான். "என்னத்துக்கு இன்ரவியு"? அதிசயமாகக் கேட்டாள்.

நான் சொன்னேன்தானே? ரீச்சிங். அதற்கானதுதான்". "அண்ணா உங்க ஆசை நிறைவேறும். கட்டாயம் ரீச்சிங் கிடைக்கும். அண்ணியும் நம்வீட்டுக்கு வருவா. எனக்குச் சரியான சந்தோசம்." குதுகலத்தோடு சொன்னாள். "அண்ணி உங்க அதிர்ஷ்டம். அண்ணனுக்கு ரீச்சிங் இன்ரவியுவுக்கு கடிதம் வந்திருக்கு. சந்தோசமா"? சத்தமிட்டுச் சொன்னாள். "எனக்கு எப்பவோ தெரியும்". சொல்லிவிட்டு உதடுகளைக் கடித்துக் கொண்டாள். "தெரியுமா எப்படித் தெரியும்".? எல்லாம் ஒரு யூகம்தான். இப்பதானே நீங்க சத்தமாகச் சொன்னீங்க." சமாளித்தாள். "அண்ணா அப்பாவுக்குத் தெரிந்தால் சந்தோசப் படுவார். இப்பவே சொல்லவா"? அவசரப்படுத்தினாள். "மயூரி, வீட்டுக்குப் போய்ச் சொல்லலாம்தானே? சாப்பிடும்போது ஆறுதலாகச் சொல்வோம். அதோ வீடும் வந்திற்று". மேரி பதிலளித்தாள். "அண்ணி வீடு எப்படி வரும். நாங்கதானே வீட்டுக்கு வாறம்." சிரித்துக் கொண்டே கூறினாள். "என்ன கிண்டலா"? சிரித்தவாறே நடந்தாள்.

ஆனந்தன் புன்னகைத்தான். எலிசபத் முன்னால் போய்விட்டாள். பின்னால் மாகிரட் நடந்தார். தொடர்ந்து டேவிட் சென்றார். வீடு கலகலப்பாகியது. வழமையான வேலைகள் நடந்தேறின. மாகிரட் பம்பரமாகச் சுழன்றார். துணைக்கு மேரியும் எலிசபத், மரியா, ஏஞ்சல். மயூரியும் இருந்தார்கள். மனைமாட்சி என்பது பெண்களின் கைவண்ணத்தில்தான் உள்ளது. காலையுணவு பரிமாறப்பட்டது. செபஸ்தியார் சாப்பிட்டவாறே "ஒரு நாள் நின்று நாளைக்குப் போனால் என்ன?" கதையை இழுத்தார். டேவிட் சிரித்தார். "நீங்க சொல்வது நல்லதுதான். கேட்கவும் நல்லாத்தான் கிடக்கு. அங்க வேலை நிறையக் கிடக்கிறது. ஆனந்தனுக்கு லீவும் எடுக்கேலாது. போறத்துக்கான ரிக்கற்றையும் ஸ்ரனிலாஸ் எடுத்துத் தந்திட்டான். திங்கள் காலையில் ஸ்ரேசனில காத்திருப்பான். அவனுக்குச் சாப்பாட்டுக்கும் கஸ்டம்" டேவிட் செபஸ்தியாரை மேற்கொண்டு பேசுவதற்கு இடம்கொடாது விளக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா அண்ணாவுக்கு இன்ரவியுவும் இருக்காம். அதனால நிக்கேலாது". மயூரி அவலை உரலில் போட்டுவிட்டாள். ஆனந்தனுக்குச் சங்கடமாயிற்று. ஒரு பொய்யை மறைக்க எத்தனைவிதமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது. ஏற்கனவே டேவிட் ஐயாவிடம் சொல்லியிருந்தால் இவ்வளவு பிரச்சினை இருக்காது. சமாளிக்கத்தான் வேண்டும். "ஆனந்தன், என்ன இன்ரவியு, எப்ப நடக்கும்". டேவிட் வினாவினார். "அதுதான் நான் சொன்னேனே. ரீச்சிங். புதன்கிழமை நடக்கும்". பதிலளித்தான். "நல்லதாகப் போச்சுது. பாத்தீங்களா? இதுதான் ஆண்டவன் சித்தம் என்பது. நான்கூட இன்டைக்கு ஆனந்தன் வேலை விசயமாகத்தான் மன்றாடினனான். என்டைக்கும் இறைவன் உதவ பின்நிற்க மாட்டார். சரி எப்ப கடிதம் வந்தது."? டேவிட் ஆனந்தனைப் பார்த்தார். "வெள்ளிக்கிழமை. நாங்க கொழும்புக்கு வாறண்டைக்குத்தான். அவசரத்தில சொல்ல மறந்திட்டன். போய்த்தான் ஒழுங்குகளைச் செய்யவேணும்". ஆனந்தன் ஒருவாறு கூறிமுடித்தான்.

பகற்பொழுது பறந்து போனது. டேவிட் மனநிறைவோடு இருந்தார். செபஸ்தியார் மனம்விட்டுக் கதைத்தார். "நாங்க உங்கள மறக்கமாட்டம். எவ்வளவு காலம் உங்களப் பார்க்காமல் இருந்தம். அதையெல்லாம் நினைக்கும் போது கவலையாகத்தான் இருக்கு". நெக்குருகிக் குழைந்தார். பக்கத்தில் மாகிரட் நின்றிருந்தார். அவரது கண்கள் கலங்கியிருந்தன. "என்னைத் தேடி நீங்கதானே வந்தீங்க. எல்லாத்தையும் கனவாக நினையுங்க. போனதயிட்டுக் கவலயடையக் கூடாது. நடப்பதைப் பற்றித்தான் யோசிக்க வேண்டும். மேரியின்ர விசயத்தைப் பார்ப்பம். இப்ப நவம்பர் மாதம். எப்படியும் மேமாதம் கலியாணத்த வைக்கலாம் என்று யோசிக்கிறன். அதற்கு ஆயத்தப்படுத்துங்க." டேவிட் விளக்கமாகக் கூறினார்.

புறப்படும் நேரம் நெருங்கிவிட்டது. பிரிவு என்பது உணர்வுகளைப் பிழியும் வல்லமை கொண்டது. அன்பு பிணைப்பை ஏற்படுத்துவது போல் பிரிவும் நெருக்கத்தை வலிமையடையச் செய்யும். நம்மில் ஒருவராகக் கலந்து இருந்தவர் ஒருவர் பிரிந்து சென்றால், அவரோடு பழகிய அந்த நாட்களில் ஏற்படுத்திக் கொண்ட நல்ல உறவு, அவர் இல்லாத போது நினைந்து நினைந்து, அந்த நினைவுகள் பாலமாக அமைந்து மென்மேலும் அன்பையும் பாசத்தையும் வளர்த்து விடும். தலைவன் தலைவியிடையே ஏற்படும் பிரிவும் இத்தகையதே. இந்தப்பிரிவு நினையும் தோறும் துன்பத்தைக் கொடுத்தாலும், அதிலொரு இன்பத்தையும் கொடுக்கும். இதனை ஆனந்தன் உணரத்தலைப்பட்டான். கொழும்புக் கோட்டை புகைவண்டி நிலையத்தில் விடைபெற்றுப் பிரியும் போது மேரி வெறுமையை உணர்ந்தாள்.

தன்னைத் தன்னந்தனியாக விட்டு எல்லாமே பிரிந்து செல்வதாக நினைந்தாள். றெயில்வண்டி கூவலோடு புறப்பட்டது. மேரியின் விழிகளில் கண்ணீர் துளிர்விட்டதைக் கண்டு கொண்டான். "விரைவில் வருவேன். கவலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படவேண்டாம்'' மெதுவாகக் கூறினான். ''அண்ணி உங்கள் அன்புக்கு நன்றி. எனது அண்ணனுக்கு நல்லதொரு மனைவி கிடைத்ததை எண்ணிச் சந்தோசம். நாங்க போய்வாறம்'' மயூரி விடைபெற்றாள். புகைவண்டி இருளைக் கிழித்து இரைந்து தண்டவாளத்தில் சடசடத்தது. ஆனந்தனது உடல் மட்டும் புகைவண்டி இருக்கையில் அசைந்து கொண்டிருந்தது. அவன் கண்களை மூடியபடி கனவு கண்டான். ஒரு இனிமையான புத்தம்புது உலகத்தில் மேரியோடு பயணித்தான்.

## 13

"மே.. மாத்தயோ... நகின்ட. என்ட எலியட்ட." ஒரு சிப்பாய் கதவைத் திறந்தவாறே அழைத்தான். அது கோப்ரல் ராஜபக்ச. மனதினில் சற்றுத்தெம்பு பிறந்தது. அவனது கனவு கலைந்ததுபோல் கண்களைத் திறந்தான். அடியின் வேதனை இன்னும் ஆறவில்லை. உடலை அசைக்க முடியாதிருந்தது. மெதுவாகப் புரண்டு, கால்களை நிமிர்த்திப் பார்த்தான். கைகளைச் சுவரில் அழுத்தி எழுந்திருந்தான். ''மேக்க பொண்ட' இதக்குடிங்க'' சுடச்சுடத் தேநீர் கொடுத்தான். குடித்தான். தேநீர் தெம்பைக் கொடுத்தது. மனதார நன்றி சொன்னான். ''நேற்று என்ன நடந்தது? அடிச்சாங்களா''? அக்கரையோடு கேட்பவனுக்குச் சொல்லத்தானே வேண்டும். ''அடிச்சாங்க'' கலக்கத்தோடு நடந்ததைச் சொன்னான்.

அப்பாவிகளுக்குத்தான் துன்பங்கள் தொடரும் என்பது எவ்வளவு உண்மை. ஆனந்தன் தன்னை நொந்து கொண்டான். கழிவறைக்குப் போவதற்கு முற்பட்டான். ராஜபக்ச உதவினான். முடிந்ததும் மீண்டும் அதே அறையில் புகுந்து கொண்டான். விடிந்து விட்டிருந்தது. இராணுவ வீரர்கள் வருவதும் போவதுமாகவும் இருந்தார்கள். ஒருபுறம் அவர்களது பயிற்சி நடந்து கொண்டிருந்ததற்கான சத்தங்கள் கேட்டன. வாகனங்களின் இரைச்சல். ஒரு சிப்பாய் வந்து கதவினைத் திறந்தான். ''என்ட'' கூறிவிட்டு நடந்தான். அவன் பின்னால் போனான். வெளியே ஒரு ஜீப் தயாராக இருந்தது. ''நகின்ட.. ஏறு'' என்றார்கள். தடுமாறி ஏறிக் கொண்டான். அந்த ஜீப்பினுள் இரண்டு இருக்கைகள் இருந்தன. அவை இருபக்கங்களிலும் நீள்வாட்டில் அமைந்திருந்தன. முன்னால் கப்ரன் செனிவரத்ன இருந்தான். அவன் பக்கத்தில் ரைவர். ஒவ்வொரு இருக்கையிலும் மூன்று இராணுவ வீரர்கள் வீதம் ஆறுபேர் இருந்தனர். ஆனந்தனுக்கு இருக்கை இல்லை. அவனைக் கீழே இருக்கும்படி சொன்னார்கள். எங்கே ஜீப் போகிறது? யாரிடம் கேட்பது? தடுமாறினான். நடப்பது நடக்கட்டும் என்று இருந்துவிட்டான்.

ராஜபக்ச ஒரு குறிப்புப்புத்தகத்தைக் கொண்டு வந்தான். அதனை கப்ரன் செனிவரத்னவிடம் கொடுத்தான். அவன் கையொப்பமிட்டான். ராஜபக்ச பெற்றுக் கொண்டு அனுதாபத்துடன் ஆனந்தனைப் பார்த்தான். கப்ரன் ''யமு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவோம்" என்றான். ஜீப் இரைந்து புறப்பட்டது. வீதியில் மக்கள் கூட்டம் அதிகமில்லை. அவனை யாரும் கவனிக்கவில்லை. இராணுவ வாகனத்தைப் பார்ப்பதற்கே மக்கள் அஞ்சினார்கள். ஜீப் பறந்து போனது. மழை விட்டபாடில்லை. பெய்து கொண்டிருந்தது. வன்னிநிலம் மழைநீரில் நீந்திக் கொண்டிருந்தது. ஜீப் கண்டிவீதியால் சென்று மன்னார் வீதியுடாக விரைந்தது. பரீட்சை முடிந்துவிட்டது. மாணவர்கள் வீடுகளில் முடங்கிக் கிடந்தார்கள். பாடசாலைகள் உறங்கிக் கொண்டிருந்தன. பாடசாலைகள் இயங்கினால்தான் ஊரெங்கும் கலகலக்கும். வீதிகள் மாணவப் பூக்களால் நிறைந்திருக்கும். பட்டாம் பூச்சிகளாகப் பரந்து வண்ணச் சீருடையில் புத்தகப் பைகளோடு பவனிநடக்கும். நகர்புறங்களும், கிராமங்களும் இயக்கம் கொள்வது பாடசாலைகளால்தான்.

வீதிகளில் மாணவர்களைக் காணவில்லை. அவனைப் போல் ஊர்களும் கவலையிலும், துன்பத்திலும் ஆழ்ந்து கிடப்பதாகத் தெரிந்தது. இரண்டு சிப்பாய்கள் இரவு உரையாடியது நினைவுக்கு வந்தது. அரைகுறையாகத்தான் விளங்கியது. "இப்படியே தமிழ் இளைஞர்களை வதைத்தால் பெரிய பிரளயமே உருவாகி விடாதா? எத்தனைக்குத்தான் அவர்கள் பொறுப்பார்கள். ஒருநாளைக்குப் பெரிய இயக்கமே உருவாகும். அரசினால் கட்டுப்படுத்த முடியாமலும் போகலாம்". ஒரு குரல் ஒலித்தது. "நீ சொல்வது உண்மைதான். பார்த்துப் பேசு. இரவில் சுவருக்கும் காது முளைத்துவிடும். பிறகு இருக்கிற இந்த வேலையும் பறிபோய்விடும்." மற்றவன் ஒத்துப்பாடினான். நமது நாட்டில் தமிழர் ஆட்சி நடந்தது. பின் சிங்கள மன்னர் ஆட்சி நடந்தது. இது மாறி மாறி நடந்திருக்கு. இப்ப ஜனநாயக ஆட்சி. தமிழரும், சிங்களவரும் ஒற்றுமையாய் இருக்கலாம்தானே? அடிபட்டுச் சாவதற்கா புத்தபகவான் நமக்குப் போதித்தார்? எனக்கு இந்த துப்பாக்கி பிடிக்கவே விருப்பமில்லை மச்சான்." மனஉளைச்சலை மற்றவன் அள்ளிக் கொட்டினான்.

ஆனந்தன் அந்த உரையாடலில் புதைந்துள்ள உண்மைத்தன்மைகளை உணர்ந்து கொண்டான். அவன் மனதிலும் அந்த உண்மைத்தன்மை ஊன்றிக் கொண்டது. ஒரு பலூனில் காற்றை ஊதியபின் அதனை அமுக்கினால் என்ன செய்யும்? காற்று ஒருபக்கம் தள்ளி பலூன் வெடிக்கும். அதனை எண்ணிக்கொண்டான். அந்தநிலை இந்தநாட்டில் ஏற்படத்தான் போகிறது. இந்நாட்டு மக்கள் அனைவரும் அனுபவிக்கத்தான் போகிறார்கள். மக்கள் அனைவரையும் இந்நாட்டு மக்களாகக் கருதி ஒற்றுமையை வளர்த்தால் இந்த நாடு வளம் பெறும். இதனை எந்த அரசியல் கட்சிகளும் சிந்திப்பதாக இல்லை. அவனது மனம் வெதும்பியது.

வாகனம் நெலுக்குளம் சந்தியால் திரும்பி பாவற்குளம் நோக்கி விரைந்தது. பாவற்குளம் மகாவித்தியாலயம் உறங்கிக்கிடந்தது. பரீட்சை முடிந்து மார்கழி விடுமுறைக்காகப் பாடசாலைகள் அனைத்தும் வெறுமையாகக் கிடந்தன. மழையில் நனைந்து, வெயிலில் தலைதுவட்டி தனிமையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறங்கின. இனி தைபிறந்தால்தான் அவை விழித்துக் கொள்ளும். பாவற்குளம் விரைந்து மறைந்தது. பாவக்குளத்தின் மிகைநீர் வழிந்தோடுவதற்கு வடிகால் அமைப்பு இருந்தது. அந்த இடத்தில் சிறுபாலம் இருந்தது. அப்பாலம் பாவற்குளத்துக்கும் உலுக்குளத்துக்கும் எல்லையாக இருந்தது. உலுக்குளம் அழகான கிராமம். அங்கு தனியே சிங்கள மக்களைக் குடியேற்றியிருந்தார்கள். உலுக்குளம் மகாவித்தியாலயம் சிங்கள மாணவர்களைக் கொண்டிருந்தது.

அதிபர் பெரேரா "அரசியல் பழிவாங்கல்' என்ற போர்வையில் இடமாற்றம் பெற்று வந்தவர். பாடசாலையில் கண்ணும் கருத்துமாக வழிநடத்தினார். ஏழைமக்களை நேசித்தவர். அவரது மனைவியும் ஒரு ஆசிரியர். அவரையும் அதே பாடசாலைக்கு இடமாற்றத்தைப் பெற்று அழைத்து வந்திருந்தார். அவர்கள் தங்கள் முழுநேரத்தையும் பாடசாலையில் செலவழித்தார்கள். காலையில் கற்பித்தல். பிள்ளைகள் கல்வியில் நாட்டங் கொண்டு படிப்பார்கள். மாலைமுழுதும் விளையாட்டு. எந்தநேரமும் பாடசாலை இயங்கிக் கொண்டிருக்கும். அடுத்த கிராமத்துக்கே தெரியாதிருந்த பாடசாலையை அகில இலங்கை மட்டத்தில் விளையாட்டில் புகழ்பெறச் செய்தார். ஆனந்தன் அவருக்கு வேண்டியபோது உதவிகள் செய்தான். அடிக்கடி பாடசாலைக்குச் சென்று உற்சாகப் படுத்துவான். அவர்களின் அன்புக்குப் பாத்திரமாகியிருந்தான். விடுமுறையில் அவர் தனது குடும்பத்துடன் சொந்த ஊரான வென்னப்புவ சென்றிருந்தார். பாடசாலை உறங்கிக் கிடந்தது.

நேரியகுளம் சந்தியில் வலப்பக்கமாகத் திரும்பி மதவாச்சி மன்னார் வீதியால் செட்டிகுளம் விரைந்தது. கரிய தார்வீதியின் மழைநீர் பரவிக் கழுவியோடியது. ஓரங்களில் தண்ணீர் சிற்றாறாய் ஓடியது. வீரமரங்களும், பாலை மரங்களும் மதாளித்து நீராடி நின்றன. மக்களும் மழைக்காக வீடுகளில் முடங்கிக் கிடந்தனர். செட்டிகுளம் மகாவித்தியாலயத்தில் ஜீப் நின்றது. பாடசாலையில் யாரையும் காணவில்லை. ஆனந்தனில் உப அலுவலகம் செட்டிகுளம் மகாவித்தியாலயத்தில் இருந்தது. ஒரு கிழமையில் இரண்டு நாட்கள் இந்த அலுவலகத்தில் வேலைசெய்வான். அப்போது அப்பகுதிப் பாடசாலைகளுக்குச் சென்று கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவான். ஆசிரியர்களுக்கு வழிகாட்டி நெறிப்படுத்துவான். செட்டிகுளம் கிராமமுமல்ல. பெரிய நகரமும் இல்லை. நடுத்தரமான சிறியதொரு நகரம்.

சுறுசுறுப்பாக இயங்கும் மக்கள். இருபோக விளைச்சலைக் கொடுக்கும் வளமான வயல்நிலங்கள். உளுந்து போன்ற பல்வேறு தானியங்கள் விளையும் மேட்டுநிலங்கள் கொண்ட பிரதேசம். பாலுக்குப் பஞ்சமில்லை. தேன் நிறையவே கிடைக்கும். அன்பும் பண்பும் கொண்ட மக்கள் நிறைந்த பெருநிலப்பரப்பு. மதவாச்சி - மன்னார் வீதிக்குச் சமாந்திரமாக மன்னாரை இணைத்து நீண்டு வளைந்து படுத்திருக்கும் புகைவண்டி இருப்புப் பாதை. இரண்டையும் இணைத்து வைக்கும் பாதையில் செட்டிகுளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவித்தியாலயம் குந்தியிருந்தது. அதற்கு எதிர்புறமாக கிறிஸ்தவ ஆலயம். ஆலயத்துக்குப் பின்புறமாகத் திருக்குடும்பக் கன்னியர் மடம். அங்கும் சிறு பாடசாலை நடைபெற்றது. அது அருட்சகோதரிகளால் நடத்தப்பெற்றது.

செட்டிகுளத்துக்கு வருகைதரும் நாட்களில் பங்குத்தந்தை அருட்திரு பிலிப் அவர்களின் ஆசியைப் பெறத் தவறமாட்டான். ஓய்வு நேரங்களில் அவரோடு கதைத்துக் கொண்டே இருப்பான். அவரும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஆண்டவர் உழைத்தமை பற்றி உரையாடுவார். அவனை அறியாமலேயே அவர்மேல் ஒரு மரியாதை வளர்ந்தது. அவன் செட்டிகுளம் பிரதேசத்தைப் பொறுப்பெடுத்தபின், அப்பகுதிப் பாடசாலைகள் எழுச்சி கொண்டன. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் புத்துயிர் பெற்றன. பாடசாலைகளில் மேற்பார்வைக்காகச் சென்றால், பாடசாலை விடும் வரை அதிபரோடும், ஆசிரியர்களோடும் சேர்ந்து இயங்குவான். தானும் சக ஆசிரியராக வகுப்புகளுக்குச் சென்று பாடம் புகட்டுவான். மாணவர்கள் மத்தியிலும் அவனுக்குச் செல்வாக்கு வளர்ந்தது.

அதேநேரம் அவனுக்கு எதிர்ப்பும் வளர்ந்தது. பல ஆசிரியர்கள் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் போய்விடுவார்கள். திங்கள் வந்து விடுவார்கள். அப்போது அடிக்கடி புகைவண்டிச் சேவையும், வேண்டிய நேரத்தில் வஸ்வண்டிச் சேவைகளும் இருந்தன. வவுனியா நகர் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் கல்வியில் அவ்வளவு நாட்டம் இருக்கவில்லை. எழுத வாசிக்கத்தெரிந்தால் போதும் என்ற நிலைப்பாடு பெற்றோர் மத்தியில் நிலவியது. இதனைப் பல ஆசிரியர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தினார்கள். சில ஆசிரியர்கள் வியாழன் பகலே புறப்பட்டு விடுவார்கள். செவ்வாய் காலை பத்து மணியளவில் வந்து விடுவார்கள். இச்செயல் ஆசிரியர்களிடையே முறுகலைத் தோற்றுவித்தது. சில அதிபர்கள் வியாழன் கல்வித் திணைக்களத்துக்குச் செல்வதாக "லொக்' புத்தகத்தில் எழுதுவார்கள். அப்படியே வீடு சென்று விடுவார்கள். செவ்வாய் பகல் வருவார்கள். திங்கள் கல்வித்திணைக்களம் சென்று வந்ததாக "லொக்' புத்தகத்தில் பதிவார்கள்.

இவர்களது இச்செயற்பாடுகளினால் இடைவிலகல் ஏற்படுவதையும். பிள்ளைகள் கல்வியில் பின்தங்கியுள்ளதையும் ஆனந்தன் ஆய்வுகள் மூலம் கண்டு கொண்டான். அதிபர்களது கூட்டங்களைக் கூட்டி, பாடசாலைத்தேவைகள், ஆசிரியர்களது தேவைகளை எழுத்து மூலம் தன்னிடம் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொண்டான். தனது அனுமதிக் கடிதமின்றி கல்வி அலுவலகம் சென்றால் உங்களை அங்கு கவனிக்கமாட்டார்கள். அத்துடன் அங்கு செல்பவர்கள். தங்களது கையெழுத்தினை அதற்கென வைத்திருக்கும் கையேட்டில் இடவேண்டும் எனவும் விளக்கினான். கல்விப் பணிப்பாளர்களதும் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களதும் கூட்டங்களில் அதிபர், ஆசிரியர்களது தேவைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடியாகச் செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொண்டான். அதிபர்களோ அல்லது ஆசிரியர்களோ கல்வி அலுவலகத்துக்கு வருவதில்லை என உத்தியோகத்தர்கள் பதிலிறுத்தனர். அப்படி வருவதாயின் புதன்கிழமை மட்டும்தான் வரலாம் எனத் தெரிவித்தனர்.

இந்த இறுக்கமான தடை சிலரைப் பாதித்தது. ஆனால் கிராம மக்கள் வரவேற்றனர். ஒவ்வொரு பாடசாலையிலும் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களை இயங்கச் செய்தான். பழைய மாணவர் சங்கங்களுக்குப் புத்துயிர் ஊட்டினான். மக்கள் விழித்துக் கொண்டார்கள். இந்த இறுக்கம் ஒருசில ஆசிரியர்களை மட்டுந்தான் பாதித்தது. அவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தில் பிரத்தியேக வகுப்புக்களில் பணியாற்றுபவர்கள் என்பது தெரிய வந்தது. அருட்திரு.பிலிப் அடிகளார் இத்திட்டத்தைப் பெரிதும் வரவேற்றார். ஆசிரியர்கள் திங்கள் முதல் வெள்ளிவரை கடுமையாக உழைத்தார்கள். அத்துடன் கஸ்டமான பிரதேசங்களுக்குரிய மேலதிக கொடுப்பனவையும் பெற்றுக் கொடுத்தான். பல ஆசிரியர்கள் விடுமுறை நாட்களிலும் வகுப்புக்களை நடத்தினார்கள். தமிழ் மொழித்தினப் போட்டிகளையும், விளையாட்டுப் போட்டிகளையும் நடத்துவதற்கு ஊக்கமூட்டினான். பாடசாலைகள் கலகலத்தன. நாடகம், நாட்டுக்கூத்து, நடனநிகழ்சிகள் பாடசாலை மட்டத்திலும், பிரதேச மட்டத்திலும் மேடையேறின. டிசம்பர் விடுமுறை மட்டும் விதிவிலக்காக அமைந்தது.

பாடசாலைக் கேற் பூட்டப்படாமல் மூடியிருந்தது. ஜீப் நின்றது. ஒரு சிப்பாய் இறங்கித் திறந்துவிட்டான். ஜீப் உட்சென்றது. ஆனந்தனின் அலுவலகம் பூட்டியிருந்தது. பாடசாலைக் கட்டிடங்கள் அழகாகத் திட்டமிடப்பட்டுக் கட்டப்பட்டிருந்தன. "கல்விப் பணிப்பாளரின் பணிமனை' தனியாக இருந்தது. அது ஒரு பழங்காலத்துக் கட்டிடம். போர்த்துக்கேயர் காலத்தில் கட்டப்பட்டதாம். நிலத்திலிருந்து சுமார் நான்கடி உயரத்தில் அதன் அத்திவாரம் இருந்தது. நான்கு படிக்கட்டுகளில் ஏறினால்தான் கட்டிடத்துள் செல்லலாம். இரண்டு பெரிய அறைகளைக் கொண்டது. சுற்றிவர ஐந்தடி அகலமான விறாந்தை இருந்தது. ஒரு அறை செட்டிகுளம் மகாவித்தியாலயத்தின் அதிபர் அலுவலகமாகப் பாவிக்கப்பட்டது. அடுத்த அறைதான் பிரதேசக் கல்வி அலுவலகமாக இயங்கியது. போர்த்துக்கேயத் துரைமார் தங்குவதற்காகக் கட்டப்பட்டதாக மக்கள் கூறுவார்கள்.

அவர்கள் இந்தியாவில் இருந்து கடல்மார்க்கமாக பேசாலை, மன்னார் ஊடாகக் குதிரையில் வருவார்கள். குதிரைகளைக் கட்டிவைப்பதற்காகத் தனியாகக் கட்டிடம் கட்டப்பட்டிருந்தது. இவ்வாறான கட்டிடங்கள் பல வன்னி நிலப்பரப்பில் இருந்தன. கப்ரன் செனிவரத்ன அறையைத் திறக்கும்படி கூறினான். அவன் அதனது திறப்பை வளையிடுக்கில் வைத்திருந்தான். ஒரு மேசையை அரக்கி அதன்மேல் ஏறிநின்று திறப்பை எடுத்துத் திறந்தான். சிப்பாய்கள் உள்ளே சென்று தேடினார்கள். ஜனவரியில் மாணவருக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பதற்காக எண்ணிக்கட்டி அடுக்கியிருந்த இலவசப் பாடப்புத்தகங்கள் சிதறின. கோவைகள் அங்குமிங்கும் எடுத்தெறியப்பட்டன. "எதனைத் தேடுகிறார்கள்". ஆச்சரியத்துடன் பார்த்தான். "அடோவ். .கோ.. அத்பொத் ...கொட்டியாகே...லியுங். கியாப்பாங் ... எங்கேயடா குறிப்புப் புத்தகம்..புலிகளின் ..துண்டுப் பிரசுரங்கள்..சொல்" செனிவரத்ன தீப்பறக்கும் கண்களோடு தேடித்தேடிக் கேட்டான். ஆனந்தனுக்குச் சிரிப்பு வந்தது.

"ஏய்...மீற்றிங்....எங்க...வைக்கிறது"? ஒரு சிப்பாய் துருவினான். "என்ன மீற்றிங்? இது என்ர "சப்ஒபிஸ்' இங்க மீற்றிங் நடக்காது". "என்னடா சொல்றது? அப்ப எங்க நடக்கும். சொல்" அடுத்து நின்ற சிப்பாய் சத்தமிட்டான். "அடோவ்... யாரு யாரு..மீற்றிங் வைக்க வாறது? என்ன கதைச்சனீங்க எல்லாம் சொல்லு.. சரியா? உத வாங்காம உண்மயச் சொல்." செனிவரத்ன சத்தமிட்டான். "கப்ரன் சேர்! இது ஒரு ஒபிஸ். இங்க அதிபர், ஆசிரியர்கள் மட்டுந்தான் வருவார்கள்". ஆனந்தன் சொல்லி முடிக்கவில்லை. எதிர்பாராதது நடந்து விட்டது. ஆனந்தன் சுவரில் சாய்ந்தான். அவனது கன்னம் ஐந்து விரல்களின் அடையாளத்தைப் பெற்றுக் கொண்டது. கண்கள் சிவந்து கண்ணீர் பெருகியது. ஒரு சிப்பாய் முன்னால் தள்ளினான். மற்றவன் அடித்தான். அடிமேலடி விழுந்தது. ஆனந்தன் துடிதுடித்தான். அப்படியே விட்டுவீட்டு ஜீப் பக்கம் சென்று வந்தார்கள்.

ஒரு சிப்பாய் வந்தான். ஆனந்தனின் நீள்காற்சட்டையை மேல்நோக்கிச் சுருட்டுமாறு கூறினான். ஆனந்தனுக்கு விளங்கவில்லை. அவன் காத்திருக்காமல் செய்து காட்டினான். ஆனந்தன் சுருட்டினான். முழங்காலுக்கு மேல் சுருட்டப்பட்டது. கிரேவல் சிறுகற்களை சிமெண்ற் தரையெங்கும் பரப்பினான். முழங்காலில் நடக்குமாறு பணித்தான். கற்கள் மேல் எப்படி நடப்பது.? தயங்கினான். கதவுக்குப் போடும் பெரிய குறுக்குத் தடி சிப்பாயின் கையில் இருந்தது. அந்தத் தடி விளையாடியது. கற்கள் மேல் முழங்காலில் நடந்தான். கற்கள் குத்தின. அவனால் நடக்கமுடியவில்லை. கைகளை நிலத்தில் ஊன்றினான். கைகளில் அடிவிழுந்தது. நடந்தான். முழங்கால் தோல் கிழிந்து இரத்தம் கசிந்தது. பின்னால் நின்று அடித்தார்கள். அவனால் மேற்கொண்டு நடக்கமுடியாதிருந்தது. ஒரு சிப்பாய் ஆனந்தனின் கையினைப் பற்றி வேகமாக இழுத்தான். சிமென்ற் தரையில் இரத்தம் கோடு வரைந்தது. கற்களும் சிவந்து அழுதன. சிப்பாய்கள் பார்த்துச் சிரித்தார்கள்.

ஒரு சிப்பாய் திறப்பை எடுக்கப் பாவித்த மேசைமேல் ஏறும்படி கூறினான். ஆனந்தன் சொன்னபடி செய்தான். வளையினைப் பிடிக்கும்படி கூறினான். வளையில் பிடித்தான். சிப்பாய் சட்டென மேசையை அரக்கிவிட்டான். ஆனந்தன் வளையில் தொங்கிக் கொண்டிருந்தான். கூரிய கற்களைக் கீழே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டார்கள். அதனைக் கண்டு கொண்டான். எவ்வளவு நேரம் இப்படித் தொங்கிக் கொண்டிருக்கலாம். கைகள் வலித்தன. கைகளை விட்டால் அவ்வளவுதான். கற்களில் விழுந்து கைகால்களில் அடிபட்டு உடைவுகள் ஏற்படும். என்ன செய்வது? மெதுவாகக் கீழே பார்த்தான். சிறிய இடைவெளி தெரிந்தது. உடலை ஊஞ்சல் ஆடுவதுபோல் அசைத்தான். கைப்பிடி வலுவிழந்து வழுக்கியது. கற்கள் இல்லாத இடைவெளியில் வீழ்ந்தான். அப்படியே மயங்கியது போல் கிடந்தான்.

அறையினுள் இழுத்தார்கள். புத்தம்புதுப் புத்தகங்கள் சிதறிக்கிடந்தன. அவன் பாடவாரியாகவும், வகுப்பு வாரியாகவும் பிரித்து அடுக்கியிருந்தான். எல்லாம் சிதறிக் கிடந்தன. மெதுவாகச் சுருண்டு எழுந்தான். சிப்பாய் எழும்பி நிற்க உதவினான். ஆனந்தன் நிமிர்ந்து நின்றான். சிப்பாய்கள் சுற்றி நின்றார்கள். கப்ரன் செனிவரத்ன முன்னால் நின்றான். ஆளுக்கொரு கேள்வி கேட்டார்கள். கேள்வி வரும் பக்கம் திரும்ப முயல்கையில் கப்ரனின் அறை கன்னத்தைப் பதம் பார்த்தது. உள்வாயில் இரத்தம் கசிந்து நாவில் பட்டு உவர்த்தது. சூழ்ந்து நின்றவர்களின் விளையாட்டு ஆனந்தனின் உடலைப் பதம்பார்த்தன. எங்கும் காயங்கள். உடல் தடித்துத் தழும்புகளாகப் புடைத்தன. நீலமும் சிவப்பும் கலந்த கலவையாக அவனது உடல் தெரிந்தது. மனிதனை இப்படியும் வதைப்பார்களா? காட்டு மிராண்டிகளா இவர்கள்?. கட்டிலிருந்து விடுபட்ட வேட்டை நாய்களாக உதறித்தள்ளினார்கள்.

றொபின்சன் குருசோ கப்பல் உடைந்து தீவில் தஞ்சமானான். அவனது கையில் ஒரு துப்பாக்கி இருந்தது. அந்தத் தீவைச் சுற்றிப் பார்த்து வந்தான். நரமாமிசம் உண்ணும் ஒரு மனிதக் கூட்டம் ஆடிப்பாடி சந்தோசிப்பதைப் பார்த்தான். அங்கே ஒரு மனிதனை வதைத்துக் கொண்டிருப்பதைக் கண்டான். அவனைக் கொன்று உண்பதற்காக இப்படிச் செய்கிறார்கள் என்று நம்பினான். துப்பாக்கியைப் பயன் படுத்தி அந்த மனிதனைக் காப்பாற்றினான். அவனுக்கு "பிறைடே என்று பெயரிட்டுத் தன்னோடு வைத்துக் கொண்டான். அந்தக் காட்டு மிராண்டி மனிதர்களுக்கும் இவர்களுக்கும் என்ன வித்தியாசம்.?

மணி நான்கிருக்கும். இராணுவ வாகனம் பாடசாலையினுள் நின்றதால் பயத்தில் யாரும் வரவில்லை. "யமுத?" கப்ரன் சத்தமிட்டான். ஆனந்தனைக் கைத்தாங்கலில் இழுத்து வந்தார்கள். "அடோவ் நகின்ட....அடேய் ஏறுடா" என்றார்கள். ஆனந்தனுக்கு என்ன நடக்கிறதென்ற நினைவே இல்லை. அவன் மயங்கிக் கிடந்தான். அவனை இழுத்து ஜீப்பினுள் போட்டார்கள். எல்லோரும் ஏறிக்கொண்டார்கள். ஜீப் வந்த வழியே சென்றது. ஆனந்தனை வாகனத்தில் இருந்து இழுத்து காவல் அறையினுள் போட்டார்கள். கதவினைப் பூட்டிவிட்டுச் சென்றுவிட்டார்கள். ஆனந்தன் அப்படியே சுயநினைவிழந்து கனவினில் மிதந்தான். "மேரி..." ஆழமான கிணற்றுக்குள் இருந்து வரும் ஒலியினைப் போல் வாய் மட்டும் முணுமுணுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

"இன்ரவியு' முடிந்து அவன் எதிர்பார்த்த ஆசிரிய நியமனமும் கிடைத்து விட்டது. அவன் பிறந்து வளர்ந்த சொந்த ஊரிலேயே கடமையாற்றச் சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. மேரிக்கு எப்படி அறிவிப்பது. அவளுக்கு எழுதினால் அவளது பெற்றோர் தன்னைத் தவறாக எடைபோட்டு விட்டால்... மயூரி மூலம் தெரியப் படுத்தினான். ஒருநாள் டேவிட் ஆனந்தனைத் தேடி அவன் வீட்டுக்கே வந்து விட்டார். அவர்தான் மெதுவாக ஆனந்தனின் விசயத்தை தாயிடம் உடைத்தார். அவனது வாழ்க்கையைப் பற்றி அம்மாவிடம் சொன்னபோது யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. சமயத்தைப் பற்றி அவனது பெற்றோர் அலட்டிக் கொள்ளவில்லை. "மே மாதம்' செய்யலாம் என்ற அனுமதியும் கிடைத்து விட்டது. சந்தோசம் தாண்டவமாடியது.

சித்திரை விடுமுறையில் கொழும்பு செல்லவேண்டும். ஒழுங்குகளைக் கவனிக்க வேண்டும். வழக்கம்போல் திடீர் அதிரடி கொடுக்க மயூரி திட்மிட்டாள். ஸ்ரனிஸ்லாஸ் ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார். "இம்முறை போனால் ஒரு கிழமைக்காவது நிற்க வேண்டும்.'' தீர்மானித்தார்கள். சித்திரை விடுமுறைக்கு வரும்படி செபஸ்தியார் கடிதம் எழுதியிருந்தார். வரும்போது அறிவித்து விட்டு வரவேண்டும் என்று அன்புக்கட்டளையும் இட்டிருந்தார். "அப்பா! அறிவித்து விட்டுப் போனால் சுவையாக இருக்காது. சொல்லாமல் போய் இறங்கவேணும். அதுதான் நல்லது''. மயூரி துள்ளிக் குதித்தவாறு சொன்னாள். "சரி உன்விருப்பம். முதலில் ஆனந்தனுக்குச் சொன்னாயா? அதச்செய்.'' கட்டளை பிறப்பித்து விட்டு வெளியில் போக ஆயத்தமானார்.

"நாளை இரவு புறப்படவேணும். பெரியண்ணா சீற் புக்பண்ணிப் போட்டார். போனகிழமையே சொல்லிப் போட்டன். ஆனந்தனண்ணன் இப்ப வருவார். நீங்க ஆயத்தமாக இருந்தால் சரி''. மயூரி சொல்லிக் கொண்டே போவதைக் கவனித்தார். இவள் என்னமாதிரி திட்டமிடுகிறாள். தாய் இருந்தால் எவ்வளவு சந்தோசப்படுவாள். தனது மனைவியை நினைத்துக் கொண்டார். மரியநாயகி அற்புதமான பெண். டேவிட் முற்பிறப்பில் செய்த புண்ணியம்தான் மரியநாயகி அவரது மனைவியாக வந்து வாய்த்தவள். அது தற்செயலாக நடந்த சம்பவம். அப்போது டேவிட் அழகான வாலிபன். திருகோணமலை கடற்படைத்தளத்தில் நல்ல உத்தியோகத்தில் இருந்தார். தனிக்கட்டையான அவருக்கு கடுமையான காய்ச்சல் தொற்றிக் கொண்டது. மரியநாயகியின் வீட்டில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்திருந்தார். காய்ச்சல் அவரை வாட்டியெடுத்தது.

இரண்டு நாளாக வெளியில் வரவே இல்லை. அவருடைய ஊசாட்டத்தைக் காணவே இல்லை. அறையில் அவரது முனகல் ஒலி கேட்டு கதவைத் திறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தாள். டேவிட் கீழே கிடந்தார். உதவிக்கு வீட்டில் யாருமே இல்லை. ஆபத்துக்குப் பாவம் இல்லை. பாட்டியிடம் சொன்னாள். "நாயகி நான் வீட்டைப் பார்த்துக் கொள்ளுறன். நீ அந்தப் பொடியனை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போ. மருந்தெடுத்து கொண்டு வா. பாட்டி தைரியத்தைக் கொடுத்தார். ரக்சியைக் கூப்பிட்டாள். ரக்சிக்காரரின் உதவியோடு டேவிட்டை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றாள்.

அவரைப் பரிசோதித்த டாக்டர் வாட்டில் அனுமதிக்கும்படி கூறிவிட்டார். வேறு வழியில்லை. ஆஸ்பத்திரி வாட்டில் அனுமதித்து விட்டு வீட்டுக்கு வந்தாள். வேண்டிய பொருட்களைக் கொண்டுபோய் கொடுத்தாள். இரண்டு நாட்களாக பேச்சுமூச்சில்லாது கிடந்தார். மூன்றாம் நாள்தான் அவருக்குச் சுயநினைவு வந்தது. "நான் எப்படி ஆஸ்பத்திரிக்கு வந்தேன்". யோசித்தவண்ணம் இருந்தார். பக்கத்துக் கட்டிலில் இருந்தவரிடம் கதை கொடுத்தார். அவர்மூலம் மரியநாயகி செய்யும் உதவிகளைத் தெரிந்து கொண்டார். இரண்டு நாட்களாக நீர்ப்பதார்த்த உணவுதான் வழங்கப்பட்டது. மூன்றாம் நாள் மெல்லிய உணவு கொடுக்கலாம் என்று டாக்டர் கூறினார். இடியப்பம் அவித்துக் கட்டிக் கொண்டு வந்தாள். அவளைப் பார்த்ததும் அவரது கண்கள் கலங்கின. ஒரு கன்னிப்பெண் முன்பின் தெரியாத ஒருவருக்கு இப்படி உதவுவதென்பது பூர்வ ஜென்மத்துப் புண்ணியம் என்பதை உணர்ந்து கொண்டார்.

உடல் நலமாகிவிட்டது. வீட்டுக்குப் போகலாம் என டாக்டர் கூறினார். புறப்படத் தயாரானார். மரியநாயகி வந்தாள். அப்போதெல்லாம் ஆட்டோ இல்லை. டாக்சிதான். டாக்சியில் வீடு வந்து சேர்ந்தார்கள். பாட்டி அன்போடு நலம் விசாரித்தார். பாட்டியின் பென்சன் பணத்தில் இரு ஜீவன்களும் வாழ்ந்தனர். மேலதிக செலவுகளை வாடகைப் பணம் ஈடு செய்தது. டேவிட் மரியாதையான வாலிபன். அவருக்கென்று திருகோணமலையில் யாருமில்லை. பாட்டியின் விருப்போடும், ஆசிர்வாதத்தோடும் திருமணம் நடந்தேறியது. யாழ்ப்பாணத்தில் அக்கா இருந்தார். விடுமுறையில் மரியநாயகியையும் அழைத்துக்கொண்டு யாழ்ப்பாணம் சென்றார். அக்காவுக்கும் மரியநாயகியைப் பிடித்துக் கொண்டது. அக்காவின் வாக்குப்படி மாகிரட்டை செபஸ்தியாருக்குத் திருமணம் செய்து வைத்தார். செபஸ்தியார் கொழும்பில் மாநகரசபையில் சுப்பவைசராகக் கடமையாற்றினார்.

செபஸ்தியார் கொழும்பில் வீடு எடுத்திருந்தார். தம்பதியினரைக் கொழும்புக்கு அழைத்துச் சென்று அவர்களது வீட்டில் விட்டார். அங்கு ஒருநாள் தங்கியதும் கிளம்பிவிட்டார். அந்தப்பக்கம் செல்லவே இல்லை. அவரது மனதில் படமாக ஓடியது. அவரை அறியாமலேயே பெருமூச்சுப் பறந்தது. தொட்டகுறை விட்டகுறை என்பார்களே, அதனை நினைந்து கொண்டார். மயூரியையும், மேரியையும் எண்ணிக்கொண்டார். மேரியின்ர கலியாணத்தை முடித்தவுடன் மயூரியையும் கரைசேர்த்து விட்டால் பெரிய நிம்மதி. அவரது உள்ளம் அமைதிகொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தன் வந்தான். கொழும்புக்குப் போவது பற்றிக் கூறினாள். அவனுக்கு உள்ளத்தில் குதுகலம். "ஏன் போகவேணும்".? சீண்டிப்பார்த்தான். "அண்ணா என்ன விளையாட்டு விடுறீங்க. நான் வாறதாக அண்ணிக்கு அறிவிச்சுப் போட்டன்". சிணுங்கினாள். " ஏன் அறிவிச்சிங்க.? அறிவிக்காமல் போவதுதானே நமது திட்டம். ச்சா... கெடுத்துப் போட்டிங்க" அவன் குழம்பினான். "யாமிருக்கப் பயமேன். அதற்கும் ஐடியா வைச்சிருக்கன். பயம் வேண்டாம். நாளை மலை புறப்படுவோம். சரியா? இருக்கைகள் பதிந்தாகி விட்டன". படபடவெனக் கொட்டித்தள்ளினாள். "மயூரி எனக்கொரு சந்தேகம். கேட்கலாமா? அவளை நேராகப் பார்த்துக் கேட்டான். "என்ன சந்தேகம்? சொல்லுங்க". தேநீரைக் கொடுத்தபடி கேட்டாள். தேநீரைக் குடித்தபடியே சொன்னான்.

அவள் இடுப்பில் கைகளை வைத்தபடி நின்றாள். "எப்ப மயூரியின் திருமணம்".? அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "என்னண்ணா....புதிய ஞானம் பிறந்து விட்டதா? அண்ணியின் கலியாணம் முடிந்ததும் அடுத்தது எனக்குத்தான். நீங்க அண்ணியோட நின்றுதான் நடத்தி வைக்கவேணும். சரியா"? சிரிப்போடு கலகலத்தாள். "சரிசரி....அப்பா எங்கே..?" வினவினான். "பக்கத்து வீட்டுக்குப் போயிருக்கார். இப்ப வந்திருவார்". படலை திறபடும் சத்தம் கேட்டது. "அதோ அப்பா வாறார்". டேவிட் வந்து கொண்டிருந்தார். ஆனந்தனைக் கண்டதும் சந்தோசமானார். "ஆனந்தன் கொழும்புக்கு எப்போது போவம்? மயூரி நாளைக்குப் போகணும் என்று சொல்லுறாள். என்ன செய்வம்".? சிரிப்போடு கேட்டார். "நீங்க என்ன நினைக்கிறிங்களோ அதனைச் செய்வோம்". அப்படியே டேவிட் பக்கம் திருப்பி விட்டான்.

"சரி மயூரி சொன்னபடி செய்வம். என்ன"? சொல்லிவிட்டு அவனைப் பார்த்தார். அவன் தலையை ஆட்டினான். அன்றையத் தினசரிகளைப் புரட்டினான். சென்றவாரச் சிந்தாமணி கண்ணில் பட்டது. அதனை எடுத்துப் பிரித்தான். கவிதை கண்ணில் பூத்தது. பலமுறை படித்தான். அவனது கவிதை அழகிய ஓவியத்தோடு முதன்முதல் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. படித்தபோது புளகாங்கிதம் அடைந்தான். அவனது உள்ளம் சிறகடித்துப் பறந்தது. "மயூரி இஞ்ச கொஞ்சம் வாங்க. ஒரு கவிதை சிந்தாமணியில் பிரசுர மாகியுள்ளது. படித்துப் பார்த்தீங்களா?" அழைத்தான். மயூரி ஓடோடி வந்தாள். அவளிடம் பத்திரிகையைக் கொடுத்தான். "நான் இதனைக் கவனிக்கவில்லை அண்ணா". பத்திரிகையை வாங்கிக் கவிதையைப் படித்தாள்.

அவள் விழிகள் அகன்று விரிந்தன. "உலகில் பிறவி ஏனெடுத்தேன்..." படித்து முடித்தாள். அற்புதமாக இருக்கிறது? அண்ணா யாரிந்தக் கவிஞர்? உங்களுக்குத் தெரியுமா? உலக தத்துவத்தைச் சிந்தியுள்ளார்".? ருசித்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னாள். அவன் புன்னகைத்தான். நாணம் அவன் முகத்தில் இழையோடியது. "இதோ வருகிறேன்'' என்று வெளியே விரைந்தான். "இந்த அண்ணனுக்கு என்ன வந்திற்று'' தோள்பட்டையை அசைத்தவண்ணம் தனது வேலையில் ஆழ்ந்தாள். சற்று நேரத்தில் களைத்து வந்தான். அவனது கையில் பெரிய ஐஸ்கிறீம் கப் இருந்தது. "மயூரி இந்தாங்க ..'' கொடுத்தான். அவள் வியப்போடு வாங்கினாள். "முதலில் ஐஸ்கிறிம். பிறகுதான் கதை. சாப்பிடுங்க''. கரண்டியில் எடுத்துக் கொடுத்தான். "அண்ணா இப்ப சாப்பாடு ரெடி. சாப்பிட்டுவிட்டு ஐஸ்கிறீம் சாப்பிடுவோமே. என்ன அவசரம்''. சாப்பாட்டுக்குப் பிறகும் ஐஸ்கிறீம் சாப்பிடலாம். முதலில் ஒரு கரண்டி ஐஸ்கிறீமைச் சாப்பிடுங்க''. நீட்டினான். அவள் வாங்கிக் கொண்டாள்.

"கவிதை நன்றாக இருக்கிறதா? அதைச் சொல்லுங்க''. கேட்டான். "அதுதான் முதலில் சொல்லிவிட்டேனே. மிகவும் நல்லது. அண்ணா இது உங்க கவிதைதானே. எனக்குத் தெரியும்.'' முகம் மலர்ந்து பாராட்டினாள். "முதன்முதல் எனது கவிதையை ரசித்துப்பாராட்டிய எனது தங்கைக்கு ஐஸ்கிறீம் கொடுத்தது சரியா? தப்பா? சொல்லுங்க''. அவளைப் பார்த்தபடியே நின்றான். "நான் மடச்சி. முதலிலேயே படித்திருக்க வேண்டும். பாராட்டியிருக்க வேண்டும். பரவாயில்லை. எனது அண்ணன் ஒரு கவிஞன் என்பதை எண்ணும்போது சந்தோசமாகவும் பெருமையாகவும் இருக்கிறது. அண்ணா வாழ்த்துக்கள்.'' அகம்மகிழச் சொன்னாள். "உண்மையாக எனது கவிதைகளை ரசித்துப் படித்து பொருத்தமான படத்தையும் சேர்த்துப் பிரசுரித்த சிந்தாமணி ஆசிரியர் திரு. எஸ்.டி.சிவநாயகம் அவர்கள்தான் போற்றப் படவேண்டியவர்''. நன்றியுணர்வோடு கூறினான்.

"அண்ணா சாப்பிடுவோம். பெரியண்ணாவும் அதோ வாறார். அப்பா! வாங்க...சாப்பிடுவோம். பெரியண்ணா! கைகாலைக் கழுவிற்று வாங்க... சாப்பாடு ரெடி''. ஒழுங்குகளைச் செய்து கொண்டே அழைத்தாள். சாப்பாட்டு மேசையில் ஐஸ்கிறீமும் இருந்தது. சாப்பாட்டைப் பரிமாறினாள். ஸ்ரனிஸ் புன்னகைத்தவாறே "என்ன விஷேசம்? எப்ப கொழும்புப் பயணம்''? உரையாடினார். "ஆனந்தன் சொல்ல மறந்திட்டன். உங்கட கவிதையை ஞாயிறு சிந்தாமணியில் படித்தேன். மிகவும் ருசித்தது. அருமையானது''. ஸ்ரனிஸ் கூறிக்கொண்டே உணவருந்தினார். "அண்ணா! ஆனந்தனண்ணாவின்ர கவிதையென்று எப்படித் தெரியும்? அவர் புனைபெயரில்தானே எழுதியிருக்கிறார்''. மயூரி வினாவினாள். "அஃவர் இந்தக் கவிதையரங்குகளில் பங்குபற்றுபவர்தானே. பலதடவைகளில் அவரது கவிதைகளைக் கேட்டிருக்கிறன். அவர்ர கவிதை வந்தபடியால்தான் சிந்தாமணியை வாங்கி வந்தனான். உனக்குச் சொல்ல மறந்திறட்டன். அதுக்காக கறிவைக்க மறக்காதே''. சிரித்தவாறே ஸ்ரனிஸ் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கு இதெல்லாம் விளங்காது. கவிதை எழுதுவதற்கு மொழியாற்றலும். கற்பனா சக்தியும் வேண்டும். ஆனந்தனுக்கு அது இருக்கு". டேவிட் உள்ளே புகுந்து வந்தார். ஆனந்தனுக்கு நாணமாக இருந்தது. தலையைக் கவிழ்ந்து கொண்டான். உணவு முடிந்ததும் ஐஸ்கிறீம் உண்டார்கள். மயூரி மிகுதி வேலைகளை முடிக்க அடுக்களையில் நுழைந்தாள். மண்டபத்தில் சாய்மனைக் கட்டிலில் டேவிட் சாய்ந்திருந்தார். ஸ்ரனிஸும் பக்கத்தில் இருந்தார். "ஸ்ரனிஸ் ஒரு விசயம் சொல்லப்போறன். கோவிக்காமல் கேட்க வேணும்." ஆனந்தன் தொடங்கினான். "பீற்றசனைத் தெரியுமா உங்களுக்கு"? வினாவோடு தொடங்கினான். "எந்தப் பீற்றசன்."? என்னோடு ஆசிரியராக இருப்பவர். நல்ல பொடியன். நமது யோசப் மாஸ்ரரின் இளைய மகன். அவன் மயூரியைக் காதலிக்கிறான். மயூரிக்கும் நல்ல விருப்பம். இது நல்ல இடம். நமது தங்கச்சிக்குப் பொருத்தமான இடம். செய்து வைப்பது நமது கடமை. நல்ல முடிவாக எடுங்க". விளக்கமாகக் கூறினான்.

"எனக்கும் சாடையாகத் தெரியும். பீற்றசன் நல்ல கால்பந்தாட்டவீரன். எங்கட ஸ்போர்ட்ஸ் கிளப்பில் இருக்கிறான். நல்ல பொடியனும்கூட. எனக்கு நல்ல விருப்பம். மயூரியின் விருப்பத்தை அறியத்தான் காத்திருந்தனான். நீங்க சொன்னதும் சந்தோசம். அப்பா! உங்கட விருப்பம் எப்படி"? ஸ்ரனிஸ் டேவிட்டிடம் கேட்டார். அவரும் யோசித்தார். "எனக்கு அந்தக் குடும்பத்தை நல்லாவே தெரியும். யோசப் மாஸ்ரர் தங்கமான மனிசன். அவங்கட சம்மதத்த அறியவேணும்". தனது மனதைக் காட்டினார். "ஐயா எனக்கு உங்கட சம்மதம் தெரிஞ்சு போச்சு. இனி மிச்சமெல்லாம் நான் பார்த்துக் கொள்வன். மே அல்லது ஜூன் மாதம் திகதியக் குறிப்பிட ஆயத்தப் படுத்துங்க. மயூரியின் வாழ்க்கை நல்லபடி நடக்கும். நமது கனவு மெய்ப்படவேண்டும்." அதற்கு அந்த இறைவனின் அருளும் ஆசியும் கிடைக்கும்". ஆனந்தன் உறுதியளித்தான்.

மயூரியும் வந்து கலந்து கொண்டாள். " மயூரி! இப்ப இரண்டு மணியாகி விட்டது. நான் மூன்று மணிக்கு வீட்ட போகவேணும். நாளைக்குப் பின்னேரம் இஞ்ச வாறன். இங்கிருந்து ஸ்ரேசனுக்குப் புறப்படலாம். என்ன"? ஆனந்தன் நேரத்தைப் பார்த்துவிட்டுச் சொன்னான். "அண்ணா நிழல் சாய்ந்ததும் போகலாம்தானே? சரியான வெயிலாக இருக்கிறது"மயூரி மெல்லச் சொன்னாள். "போகலாம்தான். ஆனால் இடையில் கொஞ்சம் வேலையிருக்கு. அது முக்கியமானது. நான் இப்பவே கிளம்பினால்தான் முடித்துக் கொண்டு நேரத்துக்கு வீட்டுக்குப் போகலாம்". கூறிக்கொண்டு புறப்பட்டான்.

## 15

மயூரி, அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள். படலைவரை சென்று வழியனுப்பி வைத்தாள். அப்படியே யோசப் மாஸ்ரர் வீட்டுக்குப் போனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தனுக்கு அந்த வீட்டில் நல்ல மதிப்பிருந்தது. பீற்றசன் ஆனந்தனின் வீட்டில் தங்கியிருந்துதான் பாடசாலைக்குப் போவான். இருவரும் ஒரே அறையில்தான் இருந்தார்கள். அதனால் இருவரும் நல்ல நண்பர்களாக இருந்தனர். மயூரியைப் பற்றி அடிக்கடி பீற்றசன் ஆனந்தனோடு அளவளாவி இருக்கிறான். உதவி செய்து தரும்படி கூறியும் இருக்கிறான். பீற்றசன் சனி,ஞாயிறு விடுமுறைகளில் தனது வீட்டுக்கு வந்து விடுவான். ஆனந்தன் தனது கிராமத்திலேயே இருப்பவன். திருகோணமலை நகருக்கு வந்தால் டேவிட் வீட்டிலும், பீற்றசன் வீட்டிலும் நிற்பான். அவன் இரு வீட்டாருக்கும் செல்லப்பிள்ளையாக இருப்பவன்.

ஆனந்தன் படலையில் நின்றவாறே பீற்றசனை அழைத்தான். "டேய்...உன்னை யார்டா படலையில் நின்று சத்தம்போடச் சொன்னது? நேரே வருவதுதானே. இது நமது வீடுடா". ஏசியவாறே பிற்றசன் வந்து படலையைத் திறந்தான். "நீ படலையைப் பூட்டி வைத்தால் நான் எப்படி உள்ளே வருவது? சொல். எங்கட கிராமப்புறம்போல் இங்கு இல்லை. இடத்துக்கிடம் அப்படித்தான் இருக்கவேண்டும்." ஆனந்தன் கூறிக்கொண்டே பின்னால் போனான். யோசப் மாஸ்ரர் வந்து நலம் விசாரித்தார். பின்புறம் உள்ள தோட்டத்துக்குள் சென்றார். தோட்டத்தை எட்டிப் பார்த்தான். அவர் அழைத்தார். பீற்றசனும் கூடவே சென்றான். எத்தனை வகைப் பயிர்கள். முக்கனித் தோட்டம் அது. பலவகையான மரக்கறி வகைகள். பூஞ்செடிகள். அவர்களது வீடு நாப்பது பேர்ச்சர்ஸ் நிலப்பரப்புக்குள் இருந்தது. திட்டமிட்டு வீட்டினை அமைத்திருந்தார். சிறிய மாட்டுத் தொழுவமும் இருந்தது.

தங்களுக்குத் தேவையான பாலை இரண்டு பசுக்கள் கொடுத்தன. பயிர்களுக்குத் தேவையான பசளையைப் பக்குவமாகத் தயாரிக்க வசதிசெய்திருந்தார். அவன் பிரமித்துப் போனான். கிளிசறியாத் தடிகளை ஊன்றிப் பழைய சைக்கிள் வளையங்களை திணித்து இறுக்கியிருந்தார். அவை கூடுகளாகக் காட்சியளித்தன. அதனுள் குப்பையையும், சாணத்தையும் போட்டுக் கிளறி விடுவார். பொலித்தின் தவிர்ந்த ஏனைய கழிவுகள் இந்தக் கூடுகளில் இடப்படும். அவை கூட்டுப்பசளையாகும். கூட்டின் அடிப்பகுதியில் சிறு வாயில் இருக்கும். அடிப்பகுதியில் இருந்து கூட்டுப் பசளையை எடுத்து பயிர்களுக்கு இடுவார். நிலத்தைச் சிறு மேடைகளாகப் பிரித்து பயிரிட்டிருந்தார். ஒரு மேடையில் கத்தரியிருக்கும் இன்னொன்றில் மிளகாய், மற்றதில் வெண்டி. தக்காளி, பந்தல்களில் புடொல், பாகல்காய்கள் தொங்கின. வாழைகள் குலைதள்ளித் தலைகுனிந்து நின்றன. இளம் தென்னைகள் குலைகளோடு ஆடின. "பென்சன் எடுக்கும் வரை ஆசிரியர். இப்போது முழுநேர விவசாயி. உடலுக்கும், உள்ளத்துக்கும் உகந்தது. இதில் ஊறினால் உற்சாகம் பிறக்கும்". சிரித்தவாறே மாஸ்ரர் கூறினார்.

பல அரசாங்க உயரதிகாரிகள் பென்சனுக்கு மனுக்கொடுத்ததும் ஏங்கிவிடுகிறார்கள். உயர்இரத்த அழுத்தத்துக்கு ஆளாகி நோய்வாய்ப் படுகிறார்கள். பென்சனுக்குப் பின்னர்தான் ஒரு மனிதனுக்குக் கடமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருக்கின்றன என்பதை மறந்து விடுகின்றனர். சந்தோசமாக இருக்க வேண்டிய காலத்தில் சஞ்சலப் படுகிறார்கள். யோசப் மாஸ்ரர் விதிவிலக்கானவர். அவர் எப்போதும் சுறுசுறுப்பாகவே இருக்கிறார். அதிகாலையில் படிப்பு. அதன்பின் ஒரு பொடி நடை. பின்னர் தோட்டத்தில் வேலை. குளிப்பு. உணவு. சந்தைக்குப் போதல். பத்திரிகை வாசித்தல். சமையலுக்கு மனைவிக்கு உதவுதல். உணவு. சற்று ஓய்வு மாலைமுழுதும் தோட்டத்தில் பயிர்களோடும், பசுக்களோடும். பேரக்குழந்தைகளோடும் விளையாடி இன்புறல், நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று நலம் விசாரித்தல் என்று பெரிய கால அட்டவணைப்படி நடப்பவர். என்றும் இளைஞனாகப் பவனி வருபவர். அவரை எண்ணி வியந்தான்.

பீற்றசன் அப்பாவோடு பழகி அவரையே பின்பற்றுபவன். அவன் மாலையில் விளையாட்டுத் திடலில் நிற்பான். விடுமுறை தவிர்ந்த ஏனைய நாட்களில் வீட்டில் நிற்பதை விரும்பாதவர். தோட்டத்தைப் பார்த்துவிட்டு வந்தார்கள். பீற்றசனின் அம்மா தேநீர் கொண்டு வந்தார். "ஆனந்தன் இரவுக்கு நின்று போங்களன்." அம்மா அன்பாக வேண்டுகோள் கொடுத்தார். "இல்லையம்மா. நான் அவசரமாக வந்தனான். இப்பவே போகவேணும். நிறைய வேலைகள் கிடக்கு. இன்னொரு நாளைக்கு வாறன்". கூறிச்சமாளித்தான். "பீற்றசன் உன்ர விசயமாக நேரடியாக மயூரி வீட்டில் தெரியப் படத்திப்போட்டன். இனி உன்ர அப்பா அம்மாவின் சம்மதம் பெறுவது உனது கடமை. ஆனால் நான் அவர்களோடு கதைத்தது மயூரிக்குத் தெரியாது. இப்போது தெரியாது இருக்கட்டும். நாளை நாங்க கொழும்புக்குப் போறம். நீ ஸ்ரேசனுக்கு வாறாய். இதச்சொல்லத்தான் வந்தனான். எனக்கு நேரம் போகுது. நான் வரட்டா?" சொல்லிக் கொண்டு தோட்டத்துக்குள் சென்றான். "ஐயா! நான் வாறன்" அவரது பதிலுக்குக் காத்திராது புறப்பட்டான்.

"ஆனந்தன் எப்படி வந்தநீ."? பீற்றசன் கேட்டான். "காரா வைத்திருக்கிறன். கால்நடைதான்". "இரு..இரு.. நான் சைக்கிளை எடுத்திட்டு வாறன். வஸ் ஸ்ராண்டில விடுறன்." பீற்றர் சைக்கிளைத் தள்ளினான். ஆனந்தன் சைக்கிள் பாரில் இருந்து கொண்டான். வஸ்நிலையம் வரை வந்து வழியனுப்பி வைத்தான். வஸ் புறப்பட்டதும் பீற்றர்சன் வீடு திரும்பினான். வஸ் கண்டி வீதியால் சென்று நாலாம்கட்டைச் சந்தியில் இடப்பக்கமாகத் திரும்பி சீனாக்குடாவை நோக்கி விரைந்தது. பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் பெற்றோல் குதங்களை அமைத்தார்கள். பிரித்தானியரின் ஆட்சிக்குள் இருந்த நாடுகளில் இருந்து கூலிகளைத் தமது வேலைகளுக்குப் பயன்படுத்தினார்கள். சீனாவிலிருந்து வந்த கூலிகள் இந்த இடத்தில் வாடியடித்துச் செயற்பட்டார்கள். சீனர்கள் தங்கியிருந்த இடம் சீனக்குடா என இன்றைவரை அழைக்கப்படுகிறது. இந்தக் குதங்களின் மேல்தான் இரண்டாம் உலக யுத்தத்தின்போது யப்பானியர் குண்டு வீசித்தாக்கினர். அங்கிருந்த மக்கள் பலதிசைகளுக்கும் பரந்தோடினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இந்த எண்ணெய்க் குதங்களை இந்தியா குத்தகைக் கெடுத்துள்ளது. வஸ் விமானத்தளத்தைத் தாண்டி கிண்ணியாத் துறையை அடைந்தது. கிண்ணியாத் துறையை படகு மூலம் கடந்து தனது சைக்கிளை எடுத்துக் கடற்கரை வீதியால் ஆலங்கேணிக் கிராமத்தை அடையும்போது இருட்டிவிட்டது. ஆனால் நிலவு ஒளியைப் பரப்பி வெளிச்சத்தைக் கொடுத்தது. தனது வேலைகளை முடித்தபின் குளித்து வந்தான். அப்படியே கோயிலுக்குச் சென்று தனது கனவுகளை கணேசப் பெருமானிடம் ஒப்புவித்தான். என்னவோ தெரியாது. இறைவன் சந்நிதியில் பிரார்த்தனையில் ஈடுபட்டபின் உள்ளத்தில் ஒரு தெம்பும், உற்சாகமும் பிறந்து விடுகிறது. அதிலே ஒரு நிம்மதியை மனிதர்கள் அனுபவிக்கிறார்கள். துன்பங்களில் இருந்து விடுபட இறைவன் சந்நிதி சிறந்த இடமாகப்பட்டது.

வீடு வந்ததும் அம்மா உணவுக்கு அழைத்தார். வந்தான். அம்மா உணவுப் பொருட்களை ஒழுங்கு செய்த முறை அவனைப் பிரமிக்கச் செய்தது. சுற்றிவரப் பாய்விரித்திருந்தார். மத்தியில் சோற்றுப்பானை. சோற்றுப் பானை கழுவப்பட்டு திருநீறு மூன்றிடத்தில் பூசப்பட்டிருந்தது. சோற்றுப்பானையைச் சூழக் கறிவகைகள். தட்டுக்களில் சோறு பரிமாறப்பட்டுக் கறிவகைகள் குவிந்திருந்தன. நிலவில் வட்டமாக இருந்து சாப்பிடுவது எவ்வளவு சந்தோசம். அம்மா, அப்பா. தங்கை, தம்பிமார் புடைசூழ சாப்பிடுவதில் ஒரு சந்தோசம் இருக்கத்தான் செய்கிறது. தம்பிமாரின் தட்டில் கைபோட்டுத் திருடிச் சாப்பிடுவதும், அவர்கள் சத்தமிடுவதும் சொல்லிலடங்காச் சுகங்கள். கறிவகைகளோடு உண்டபின் இளமுறைத் தயிருடன், யானை வாழைப்பழமும் சேர்த்துப் பிசைந்து அம்மா தருவதுதான் தேவாமிர்தம். உணவோடு சேர்த்து கொழும்பு செல்லும் செய்தியை அம்மாவிடம் சொன்னான். அம்மா மூலம் அப்பாவின் அனுமதியும் கிடைத்தது. சந்தோசத்தோடு உறக்கம் ஆட்கொண்டது.

ஆனந்தன் அதிகாலையிலேயே விழித்துக் கொண்டான். ஆனந்தனின் வீட்டின் பின்புறம் பெரிய தோட்டம் இருந்தது. அப்பாவுக்கு உதவியாக நீரிறைத்தான். பயிர்களுக்குப் பாய்ச்சினான். அப்பா பால்கறந்து வந்தார். அம்மா தேநீர் தயாரித்ததும் அழைத்தார். குடித்தான். காலை உணவின்பின் பாடசாலைக்குச் சென்று ஒரு கண்ணோட்டம் விட்டான். விடுமுறை நாட்களிலும் பிள்ளைகள் படிப்பதற்கேற்ற ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தான். ஒவ்வொரு வெள்ளி மாலையும் கோயிலில் கூட்டுப் பிரார்த்தனை நடக்கும். ஏழு மணியிலிருந்து எட்டரை வரை பிள்ளைகள் வகுப்புக்களில் இருந்து படிக்க வேண்டும். இவ்வாறு ஒரு ஒழுங்கமைப்பை ஏற்படுத்தியிருந்தான். ஆசிரியர்கள் மேற்பார்வை ஒழுங்குகளைக் கவனித்தார்கள். கிராமம் எழுச்சியை நாடி நிமிரத் தொடங்கியது.

தான் கொழும்புக்குப் போகும் விசயத்தை தனது உயிர்நண்பன் தங்கராசாவிடம் மட்டுந்தான் பகிர்ந்து கொண்டான். இருவரும் தமது அந்தரங்கங்களைப் பகிர்ந்து கொள்வார்கள். அதிலே ஒரு சுகத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டார்கள். மூன்று மணிக்குப் புறப்பட்டால்தான் உரிய நேரத்துக்குச் செல்லலாம். வேண்டிய பொருட்களை எடுத்துக் கொண்டான். வீட்டில் விடைபெற்றுப் புறப்பட்டான் தங்கராசா கிண்ணியாத் துறையடிவரை வந்து வழியனுப்பிவைத்தார். சரியாக ஐந்து மணிக்கு மயூரியின் படலையைத் தட்டினான். மயூரி பயணத்துக்குரிய ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தாள். ஆனந்தனைக் கண்டதும் முகம் மலர்ந்தாள். டேவிட் உற்சாகத்தோடு உலாவந்தார். ஸ்ரனிஸ் தானும் ஸ்ரேசனுக்கு வருவதாகச் சொன்னார்.

இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. எது பொய்த்தாலும் இரவும் பகலும் பொய்ப்பதில்லை. சூரியனும் சந்திரனும் கிழக்கில் உதிப்பதை மாற்றவே இல்லை. மேற்கில் மறைவதையும் மறக்கவில்லை. உலகம் சுழன்று கொண்டுதான் இருக்கிறது. காலையும், மாலையும் வரத்தான் செய்கிறது. இந்த நியதி மாறாத தன்மையா? அல்லது ஒரு நாள் இவை யாவும் மாற்றம் அடையும் தன்மை கொண்டனவா? இவை புரியாத புதிர்கள்தான்.

வாடகைக் கார் "ரக்சி' வந்தது. பொதிகளை ஏற்றியதும் ஏறிக் கொண்டனர். "ரக்சி' விரைந்து சென்றது. ஸ்ரேசன் வந்ததும் இறங்கி உள்ளே சென்றார்கள். ஸ்ரனிஸ் ஏற்கனவே இருக்கைகளைப் பதிவு செய்து ரிக்கற்றையும் எடுத்திருந்தார். வண்டியில் ஏறிக்கொண்டார்கள். தங்களது உடைமைகளைப் பாதுகாப்பாக வைத்தனர். ஆனந்தனின் கண்கள் பீற்றசனைத் தேடின. அவன் வந்து கொண்டிருந்தான். ஆனந்தன் தன்னிருக்கையை விட்டு எழுந்தான். "அண்ணா! எங்கே போறீங்க. நேரமாகிறது. வாங்க..இருங்க.'' மயூரி குசுகுசுத்தாள். "வாறன் மயூரி. அதோ, என்ர பிறண்ட் வாறான்''. சொல்லிக் கொண்டு இறங்கினான். மயூரி எட்டிப் பார்த்தாள். அவள் எதிர்பார்க்கவில்லை. "ஐயையோ, பீற்றசன். எங்கட விசயம் உடையப்போகுதோ தெரியாது''. ஆமை எச்சரிக்கையோடு தலையை உள் இழுப்பதுபோல் தனது தலையை பெட்டிக்குள் இழுத்துக் கொண்டாள். அவள் உள்ளம் படபடத்தது.

"டேய் என்ன இவ்வளவு நேரம்? மயூரிக்குக் கேட்கக்கூடியதாக சத்தமிட்டுக் கதைத்தான். "காத்துக் காத்துக் கண்கள் பூத்துப் போச்சு. எவ்வளவு நேரம்? என்ன செய்தநீ''. ஸ்ரனிசைப் பார்த்து "ஸ்ரனிஸ்! இதுதான் என்ர பிறண்ட் பீற்றர்சன். அறிமுகம் செய்தான். "எனக்கு நல்லாவே தெரியுமே. எங்கட ஸ்போர்ஸ்ட் கிளப் மெம்பர். ஹாய்...பீற்றர்சன்... எப்படி நலமா''? .ஸ்ரனிஸ் கைலாகு கொடுத்து நலம் விசாரித்தான். பீற்றர்சன் புன்னகையோடு உரையாடினான். அவனது பார்வை மயூரியின் பக்கம் போனதை ஆனந்தன் கண்டு கொண்டான். மயூரிக்கு உதறல் எடுத்தது. கையும் களவுமாகப் பிடிபடப்போறேனோ? மனம் படபடத்தது. ஆனந்தன் டேவிட்டைப் பார்த்தான். ''ஐயா, இவர்தான் பீற்றர்சன். என்னோடு ஆசிரியராக இருக்கிறார்''. அறிமுகம் செய்து வைத்தான். டேவிட் புன்னகைத்தார். அவருக்குப் பீற்றர்சனைப் பிடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. "எப்படித் தம்பி நலம்."? ஒரு சம்பிரதாயத்துக்காகக் கேட்டார். "நல்லாயிருக்கிறன். நீங்க எப்படி நலமா?". பீற்றர்சன் பதிலளித்தான்.

"பீற்றர்சன் சைக்கிளிலா வந்தநீ.? போகும்போது ஸ்ரனிஸையும் கொண்டுபொய் விடு என்ன"? "அதுக்கென்ன. நீ சொன்னதத் தட்டியிருக்கிறேனா"? பதிலளித்தான். கதையோடு ஆனந்தன் பெட்டியில் ஏறி இருக்கையில் இருந்தான். தனது பொதியை கீழே இறக்கி எதையோ தேடினான். பின் மூடினான். "பீற்றர்சன் இதை ஒருக்கா மேலே வைத்துவிடு. வா உள்ளே". என்றன். பீற்றர்சனுக்குச் சங்கடமாக இருந்தது. வேறு வழியில்லை. ஏறி உதவினான். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி. "பீற்றர்சன், இதுதான் எங்கட தங்கச்சி. மயூரி. மயூரி! இது என்ர பிறன்ற் பீற்றர்சன்". அறிமுகம் செய்தான். மயூரிக்கு உயிர்போய் உயிர் வந்த உணர்வு. இந்த அண்ணனின் வேலையென்ன? அப்பா இருக்கிறார். கீழே அண்ணன் நிற்கிறார். பெரிய தர்ம சங்கடமாயிருந்தது.

"ஹலோ"! பீற்றர்சன் சொன்னான். "ஹாய்.." மயூரியின் வாயிலிருந்து மெதுவாகச் சொற்கள் உதிர்ந்தன. ஸ்ரனிஸ் தனக்குள் சிரித்துக் கொண்டார். "எப்ப இந்த வண்டி கிளம்பும். இந்தச் சிக்கலில் இருந்து காப்பாற்று. கடவுளே கெதியாக வண்டி போகவேணும்" இறைவனிடம் மன்றாடினாள். அவளது அப்பேதைய மனநிலையை அவள்தான் அறிவாள். இதுவரை அவர்களது இரகசியம் யாருக்கும் தெரியாது. அதேபோல் தெரிந்ததாக யாரும் காட்டிக் கொள்ளவும் இல்லை. ஒன்றும் தெரியாததுபோல் ஆனந்தன் நடித்துக் கொண்டிருந்தான். வண்டி புறப்படும் நேரத்தை முதல்மணி அறிவித்தது. நிம்மதிப் பெருமூச்சுப் பறக்க ஆயத்தமாகியது. "அப்பா. அண்ணாமுன் எப்படி அவரைப் பாரப்பது"? காதளவோடிய கண்கள் அல்லவா? கடைக்கண் அவளையறியாமலேயே பீற்றர்சனை அளந்தது. உரையாடியது. மனதுக்குள் ரசித்துக் கொண்டாள்.

இரண்டாவது மணியொலித்தது. தொடர்ந்து விசில் ஊதப்பட்டது. "அண்ணா! போய்வாறம்." கையசைத்த படியே மயூரி சொன்னாள். அவளின் வாயிலிருந்து வந்த சொற்கள் பொதுவாயிருந்தது. ஆனால் அதன் அர்தம் தனித்தனியானது. விளித்தது அண்ணனை. ஆனால் "போய்வாறம்" என்றது பீற்றர்சனுக்கும் சேர்த்து என்பதை அவன் உணராமல் இல்லை. அவனும் பொதுவாகக் கையசைத்தாலும் அவளுக்காகவே கையசைத்து வழியனுப்பினான். "டேய் திங்கள் வந்துவிடுவோம். ஸ்ரேசனுக்கு வா. சேர்ந்து பாடசாலைக்குப் போவோம்". அவர்களை விட்டு வண்டி ஓடி இருளில் மறைந்தது. ஆனால் ஸ்ரேசனில் நின்றவர்கள்தான் நிலத்தோடு ஓடிமறைவது போலிருந்தது. டேவிட் எல்லாவற்றையும் பார்த்து ரசித்துச் சிரித்தார். ஆனந்தனின் புத்திசாதுரியத்தை மனதார மெச்சினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

தம்பலகாமத்தில் தயிர் வாங்கிக் கொண்டார்கள். பிரயாணத்தின் களைப்பு ஆனந்தனில் தெரிந்தது. டேவிட் அருகில் மயூரி இருந்தாள். அவர்களுக்கு முன்னால் ஆனந்தன் இருந்தான். தூக்கம் கண்களில் குடிகொண்டது. சாடையாகக் கண்களை மூடி கனவு கண்டான். அதற்குள் கல்லோயா வந்து விட்டது. டேவிட் நல்ல உறக்கத்தில் இருந்தார். "அண்ணா..பீற்றர்சன்.. எப்படி? நல்லவாரா..''? திடீரென இரகசியமாகக் கேட்டாள். ஆனந்தனுக்கு உள்ளுக்குள் சிரிப்பு. அதனை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. "யாரையும் நல்லவர், கெட்டவர் என்று எப்படிச் சொல்லமுடியும்? பழகிப் பார்த்தால்தான் தெரியும். எனக்குத் தெரிந்தவரை அவன் நல்லவன்தான்.'' ஆனந்தன் பிடிபடாமல் கதையை வளர்த்தான்.

"பீற்றர்சனைத் தெரியுமா''? ஆனந்தன் கேட்டான். சமாளித்தாள். "நீங்கதானே அறிமுகம் செய்திங்க. அதுக்குள்ள மறந்தாச்சா? என்னண்ணா நீங்க''. அவளின் சமார்த்தியத்தை மெச்சினான். "எனக்கு இப்ப மறதி கொஞ்சம் கூடிப்போச்சு. சரி...சரி..அவன்ர பேச்சு எதற்கு இப்ப? உங்க அண்ணியப்பற்றிக் கதைப்பமா"? ஆனந்தன் கேட்டான். "அங்குதான் போறோமே. போய் நல்லாக் கதைப்பம்." சிணுங்கினாள். மயூரியிடமிருந்து உண்மையை எப்படி வரவழைப்பது? யோசித்தான். " அண்ணா பீற்றர்சன் சரியான முன்கோபி என்ன?'' சட்டென்று கூறினாள். "எப்படித் தெரியும்"? ஆனந்தன் சடுதியாகக் குறுக்காடினான். "மாட்டிக்கொண்டேனே''? மனதில் திட்டிக்கொண்டு, நாக்கைக் கடித்துக் கொண்டாள். விழிகளை மேலே உயர்த்தி "இதுகூடத் தெரியாதா?''. எனச் சொன்னாள். "எப்படி''? ஆனந்தன் புரியாததுபோல் கேட்டான்.

"ஒரு ஆளைப்பார்த்த உடனேயே அவரது குணங்களை முகம் காட்டிவிடும் என்று அப்பா அடிக்கடி கூறுவார். அதுதான் சொன்னேன்''. ஒருவாறு நம்பும்படி கூறினாள். "ஒ...அப்படியா''? உதட்டைக் குவித்து நம்பியதாக நடித்தான். "மயூரி இரு..இரு..உன் வாயாலேயே சொல்ல வைக்கிறேன்.'' தனக்குள் கூறிக்கொண்டான்.

சற்று அமைதியாக இருந்தான். "மயூரி பீற்றர்சனும் கொழும்புக்கு வரட்டா என்று கேட்டான். நான்தான் வேண்டாமென்று சொல்லிப் போட்டன்.'' ஒரு அப்பட்டமான பொய்யைச் சொன்னான். "நாங்க போற விசயமெல்லாம் முடிஞ்ச பிறகு கூட்டிப் போவம். என்ன?'' அவனே தொடர்ந்தான். மயூரி மௌனமானாள். "என்ன ஒன்றும் பேசவில்ல. கோபமா''? ஆனந்தன் கூறிமுடிக்குமுன் "சீ..சீ... அப்படி ஒன்றுமில்ல. வந்திருந்தால் உங்களுக்குப் பேச்சுத்துணையாக இருந்திருக்கும். அதுதான் யோசிச்சன்''. மயூரி பிடிபடாமல் தப்பிக் கொள்வதை அவதானித்தான். "அவன் வந்தால் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி மேரியோடு கதைப்பது. அவன் பாவம். தனிய இருக்கவேண்டியதுதான். பிறகு நீங்கதான் கூட்டிக்கொண்டு திரியவேணும்". அவளது முகபாவனையைப் பார்த்தவாறே தொடர்ந்தான்.

கல்லோயாவைவிட்டு வண்டி நீங்கியது. "மயூரி நேற்று பீற்றசன் வீட்டுக்குப் போயிருந்தனான். யோசப் மாஸ்ரர் நல்ல தோட்டம் போட்டிருக்கார். எத்தனை வகைப் பூஞ்செடிகள், மரக்கறி வகைகள். ஒரு சிறிய தாவரப்பூங்காவே உள்ளது. நல்ல சனங்கள். நான் யோசப் மாஸ்ரரிடம் படித்தனான். தாவரவியல் பாடத்தை அவர்தான் கற்பித்தவர். நல்ல அருமையாகப் படிப்பிப்பார். பீற்றர்சன் என்னோடு ஒன்றாகத்தான் படித்தவன். இப்போது ஒன்றாகவே கற்பிக்கிறோம். விளக்கமாகச் சொன்னான். விழிகள் மலரக் கேட்டுக் கொண்டிருந்தாள். "அண்ணா பீற்றர்சனின் அம்மா எப்படி"? திடீரெனக் கேட்டாள். "சும்மா சொல்லக்கூடாது. அருமையான அம்மா. பாசத்தோடு பழகுவார்". ஒப்புவித்தான்.

"ஏன் அவன்ர அம்மாவைப் பற்றிய அக்கறை வந்தது"? சடுதியாக மாற்றினான். "அப்பாவைப் பற்றிச் சொன்னீங்க. அதனால் அம்மாவைப் பற்றிக் கேட்பதில் என்ன தப்பு"? வினாவினாள். பிடிபடாமல் தப்பிவிடுகிறாளே? மனதினுள் வியந்து கொண்டான். "இன்னொரு விசயம் சொல்லப்போறன். அவனும் "லவ்" பண்ணுறான். அது விசயமாக உதவி செய்யச் சொல்லுறான்" சொல்லிக் கொண்டே மயூரியின் முகத்தை அளந்தான். அவளது முகம் மாறிக்கொண்டு வருவதை நோக்கினான். "அவளும் எனக்குத் தெரிந்த அழகான பிள்ளைதான். பிள்ளையைப் பார்த்து அவங்கட வீட்டிலயும் போய் கதைச்சிப் போட்டன்." அவள் படபடத்தாள்.

"அப்படி இருக்காது. நீங்க பொய் சொல்லுறீங்க. எப்ப கதைச்சனீங்க?" திடீரென்று குறுக்காடினாள். "நான் ஏன் பொய்சொல்ல வேணும். உண்மையைத்தான் சொல்லுறன். நேற்றுத்தான் கதைச்சி முடிவெடுத்தனாங்கள். பெண்வீட்டாருக்கும் விருப்பம்தான். என்ர விசயம் முடிஞ்ச பின்தான் கலியாணம் என்று சொல்லிப் போட்டார்கள். எனக்கும் சந்தோசம். பீற்றர்சன் கொடுத்து வச்சவன். நல்லதொரு இடத்தில பெண்பார்த்து லவ் பண்ணியிருக்கிறான்." சொல்லி முடித்ததும் அவளை உற்றுப்பார்த்தான். அவள் கண்களில் நீர் துளிர்த்தது. மலர்ந்திருந்த விழிகளில் நீரலைகள் தெரிந்தன. "மயூரி என்ன நடந்தது? கண்களில் என்ன கண்ணீர்"? தெரியாததுபோல் கேட்டான். "ஒன்றுமில்லை. ஏதோ கண்களில் வழுந்திற்றுப்போல". மழுப்பினாள். அவள் அழுது விடுவாளோ? எல்லாவற்றையும் சடுதியாக இழந்துவிட்டவள் போல் தோன்றினாள்.

ஆனந்தன் கலகலத்துச் சிரித்தான். தன் காதலன் வேறு பெண்ணைக் காதலிப்பதை எந்தப் பெண்ணால் தாங்கிக் கொள்ளமுடியும்?. "மயூரி! இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணனிடம் உன்னைப் பற்றி ஏதும் சொன்னாயா''? இப்போது நல்லதொரு உரிமையை எடுத்துக் கொண்டான். "பீற்றர்சன் விரும்பிய பெண் நீதான். உன்னைப் பற்றி அவன் என்னிடம் நிறையச் சொல்லி இருக்கிறான். நீ இல்லாவிட்டால் அவன் இல்லையென்ற நிலையில் இருக்கிறான். உனக்காக அப்பா, அண்ணன் எல்லோரிடமும் கதைத்து விட்டேன். ஸ்ரனிஸிடம் விபரத்தச் சொல்லிப் போட்டன். எல்லோருக்கும் நல்ல விருப்பம். பீற்றர்சனை ஸ்ரேசனுக்கு நான்தான் வரச்சொன்னேன். அறிமுகம் செய்ததெல்லாம் உனக்காகத்தான். நீ எனக்குச் செய்யும் உதவிகள் எத்தனை? நானும் என்ர தங்கச்சிக்கு இதுகூடச் செய்யக் கூடாதா''? நா தளதளக்கக் கூறினான்.

மயூரி நெக்குருகி நின்றாள். அவள் கண்கள் ஆனந்தக் கண்ணீர் பொழிந்தன. ஆனந்தனின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டாள். "அண்ணா! எனக்காக எவ்வளவு செய்திருக்கிறீங்க. யாருக்கும் தெரியாமல் எனது இரகசியங்களை மனதில் போட்டுப் பூட்டி வைத்திருந்தேன். அதனை உங்களிடம் சொல்லத்தான் நினைத்தேன். முதலில் அண்ணியின் விசயம் சரிவரட்டும் என்று பார்த்திருந்தேன். எப்படியோ உங்களுக்குத் தெரிந்து விட்டது. நீங்கள் அப்பா, அண்ணன் எல்லோரிடமும் சொல்லி சம்மதத்தையும் பெற்றுவிட்டீங்க.'' அவளுக்கு வார்த்தைகள் வரமறுத்தன. அவளது கண்கள் பொலபொலத்தன. கண்ணீரில் திளைத்தாள். அவனது கால்களில் வீழ்ந்து கிடந்தாள். வண்டியில் அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். அவர்களது உரையாடல் மற்றவர்களுக்கு இடைஞ்சலாக அமையவில்லை.

"மயூரி! உனது விசயத்தை உன் வாயாலேயே வரவழைக்கத்தான் இவ்வாறு நடந்து கொண்டேன். நீ இப்போவாவது ஒத்துக் கொண்டாயே. அதுவே பெரிய விசயம். இனிக் கவலையை விடு. நடப்பது நல்லதாக நடக்கும்''. வண்டி நின்றது. எட்டிப்பார்த்தான். மாகோ ஸ்ரேசன் தெரிநிதது."மாகோ வந்திற்று. மயூரி, தேநீர் குடிப்பமா''? சத்தம் கேட்டு "மாகோச் சந்தியா?'' டேவிட் கண்களைத் திறந்தார். "தேநீர் குடித்தால் நல்லதுதான்.'' சோம்பல் முறித்துச் சொன்னார். ஆனந்தன் இறங்கி கன்ரீனில் தேநீர் வாங்கி வந்து கொடுத்தான். குடித்தார்கள். குளிர்வீசியது. சுடச்சுடத் தேநீர் இதமாக இருந்தது. மயூரி புதுத் தென்போடு உற்சாகமாக இருந்தாள். வண்டி புறப்பட்டது.

ஆளையாள் பார்த்துப் புன்முறுவல் செய்து கொண்டே பயணத்தைத் தொடர்ந்தார்கள். மனம் சலனமற்று அமைதியாக இருந்தது. ஆனந்தன் கண்களை மெல்ல மூடியிருந்தான். கண்களை உறக்கம் தழுவிக்கொண்டது. "அண்ணா! கொழும்புக்கோட்டை ஸ்ரேசன் வந்திற்று. எழும்புங்க". எழுப்பினாள். "அதற்குள்ளாகவா''? கூறிக்கொண்டு எழுந்தான். பொதிகளை மேலிருந்து எடுத்தான். வண்டி நின்றதும் எடுத்துக் கொண்டு இறங்கி வெளியில் வந்தார்கள். ரக்சிகள் வரிசையாக நின்றன. ரக்சியைப் பிடித்துக் கொண்டு ஏறி போகுமிடத்தைக் கூறினார்கள். அது அவர்களைச் சுமந்து கொண்டு விரைந்தது. வீடு அண்மித்தது. ரக்சியை நிறுத்தி இறங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார்கள். பிரதான வீதியில் இருந்து ஐம்பது மீற்றர் தூரத்தில் வீடு இருந்தது. நடந்தார்கள். சரியாகக் காலை ஆறரை மணி. செபஸ்தியார் வேலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

வீட்டுக் கதவில் தட்டும் சத்தம் கேட்டது. "ஆரது கொஞ்சம் இருங்க வாறன்." சப்பாத்தை மாட்டிக் கொண்டு கதவைத் திறந்தார். அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அவர் எதிர்பார்க்கவில்லை. "வாங்க" மனம் குளிர்ந்தது. வாய்நிறைய வரவேற்றார். மூவரும் உள்ளே சென்றார்கள். மாகிரட் செபஸ்தியாருக்குத் தேநீர் கொண்டு வந்தார். அப்போதுதான் இவர்களைக் கண்டார். "வாங்க...வாங்க..என்ன அறிவிக்காமல் திடீர்பயணம்? இருங்க தேநீர் கொண்டு வாறன்". கூறிவிட்டு அடுக்களையில் நுழைந்தார்.

"எல்லாரும் சுகமாக இருக்கிறீங்களா"? பொதுப்படையாகவே செபஸ்தியார் கேட்டார். "எல்லாரும் சுகம்". ஆனந்தன் பதிலளித்தான். "அறிவித்து விட்டு வந்திருந்தால் லீவு போட்டிருப்பன். வேலையிருக்கு. பத்து மணிபோல வந்திருவன். மாகிரட் கவனித்துக் கொள். நான் வாறன்." அவர் புறப்பட்டார். மாகிரட் தேநீரோடு வந்தார். பரிமாறினார். புன்னகையோடு எடுத்துக் கொண்டார்கள். களைப்புக்குத் தேநீர் சுகமாக இருந்தது. குடித்தவாறே ஆனந்தன் கண்கள் அவளைத் தேடின. அதனை மயூரி புரிந்து கொண்டாள். குடித்தவாறே அவளும் நோட்டம் விட்டாள். மெதுவாக எழுந்து அறைகளை எட்டிப் பார்த்தாள். எலிசபத், மரியா, ஏஞ்சல் ஒருவரும் எழுந்திருக்கவில்லை. குளியலறையில் சத்தம் கேட்டது. இனிய குரலில் இசை தவழ்ந்து வந்தது. அதிகமாக குளியலறையில்தான் இசை பிறந்ததோ? மயூரியும் குளியலறைக்குள் இருக்கும் போது பாடிக்கொண்டே இருப்பாள். அதற்குக் காரணம் உண்டு. ஒன்று தனது குரலின் இனிமையை ரசிப்பது. தானே தனிமையில் பாடிப்பழகுவது. அடுத்தது பயம். பயத்தின் காரணமாக வந்தபடி பாடுவது. மேரிக்கு இவற்றில் எதுவாக இருக்கும்?. உற்றுக் கேட்டாள்.

மெதுவாக நழுவிப் போனாள். ஆனந்தனுக்கு வரும்படி சைகை செய்தாள். அவன் "ஏன்"? என்பற்கேற்ற பதிலைக் கொடுத்தான். அவள் வற்புறுத்தவே எழுந்து வந்தான். வாயில் விரலை வைத்துக் காதினால் கேட்குமாறு சைகை கொடுத்தாள். இனிய குரல் ஒலித்ததை உணர்ந்து கொண்டான். இவ்வளவு இனிமையான குரலா? வியந்து கொண்டான். அவனுக்கு அங்கு நிற்பதற்கு மனம் இடம்கொடுக்க வில்லை. தனது இருக்கைக்குத் திரும்பிவிட்டான். மாகிரட் அவர்களுக்கான அறையை ஒழுங்கு படுத்தினார். மயூரி மாகிரட்டுக்கு உதவினாள். மெதுவாகப் போய் அப்பாவை குளிக்கச் சொன்னாள். அவர் துவாயை எடுத்துக் கொண்டு மற்றக் குளியலறைக்குச் சென்றார். மயூரி எலிசபத் பக்கம் சென்று நடப்பதைப் பார்த்து ரசிப்பதற்காகச் சுருண்டு படுத்துக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

மேரி குளிக்கும் போது கற்பனையில் மிதந்தாள். ஆனந்தனின் குணாதிசயங்களை எண்ணி வியந்தாள். அவன் வந்தால் அவனிடம் தனது ஆசைகளைக் கூறவேண்டும். கோயிலுக்குச் சென்று பங்குத்தந்தையிடம் அறிமுகம் செய்து திருமணம்பற்றி அவரிடம் சொல்லவேண்டும். திருமணம் ஆனபின் ஆனந்தனை எப்படி அழைக்கவேண்டும்? என்றெல்லாம் கற்பனை செய்து பார்த்தாள். "திருமணம் செய்தபின் அவரை "அத்தான்' என்றுதான் அழைப்பேன். "அத்தான்...என்..அத்தான்" இசையோடு பாடலாக அழைத்துப் பார்த்தாள். "எனக்கு விசரா?..என்ன வந்தது எனக்கு"? தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள். இந்தப் பெண்களுக்குத்தான் எத்தனை விதமான கற்பனைகளும் கனவுகளும், ஆசைகளும். இந்தக் கற்பனைகள் நிரந்தரமானவையா? எவைதான் இந்தப் பூவுலகில் நிரந்தரமனவை? கற்பனைகளை வளர்த்தவண்ணமே சந்தோசமாய்க் குளித்தாள்.

மேரி குளித்து முடிந்ததும் தனது அறையினுள் சென்று உடைகளை மாற்றிக் கொண்டாள். அடுக்களைக்குச் சென்று தேநீரைக் கோப்பையில் ஊற்றிக் கொண்டாள். வழமையாகத் தேநீர் அருந்தும் மண்டபத்துக்குள் வந்தாள். அப்போதுதான் ஆனந்தனைக் கண்டாள். ஆனந்தன் தினசரியைப் படித்துக் கொண்டிருந்தான். மேரி வருவதை அவன் கவனிக்கவில்லை. அவனும் எதிர்பார்க்கவில்லை. அவள் தன்னை மறந்து சிலையாகி அதிர்ந்து போனாள். சட்டெனத் தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள். "இப்போதுதானே இவரைப் பற்றி நினைத்தேன். எப்படி இவர் இங்கே? எப்ப வந்தார்?". முகம் மலர்ந்து கொண்டது. தான் காண்பது கனவா அல்லது நினைவா என்பதை அறிவதற்குத் தனது கையில் கிள்ளிப் பார்த்துக் கொண்டாள். வலித்தது. நெஞ்சு படபடத்தது. என்ன கதைப்பதென்று தெரியாது தடுமாறினாள்.

தன்முன்னால் சிலையாக மேரி நிற்பதைக் கண்டு கொண்டான். அவளது அழகில் சொக்கிவிட்டான். அவன் எதிர்பார்க்கவில்லை. குளித்துக் குதுகலிப்போடு புன்னகைதவழ நின்றிருந்தாள். அவளைக் கண்டதும் கிறங்கிப்போனான். தனியே இருவரும் ஆளையாள் பார்த்துக் கொண்டனர். புன்னகையைப் பரிமாறிக் கொண்டனர்.

எவற்றையெல்லாம் கற்பனை செய்து மகிழ்ந்தாளோ அவற்றையெல்லாம் மறந்துவிட்டாள். ஒன்றும் நினைவில்லை. நினைவுக்கு வர மறுத்தன. எப்படித் தொடங்குவது? அவள்தான் தொடங்கினாள். "எப்போது வந்தீங்க? தனியாகவா வந்தீங்க?. மயூரி வரவில்லையா"? அவன் பதில்பேசாது புன்னகைத்தான். "இருங்க தேநீர் கொண்டு வாறன்". அவள் போகப்புறப்பட்டாள். "வேண்டாம். நான் குடிச்சிற்றன்". அவன் முடிக்குமுன் "யார் தந்தது"? வினவினாள். "உங்கள் அம்மாதான். இருங்க கதைப்பம்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கேட்டுக் கொண்டான். "இன்னொரு தேநீர் குடியுங்க. நான் கொண்டு வாறன். குடித்துக் கொண்டு கதைப்பம். இதோ வாறன்". அவள் போய்விட்டாள். அவன் பத்திரிகையை மூடிவைத்தான். போனகையோடு திரும்பினாள். "இந்தாங்க.." கொடுத்தாள். அவன் வாங்கும்போது அவளது மென்விரல்கள் விரிந்தன. அவனது விரல்கள் அவளின் கைகளில் மொய்த்தன.

சுகம் சுண்டிக்கொண்டது. "எப்படி நலமாக இருக்கிறீங்காளா"? கேட்டான். "நீங்க இருக்கும்போது எனக்கென்ன குறை"? சொன்னாள். "ஆனால் ஒன்று." நிறுத்தினாள். "என்னது"? புருவங்களை உயர்த்தி வினவினான். "நீங்க பக்கத்தில் இல்லாததுதான் பெரிய குறை". நாணத்தோடு கூறினாள். "காலம் கனியும்போது எல்லாம் சரியாகிவிடும். அதுவரை பொறுக்கத்தானே வேண்டும். அதோ ஐயா குளித்துமுடிந்து வாறார். நான்குளிச்சிட்டு வாறன்". அறைக்குள் போக எழுந்தான். "ஐயா வந்ததைச் சொல்லவே இல்லையே". சிரிப்போடு சொன்னாள். "நீங்க கேக்கல்ல. அதனால் சொல்லல்ல. கூறிக்கொண்டே சென்றான். "எப்படி மேரி? நல்லாக இருக்கிறாயா?" மேனியைத் துடைத்தவாறே கேட்டுக் கொண்டு டேவிட் வந்தார்.

புன்னகையோடு "நல்லாயிருக்கிறன். எப்ப வந்தநீங்க? மயூரி வரல்லையா"? வினவினாள். "மயூரி இல்லாம நாங்க வாறதா? வந்திருக்கா". கூறிக்கொண்டு அறைக்குள் போனார். மேரி அடுக்களைக்குப் போனாள். அம்மா சமையலில் ஈடுபட்டிருந்ததை அவதானித்தாள். "அம்மா, யாரார் வந்தவங்க". கேட்டாள். "மாமா, மயூரி, ஆனந்தன், மூன்றுபேரும் வந்திருக்காங்க. நீ குளிச்சிக்கொண்டிருந்தாய். அப்பா வேலைக்குப் போகும்போது வந்தாங்க. அப்பா கெதியா வருவதாகச் சொல்லிப் போய்விட்டார்". விபரமாகச் சொன்னார். "ஐயா குளிச்சிட்டு வந்திற்றார். தேநீர் குடுப்பம்". சொல்லிக் கொண்டே தேநீரைக் கோப்பையில் ஊற்றியெடுத்தாள். கொண்டுபொய்க் கதவில் தட்டினாள். டேவிட் வெளியே வந்தார். தேநீரைக் கொடுத்தாள். அவர் வாங்கிக் கொண்டு மண்டபத்தில் போயிருந்து குடித்தார்.

மெதுவாக அறையினுள் சென்றாள். மயூரி படுத்திருப்பதைப் பார்த்தாள். மெதுவாகப் போர்வையை விலக்கினாள். மயூரி உண்மையாகத் தூங்கி விட்டிருந்தாள். அப்படியே விட்டுவிட்டாள். மற்றவர்களைத் தட்டியெழுப்பி விட்டாள். எலிசபெத் தனக்குப் பக்கத்தில் மயூரி படுத்திருப்பதைப் பார்த்துச் சிரித்தாள். மரியா ஏஞ்சலையும் எழுப்பிக் கொண்டு வெளியில் வந்தாள். விறுவிறுவென்று குளித்து முடித்து வந்தார்கள். ஆனந்தனும் குளித்து உடைகளை மாற்றிக் கொண்டு மண்டபத்துள் வந்தான். மயூரி தானாகவே எழும்பமட்டும் காத்திருந்தாள். அதுவரை அம்மாவுக்கு உதவினாள். சாப்பாட்டு மேசை தயார். எலிசபத் அறிவித்தாள். சத்தம் மயூரியை எழுப்பி விட்டது. மயூரி எழுந்து வெளியில் வந்தாள். மேரிக்குச் சந்தோசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கியது. "மயூரி வாங்க. சத்தமில்லாமல்தான் வருவீர்களா''? கேட்டவாறே அணைத்துக் கொண்டாள்.

"நினைத்தோம். வந்தோம்''. சிரித்தவாறே சொன்னாள். "சரி குளிச்சிட்டு வாங்க. சாப்பாடு ரெடி. மற்றவங்க காத்திருக்காங்க''. மேரி கூறினாள். "ஆரது மற்றவங்க..? அப்பாவும் அண்ணாவும்தானே. அண்ணா! அண்ணியின் பாட்டு எப்படி''? ஒரு போடு போட்டாள். "பாட்டா யார் பாடியது? எனக்குத் தெரியாதே''. ஆனந்தன் மறைக்கப் பார்த்தான். "அண்ணி பாடியதை நீங்களும்தானே கேட்டிங்க''. மேரிக்குத் தூக்கிவாரிப் போட்டது. "ஐயைய்யோ...இவள் மாட்டிவிடப் பார்க்கிறாளே....'' மனதுக்குள் புறுபுறுத்தான். "ஓ..அதுவா.. ஏதோ கேட்டமாதிரித்தான் இருந்தது. நல்லா விளங்கல்ல''. மழுப்பிவிட்டான். "அண்ணி நல்லாப் பாடுவா. கேட்டோம். தனக்குள் பாடுவது சந்தோசம்தான்''. மயூரி கிளறிவிட்டாள். மேரி நாணத்தில் உறைந்து போனாள். "சரி மயூரி கெதியாக குளித்துவிட்டு வாங்க. பசிக்குது. சாப்பிடுவோம்". மயூரியை இழுத்துக் கொண்டு போனாள்.

சற்று நேரத்தால் வந்தார்கள். சாப்பாட்டு மேசையில் அன்றைய நிகழ்ச்சித் திட்டம் தயாரானது. "அண்ணி! அண்ணாவின்ர வேலைவிசயத்தை அறிவித்தேனே. ஏன் பதில் போடவில்லை''? வழக்கினைத் தொடங்கினாள். "பதில் எழுதினேன். அப்பாவிடம் கொடுத்தேன். ஆனால் அவர் தபால் பெட்டியில் சேர்க்க மறந்திற்றார். ஒருகிழமைக்குப் பிறகுதான் அவருக்கு நினைவு வந்தது. அதை என்னிடமே கொண்டு வந்து தந்திற்றார்''. என்றாள். மயூரி கலகலத்துச் சிரித்துவிட்டாள். "இப்போது அந்தக் கடிதம் எங்கே''? மயூரி தொடர்ந்து வினாவினாள். "என்னிடம் பத்திரமாக இருக்கிறது. சாப்பிட்டதும் தருகிறேன். சரியா? இப்போது சாப்பிடுங்கள்.'' என்றாள்.

"மாகிரட் கோயிலில் விசாரித்தீங்களா? அடுத்த மாதம் விசயத்த முடிக்கலாம் என்றிருக்கிறம். செபஸ்த்தியார் வந்ததும் கேட்டு முடிவெடுக்க வேணும்''. டேவிட் பிரேரித்தார். "நாங்க பாதரிட்ட சொல்லிப்போட்டம். அவர் சரியெண்டு சொல்லிப் போட்டார். இன்னும் திகதி குறிக்கவில்லை. திகதியைக்குறித்தால் சரி''. மாகிரட் தாங்கள் எடுத்த முயற்சிகளை விளக்கினார். "இண்டைக்குப் பின்னேரம் பாதரிட்ட எல்லாரும் ஒருக்காப் போவம் என்ன?''. மேரியைப் பார்த்து மயூரி சொன்னாள். "அதுக்கென்ன. போய்வருவம்''. சாப்பிட்டவாறே மேரி வழிமொழிந்தாள். ஆனந்தன் புன்னகைத்தான். சாப்பாடு முடிந்துவிட்டது.

டேவிட் தெருப்பக்கம் உலாப்போனார். கூடவே மரியாவும். ஏஞ்சலும் போனார்கள். ஆனந்தன் மண்டபத்தினுள் வந்தான். தொடர்ந்து மேரியும் வந்தாள். கதிரைகளில் இருந்து "கரம்போட்' ஆடினார்கள். கரம்போட் ஆடினால் கதைப்பதற்கு வசதியாக இருக்கும். எலிசபத்தும் மயூரியும் சோடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தார்கள். விளையாடினார்கள். எதற்கும் ஒரு அளவு இருக்கிறது. அதைத்தாண்டினால் அலுப்புத் தட்டும். மேரி கதைப்பதும், அம்மாவுக்கு உதவுவதுமாக இருந்தாள். இடைக்கிடை மயூரியும் அடுக்களைப் பக்கம் போய்வந்தாள். மயூரியைத் தொடர்ந்து எலிசபத்தும் சென்று வந்தாள். மயூரி போனதும் கதை தொடரும். "மேரி நான் என்ன செய்யவேண்டும்"? அவளைப் பார்த்தவாறே கேட்டான். "எதைப்பற்றிக் கேக்கிறீங்க"? அவள் கேட்டாள். "நாங்க எதைப்பற்றிக் கதைப்பது"? "நமது திருமணத்தைப் பற்றித்தான". பதிலிறுத்தான்.

"அப்பா இதப்பற்றிக் கதைப்பார். சொல்லிக் கொண்டிருந்தவர். வந்திருவார். அவரோடு சேர்ந்து கதைப்பமா"? மேரி பவ்வியமாகக் கூறினாள். "சரி அப்படியே செய்வம்". ஆனந்தன் ஒத்துக் கொண்டான். "அதற்குமுதல், நான் சொல்வதைக் கேட்கவேணும். செய்வீங்களா"? வினவினான். "நீங்க சொன்னா நான் அதனை மீறமாட்டன். சொல்லுங்க. இனிமேல் நீங்க வாங்க போங்க என்ற மரியாதையெல்லாம் வேணாம். நான் உங்கட மேரியாகவே இருக்க விரும்புறன்.சொல்லுங்க". நிதானமாகச் சொன்னாள். "வெள்ளியன்றைக்கு செட்டித்தெருக் கோயிலுக்குப் போவோமா? போய் கோயிலில் இருவரும் மாலை மாற்றிக் கொள்வோமா?". நம்பிக்கையற்றுத்தான் கேட்டான். "நீங்க சொல்வதை நான் தட்டமாட்டன். அதனைக் கேட்பேன். அதன்படி நடப்பேன். இனி நான் வேறு, நீங்க வேறு இல்லை. போவோம். நாம் சாகும்வரை பிரியாது ஒன்றாகவே இருப்போம்". கரம்போட் காயை அடித்தவாறே கூறினாள். ஆனந்தனுக்குச் சந்தோசம்.

மாக்கிரட் மயூரியிடம் ஆனந்தனின் சமயவிடயத்தைத்தான் ஆராய்ந்தார். "அதைப்பற்றிய கவலையை விடுங்கள். அதெல்லாம் சரி. இன்டைக்குப் பாதரிடம் கேட்பமா"? மயூரி மாகிரட்டின் ஆலோசனையைக் கேட்டாள். அது சரியென்று பட்டது. மாகிரட் ஆமோதித்தார். வெளியில் போன டேவிட்டும் வந்தார். மயூரி தேநீர் தயாரித்துக் கொண்டு வந்தாள். எல்லோருக்கும் கொடுத்துத் தானும் குடித்தாள். "மேரி..என்ன உங்கட நண்பிகளைக் காணல்ல". தேநீரைக் குடித்தவாறே கேட்டான். "அவங்க நேற்றுப் பயணம் போனவங்க. பின்னேரம் வந்திருவாங்க. ஏன் அவங்களச் சந்திக்க வேணுமா"? ஒரு சிரிப்போடு கேட்டாள். "அண்ணா! அண்ணியின் கதை எங்கேயோ போகுது". சொல்லி விட்டு மயூரி சிரித்தாள். "மயூரி தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளி விடுவா" மேரி கலகலத்துச் சிரித்தாள்.

செபஸ்தியார் வந்ததும் உடைகளை மாற்றி மேலைக் கழுவிக் கொண்டு வந்தார். பெரியவர்கள் ஒன்று கூடினார்கள். மாகிரட்டும் சேர்ந்து கொண்டார். நடக்கவேண்டிய விடயங்கள் பேசப்பட்டன. மே மாதத்தில் திருமணத்தை வைப்பதாக முடிவாகியது. மாலை உலாவந்தார்கள். விகாரமாதேவிப்பூங்கா, காலிமுகத்திடல் எனச் சுற்றிவந்தார்கள். தனது திட்டத்தை மயூரியிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி விட்டான். அவளும் அதனை ஏற்றுக் கொண்டாள். வெள்ளிக்கிழமை வந்தது. சொன்னதுபோல் செட்டித்தெருக் கோயிலுக்குச் சென்றார்கள். ஐயரிடம் சொல்லி சிறிதாக பூசைசெய்வித்து அவரது ஆசியுடன் மாலையை மாற்றிக் கொண்டார்கள். மேரி ஆனந்தனின் கால்களில் வீழ்ந்து வணங்கினாள். "இந்த முருகன் சாட்சியாக இனி நான் உங்கள் சொந்தம்." என்றாள். அவளைத் தூக்கிநிறுத்தினான்.

"இன்பத்திலும் துன்பத்திலும் பங்குகொண்டு இல்லறத்தை நல்லபடி நடத்துவோம். நான் நினைத்தபடி நீ எனக்கு வந்து வாய்த்துள்ளாய். எதுவந்தாலும் பிரியாது வாழ்வோம்" உணர்வு பொங்கக் கூறினான். இரகசியமாக நடந்த இந்தத் திருமணம் ஐந்து பேருக்கு மட்டும் தெரிந்திருந்தது. "அண்ணி உங்களுக்குப் பெரியமனது. ஒரு கிறிஸ்தவப் பெண் சைவக்கோயிலில் மாலை மாற்றுவதற்கு மனம் எவ்வளவு பக்குவப்பட்டிருக்க வேணும் என்பதை நான் உணருகிறேன். இது கலியாணம்தான். நீங்க வித்தியாசமான பிறவிதான்". மயூரி மேரியின் கண்களைப் பார்த்தவாறே கூறினாள். "உங்கட அண்ணன் எனக்காக நமது வேதத்தைப்படித்து ஞானஸ்தானம் பெற்றிருக்கிறார். அப்பா அம்மாவின் ஆசைகளை நிறைவேற்றுவதற்காக நமது கோயிலில் தாலிகட்டச் சம்மதித்திருக்கிறார். நான் அவருக்காக இதையாவது செய்தேனே என்ற திருப்தி எனக்கேற்படுகிறது." விளக்கினாள். எவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறாள் எனது மனைவி. நெஞ்சுள் நினைந்து புளகாங்கிதம் அடைந்தான்.

.ஐந்து நாட்கள் சென்றதே தெரியவில்லை. கொழும்புக் கோட்டைப் புகைவண்டி நிலையம் மக்களால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. கண்கள் கதை பேசின. இளமைக்காலம் பொன்னானது. இன்பம் கொட்டிக்கிடக்கும் காலம்தான் இந்த இளமைக்காலம். எத்தனை கற்பனை? எத்தனை கனவுகள்? வண்டி புறப்படும் நேரம். பிரிவு வரும் நேரம் நமது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவது என்பது இலேசான செயலல்ல. "நமது கனவு மெய்ப்படுமா"? மேரியின் வாயிலிருந்து முத்துக்களாக உதிர்ந்தன. கண்கள் கலங்கியிருந்தன. ஆனந்தன் தேற்றினான். "கனவுகள் மெய்ப்பட வேண்டும். மெய்ப்படும்." என்று இறைவனிடம் கையேந்துவோம். அவன் மெய்ப்பட வைப்பான். மே மாதம் எல்லோர் முன்னிலையிலும் இருவரும் ஒருவராவோம்". ஆனந்தன் அவள் காதுகளில் மெல்ல உறுதியளித்தான். வண்டி விசிலடித்துத் திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது. மேரி கற்பனைக் கனவில் மிதந்தாள்.

## 18

கிழக்கில் சோடித்து ஒளிக்கற்றைகளை விசிறி சூரியன் புறப்பட்டது. இருள் பரந்து கலைந்தது. இந்த இருள் அனைத்தும் எங்கு ஓடி ஒளிகின்றன.?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் காலையில் கிழக்கில் தோன்றுவதை இதுகாலவரை நிறுத்தவில்லை. மேற்கில் மறைவதையும் மறந்ததில்லை. உலகம் இருக்கும்வரை இந்நிகழ்வுகள் நடந்து கொண்டுதான் இருக்கும். சீனக்குடா ஸ்ரேசனில் ஸ்ரனிஸ் வேலை முடிந்து காத்திருந்தார். அவரும் சேர்ந்து கொண்டார். "எப்படிப் பயணமெல்லாம்"? ஸ்ரனிஸ் விசாரித்தார். "எல்லாம் நல்லமாதிரி முடிந்து விட்டது. கலியாணத்தையும் மே மாதம் வைக்கிறதாத் தீர்மானித்துப் போட்டம்." டேவிட் பதிலளித்தார். ஆனந்தன் கிழக்குப் பக்கமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். சூரியன் கோணேசமலைக்கு அப்பால் தரிசனமாகிக் கொண்டிருந்தது. அந்த ஒளிப்பிரவாகத்தில் கோணேச்சரம் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

திருகோணமலைக் கோட்டைச் சுவர்களை எண்ணிப்பார்த்தான். பிரமாண்டமான அந்தச்சுவர்களைக் கட்டுவதற்கு எத்தனை வேலையாட்கள் பணிசெய்திருப்பார்கள். எத்தனையாயிரம் கற்கள் தேவைப்பட்டிருக்கும். எத்தனையாயிரம் கற்களையும் திருக்கோணேசரின் திருக்கோயில் வழங்கியிருந்தது. கோயிலை பறங்கியர் இடித்துத் தரைமட்டமாக்கிக் கோட்டைச் சுவர்களைக் கட்டினார்கள். கட்டும்போது தெரிந்தோ, தெரியாமலோ பல சித்திரங்களை வெளியில் தெரியும்படி கட்டிவிட்டார்கள். கோயிற் கற்களில் உளிகொண்டு வரைந்த சித்திரங்கள் இருந்தன. எத்தனை வகையான சித்திரங்கள். பூக்களாக, விலங்குகளாக, அழகிய உருவங்களாக அற்புதமான சித்திரங்கள் கோடுகளாகச் சுவரின் கற்களில் தெரிகின்றன. நண்பர்களோடு மாலைப் பொழுதுகளில அந்தச்சித்திரங்களில் தன்னை மறந்து ரசித்து நின்றிருக்கின்றான்.

கோட்டை வாசலில் இரட்டை மீன்சின்னங்களையும், அதற்குரியதான பாடலையும் தெரியும்படி கட்டிவைத்த அந்தக் கொத்தனாரை நன்றியோடு நினைவு கூர்ந்தான். கொத்தனார் மட்டும் அவற்றை மறுபக்கம் மறைத்துக் கட்டியிருந்தால் தமிழரின் வரலாறே மறைந்திருக்கும். மானும், குரங்குகளும் மனிதர்களோடு உலாவரும் கோணமாமலையை எண்ணும்தோறும் இனிக்கும். இராவணன் வெட்டும், கன்னியா வெந்நீரூற்றும் சைவசமயத்தின் தொன்மையைப் பறைசாற்றி நிற்கின்றன. நாயன்மார்களை நினைந்து கொண்டான். சுந்தரமூர்த்தி நாயனாரையும், திருஞான சம்பந்தரையும் நன்றியுடன் நெக்குருகி நினைவிருத்தினான்.

பறங்கியர் கோயிலை இடித்து அழிக்கு முன்னரும், இலங்கை மன்னன் மகாசேனன் கோணேச கோயிலை இடித்து அழித்துள்ளான். அதனருகில் புத்தவிகாரையைக் கட்டினான். இதனை இலங்கையின் வரலாற்றினைக் கூறுவதாக நம்பப்படும் மகாவம்சம் குறிப்பிடுகிறது. சமயங்களைப் பரப்பும் நோக்கோடு அரசர்களும் இருந்தார்கள். ஆதியிலிருந்தே சமயங்கள் மனிதரிடையே போட்டாபோட்டிகளை ஏற்படுத்திப் போர்களை நடத்த வழிகோலின. இலங்கைத் தீவில் இயக்கரும், நாகரும் இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயனின் வருகையின் பின்னர்தான் முரண்பாடுகள் தோன்றின. சாக்கியச் சக்கரவர்த்தி சுத்தோதனனின் மகனான சித்தார்த்தன் புத்தரானார். பௌத்தம் தோன்றியது. இலங்கையின் மன்னர்கள் பௌத்தத்தை ஏற்றுப் பரப்பினார்கள். இன்னும் முரண்பாடுகள் வளரத் தொடங்கின. ஆதியில் இலங்கையின் ஒருபுறம் சைவம் பரவியிருந்தது.

ஆதிகாலத்தில் இலங்கை இராசரட்டை, மாயரட்டை உறுகுணரட்டை என முப்பெரும் பிரிவுகளாக இருந்தன. இராசரட்டை தெதுறு ஓயாவையும், மகாவலி கங்கையையும் எல்லையாகக் கொண்டு வடக்காகப் பரந்திருந்தது. மகாவலிக்கும். வளவை கங்கையையும் எல்லையாகக் கொண்டு உறுகுணை பரந்திருந்தது. அதேபோல் வளவகங்கைக்கும் தெதுறு ஓயாவுக்கும் இடையில் மாயரட்டை பரந்திருந்தது. இராசரட்டையில் நாகர்கள் அரசாண்டார்கள். மகியங்கனைப் பகுதியில் இயக்கர்கள் ஆண்டார்கள். புத்தரின் முதலாவது விஜயத்தின்போது இப்பிரதேசத்தில் காலங்காலமாக வாழ்ந்து வந்த இயக்கரை விரட்டிவிடுவதற்காக வந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகிறது.

அவர்களை வெளியேற்றிவிட்டு தனது மயிர்கற்றை ஒன்றை சமன் தெய்வத்துக்குக் கொடுத்தார். அத்தெய்வம் அதனை நீலமணிக்கிண்ணம் ஒன்றில் பதித்து வைத்தது. இலங்கையின் வடபகுதியான யாழ்ப்பாணத்திலுள்ள நாகதீபத்தில் நாகரது ஆட்சி நிலவியது. மகோதரனுக்கும், அவனது சகோதரனாகிய சுலோதரனுக்கும் இடையே மணிபதித்த அரசுகட்டிலில் பிரச்சினை நடந்தபோது அதனைத் தீர்த்து வைப்பதற்காக இரண்டாவது வருகையின்போது அமைந்தது. மூன்றாவது வருகை களனி எனப்படும் கல்யாணி நதியருகே தங்கியிருந்தார். அவர் தங்கியிருந்த இடத்தில் தாகபை கட்டப்பட்டது. களனியிருந்து சிவனொளிபாத மலைக்குச் சென்று தனது அடிச்சுவட்டைப்பதித்தார். அங்கிருந்து அனுராதபுரத்துக்கும், கிழக்கு மாகாணத்தில் உள்ள திகவாப்பிக்கும் சென்றதாக மகாவம்சம் கூறுகிறது.

உலக நாடுகளின் இன்றைய குழப்பங்களுக்கெல்லாம் காரணமாக இருப்பது சிலபல சித்தாந்தங்கள்தான். அவற்றை நம்புகின்றவர்களுக்கும், நம்ப மறுப்பவர்களுக்கும் இடையே ஏற்படும் பிணக்குத்தான் யாவற்றுக்கும் மூலகாரணங்களாகும். உலகம் தட்டையானது. அது ஆமையின் முதுகில் இருக்கிறது. என சமயத்தலைவர்கள் சொன்னார்கள். உலகம் உருண்டையென்று கலிலியோ கலிலி கூறினார். சோக்கரட்டீஸ் மக்களின் சிந்தனையைத் தூண்டினார். இவர்கள் தண்டனையை அனுபவித்தார்கள். இன்று நவீன தொழில் நுட்பங்கள் மலிந்து விண்ணில் வலம்வருகிறான் மனிதன். ஆனந்தனின் மனம் எங்கெல்லாமோ சுற்றி ஆராய்ந்து கொண்டிருந்தது. "அண்ணா! என்ன யோசனை? இறங்குவோமா? மயூரியின் குரல் ஆனந்தனை ஈர்த்தெடுத்தது. தன்னைச் சுதாகரித்துக் கொண்டான். "இறங்குவோம்". கூறிக் கொண்டே உடமைகளை எடுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாப்பிளே! வாங்க...வாங்க...எப்படி பயணமெல்லாம்.''? சத்தமிட்டவாறே முன்னால் பீற்றர்சன் வந்து வரவேற்றான். "ஏய் யாருடா மாப்பிள.. நீயா...நானா.''.? புன்னகையோடு ஆனந்தன் பதிலளித்தான். "இரண்டு பேருந்தான். இளந்தாரிகள்தானே''? டேவிட் பெரியதொரு குண்டைப் போட்டார். பீற்றர்சன் பொருட்களை தூக்குவதற்கு உதவினான். "டேய்... மயூரி உனக்கு அப்பிள் கொண்டுவந்திருக்கா... இப்படியே மயூரி வீட்டுக்குப் போய்விட்டு பின்னேரம் ஆலங்கேணி போவம். என்ன''? மயூரிக்குத் தூக்கிவாரிப் போட்டது. குனிந்ததலை நிமிராமல் நின்றாள். பீற்றர்சன் சிலையாக நின்றான். "இஞ்சாரு.. மாப்பிள்ளத் தோழா.. நடிக்காத... வாவா...எல்லாருக்கும் எல்லாம் தெரியும். உன்ர அப்பா..அம்மா... எல்லாருக்கும் தெரியும். கவலைப்படாதே சகோதரா..'' பாடலாக நக்கலடித்தான். ஸ்ரனிஸ் ரக்சியை அழைக்க முனைந்தார். "வேண்டாம். நான் சொல்லியிருக்கிறன். அதோ நிற்கிறது ரக்சி. வாங்க போவம்''. பீற்றசன் அழைத்தான். ரக்சியில் நான்கு பேர் போகலாம். பீற்றர்சன் தனது சைக்கிளில் ஏறினான். "பீற்றர்சன் ..நேரே .. ரக்சிக்குப் பின்னால் வா..என்ன''? ரக்சி புறப்பட்டது.

வீடு வந்ததும் இறங்கிக் கொண்டார்கள். மயூரி விறுவிறு என்று வீட்டினுள் நுழைந்தாள். உடுப்பை மாற்றித் தேநீர் தயாரித்தாள். "நானும் உதவி செய்யிறனே... ஆனந்தன் அடுக்களைப் பக்கம் வந்தான். "என்ன அண்ணா, மானத்த வாங்குறீங்க.. அப்பா... அண்ணன் என்ன நினைப்பாங்க''? கவலையோடு கூறினாள். "இதிலென்ன தவறிருக்கு? அப்பாக்கும், அண்ணனுக்கும் சொல்லிச் சம்மதம் வாங்கிப் போட்டன். பீற்றர்சனின் அப்பா. அம்மாவிடமும் சொல்லிச் சம்மதம் வாங்கியாச்சு...பிறகென்ன? இந்த அண்ணனுக்கும். இந்தத் தங்கச்சிக்கும் சந்தோசம்தானே''. ஆனந்தன் கோப்பைகளைக் கழுவியவாறே கூறினான். எல்லாவற்றையும் கேட்டவாறே டேவிட் உள்நுழைந்தார். "ஆனந்தன் நமக்காக எவ்வளவு செய்திருக்கிறான். நாங்க அவனுக்கு என்ன செய்யப்போறம்." டேவிட் நா தளதளக்க நெஞ்சாரச் சொன்னார். மயூரியும் நெகிழ்ந்து போனாள்.

"அப்பா அண்ணனுக்கு என்ர அண்ணியப் பரிசாகக் கொடுக்கப் போறம்தானே. அதவிட அவருக்கு என்ன வேணும்.'' அப்பா என்ன சொல்கிறார் என்பதை எதிர்பார்த்தாள். "அது நமது கடமையம்மா. ஆனந்தனின் செயற்பாடு அதைவிடப் பெரியது. அவனுக்கு நாம காலங்காலமாக நன்றிசெலுத்த வேணும்." அவர் மனதாரச் சொன்னார். உள்ளே வந்த ஸ்ரனிஸ் ஆனந்தனின் கைகளைப் பற்றி " நீங்க என்ர தம்பி. நாங்க மறக்கமாட்டம்''. எங்கோ பார்த்தவாறு கூறினார். அவரது கண்கள் கலங்கியிருந்தன. "பெரிய வார்த்தைகளைக் கூறி என்னைக் குழப்பாதீங்க. இப்ப பீற்றர்சன் வருவான். இன்றைக்குப் பின்னேரம் வரை நான் நிற்பன். அவங்கட வீட்ட ஒருக்காப் போய்வருவோமா? நான் முதலிலேயே ஜோசப் மாஸ்ரரிட்டச் சொல்லிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டன்''. ஒரு வேண்டுகோளைப் போட்டான். "நீ சொன்னால் சரி. நாங்க போவம்''. டேவிட் ஏற்றுக் கொண்டார்.

குளித்துக் களைப்பைப் போக்கினார்கள். படலையில் சைக்கிள் மணியொலித்தது. மயூரி எட்டிப் பார்த்தாள். "அண்ணா! அவர், உங்கட கூட்டாளி வந்திருக்கார். வரச்சொல்லுங்க''. மெதுவாகச் சொன்னாள். "ஏன் உன்னால சொல்ல முடியாதோ? எங்களுக்குத் தெரியாமல் காதல் பண்ண மட்டும்தெரியும். என்ன''? கூறிக்கொண்டு வெளியில் வந்தான். "என்ன படலையில் நிற்கிறாய். வாறதுதானே..வா..வா..'' அழைத்தான். டேவிட் குளித்துக் கொண்டிருந்தார். ஸ்ரனிசும் பின்னால் அலுவலாக நின்றார். பீற்றர்சன் வந்தான். "எங்க பெரியவங்க'' சிரித்தவாறே கேட்டான். "அவங்க பின்னால நிக்கிறாங்க''. பதிலிறுத்தான். "வீட்டுக்கு உரியவங்கதானே வரவேற்க வேண்டும். அவங்க வரச்சொல்லாமல் வந்தால் அடியும் விழலாம் இல்லையா?''. பீற்றர்சன் அக்கம் பக்கம் பார்த்துச் சத்தமாகச் சொன்னான். மயூரிக்கு விளங்கியது. "இன்னும் சத்தமாகச் சொன்னால்தான் ஏறும்''. ஆனந்தன் மயூரிக்குக் கேட்கும்படி கூறினான். அவள் சிரித்துக் கொண்டாள்.

"சாப்பிடுவோம். பீற்றர்சன் வா. மயூரி..! அப்பாவைக் கூப்பிடு.''? சத்தங்கேட்டு டேவிட் வந்தார். ஸ்ரனிசும் வந்து மேசையில் அமர்ந்தார். மயூரி பரிமாறினாள். "நல்ல ருசியாக இருக்கும். ஏனென்றால் தோசை கடையில் வாங்கியது''. சிரித்துக் கொண்டே ஸ்ரனிஸ் சொன்னார். "அண்ணா! கிண்டல் வேணாம். பகல் சாப்பாடு நான்தான் செய்யிறன். உப்பக் கனக்கப் போடுவன். கவனம்''. சிரித்துக் கொண்டே மயூரி பரிமாறினாள். கண்ணால் பேசும் கலையை இந்தப் பெண்கள் எங்கே கற்றார்கள்? ஆனந்தன் தனக்குத்தானே கேட்டுக்கொண்டான். "பீற்றர்சன் எத்தனை மணிக்கு அப்பா இருப்பார். நாங்க ஒருக்கா வரவேணும்''. ஆனந்தன் வினவினான். "எந்தநேரமும் அப்பா இருப்பார். "எத்தனை மணிக்கு வருவீங்க என்று சொன்னால் நல்லது. நான் சொல்லி வைப்பன். அதுசரி நாங்க எத்தனை மணிக்குப் போகிறோம்''. தங்களது பயணத்தையிட்டுக் கேட்டான். "ஒரு ஐந்து மணிபோல புறப்படுவமா? வெயில் குறைந்திருக்கும். கேள்வியாகவே பதிலளித்தான். "அது நல்லது''. கூறியவாறே எழுந்தான். அவனை ஆனந்தன் வழியனுப்பி வைத்தான்.

சரியாக மூன்று மணிக்கு டாக்சி வந்தது. பீற்றர்சன் அனுப்பியிருந்தான். ஏறிக்கொண்டார்கள். மயூரி வழியனுப்பி வைத்தாள். பீற்றர்சன் வாசலில் காத்திருந்தான். அவர்களைக் கண்டதும் "வாங்க'' என்று வரவேற்று உள்ளே அழைத்தான். ஜோசப் மாஸ்ரர் வீட்டு வாசலில் வந்து அழைத்தார். பீற்றர்சனின் அம்மா புன்னகையோடு வரவேற்றார். வரவேற்பு அவர்களை ஈர்த்தது. சம்பிரதாயமாகப் பலவற்றைக் கதைத்தார்கள். "நாங்களே உங்கள் வீட்டுக்குப் போனகிழமை வரவிருந்தம். நீங்க கொழும்பு போனதை மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னார். நீங்க முந்திட்டிங்க" சிரிப்போடு ஜோசப் மாஸ்ரர் கூறினார். டேவிட் கொழும்புக்குப் போய்வந்த விடயங்களை விளக்கினார்.

ஆனந்தன் அவர்களைக் கதைக்கவிட்டு பீற்றர்சனோடு தோட்டத்துக்குள் போனான். கொஞ்சநேரத்தால் அவர்களும் தோட்டத்துக்குள் வந்தார்கள். ஸ்ரனிஸ் பிரமித்துப் போனார். "எனக்கும் தோட்டம் வைக்க விருப்பந்தான். ஆனால் நேரங்கிடைப்பதில்லை. சிறிய அளவில் ஒரு தோட்டம் இருக்கிறது. அப்பாவும் தங்கச்சியும்தான் அதற்குப் பொறுப்பு. ஸ்ரனிஸ் தோட்டத்தைப் பாரத்தவாறே கூறினார். பீற்றர்சனின் அம்மா தேநீரோடு வந்தார். தோட்டத்துள் இருந்த இருக்கைகளில் இருந்து தேநீரைக் குடித்தார்கள். நேரம் போய்க்கொண்டிருந்தது. புறப்பட்டார்கள். ஜோசப் மாஸ்ரர் "நேரங்கிடைக்கும்போது வாங்க". என்று அழைப்பு விடுத்தார். "அடுத்தவாரம் நாங்க வாறம்" கூறிக்கொண்டு விடைகொடுத்தார்.
பீற்றர்சன் தனது உடமைகளை எடுத்துக் கொண்டான். "இப்படியே போய் எனது பொதியையும் எடுத்துக் கொண்டு இந்த டாக்சியிலேயே வஸ் ஸ்ரான்ற் போவம் என்ன"? ஆனந்தன் பீற்றர்சனிடம் கேட்டான். அவன் ஆமோதித்தான். டாக்சி பறந்தது.

ஆனந்தனும் பீற்றர்சனும் ஆலங்கேணி புறப்பட்டார்கள். கிண்ணியாத் துறையைத் தாண்டி சைக்கிளில் வீடு சேர்ந்தார்கள். சனநெருக்கடிமிக்க சூழலில் இருந்து தனியானதொரு சூழலில் இருப்பதை உணர்ந்தார்கள். கிராமப்புற வாழ்க்கையில் எவ்வளவு சுகம் உள்ளது. மரஞ்செடி நிறைந்து கண்களுக்குப் பசுமையைக் கொடுக்கும். சுத்தமான காற்று, சந்தோசம் நிறைந்த மக்கள். நின்று இரண்டு நிமிடமாவது கதைத்துச் செல்லும் மக்கள். படிப்பறிவில்லாவிட்டாலும் பண்பாடுள்ள மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். நகரங்களை விடவும் கிராமத்தின் வாழ்க்கை இன்பம் நிறைந்ததாகப் பட்டது. இருள் சூழ்ந்து கொண்டது. அம்மா அப்பா தம்பிமார் தங்கையரோடு இருப்பது எவ்வளவு சுகமானது. உணவின் பின் அம்மாவோடு மனதிலுள்ளவற்றைப் பரிமாறிக் கொண்டான். "டேவிட் ஐயா வந்து எல்லாம் சொல்லுவார்". கூறிவிட்டு உறங்கச் சென்றான். பிராயாணக் களைப்பு உறக்கத்தில் ஆழ்த்தியது.

## 19

ஆலங்கேணிப் பாடசாலை கலகலத்தது. அதிபர் சின்னத்தம்பி விட்டுச்சென்ற பணியை அதிபர் ஸ்ரனிஸ்லாஸ் தொட்டு வளமுறச் செய்தார். அந்த ஊர் பழம்பெரும் கிராமம். குளக்கோட்டன் கந்தளாய்க் குளத்தைக் கட்டிப் பலகிராமங்களை விரிவாக்கம் செய்து குடியிருப்புக்களை ஏற்படுத்தி மக்களைக் குடியமர்த்தினான். தம்பைநகரின் கிழக்கெல்லையாகக் கொட்டியாரக்குடாக் கடல் நெளிகிறது. கொட்டியாரக்குடாக் கடலைத் தழுவியணைத்து மகாவலி சங்கமமாகிறது. கங்கைநீர் கோணேசர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதங்களைத் தொட்டளைந்து விளையாடும் இடமாகக் கொண்டுள்ளது. தம்பலகாமக்குடாவில் கந்தளாய்க் குளத்தின் வடிச்சல் நீரும், உவர்நீரும், மகாவலியின் நன்நீரும் சங்கமிக்கும். மூன்றும் கலந்துகொள்ளும். அங்கு முத்து விளையக் களம் அமைத்துக் கொடுக்கும்.

சேர,சோழ,பாண்டியரும், பிறநாட்டு மன்னர்களும், வணிகப்பெரு மக்களும் தம்பைநகரின் கப்பல்துறைமுகத்தில் ஒன்று சேருவர். கப்பல் துறைமுகம் பிரபலமாக விளங்கியது. ஈழத்துணவு இங்கிருந்து சென்றது. பாய்மரக்கலங்கள் தரித்து நிற்கும். தேரோடும் வீதிகளும், பல்தேசத்து மக்களும் நிறைந்திருந்தனர். ஒரே கேளிக்கையாக இருக்கும். தம்பலகாமப் பற்று பரந்த பிரதேசமாக விளங்கியது. கிழக்கில் நெய்தலும், மேற்கில் மருதமும், வடக்கில் குறிஞ்சியும், தெற்கில் முல்லையும் கலந்து பரந்து எல்லைகளாக விளங்கின. குளக்கோட்டு மன்னனால் அம்மன் கோயில்கள் கட்டப்பட்டன. இன்று அந்தக்கப்பல்துறைக்குப் பல்வேறு காரணங்களைக் கற்பித்து வரலாறு கூறுகிறார்கள்.

அப்போது தம்பலகாமம் கிழக்கு எனும் பெயரினால் இப்பிரதேசம் அழைக்கப்பட்டது. பல சிற்றூர்கள் இருந்தன. நீரோட்டுமுனை, ஆடப்பனார் வெட்டை, பூசாரி வெட்டை, வண்ணார வெட்டை, தாமரைவில், உப்பாறு, ஆலங்கேணி, சூரன்கல், மணியரசன்குளம், பாண்டியனூற்று, மாகாமம், தீனேரி,கற்சுனை எனக் கிராமங்கள் மகாவலி கங்கைக் கரையோரம் வரை நீண்டு கிடந்தன. இக்கிராமங்களில் அம்மன் கோயில்கள் நிறைந்திருந்தன. அவற்றில் ஒன்று ஆலங்கேணியில் அமைந்திருந்தது. பூசாரிவெட்டை பூசாரிமார்களுக்கு நிவந்தமாகக் கொடுபட்டது. வண்ணத்தொழில் செய்வார்க்கு வண்ணான்வெளி கிராமம் கொடுபட்டது. வயல்களில் மேற்பார்வையில் ஈடுபட்டவர்களுக்கு அடப்பானார்வெட்டைக் கிராமம் நிவந்தமாகக் கொடுக்கப்பட்டது. சைவப்பாரம்பரியம் சிறப்புற்று விளங்கியது.

"மாற்றமாம் வையகம்' என்பது எவ்வளவு உண்மை. இன்று எல்லாம் மாறிவிட்டது. கோயில்கள் எல்லாம் மண்மேடுகளாயின. மாகாமத்தில் தொடங்கிய கொள்ளை நோயால் வாழ்ந்திருந்த தமிழ் மக்கள் பலரைச் சாவு காவு கொண்டது. பலர் வேறு இடங்களை நாடிச் சென்றனர். ஊர்கள் அழிந்தன. மக்கள் நிறைந்திருந்த ஊர்மனைகள் காடுகள் பற்றி விலங்குகள் நிறைந்தன. காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. வேற்று மக்களும், வேறு சமயங்களும் வந்து புகுந்தன. புதுப்புது ஊர்கள் முளைத்தன. "பழையன களைதலும், புதியன புகுதலும் வழுவல' என்பது இன்று வழக்கொழிந்து 'புதியன புகுத்தலும், பழையன கழித்து விரட்டலும்' என்று ஆகிவிட்டது.

அந்நியர் படையெடுப்பின் பின்னர் யாவும் நிலைகுலைந்து போயின. மக்கள் திசைதெரியாது கால்போன பக்கம் சென்று குடியேறினர். பலசதாப்பதங்களின் பின் படிப்படியாகத் தமது பிரதேசங்களில் குடியிருந்தாலும் அந்நியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியரின் அதிகாரிகளிடம் இருந்து தமது நிலங்களை பணம் கொடுத்து எழுதி வாங்கினார்கள். பிரித்தானியர்கள் இந்த நடைமுறையைச் செய்தார்கள். குருகுலக் கல்விமுறை படிப்படியாக மாற்றம் பெற்றது. கிறிஸ்தவ மதம் பரவியது. பாதிரிமார் பாடசாலைகளைத் திறந்து கல்விப்பயிர் வளர்த்தார்கள். ஆலங்கேணியிலும், நீரோட்டு முனையிலும் குருகுலமுறைக் கல்வி நடைபெற்றாலும் அது வெற்றியளிக்க வில்லை. பாதிரிமார் ஆலங்கேணிப்பாடசாலையை 1898ல் பொறுப்பெடுத்து நடத்தினார்கள்.

பாடசாலை பலசதாப்தங்களாக நடைபெற்றாலும் வளர்ச்சி யடையவில்லை. எழுச்சியை வேண்டி நின்றது. அதனை நிறைவு செய்யவென்று பல இளைஞர்கள் தங்களை இணைத்துக் கொண்டனர். ஆனந்தனும் தங்கராசா, கோணாமலையும் முழுமையாகத் தம்மை இணைத்துக் கொண்டார்கள்.

அன்று மாலை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு விளையாட்டு மைதானத்தில் பயிற்சியளிப்பதில் ஈடுபட்டிருந்தார்கள். நல்ல களைப்பு. ஆறுதலாக வீட்டுக்கு நடந்து போனார்கள். அவர்களுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. வீட்டில் டேவிடின் குரல் கேட்டது. அவர் ஜோசப் மாஸ்ரரோடு ஆனந்தன் வீட்டுக்கு வந்திருந்தார். அப்பா அம்மாவோடு கதைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரையும் கண்டபோது ஆனந்தன் மனம் சந்தோசத்தால் துள்ளியது. பீற்றர்சனுக்கு ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சி. அவனுக்குத் தன் அப்பாவையும், டேவிட்டரையும் கண்டதும் இரட்டிப்பு மகிழ்ச்சி.

இரவுப்பொழுது மகிழ்ச்சியாகக் கழிந்தது. ஆனந்தனின் திருமணம் மே மாதம் இருபத்தோராம் திகதி நடத்துவதற்கான பேச்சு நடந்து முடிந்தது. ஜூன் மாதம் பீற்றர்சன் மயூரியின் திருமணத்தையும் நடத்தி முடிக்க முடிவாகிவிட்டது. ஜோசப் மாஸ்ரர் ஒரு புரட்சிகரவாதி. அவருக்கு எம்மதமும் சம்மதமே. முரண்பாடுகளுக்கு மனிதமனங்களே காரணம் என்பதைப் புரிந்து கொண்டவர். ஆனந்தனின் பெற்றோர் எல்லாவற்றுக்கும் சம்மதம் தெரிவித்து விட்டனர். வாழப்போவது நமது பிள்ளைகள்தான். அவர்களது சந்தோசம்தான் முக்கியமானது. ஒவ்வொருவரும் விட்டுக் கொடுத்து வாழ்ந்தால் இந்த உலகத்தில் சொர்க்கத்தைக் காணலாம் என்பது ஆனந்தனின் அப்பா கணபதிப்பிள்ளையரின் வாதம்.

வந்தவேலைகளை முடித்து விட்டு இருவரும் புறப்பட்டனர். திருமணத்தை முடித்துவைப்பதற்கான வேலைகளைப் பார்க்க எல்லாரும் ஒன்றாகிச் செயற்பட்டனர். இவ்வளவு விரைவில் இவையெல்லாம் நடக்குமென்று மார்கிரட் எதிர்பார்க்கவில்லை. கொழும்பில் ஆனந்தனின் குடும்பத்தவர்கள் தங்குவதற்கு வீடு தேவைப்பட்டது. பாத்திமா தங்கள் வீட்டில் சகல வசதிகளையும் செய்து கொடுத்தாள். ஆனந்தன் தங்குவதற்கு லதா தங்கள் வீட்டில் ஒழுங்குகளைச் செய்தாள். மேரிக்காக பாத்திமாவும், லதாவும் தங்கள் குடும்பத்தவரோடு வேண்டிய ஒத்தாசைகளைச் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தார்கள். தங்களது உறவினரின் திருமணம்போல் கலந்து கொண்டு பாடுபட்டார்கள். தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற வேறுபாட்டைக் காணவில்லை. சைவம், கிறிஸ்த்தவம், பௌத்தம். இஸ்லாம் என்ற பாகுபாட்டைக் காணவில்லை. எல்லோரும் சங்கமித்த காட்சியைக் கணபதிப்பிள்ளை கண்டார்.

இப்படி எல்லா மக்களும் ஒன்றாக இருந்தால் நமது நாடு சொர்க்கமாகும். மனதினிலே எண்ணிச் சந்தோசித்தார். மனம் மகிழ்ந்தது. செபஸ்தியார் எதனை நினைத்தாரோ அதனை ஆனந்தன் நிறைவேற்றி வைத்தான். "மாகிரட் இப்ப என்ன சொல்கிறாய்". டேவிட் புன்னகையோடு கேட்டார். "எல்லாம் உங்கட தயவுதான்." மாகிரட் சிரித்துக் கொண்டே கூறினார். "மேரி நமது "கனவு மெய்ப்பட வேண்டும்' என்று இறைவனிடம் வேண்டுதல் செய்தோம். இன்று அதனை அவர் நிறைவேற்றியிருக்கிறார். நமது திருமணத்தில் எல்லாச் சமயத்தவரும் ஒன்றாகி நடத்தி வைத்துள்ளார்கள். இறைவன் ஒருவனே. அவனை எந்தப் பெயர்கொண்டும் அழைக்கலாம்". அவளது காதுகளில் ஓதினான்.

அவளுக்குப் பெருமையாக இருந்தது. மயூரி அடிக்கடி மேரியின் பக்கம் வந்து சீண்டிக் கொண்டிருந்தாள். "மயூரி உங்கட திருட்டுத்தனங்கள நானும் கவனிச்சன். அடுத்தமாதம் வருவீங்கதானே. அப்ப பார்ப்பம். "எங்க பீற்றர்சன"? மயூரியிடம் கேட்டாள். "அண்ணி சத்தம் போடதீங்க." சிரித்துக் கொண்டே ஓடினாள். திருமணத்தின் பின் மேரி திருகோணமலைக்குப் புறப்பட்டாள். பாத்திமாவும், லதாவும் தேம்பித்தேம்பி அழுதார்கள். "இவ்வளவு காலமும் சேர்ந்தொன்றாய் திரிந்தோம். இப்போது நீங்க ஒருபுறம். நாங்க ஒருபுறம் என்று பிரிஞ்சிட்டம்". லதா விசும்பினாள். மேரி கண்கலங்கி விம்மினாள். "உங்கட உதவிய மறக்கமாட்டன். அடிக்கடி கொழும்புக்கு வருவன்". கூறிப்புறப்பட்டாள்.

ஆனந்தனது இல்வாழ்வு கலகலத்தது. மயூரியின் திருமணத்தையும் நடத்திவைத்தார்கள். மேரி இரண்டு குழந்தைகளைப் பெற்று ஆனந்தனைத் தந்தையாக்கினாள். மேரியை தனது பேறாகவே நினைத்தான். அவனைப் பொறுத்தவரை இல்லறவாழ்வு இனித்தது. பதவியுயர்வு அவனைத் தேடிவந்தது. கல்வி நிர்வாகசேவையின் உயரதிகாரியாக வவுனியாவுக்கு வந்தான்.

## 20

ஆனந்தனுக்கு நினைவு திரும்பியிருந்தது. ராஜபக்சதான் எழுப்பினான். "மாத்தயா மேக்க பொண்ட.. இதைக்குடியுங்க.." தேநீரைக் கொடுத்தான். இனி அடிக்காமப் பார்ப்பது என்ர கடமை. என்ர நோனாக்கு ...உங்களத் தெரியுமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிச்சம் நல்ல மனிசன் என்றும் சொன்னா. எப்படி இதுநடந்தது என்று விசாரிச்சன். உங்கடவங்கதான் பிட்டிசன் எழுதியிருக்காங்க. எங்கட பெரிய கொமாண்டரும் சொன்னார். இன்டைக்கு டாக்டர் வருவார். உடம்பைக் காட்டுங்க. என்ன செய்யிறது. கஸ்டம் வந்தால் அப்படித்தான். நம்மளுக்கும் மனவருத்தம்தான்.'' அவன் உண்மையாகவே வருந்தினான். மெதுவாக எழுந்தான். வெளியில் கழிவறைக்குப் போகவேணும். கதவைத் திறந்து கழிவறைக்குப் போக உதவினான். முடிந்ததும் மெதுவாக அறையினுள் கொண்டுவந்து விட்டான்.

"மாத்தையா! நல்லா அடிச்சிருங்காங்க... முகமெல்லாம் வீங்கியிருக்கு''. அனுதாபத்தோடு சொன்னான். மெதுவாகத் தன்கையினால் தடவிப்பார்த்தான். தொட்ட இடமெல்லாம் தடித்திருந்தது. நொந்து வலித்தது. வாயைத் திறந்து தேநீரையும் குடிக்கமுடியாத அளவுக்கு உதடுகள் வீங்கியிருந்தன. புருவங்கள் புடைத்திருந்தன. உடல் முழுவதும் வலித்தது. சேட்டில் தொட்டந் தொட்டமாக இரத்தக்கறை. தன்விதியை நொந்து கொண்டான். நான்படும் இந்தத் துயரம் இனி எந்த இளைஞர்களும் படக்கூடாதது. இறைவனை வேண்டிக் கொண்டான். விட்டு விடுதலையாகி எனது மனைவி பிள்ளைகளோட போய் சேரவேண்டும். அவள் அங்கே எப்படி இருக்கிறாளோ?. கவலை அவனை ஆட்கொண்டது. மெதுவாக தேநீரைக் குடித்தான்.

"மாத்தையா...இப்ப டாக்டர் வருவார்...உடம்பைக் காட்டுங்க...சரியா? சொல்லிவிட்டு அவனது கடமையில் மூழ்கினான். அவன் சொன்னதுபோலவே டாக்டர் வந்தார். ராஜபக்ச கதவைத் திறந்துவிட்டான். அவன் வெளியே நின்று அவதானித்தான். டாக்டரைக் கண்டதும் மெல்ல எழுந்தான். "குட்மோர்னிங். ஐ ஆம் ஆனந்தன். டிப்பியூட்டி டிரக்டர் ஒப் எடியுகேசன்'' கஸ்டப்பட்டுத் தன்னை அறிமுகம் செய்தான். சொற்கள் வரமறுத்தன. தனது அடையாள அட்டையைக் காட்டினான். அவனிடம் இரண்டு அடையாள அட்டைகள் இருந்தன. அதிலொன்று கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அலுவலக அடையாள அட்டை. மற்றையது தேசிய அடையாள அட்டை. அவர் நெகிழ்ந்து போனார். ஒரு புன்னகையுடன் அவனைக் கவனமாகப் பரிசோதித்தார். "ஐ ஆம் டாக்டர் சுனில்'' அவர் கூறினார். அவனைப்பற்றிய தகவல்களைக் கேட்டறிந்தார். அனுதாபப்பட்டதை அவரது முகம் காட்டியது. அவரும் பெரும்பான்மை இனத்தவர்தான்.

"கான் யு றிமூவ் யுவர் சேட் பிளிஸ்'' டாக்டர் சொன்னதும் மிகக்கஸ்டத்துடன் கழற்றினான். உடல் நீலம்பாரித்து அடிகாயத் தழும்புகள் தெரிந்தன. "ஓ..மை கோட்...'' டாக்டர் விறைத்துப் போனார். "இப்படியுமா? மே... சார்ஜன் ..மே...மொக்கத...பளன்ன.. மெயாகே அங்க..ஒக்கம ..துவால. சார்ஜன்...இதென்ன. இவரது மேனியெங்கும்...காயங்கள்'' அவர் உண்மையிலேயே அனுதாபப் பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐ கான்ட் ரொலறெற் தீஸ் திங்ஸ். கி இஸ் அன் ஒபிசர். என்னால் இவற்றைப் பொறுத்துக் கொள்ளமுடியாது. இவர் ஒரு அரச உத்தியோகத்தர்" வேதனையோடு சொன்னார். "அப்பி ஒக்கம மினிசு... நாங்கள் அனைவரும் மனிதர்கள்" அவரது வாய் முணுமுணுத்தது. ஒரு தாளை வரவழைத்தார். நிறையவே எழுதினார். ஒன்றைக் கொடுத்தார். காவலறையில் பார்வைக்கு வைக்கும்படி கொடுத்தார். கடமைக்கு வரும் காவலர்களுக்கு அறிவுறுத்தலாக இருந்தது. "மே... சார்ஜன்..மேயாட்ட காண்ட இட்தென்ட எப்பா..இவருக்கு அடிக்க இடம்கொடுக்க வேண்டாம்." சொல்லிவிட்டு ஆனந்தனிடம் வந்தார். மருந்து கொடுத்து விடுவதாகச் சொல்லிவிட்டுச் சென்றார். சொன்னபடி மருந்து வகைகளை ராஜபக்ச கொண்டு வந்து கொடுத்தான்.

ஒரு கிழமை நிம்மதியாக அடிவதை இல்லாது நாட்கள் நகர்ந்தன. விடிவதும், பொழுது படுவதும் அவனுக்குத் தெரியாதிருந்தது. இந்தச் சித்திரவதை முகாமுக்குள் வந்து எத்தனை நாட்கள்?. "மாத்தயா!" கூறிக்கொண்டு ராஜபக்ச வந்தான். "அத தவச ஒகொல்லாங்கே உற்சவ தவச. நேயத? இன்றைய நாள் உங்கள் பெருநாள். பொங்கல் நாள் அல்லவா"? கேட்டான். "மகே நோனா கிறிபத் ஹதலா துன்னே. ஒயாட்ட தென்ட கியலா. கண்ட... எனது மனைவி பொங்கல் செய்து உங்களுக்குக் கொடுக்கும்படி தந்தவர் இந்தாங்க சாப்பிடுங்க". சொல்லிக் கொடுத்துவிட்டுச் சென்றான். அவனுக்கு வெளியில் என்ன நடக்கிறது என்று ஒன்றும் தெரியவில்லை. தன்னைக் கைது செய்த நாளைக் குறித்திருந்தான். தனது தினக்குறிப்பைப் பார்த்தான். மூன்று கிழமைகள் நகர்ந்திருந்தன.
ராஜபக்சயின் மனைவியை நினைத்துக் கொண்டான். அவள் தயாவதி. ஒருநாள் கல்வி அலுவலகம் வந்திருந்தாள். தனது கணவன் தூரத்தில் கடமையாற்றுவதாகவும், தனக்கு பக்கத்தில் உள்ள மூன்றுமுறிப்புப் பாடசாலைக்கு இடமாற்றம் தரும்படியும் கேட்டாள். அவளைப் பார்த்ததும் கட்டாயம் இடமாற்றம் கொடுக்க வேண்டிய நிலையில் இருந்தாள். தூரத்தில் கடமையாற்றுவதால் வஸ்சில் பயணம் செய்யவேண்டியிருந்தது. அவள் கடமையாற்றும் பாடசாலை அதிபரும் சிபார்சு செய்திருந்தார்.

ஒரு கர்ப்பவதிக்கு இதையாவது செய்யவேண்டும் என்பதால் உடனடியாக இடமாற்றத்தைச் செய்து கொடுத்தான். ஒரு நாள் பாடசாலை மேற்பார்வைக்காக அப்பாடசாலைக்குச் சென்றபோது அதிபர் அவளது கடமையுணர்வைப் பற்றிப் புகழ்ந்தார். அவளும் வந்து நன்றி கூறினாள். "நான் எனது கடமையைத்தான் செய்தேன்". மனதினுள் நினைந்து கொண்டான். அந்த நன்றியை அவள் மறக்கவில்லை. எல்லாச் சிங்களவர்களும் இனவிரோதிகள் இல்லை. சாதாரண மக்கள் நல்லவர்கள். இனவிரோதத்தை வளர்த்து விடுபவர்கள் சுயநல அரசியல்வாதிகள் என்பதை ஆனந்தன் அறிந்திருந்தான். இச்செயல் தமிழர்களிடமும் இருந்தது. முஸ்லிம்களிடமும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கலை வாயில் வைத்தான். உண்ணமுடியாதிருந்தது. போட்டிருந்த உடைகள் அழுக்கேறிக் கறுத்திருந்தன. டெனிம்துணி தடிப்பானது. அது தாக்குப் பிடிக்கும். ஆனால் சேட் கிழிந்து அழுக்கடைந்து பிணவாடை வீசியது. அவன் குளித்துப் பலவாரங்கள் கடந்து விட்டன. "ஒரு கல்விப்பணிப்பாளர் ஆதிவாசியாக ஆகிவிட்டார்" என்று தனக்குத்தானே சொல்லிச் சிரித்தான். விலங்குகள்கூடப் பற்களைத் துப்பரவு செய்வதாக அறிந்திருந்தான். சில குரங்குகள் பல் துலக்குவதாக வாசித்திருந்தான். "நான் பல்துலக்குவதில்லை. குளிப்பதில்லை. தலைவாருவதில்லை. படுக்கை விரித்துப் படுப்பதில்லை. எனக்கும் விலங்குகளுக்கும் என்ன வித்தியாசம்"?. தனக்குத்தானே கேட்டுக் கொண்டான்.

"மாத்தையா! அடுத்தகிழமை கூட்டுப்படை முகாமுக்கு அனுப்புவாங்கபோலக் கிடக்கு. பேசிக்கொண்டாங்க. அங்க போனா சி.ஐ.டி விசாரிக்கும். பிறகு விட்டிடுவாங்க" ராஜபக்ச ஒருநாள் சொன்னான். "எப்ப விடுவாங்க"? ஆவலோடு கேட்டான். "உங்கட உடம்புல காயங்கள் இருக்குத்தானே? அது சுகமாகமட்டும் இஞ்சதான் வெச்சிருப்பாங்க. டாக்டர் ஒருக்கா பார்த்தபின்தான் றிலீஸ் வரும். அதுவரை இங்கதான். ஆனால் இனி அடிக்கமாட்டாங்க. டாக்டர் சரியான றிப்போட் போட்டிருக்கார்". அவன் சொன்னவற்றை எண்ணிப் பார்த்தான். ஆனாலும் அவனுக்கு நம்பிக்கையில்லை.

இரவுவேளையில் கடமைக்கு வரும் சிப்பாய்கள் வந்து முறைத்துப் பார்த்து விட்டுச் செல்வார்கள். "அடோவ் கொட்டியா... ஓயலாட்டப் பாடமக் தென்டோன. அடேய்..புலி...உங்களுக்குப் பாடமொன்று தரவேணும்". சொல்லிக் கொண்டு போவார்கள். அவர்கள் காவலில் உள்ள இளைஞர்களை வதைத்தெடுப்பார்கள். "இந்த இளைஞர்கள் என்ன பாவம் செய்தார்கள்." அவன் மனம் அழும். இப்போது அவனது கண்களில் இருந்து கண்ணீர் வருவதில்லை. காலம் திருகோணமலை - கொழும்புக் கோச்சியைப் போல் ஊர்ந்தது. நாட்கள் வாரங்களாகி மாதமும் முடிந்து அரைவாசியாகியது. அவனுக்கு விடிவுதான் வரவில்லை.

கப்ரன் செனிவரத்ன வந்தான். ஆனந்தனின் கண்கள் அவனைக் கண்டு கொண்டன. இவன் ஏன் வாறான்? மனம் படபடத்தது. ராஜபக்ச கடமையில் இருந்தான். அவனிடம் ஏதோ கதைத்தான். சில படிவங்கள் நிரப்பப்பட்டன. கப்ரன் கையெழுத்திட்டுக் கொடுத்தான். ராஜபக்ச செனிவரத்னயுடன் வந்தான். கதவு திறபட்டது. ஆனந்தனை வெளியில் அழைத்தான். அவன் வந்தான். சிங்களத்தில் உரையாடினான். ராஜபக்ச அரைகுறைத் தமிழில் அதனை மொழிமாற்றம் செய்தான். கப்ரன் சொல்வது ஆனந்தனுக்கு நன்றாக விளங்கியது. "உங்கள எங்களுக்கு முன்பின் தெரியாது. உங்கட ஆக்கள்தான் பிட்டிசன் போட்டது. நாங்க விசாரிச்சம். காட்டில் இருட்டில் எது மான், எது மரை, எது புலி என்று விளங்காது. அதைக்கண்டு பிடிக்கவேண்டியது எங்கட கடமை. அதுக்காக எல்லாத்தையும் புடிச்சி வந்து விசாரிக்கிறம். உண்மையை அறிய உங்கள அடிக்க வேண்டியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுறம். சமாவென்ட...மன்னித்துக் கொள்ளுங்க." கப்ரன் சொல்லி முடித்தான்.

ஜீப் வந்தது. "என்ட..." ஆனந்தனை அழைத்தான். ராஜபக்ச "யன்ட மாத்தயா..போங்க" என்றான். ஆனந்தன் அவனுக்கு நன்றி கூறினான். பக்கத்து அறைக்கதவுகளை நோட்டம் விட்டான். பலமுகங்கள் எட்டிப்பார்த்தன. அந்த முகங்களில்தான் எத்தனை சோகங்கள். காவல் அறைகளில் இருந்து அழைத்துச் செல்லப் படுபவர்கள் அதிகமாக விசாரணக்கென அழைத்துச் செல்லப்படுவார்கள். பலர் திரும்பி வருவதேயில்லை. அவர்களுக்கு என்ன நடந்திருக்கும் என்பது ஆண்டவனுக் குத்தான் வெளிச்சம். சிலரைச் சித்திரவதையின்பின் கொண்டு வந்து விடுவார்கள். ஆனந்தனுக்கு என்ன நடக்கப்போகிறது என்று அவர்களுக்கு ஏக்கம். பரிதாபமாகப் பார்ப்பதைத் தவிர வேறு ஒன்றும் அவர்களால் செய்யமுடியாது.

செனிவரத்ன ஜீப்பின் முன்னாசனத்தில் ஏறியிருந்தான். ஐந்து சிப்பாய்கள் நின்றனர். ஆனந்தனை ஏறச் சொன்னார்கள். அவன் இருக்கையில் இருக்காது கீழே இருந்தான். அவனை சீற்றில் இருக்குமாறு சிப்பாய்கள் கூறினார்கள். அவனுக்குப் பயம் கௌவிக்கொண்டது. இப்படி இருக்கச் சொல்வார்கள். இருந்தால் அடித்துக் கீழே போட்டு மிதிப்பார்கள். அவன் தயங்கினான். கப்ரனே சொன்னான் "கமக்நஹ...சீற்றெக்க வாடிவென்ட...பரவாயில்லை சீற்றில் இருக்கலாம்". சீற்றில் இருந்தான். ஜீப் இராணுவமுகாமை விட்டு வெளியில் வரைந்தது. வவுனியா நகரின் ஊடாகச் சென்று நகரசபை வளாகத்தில் நின்றது.

இராணுவத்தினர் இறங்கினார்கள். ஆனந்தனும் இறங்கினான். நகரசபை கூட்டுப்படை முகாமாக மாறியிருந்தது. நகரசபை இயங்கவில்லை. இராணுவ முகாமாக மாற்றப்பட்டிருந்தது. அங்கு முப்படையினரும் இருந்தார்கள். எங்கும் இராணுவத்தினரும், வாகனங்களுமாக நிறைந்திருந்தது. ஆனந்தனுக்குக் காவலாக வந்த இராணுவ வீரர்கள் ஜீப் பக்கம் நின்றார்கள். கப்ரன் ஒரு அறையினுள் நுழைந்தான். சற்று நேரத்தால் ஆனந்தனை அழைத்தான். கப்ரன் முன்னால் சென்றான். பின்னால் ஆனந்தன் சென்றான். ஒரு அறை அலுவலகம்போல் இருந்தது. எழுதுவினைஞர்களாகப் பல பொலிஸார்கள். ஒருவரிடம் கோவையைக் கொடுத்தான். அவர் பெயரைப் பதிந்தார். மற்ற மேசையில் உள்ளவர் உயரம், நிறை அகியவற்றைக் கணித்துப் பதிந்தார். இன்னுமொருவர் விரலைப் பிடித்து அழுத்திக் கைவிரல் அடையாளங்களை பதியச்செய்தார். முடிந்ததும் வெளியில் வந்தான். அவனைப் போல் பலர் நின்றிருந்தனர்.

காத்திருந்த இன்னுமொரு பொலிஸக்காரர் ஆனந்தனது கைகளைப் பிடித்தான். பக்கத்தில் நின்ற இன்னுமொருவரது கையோடு சேர்த்து விலங்கை மாட்டினான். ஆனந்தன் அதிர்ந்துவிட்டான். ஒரு குற்றமும் செய்யாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவியின் கைகளுக்கு விலங்கா? உடல் வெடவெடத்தது. மனம் அழுதது. இது ஒரு நாடா? "பேயரசாண்டால் பிணந்தின்னும் சாத்திரங்கள்." எவ்வளவு அற்புதமாகப் பாரதி சொன்னான். பேனா பிடித்து "ஆனா'ச் சொல்லிக் கொடுத்த கைகளில் விலங்கினை மாட்டி வேடிக்கை பார்க்கிறது நீதி. என்ன கொடுமை. இளைஞர்கள் வன்செயலில் இறங்குவதற்கு இவையெல்லாம் காரணங்கள்தானே? கைவிலங்கோடு சோடி சோடிகளாய் அழைத்துச் சென்றார்கள். ஒரு அறையின் கதவைத் திறந்தான். விலங்கைக் கழற்றிவிட்டான். உள்ளே போகும்படி பணித்தான்.

## 21

அவன் கண்கள் அறையை நோட்டம் விட்டன. அந்த அறை விசாலமானது. இரண்டு வகுப்பறைகளின் அளவாக இருந்தது. அவனைப் பல கண்கள் அவதானித்தன. அறையின் சுவரோரமாகச் குந்தியும், படுத்தும் கிடந்தார்கள். பத்து வயதுச் சிறுவர்கள் தொடக்கம் எழுபது எண்பது வயது வயோதிபருமாக சுமார் எண்பதுபேர் இருந்தார்கள். அவர்கள் இருப்பதற்கான அடையாளங்கள் தெரியவில்லை. வாய்திறவாது அமைதியாக இருந்தார்கள். ஆனந்தனைக் கண்டதும் அனுதாபமாகப் பார்த்தார்கள்.

இந்த நெருக்கமான இடத்தில் தான் எங்கிருப்பது? அவன் கண்கள் சுற்றிச் சுழன்றன. சுவரோரமாக ஒரு இளைஞன் தலையசைத்துத் தன்பக்கம் வரும்படி சைகை செய்தான். அவன் பக்கத்தில் சென்றான். அவன் எழுந்து அரக்கி இடம் கொடுத்தான். அப்படியே நிலத்தில் இருந்தான். ஆனந்தன் இருந்தபின் அவனும் இருந்து கொண்டான். அறைகளைச் சுற்றி ஆமிக்காரர்கள். உள்ளிருப்பவர்களது நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும் செய்தார்கள். அவர்கள் என்ன கதைக்கிறார்கள் என்று அவதானித்தார்கள். "சோதி! உனக்குத் தெரிந்தவரா"? பக்கத்தில் இருந்தவன் இரகசியமாகக் கேட்டான். தலையசைத்து 'ஆம்' என பதிலளித்தான். கதவு திறபட்டால் பயத்தில் நடுங்குவார்கள். கதவு மூடும்வரை அவர்களுக்கு நிம்மதியிருக்காது. இரவானால் பயம் அதிகரிக்கும். கண்களை மூடியபடி குப்புறக் கிடப்பார்கள்.

"சேர்.. நீங்க கல்விப்பணிப்பாளர் ஆனந்தன்தானே"? ஆனந்தனுக்கு ஆச்சரியம். அவன் பக்கம் திரும்பிப் பார்த்தான். அவன் தன்னை அறிமுகம் செய்தான். "சேர்... நான்தான்....சோதிநாதன்...செட்டிகுளம் மகாவித்தியாலயத்தில் ஏ.எல். வகுப்பில படித்தனான். எங்களுக்குப் புவியியல் பாடம் சொல்லித் தந்திருக்கிறீங்க. உங்கட உதவியால எனக்கு புவியியல் பாடத்தில ஏ கிடைச்சிருக்கு. யுனிவேசிற்றிக்கும் தெரிவாகியிருக்கிறன்" சோதி தன் சேதிகளைச் சொன்னான்.

ஆனந்தன் ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தான். "உங்கட பார்வையின் அர்த்தம் எனக்குப் புரிகிறது. சேர்... நான் எங்கட தோட்டத்தில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தன். பலபக்கத்தாலயும் ஆமிக்காரர் வந்தாங்க. என்னோட வேலசெய்தவர்களையும் பிடித்து அடித்தார்கள். ஆமிக்காம்புக்கு ஏற்றிச் சென்றார்கள். ஆமிக்காம்பில இரண்டு கிழமை போட்டு சித்திரவதை செய்தார்கள். பிறகு இஞ்ச கொண்டுவந்து போட்டிருக்காங்க. எவ்வளவு கொடுமை சேர். நாங்க இவங்களுக்கு என்ன செய்தம்? ஏன் இந்த ஆக்கினயச் செய்கிறார்கள்''? அவன் சோதி குமுறினான். அவனது கண்களில் கண்ணீர் வற்றியிருந்தது. அவனது உடலெங்கும் அடியின் தழும்புகள். இந்த இளைஞர்கள் வாழவேண்டிய வயதில் எவ்வளவு கனவுக்கோட்டைகளைக் கட்டியிருப்பார்கள். அவற்றை இடிக்கிறார்களே. மனம் நொந்தது.

ஆனந்தனுக்கு சோதியை மட்டுக்கட்ட முடியாதிருந்தது. தாடி மீசை வளர்ந்திருந்தது. அவன் பத்தென்பது இருபது வயது இளைஞனாக இருந்தான். அவனைப் பார்த்து "அப்பா யோகநாதனா''? ஆனந்தன் கேட்டான். " ஓம்'' தலையத்தான். "சேர் பலமாகக் கதையாதீங்க. ஆமிக்குக் கேட்டால் வந்து எல்லாருக்கும் அடிப்பாங்க.'' பயந்தவாறே சொன்னான். சோதியை நினைவு கூர்ந்து பார்த்தான். சோதியின் குடும்பம் வறுமையோடு போராடும் ஏழைக்குடும்பம். பாடசாலையில் படித்தால் வயிறு வாடும். அந்தநேரத்தில் நிலத்தோடு போராடி வேலைசெய்தால் அரைவயிறாவது நிறையும். இப்படியான குடும்பங்கள் செட்டிகுளத்தில் ஏராளம். பள்ளிக்குப் போவதைவிட நிலத்தில் வேலை செய்வது நல்லது என்ற மனப்பாங்கு கொண்ட மக்களிடை பரவியிருந்தது.

இதனை மாற்றியமைக்க ஆனந்தன் பாடுபட்டான். இதனால் அதிபர்களோடு முரண்பாடுகள் தோன்றியதையும் எண்ணிக் கொண்டான். சில கல்விப் பணிப்பாளர்கள் பாடசாலைகளுக்கு மேற்பார்வைக்காகப் போவார்கள். பாடசாலைகளில் உள்ள லொக் புத்தகத்தில் தங்கள் வரவை உறுதிப்படுத்துவதற்காகக் கையெழுத்திடுவார்கள். திரும்பிவிடுவார்கள். ஆனந்தன் விதிவிலக்காக இருந்தான். தானாகவே வகுப்புக்களுக்குச் சென்று மாணவர்களோடு பழகிப் பாடங்களைக் கற்பித்தான். வவுனியா மாவட்டப் பாடசாலைகளில் புவியியல் பாடம் கற்பிக்க ஆசிரியர்கள் இருந்தார்கள். ஆனால் மாணவர்களது மனதைக் கொள்ளைகொள்ளும் முறையைக் கையாளவில்லை.

அதனால் மாணவர்கள் அதனைவிட்டோடினார்கள். சோதினாதன் பல மாணவர்களோடு ஆனந்தனிடம் வந்தான். மாணவர்கள் தங்கள் நிலைப்பாட்டை விளக்கினார்கள். ஆனந்தன் புவியியல் ஆசிரியர்களைச் சந்தித்தான். அவர்களுக்குப் பயிற்சி வழங்கி நெறிப்படுத்தினான். அவனும் வகுப்புகளில் கற்பித்தான். பல பெற்றோர்கள் வரவேற்றார்கள். யோகநாதன் அவனை நேரில் பார்த்து நன்றி தெரிவித்தார். அதனை நினைவு கூர்ந்தான். அதன் பலாபலனை நேரில் கண்டு கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறையின் மூலையில் பெரிய வாளியிருந்தது. அதற்குள்தான் சிறுநீர் கழிக்க வேண்டும். இன்னொரு மூலையில் குடிப்பதற்காக நீர் சேகரித்து வைப்பதற்கான வாளி. ஒவ்வொன்றும் தட்டினால் மூடியிருந்தது. தேவையான போது மூடியைத் திறந்து பாவிக்கலாம். அறையெங்கும் கழிவறை மணம். முதலில் கஸ்டமாகத்தான் இருந்தது. மாலையாகி விட்டது. உள்ளிருப்பவர்கள் எழுந்து ஒருவர்பின் ஒருவராக நின்றனர். சுவரில் பென்சிலினாலும், கரித்துண்டுகளாலும் வரைந்த கடவுள் உருவங்கள். சுண்ணம் பூசிக் காவியடித்த சுவரைத் தட்டினால் உதிரும். நகத்தினால் சுவரைச் சுரண்டி அற்புதமான உருவங்களை அமைத்திருந்தார்கள். சுவரெங்கும் சிவன். பிள்ளையார், முருகன், ஜேசு என சித்திரங்கள் நிறைந்திருந்தன.

கோயில்களின் முகப்புத் தோற்றங்கள் தத்ருபமாகத் தெரிந்தன. அனைவரும் சைவ, கிறிஸ்தவ சமயங்களைச் சேர்ந்த தமிழர்கள். அங்கு சமய வேற்றுமைகளைக் காணவில்லை. திருக்கேதீச்சரத்திலுள்ள கோயில் இருக்கும். மடுமாதாவின் திருக்கோயில் அடுத்திருக்கும். பிள்ளையார் சித்திரம் இருக்கும். பக்கத்தில் சிலுவை இருக்கும். வரிசையில் ஒருவர்பின் ஒருவராக ஒவ்வொரு சித்திரங்களின் முன்னால் நின்று காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, உருகியழும் அந்த மக்களைப் பார்த்து ஆனந்தன் விழிநீர் சிந்தியழுதான். சிவனையும், பிள்ளையார் முருகனையும், தொழுது வணங்கும் சைவசமயத்தவர், மடுமாதவின் திருப்பாதங்களையும், சிலுவையையும் தொட்டுக் கண்ணில் ஒற்றிவணங்குவதையும் கண்டான்.

நான்கு பக்கச்சுவர்களையும் தடவித் தொழுது தங்கள் இடத்துக்கு வந்து சேர ஒரு மணிநேரம் சென்றது. ஏழுமணிக்குக் கதவடியில் காத்திருந்தார்கள். கதவு தட்டப்பட்டுத் திறபட்டது. பெரிய பெட்டி வெளியிருந்து உள்ளே தள்ளப் பட்டது. உணவுப் பொட்டலங்கள் பெட்டியினுள் இருந்தன. ஒரு ஒழுங்குமுறையினை தமக்குள் ஏற்படுத்தியிருந்தார்கள். அந்த நாளுக்குரியவர்கள் உணவுப் பொட்டலங்களைப் பகிர்ந்தார்கள். பலருக்கு அரைவயிறும் நிறையாது. உணவும் போதிய அளவு இல்லை. உண்பதற்கும் மனமில்லை. ஆனந்தனுக்கு சோதி உணவுப் பொட்டலத்தைக் கொடுத்தான். ஆனந்தன் அரைவாசியை மட்டும் எடுத்து விட்டு மிகுதியை சோதியிடம் கொடுத்தான். அவர்கள் பகிர்ந்து உண்டார்கள்.

பொது வாளியினுள் கைகழுவினார்கள். முடிந்ததும் சுவரில் சாய்ந்திருப்பதும். அப்படியே நிலத்தில் படுப்பதுமாக இருந்தார்கள். ஆனந்தனுக்கு ஒருவகையில் நிம்மதி. இவ்வளவு நாளும் தனியறையிலேயே காலத்தைக் கழித்தான். இன்று பலரோடு இருக்கிறான். ஆளுக்காள் துயரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்பாக இருந்தது. பலருடன் அளவளாவி விடயங்களைச் சேகரித்துக் கொண்டான். இரவு நடுச்சாமம் இருக்கும். ஆனந்தனுக்கு உறக்கம் வரவில்லை. விழித்திருந்தான். கதவு திறபடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தம் கேட்டது. மெதுவாகப் பார்த்தான். அறைக்குள் மங்கலான மின்குமிழ் எரிந்து கொண்டிருந்தது. இரண்டு பேர் வந்தார்கள். அவர்கள் கைகளில் 'டோச் லைற்' இருந்தது. ஒவ்வொருவராகப் பார்த்து வந்தார்கள். ஆனந்தனின் முகத்தில் 'டோச் லைற்' வெளிச்சம் பாய்ந்தது. அவன் கண்களை இறுக மூடியபடி கிடந்தான்.

"இன்டக்கித்தான் வந்தனான். என்னைத்தான் தேடுறாங்கள்போல. நடக்கிறது நடக்கட்டும்". அவனது மனம் திக்திக் என்று அடித்துக் கொண்டது. அவர்கள் விலகிப்போவது தெரிந்தது. போன உயிர் மீண்டும் தன்னிடம் வந்த உணர்வு. தன்னோடு வந்த சிலரைத் தேடிக் கண்டு பிடித்து விட்டார்கள். இரண்டு பேர்களைத் தட்டி எழுப்பினார்கள். "மே..வறேங்..எலியட்ட ..சத்தங் போடவாணாம்.. தேருணவாத... " இழுத்தெடுத்து வெளியில் கொண்டு போனார்கள். கதவு பூட்டப்பட்டது. அவர்கள் போனதும் எல்லாரும் எழுந்து குந்தியபடியே இருந்தார்கள். அனைவரது கண்களும் பேயறைந்ததுபோல் பிதுங்கிக் கொண்டிருந்தன.

அதிகாலை நான்கு மணியிருக்கும். கதவு திறபடும் சத்தம் கேட்டது. கொண்டு போன இருவரையும் இழுத்து உள்ளே தள்ளினார்கள். கதவு பூட்டப்பட்டது. அவர்கள் "ஐயோ அம்மா" என அழுது புலம்பினார்கள். வெளியில் இருந்து ஆமிக்காரர் அதட்டினார்கள். அவர்கள் இருவரையும் சூழ்ந்து குந்தியிருந்து தடவிக் கொடுத்தார்கள். அவர்கள் அழுதவண்ணம் கிடந்தார்கள். உடலெங்கும் அடிகாயங்கள். இரத்தக் கசிவுகள். முகமெல்லாம் தடித்து வீங்கியிருந்தது. உதடுகள் வெடித்து இரத்தம் கசிந்து காய்ந்திருந்தது. "இவங்களுக்குப் பாடம் படிப்பிக்கவேணும். எங்களச் சித்திரவதை செய்வதுபோல் நாங்களும் அவங்களச் சித்திரவதை செய்யவேணும்". ஒருவன் கொதித்தான். ஆனந்தன் கேட்டுக்கொண்டு அசையாது இருந்தான்.

அன்றிரவு ஒருவர் வயிற்றுப்போக்கினால் அவதியுற்றார். ஆனந்தன் நடப்பதை அவதானித்தான். அவரை வாளியினுள் மலங்கழிக்க உதவியதையும், அதற்குள்ளேயே குடிப்பதற்காக வைத்திருக்கும் நீரைப் பயன்படுத்தி சுத்தப்படுத்தியதையும் கண்டு கொண்டான். ஒருவருக்கு ஒருவர் உதவுவதைக் கண்டு உள்ளம் மகிழ்ந்தான். இவர்கள் வெளியில் இப்படி உதவுவார்களா? மனதினுள் எண்ணிக் கொண்டான். இது ஒரு புதுமையான உலகம்தான். ஒவ்வொருவராக எழுந்து விட்டார்கள். வாளி சிறுநீரால் நிறையத் தொடங்கியது. எழுந்ததும் வரிசையாக ஒருவர்பின் ஒருவராகச் சுவர்களைப் பார்த்துச் சுற்றிக் கும்பிட்டு வந்தார்கள். அவர்களது பிரார்த்தனைகள் இறைவனின் செவிகளில் விழுவதில்லையா? இறைவனுக்குச் செவிகள் இல்லையா? ஒருவனை ஒருவன் வருத்தும்போது அதனைத் தட்டிக் கேட்கப் படைத்தவனால் முடியாதா? ஒரு இனத்தை இன்னுமொரு இனம் அடக்கி சித்திரவதை செய்து ஆளுவதை யார் கேட்பது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழிகள் கூவுவது இல்லை. வவுனியா நகர் சோபையிழந்து கிடந்தது. இராணுவத்தின் அட்டகாசம் தலைவிரித்தாடியது. எப்பொழுது யாரைக் கைது செய்வார்கள் என்பது தெரியாது. நகரில் இருந்த சனங்கள் பயத்தின் பிடியில் இருந்தனர். வீடுகளில் இருந்து காலை ஒன்பது மணிக்குப்பின்னரே கடைகளுக்கு வருவார்கள். பொருட்களை வாங்குவார்கள். உடனேயே வீடுகளுக்குப் போய்விடுவார்கள். பலர் யாழ்ப்பாணம் சென்றுவிட்டார்கள். வவுனியா மாவட்டத்தில் பிறந்து வாழும் மக்கள் எங்கே போவார்கள்? இரவுவேளைகளை ஓரிடத்தில் கூடி ஒன்றாக இரவைக் கழித்தார்கள். பெரும்பாலும் கிறிஸ்தவக் கோயில்களில்தான் இரவைக் கழிப்பார்கள். விடிந்ததும் வீடுகளுக்குப் போவார்கள்.

விடிந்து எட்டரை மணியாகியிருந்தது. கதவு திறபட்டது. "அடோவ்...எலியட்ட வறேங்.. வெளியில வாங்கடா" சிப்பாய்கள் அழைத்தார்கள். வெளியில் வந்தவர்களை இருவர் இருவராக விலங்கிட்டார்கள். முதலில் ஆறு சோடிகளை வெளியில் எடுத்தார்கள். வரிசையில் கழிவறைப்பக்கம் கூட்டிச்சென்று விலங்கைத் திறந்து விட்டார்கள். "இக்மன்ட்ர வறேங் கெதியா வா" சொன்னார்கள். கழிவறைகளைச் சுற்றிக் காவலிருந்தார்கள்.

கழிவறைகள் அடையாத வாயிலகங்களாகச் சிரித்தன. அதற்குள்ளேயே குழாயில் நீர் வசதியிருந்தது. வாயை அலம்பி, கண்களை நனைத்து, கழிப்புக்கள் செய்து வந்தார்கள். சற்றுச் சுணங்கினால் "மொனவத கறனபாங்" சொல்லி அடித்தார்கள். முடிந்து வந்ததும் விலங்கிட்டார்கள். பழையபடி அறையினுள் விட்டார்கள். அவர்களின்பின் மற்றவர்கள். அறையினுள் உள்ள கழிவு நிறைந்த வாளிகளைத் தூக்குவதற்கு "நான் நீ" என்று போட்டி. அவற்றைக் கொண்டு செல்பவர்களுக்கு விலங்கிடமாட்டார்கள். சற்றுத் தூரத்தில் குழிதோண்டிக் கொட்டவேண்டும். அந்தநேரத்திலாவது சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் பேராசை அவர்களுக்கு. ஆனந்தனின் நேரம் வந்தது. அவனது கையைப்பிடித்து இன்னொருவரது கையோடு விலங்கிடப் பட்டது. கழிவறைக்குப் போனதும் விலங்கைத் திறந்து விட்டார்கள். வாயை அலம்பி கண்களில் தண்ணீரை வாரியடித்து, கழிப்புக்காக முயற்சித்தான். திறந்த மலசலகூடம். பழக்கமில்லை. ஆமிக்காரர் அவசரப்படுத்தினார்கள் வந்து விட்டான். எல்லோரும் கடன்களை முடிந்து வந்தார்கள். பழையபடி கதவு பூட்டப்பட்டது.

## 22

சற்று நேரத்தால் கதவு திறபட்டது. ஆமிக்காரர் உள்ளே வந்தார்கள். பெரிய அட்டைப் பெட்டியுள் பாண் இருந்தது. வாளியில் சம்பல் வந்தது. ஒவ்வொருவராக வரிசையில் தட்டோடு வரும்படி பணித்தார்கள். ஆனந்தனும் வரிசையில் நின்றான். மற்றவர்களைப் பின்பற்றிக் கொண்டான். ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறாத்தல் பாணை மூன்றாக வெட்டியிருந்தார்கள். ஒருதுண்டுப் பாணைப் பெற்றதும் சம்பல் உள்ள இடத்துக்கு நகரவேண்டும். அங்கு சம்பல் வழங்கப் பட்டது. பெற்றுக்கொண்டான். பாணை இரண்டாக பிய்த்து ஒருதுண்டை பக்கத்தில் இருந்த இளைஞனுக்கு நீட்டினான். "சேர்..நீங்க சாப்பிடுங்க.." அவன் கூறினான். "பரவாயில்ல.. எனக்கு இது அதிகம். நீங்க சாப்பிடுங்க.." சொல்லிக் கொடுத்தான். அவன் நன்றியோடு பெற்றுக் கொண்டான்.

உயிரை உடம்பில் தக்கவைப்பதற்காக உண்டார்கள். விடுதலையாகி வெளியில் போய் உறவினர்களோடு சேர்ந்து சந்தோசமாக வாழக் கனவு கண்டார்கள். அந்தக்கனவுகள் மெய்ப்படுமா? இந்த அப்பாவிகளின் "கனவு மெய்ப்பட வேண்டும். இறைவனைப் பிரார்த்தித்தான். இந்து சமுத்திரத்தின் சொர்க்கம் இந்த இலங்கைத்தீவு. இங்குவாழும் மக்கள் அனைவரும் சகோதரர்களாக வாழக்கற்றுக் கொண்டால் இங்கு சொர்க்கத்தைக் காணலாம். மனிதன் பிறக்கும்போது என்னசாதியில் பிறக்கிறான். என்ன மொழியைக் கற்றுவந்தான். எந்தச் சமயத்தைத் தழுவி வந்தான். எந்தக் கடவுளரைத் தரிசித்து வந்தான்?. விலங்குகள் போல்தானே மனிதனும் கருவறையில் இருந்து பிறந்தான்.

தனது உணர்வுகளைப் புரியவைக்கவும், மற்றவர்களின் எண்ணங்களை விளங்கிச் செயற்படவும், தொடர்பாடவும்தான் மொழியினை தனது சூழலுக்கேற்பவும், வல்லமைக்கேற்பவும் ஏற்படுத்திக் கொண்டான். நல்ல வழிமுறையில் வாழவேண்டும் என்பதற்காகச் சமயங்களை ஏற்படுத்தி வாழப்பழகிக் கொண்டான். போட்டி பொறாமையில்லாது எல்லோரும் உரிமையோடு வாழ்வதற்காகப் பல்வேறு தொழில்களைக் கற்றுக் கொண்டான். அவற்றைச் சுயநலத்துக்காகப் பயன்படுத்தியதாலேயே சாதிப்பாகுபாடு, சமய, மொழி முரண்பாடுகள் தோன்றின. சைவமும், சமண, புத்த,கிறிஸ்தவ இஸ்லாம் சமயங்கள் கூறுவதென்ன? அருவமும் உருவமும் இல்லாத பரப்பிரம்மத்துக்கு உருவத்தையும் கொடுத்து, பலபெயர்களுமிட்டு, கோயில்களை அமைத்து அடிதடி சண்டையிட்டு மாய்கின்றார்களே. பிரபஞ்சத்தில் எது நிலையானது? எல்லாம் மாற்றத்துக்குரியது. நிலையில்லாதது. இதனை மனிதன் மறந்து விட்டான். ஒரு கருவியால் ஒரு உயிரைக் கொல்லும் மனிதன் தனக்கும் மரணம் உண்டு என்பதை ஏன் சிந்திக்க மறந்தான்?.

"வானாகி மண்ணாகி, வளியாகி ஒளியாகி, ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய், கோனாகி யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டு வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே' என அற்புதமாகச் சொன்ன மணிவாசகப் பெருமானை நினைந்து நெக்குருகினான். மனிதனுக்கு மொழி தேவைதான். அவரவருக்கு அவரது மொழி சிறந்ததுதான். சமயமும் சிறந்ததுதான். அதனை மற்றவர்கள்மேல் திணித்து அவர்களைப் பின்பற்ற வற்புறுத்துவது என்ன நியாயம்.? ஆனந்தனின் மனம் போர்க்களமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கூட்டுப்படை முகாமுக்கு வந்து நான்கு நாட்கள் ஆகிவிட்டன. நாட்கள் மெல்லமெல்ல நகர்ந்துவிட்டன. இன்று விடிந்தால் ஐந்தாம் நாள். அவனது சிந்தனை விரிந்தது. இந்த நாட்களில் அவன் கற்றுக் கொண்ட பாடங்கள் ஏராளம். மனிதன் விலங்குகளைவிடவும் மோசமானவன் என்பதனைக் கற்றுக் கொண்டான். இன மத மொழி வெறி பிடித்தவன் என்பதனைக் கற்றுக் கொண்டான். வாழ்வதற்கு நல்வழிகளைக் கூறிய மகான்களின் அறிவுரைகளைத் தனக்குச் சாதகமாக மாற்றியெடுப்பதில் மனிதன் கைதேர்ந்தவன் என்பதனைக் கற்றுக் கொண்டான்.

மனிதனை மனிதன் அடித்துத் துன்புறுத்துவதில் இன்பம் காண்பவன் என்பதனைக் கண்டு கொண்டான். மற்றவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற மனப்பாங்கு கொண்ட மனிதர்களும், எல்லோரும் சமமாக வாழவேண்டும் என்ற கொள்கையுடையவர்களும் நிறையவே இருப்பதையும் கற்றுக் கொண்டான். வீட்டில் தாய்தந்தையோடு இருக்கும்போது, அவர்களது சொற்களைக் கேட்காது தமது போக்கில் திரிந்த இளைஞர்கள் அதற்காக வருந்துவதையும் கண்ணாரக் கண்டு கொண்டான். குற்றமேதும் செய்யாமலேயே கைது செய்து கொண்டுவந்து சித்திரவதைக்குள் சிக்கி வருந்தும் இளையோரையும் கண்டு கொண்டான். வாழ்க்கையை அனுபவித்தது போதும், இனி இறையடியை நோக்கித் தவமிருக்க வேண்டிய முதியோரையும் கொண்டு வந்து வருத்துவதையும் கண்டு கொண்டான்.

கண்களை மூடி நினைவுகளில் மூழ்கி, அந்த நினைவுகளால் எத்துண்டு, இடறிவிழும்போது கண்களை மெல்லத் திறந்து, தான் இருக்கும் சூழலைப் புரிந்து சுதாகரித்துக் கொள்வதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தான். அந்தச் சூழலை அவதானித்தான். இன்று ஐந்தாம் நாள். இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்த வாழ்க்கை? என்னைப்போல் கௌதம புத்தர் இவர்கள் கையில் அகப்பட்டிருந்தால் அவர் என்ன செய்திருப்பார்? இப்படித்தானே யேசுநாதரைச் சித்திரவதை செய்து சிலுவையில் அறைந்தார்கள். வித்தியாசமான கற்பனையில் நீச்சலடித்தான். இன்றோடு இரண்டு மாதங்கள் பறந்தோடிவிட்டன. எனது மேரியும், பிள்ளைகளும் எப்படி இருந்து வருந்துவார்களோ தெரியாது. அவனுக்கு மேரியின் எண்ணம் விஸ்வரூபமெடுத்தது.

"ஆனந்தன்...கவுத..?.எலியட்ட என்ட..'' கதவில் தட்டி இராணுவச் சிப்பாய் சத்தமிட்டான். கதவு திறந்து கொண்டது. ஆனந்தனுக்கு நெஞ்சடித்தது. அடிவிழாமல் கொஞ்சநாட்கள் இருந்து விட்டான். இன்றைக்கு என்ன செய்யப்போறாங்களோ? நினைவோடு வெளியில் வந்தான். முன்னால் கப்ரன் செனிவரத்ன நின்றான். ஆனந்தனைக் கண்டதும் "யாளுவோ...கோமத? நண்பனே ..எப்படி..''? ஒரு நக்கலோடு கேட்டான். தன்னோடு வரும்படி அழைத்தான். அவன் முன்னால் சென்றான். ஆனந்தன் அவனைத் தொடர்ந்து சென்றான். "எங்கே கூட்டிச் செல்கிறான்.''? மனதுக்குள் தீப்பற்றிக் கொண்ட உணர்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறையொன்றுக்குள் சென்றான். ஆனந்தனும் பின்னால் சென்றான். அந்த அறையினுள் அமைதியாக வாட்டசாட்டமாக ஒருவர் இருந்தார். கப்ரன் அவருக்கு மரியாதையாக சலூற் அடித்தான். பின் ஒரு கோவையை அவர்முன் வைத்தான். அவர் கோவையைப் புரட்டினார். புரட்டும் போது ஆனந்தனையும் நோட்டம் விட்டார். ஒரு பத்து நிமிடங்கள் அந்தக் கோவையைப் பார்வையிட்டார். அவரது பார்வை ஆனந்தனின் விழிகளில் மொய்த்ததை உணர்ந்தான். அவரது செயல்களை உன்னிப்பாக அவதானித்தான். கோவையினை மூடிவிட்டுக் கண்களை மூடிக்கொண்டார். பின் திறந்து ஆனந்தனை நோக்கினார்.

அவர் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசினார்."மிஸ்டர் ஆனந்தன்! உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்'' அவர் விசாரித்தார். "சேர்.. எனது பெயர் ஆனந்தன்... நான் பிரதிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றுகிறேன்...'' சுருக்கமாக சிலவற்றைக் கூறினான். நடந்தவற்றை விளக்கினான். "எனக்கு எல்லாம் தெரியும். உங்களைப்பற்றிய தகவல்கள் என்னிடம் இருக்கின்றன''. கப்ரனைப் பார்த்தார். அவன் நிமிர்ந்து நின்றான்.

" சரி.......கப்ரன் செனிவரத்ன, இவரை எதற்காக, ஏன் கைது செய்தீர்கள்.''? சிங்களத்தில் வினாவினார். கப்ரன் குற்றங்களை அடுக்கிக் கொண்டு போனான். அவர் கையை உயர்த்தி நிற்பாட்டினார். "பிட்டிசன் என்பதற்காக ஒருவரைக் கைது செய்யக்கூடாது. தண்டிக்க உங்களுக்கு உரிமையில்லை. ஆனந்தன் உங்களைப் போல் ஒரு அரசஉத்தியோகத்தர். உங்கள் தரத்தைவிட அவர் உயர்பதவி வகிக்கிறார். அதுவும் புனிதமான கல்விப் பணியில் சேவையாற்றுகிறார். அவர் தமிழர் என்பதற்காக அவர் இந்தநாட்டுப் பிரஜையில்லையா? நான் உங்களைப்போல் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிங்களவர்தான்''. சற்று அமைதியானார்.

"எனக்கும் மனச்சாட்சியுண்டு. இப்படி நீங்கள் தொடர்ந்து கொண்டு போனால் இதன் விளைவு பாரதூரமாக இருக்கும். இதற்கு நீங்க, நாங்க, ஏன் நாமெல்லோருமே பதில்கூறவேண்டிய நாள் வரும். அப்போது நமது தீவில் இரத்த ஆறு ஓடும். அநியாயமாக அப்பாவிகள் கொல்லப்படுவார்கள். இந்தச் செயலை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அப்பாவிகளை வருத்தக் கூடாது. நீங்கள் உண்மையான குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கவேண்டும். அவரது முகத்தைப் பாருங்கள். அவர் ஒரு கல்விமான். அவரைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும். இனமத மொழி வேற்றுமைகளுக்கு அப்பால் அவர் சேவை செய்கிறார். தெரியுமா உங்களுக்கு.'' ஆனந்தனுக்கு மனம் நிறைந்ததுபோல் இருந்தது. "இப்படிப்பட்ட அதிகாரிகள் இந்த நாட்டில் இருக்கவேண்டும். இருந்தால் நீதி நிலைத்திருக்கும்.'' மனதினில் நினைந்துகொண்டான். "நீங்கள் தீர விசாரித்திருக்க வேண்டும். எத்தனை சிங்களப் பாடசாலைகளில் இவரைப் பற்றி விசாரித்தீர்கள்.? எத்தனை தமிழ்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் பாடசாலைகளில் விசாரித்தீர்கள், இவரது மேலதிகாரிகளிடம் விசாரித்தீர்களா''? அவரது குரல் கண்டிப்பானதாக இருந்தது. "இல்லை. பிட்டிசன் வந்தது. அவரை கைது செய்து விசாரிக்கும்படி மேலதிகாரி என்னைப் பணித்தார். நான் கைது செய்தேன்''. கப்ரன் செனிவிரத்ன ஒப்புவித்தான். " இவரைப் பார்த்த டாக்டரின் றிப்போட்டைப் படித்தீர்களா? நீங்கள் சட்டத்தை மீறியிருப்பதற்கான ஆதாரங்கள் இருக்கு. சரி உங்கள் வேலை முடிந்தது. நீங்கள் போகலாம்''. அவனை அனுப்பினார். செனிவரத்ன சலூற் அடித்துக் கிளம்பிவிட்டான்.

அந்த அதிகாரி ஆனந்தனைப் பார்த்து "உங்களை நான் நேரடியாக றிலீஸ் செய்ய முடியாது. அதற்குச் சில விதிமுறைகள் உண்டு. உங்களை பொலிசில் ஒப்படைக்கிறேன். அவர்கள் முறைப்படி நடவடிக்கை எடுப்பார்கள். விரைவில் பொலிசார் அதனைச் செய்வார்கள்''. ஆனந்தனைப் பார்த்துச் சொன்னார். ஆனந்தன் நன்றியுணர்வோடு அவரைப் பார்த்தான். அவர் முன்னால் இருந்த மணியை அழுத்தினார். ஆயத்தமாக நின்ற பொலிஸ் அதிகாரி உள்ளே வந்தார். அவரும் சலூற் அடித்து முன்னே நின்றார். அவரிடம் கோவையைக் கையளித்துப் பலபடிவங்களில் ஒப்பத்தைப் பெற்றுக் கொண்டார். "மேக்க பளலா இக்மனிட்ட நிதாஹஸ் கரண்ட...இதனைப் பார்த்து விரைவில் இவரை விடுவியுங்கள்'' அவர் எழும்பினார். ஆனந்தன் அவருக்கு நன்றி கூறினான். அவர் போய்விட்டார்.

போலிஸ் அதிகாரி தன்னோடு வரும்படி அழைத்தார். போலிஸ் ஜீப் காத்திருந்தது. அதில் ஏறும்படி கட்டளை வந்தது. ஜீப் இரைந்தவண்ணம் வவுனியா போலிஸ் நிலையம் வந்து நின்றது. ஆனந்தனை இறங்கும்படி கூறினார்கள். இறங்கியதும் நேரே கூட்டிக்கொண்டு சென்றார்கள். கூடுபோல் இருந்த அறையைத் திறந்து அடைத்துவிட்டார்கள். இப்போது மூன்றாவது இடத்துக்கு மாற்றப்பட்டுவிட்டான்.

அந்த அறையை நோட்டம் விட்டான். மிகச்சிறிய அறை. ஒரு ஆள் நடமாடக்கூடிய வெற்றிடம். ஆறடி அகலம். ஆறடி நீளம் கொண்ட அறை. இரும்புக் கம்பிகளினால் ஆனகதவு. மீண்டும் கம்பி எண்ணும் படலமா? விதியை நொந்து கொண்டான். ஒரு கட்டில்போன்று உயரமான சிமெந்தினால் செய்த மேடை. கதவு திறந்து மூடக்கூடிய இடைவெளி. இன்னுமொரு மேடைபோடக்கூடிய வெற்றிடம். ஒருமூலையில் சிறுதுவாரம். அது சிறுநீர் கழிப்பதற்கான இடம். சிறிய வாளியினுள் கொஞ்சம் தண்ணீர். சிறுநீர் கழித்தபின் தண்ணீரை அடித்தால் துவாரமூடாகச் சென்றுவிடும். மனிதவிலங்குகள் மனிதனுக்கு அமைத்துவைத்த வலையமைப்பை எண்ணிச் சிரித்தான். ஆனந்தன் தனது ஆச்சியை நினைத்துக் கொண்டான். ஆச்சி மாணிக்கத்தார் பாடசாலைப்பக்கம் சென்றிருப்பாரோ தெரியாது. ஆனால் கதைகளை அற்புதமாகச் சொல்லுவார். அந்தக் கதை இப்போது மனத்திரையில் விரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடும்பு இறைவனை நோக்கித் தவம் செய்ததாம். இறைவன் வந்தார். "என்ன வரம் வேண்டும்'' இறைவன் கேட்டாராம். "நான் விரைந்து மரங்களில் ஏறவேண்டும். என்னை யாரும் பிடித்து இழுத்தாலும் பிடிதளராதபடி இருக்கக்கூடிய கூரிய நகங்களும், எதிரிகளைத் தாக்கக் கூடிய நெடிய வாலும், வளைந்து ஓடக்கூடிய வல்லமையும் வேண்டும். நான் ,உறுதிக்கு உதாரணமாக' விளங்க வேண்டும்''. என்று கேட்டதாம். கடவுள் தனக்குள் சிரித்து "அப்படியே ஆகட்டும். உனது பிடியை உடும்புப்பிடி என்று பிறர் பின்பற்றட்டும்''. என்றாராம். உடும்புக்குச் சந்தோசம். உடும்பு இனம் இறுமாப்புடன் உலா வந்ததனவாம்.

ஒருநாள் ஒரு வேடன் வேட்டையாட வந்தான். உடும்பைக் கண்டுகொண்டான். துரத்தினான். அது விரைந்து ஓடியது. மரத்தில் விறுவிறு என்று ஏறிப் பொந்தில் ஒளிந்தது. வேடனுக்கு அதன் நீண்ட வால் தெரிந்தது. வாலைப்பற்றி இழுத்தான். உடும்பு மரத்தைப் பற்றிக் கொண்டது. எனது வாலும், கூரிய நகங்களும் இருக்கும்வரை என்னை ஒன்றும் செய்ய முடியாது என இறுமாந்தது. மரப்பொந்தில் உடும்பைக் கண்டு கொண்டான். வேடன் மரத்தைப் வெட்டிப்பிளந்து உடும்பைப் பிடித்தான். அதன் வாலின் மேற்புறத்தில் கூரிய கத்தியால் சரித்துத்தோலை சீவினான். பின்னங்கால் இரண்டையும் இழுத்துக் கூரிய நகங்களை ஒன்றோடொன்றை இலகுவாகக் குத்திக் கொழுவினான்.

வால்வெட்டுத் தடத்தில் காலைப்புரட்டி மாட்டினான். அது வளையமாக வந்தது. அந்த வளையத்துள் உடும்பின் தலையை மாட்டி இழுத்தான். அதன் முன்னங்கால் ஒன்று வளையத்தினூடாக வந்தது. இறுக்கினான். உடும்பு தவணையுள் சிக்கியது. தவணையாடிய உடும்பை அப்படியே போட்டான். அதனால் அசையமுடியவில்லை. உடும்பு கேட்டவரத்தினால் தனக்குத்தானே போட்டுக்கொண்ட முடிச்சுத்தான் அந்தத் தவணை. மனிதனும் பல முடிச்சுக்களைத் தனக்குச் சாதகமாகப் போட்டுக் கொள்கிறான். முடிச்சுப் போட்டவனும் அதில் விழுந்துவிடுவதும் உண்டு. ஆனால் இருக்கும் அப்பாவிகள் அவற்றினால் பாதிக்கப் படுகிறார்கள். தந்திரசாலிகள் தப்பித்துக் கொள்கிறார்கள்.

## 23

பொலிஸ் பாதுகாப்பில் இருப்பதால் அடிவிழாது என்ற நம்பிக்கை வந்தது. ஒரு உணவுப் பொட்டலம் வந்தது. பாதியை உண்டான். மீதியைக் குப்பைக் கூடையில் போட்டான். சுவரில் சாய்ந்தவாறே தனிமையில் இருந்தான். தனிமை பொல்லாதது. உடல் ஒரு இடத்தில் இருக்கும். ஆனால் உள்ளம் உலகமெல்லாம் அலைந்து வரும். மேரியின் நினைவில் மூழ்கிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமூச்செறிந்து உருகினான். பிள்ளைகள் எப்படி இருப்பார்களோ? நான் தனிமையில் இங்கு இருக்கிறேன். ஆனால் அவள் அங்கிருந்து இராமனை நினைந்துருகும் சீதையைப் போல் நினைந்து நினைந்துருகி மூர்ச்சிப்பாளே. அவனது கண்கள் பனித்தன. கண்ணீர் மல்க ஏங்கித்தவித்தான்.

மூன்று மணியிருக்கும். ஒருவரைக் கொண்டு வந்தார்கள். அவன் பரமன். செட்டிகுளத்தில் பொதுச்சேவை செய்வதில் வல்லவன். பிறருக்கு உதவுவதிலும் முன்னிற்பவன். சூதுவாது தெரியாத அப்பாவி. காது கொஞ்சம் மந்தம். ஆனந்தனைக் கண்டதும் அவனுக்கு ஆச்சரியம். அவனைக் குட்டியென்றுதான் அழைப்பார்கன். பரமனை அந்த அறையில் போட்டுப் பூட்டிவிட்டுச் சென்றார்கள். ஆளுக்காள் ஆறுதலாக இருந்தது. மெதுவாக உரையாடினார்கள். அவனையும் ஆமிபிடித்து வதைத்ததைச் சொன்னான். இப்போது இந்த அறையில் இருவர் மட்டுமே இருந்தார்கள். ஆனால் அடுத்த அறையில் பலர் இருந்தார்கள். வெளியில் நடப்பதை அறியமுடியாது. இருவரும் அறையில் இருந்த மேடைக்கட்டிலில் சாய்ந்திருந்தார்கள். சாய்ந்தவாறே கண்ணயர்வதும், விழித்தெழுவதுமாகப் பொழுது கழிந்து கொண்டிருந்தது.

மாலை ஐந்து மணியாகிவிட்டது. கதவு திறக்கப்பட்டது. "அத்துளட்ட யன்ட. உள்ளே போ". போலிஸ்காரர் இன்னொருவரை உள்ளே தள்ளினார்கள். "அலெக்ஸ் வாங்க. எங்களுக்குத் துணையா அல்லது காவலா"? கேட்டவாறே அலக்சாந்தரை ஆனந்தன் வரவேற்றான். பேயறைந்த முகமாக இருந்த அலெக்சாந்தரின் முகத்தில் ஒரு மின்வெட்டுப் புன்னகை பளிச்சிட்டது. அவர் யாவற்றையும் மறந்து "சேர்.." மெய்மறந்து தழுவிக் கொண்டார். அலக்சாந்தரின் கண்களில் இருந்து கண்ணீர் பொலபொலத்தது. "என்னை ஆமிக்காரர் வந்து தேடினார்களாம். எனக்குத் தெரியாது. அவர்களிடம் அகப்பட்டால் சித்திரவதை செய்வார்கள். பயந்துபோனன். நமது பாதர் அருட்தந்தை ஜோசப் அவர்களோடு வந்து பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தன். என்ன அநியாயம் சேர். உங்களையுமா சேர்...?" அலக்சாந்தர் கண்ணீர் சிந்தினார். "நான் மட்டுமென்ன விதிவிலக்கா? கடவுளை இவர்கள் இன்னும் காணவில்லை. கண்டால் அவரையும் பிடிச்சிச் சித்திரவதை செய்வார்கள்". ஒரு சிரிப்போடு ஆனந்தன் பதிலளித்தான்.

அலெக்சாந்தர் செட்டிகுளம் கல்லூரியின் பதில் அதிபராகக் கடமையாற்றுபவர். ஒரு கிறிஸ்தவருக்கு உரிய அடக்கம், நேர்மை, கடமையுணர்வு கொண்டவர். பிறரை மதிப்பதிலும், மாணவர்களை உயர்த்தி விடுவதிலும், உதவிகள் செய்வதிலும் முன்னிற்பவர். சிறந்த விளையாட்டு வீரர். ஊரவரால் மதிக்கப் படுபவர். நல்லதொரு மனைவி, மூன்று பிள்ளைகள் அவரது சொத்து. பாடசாலை வளர்ச்சியில் முழுநேரத்தையும் போக்குபவர். சிறியதொரு குறையைக் கண்டாலும் அதற்காக வருந்துபவர். அவரையும் இந்தக் கூண்டுக்குள் போட்டு விட்டார்களே. என்ன ஆட்சியிது. தமிழராகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தால் இவற்றையெல்லாம் அனுபவிக்க வேண்டுமா? இங்கு நடக்கும் இந்த ஆட்சிமுறைகளை எந்த நாட்டு மக்களாவது அறிந்திருக்கிறார்களா? சாதாரண மக்கள் வேற்றுமையில்லாது வாழும்போது, அவர்களைப் பிரித்து, முரண்பாடுகளைத் தோற்றுவித்து அவற்றில் தங்களை வளர்த்து இன்பங்காணுகிறார்களே. ஆனந்தனது உள்ளம் கொதித்தது.

நடுச்சாமம் கதவு திறபட்டது. எழுந்து குந்தினார்கள். பத்துப்பேர்களைக் கொண்டு வந்து அடித்தார்கள். அவர்கள் அலறினார்கள். இவர்களிலிருந்த அறையில் தள்ளிப் பூட்டினார்கள். இருக்கவும் இடமில்லை. சிலர் நின்றார்கள். அவர்களில் பலர் தண்ணி யடித்திருந்தார்கள். சாராயநெடில் வீசியது. அத்தனைபேரும் கிராமப்புறச் சிங்களவர்கள். சிங்களத்தில் கதைத்துக் கொண்டார்கள். ஆனந்தன் எழுந்து குந்திக்கொண்டான். அவர்களில் சிலர் கிராமத்துச் சண்டியன்கள். முரட்டுத்தனமான பார்வை தெரிந்தது. "மொக்கட்டத ஆவே..''? ஒருதனிடம் விசாரித்தான். "மாடு கொண்டு போகும்போது பிடிச்சாங்கள்''. ஒருதன் சொன்னான். திருட்டு மாடு கடத்திப் பிடிபட்டுவிட்டார்கள் என்பது பின்னர்தான் தெரியவந்தது. "ஆநிரை கவர்தல் பண்டைய மன்னர்களின் செயலாக வழிவழிவந்த கலையல்லவா..? கிரேக்கர்களும் இச்செயலில் வல்லவர்கள். அது வீரமாகப் போற்றப்பட்டது. இப்போது இவர்கள் செய்தால் அது திருட்டு. என்ன ஞாயம்.? ஆனந்தனுக்குச் சிரிப்பு வந்தது. "சமரசம் உலாவும் இடமே... நம் வாழ்வில் காணா..சமரசம் உலாவும் இடமே' பாடலடிகள் அவன் மனதில் வந்து குந்தியிருந்து கும்மாளமடித்தது.

"இடுக்கண் வருங்கால் நகுக'. வள்ளுவன் கூற்று வாயில் வந்தது. மாட்டுக் கள்வர்களுடன் ஆனந்தனும், அப்பாவி அதிபரும், பரமனும் ஒன்றாகக் கூண்டினுள் இருக்கும் காலம். கிளியும் பருந்தும் ஒருகூட்டில் நளனது ஆட்சியில் இருந்ததாம். புகழேந்தி பாடினான். நமது ஜனநாயக ஆட்சியில் கல்விப்பணிப்பாளரும், அதிபரும் முரட்டு மாட்டுக் கள்வர்களும் ஒரு கூட்டில் உள்ளார்களே. அற்புதமான ஆட்சியல்லவா? எந்தப் புலவன் பாடப்போகிறானோ? மெல்லச் சிரித்தான். "என்ன சிரிக்கிறீங்க..''? பரமன் கேட்டான். "மாட்டுக்கள்வர்களுடன் கள்வர்களாக நாங்களும் கிடக்கிறோம். அதுதான்''. பரமனுக்கும் சிரிப்பு வந்தது. அலக்ஸாந்தர் மௌனித்திருந்தார். அவருக்கு முரட்டு ஆசாமிகளைக் கண்டாலே பயம். சிறுநீரின் மணம் அறையெங்கும் பரவி மூக்கைத்துளைத்தது. கண்களை மூடியபடியே எண்ணவோட்டத்தில் மிதந்தான். குந்தியிருந்தவாறே பாதியிரவு கழிந்துபோனது.

விடிந்து விட்டது. பொலிஸ்நிலையம் சுறுசுறுப்பானது. கடமை மாற்றம் இடம் பெற்றது. இரண்டு மூன்று பேர்களாகக் கழிவறைகளுக்குக் கூட்டிச்சென்றார்கள். ஆயுதமேந்திய பொலிஸ்காரர் காவலிருந்தார்கள். கைவிலங்கு போடவில்லை. பெரியதொரு தண்டனை குறைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் உரமற்றவர்களாக மனிதர்களை மாற்றுவது இவ்வாறான செயல்களே என்பதைப் புரிந்து கொண்டான். உளவியல் ரீதியான தண்டனை மன அழுத்தங்களை ஏற்படுத்துவன. அந்த அழுத்தத்திலிருந்து விடுபட நாட்கள் எடுக்கும். ஆனந்தன் உளவள உறுதியுள்ளவன். அவனால் இவற்றைத் தாங்கிக் கொள்ளும் சக்தியிருந்தது.

காலை எட்டரை மணிக்கு மாட்டுத்திருடர்களை நீதிமன்றத்தில் ஆஜர்செய்ய வேண்டுமாம். அவர்களை ஆயத்தமாகும்படி சில பொலிஸ்காரர்கள் வந்து கூறினார்கள். கள்வர்களை அடிக்கடி பலதரப்பட்ட பொலிஸ்காரர்கள் வந்து கதவினூடாகப் பார்த்தார்கள். கதைத்தார்கள். போலிஸ்காரரைக் கண்டால் பயந்தமாதிரி இருப்பார்கள். அவர்கள் போனதும் ,கைவாறு' அடிப்பார்கள். தங்கள் வீரதீரச் செயல்களைப் பரிமாறிக் கொள்வார்கள். எல்லாம் திருட்டுச் சம்பவங்களாகவே இருந்தன. சில பொலிஸ்காரர்கள் அவர்களிடமிருந்து வெற்றிலை பாக்குப் பெற்றுச் வாயில் போட்டுச் சென்றார்கள். ஒருவர் அவர்களைப் பார்த்தபடி வந்தார். அவரது கண்களில் ஆனந்தனின் உருவம் பட்டுவிட்டது. அவர் உசாரானார். மீண்டும் எட்டிப் பார்த்தார். "சேர்... நீங்களா...ஓ..மைகோட்..." பெரும் ஆச்சரியத்தோடு கேட்டார். "மே..றாளஹாமி... என்ட" ஒரு போலிஸ்காரரை அழைத்தார். உடனடியாக மாட்டுக்கள்வர்களை வெளியில் எடுக்குமாறு பணித்தார். பல பொலிஸ்காரர்கள் வந்து அவர்களை அழைத்துக் கொண்டு போனார்கள்.

"சேர்.... நான் லீவில போயிருந்தன். இப்போதுதான் வந்தேன். இவங்களோடு எப்படி இருந்தீங்க? நான் இருந்திருந்தால் விட்டிருக்கமாட்டன்". கவலையோடு சொன்னார். "பரவாயில்ல..அவர்களும் மனிதர்கள்தானே? பார்க்கப் போனால் அவர்களுக்கு நாங்களும் திருடர்களாகத்தான் தெரிந்திருக்கும்". வழமையான தமாசோடு பதிலளித்தான். "இவங்கள் அடிக்கடி இங்கு வாறவாங்கதான். சரியான திருட்டுப் பேர்வழிகள். ஆனால் இனக்குரோதம் இல்லாத அப்பாவிகள்". கூறிக் கொண்டே திரும்பிப் பார்த்தார். பொலிஸ்காரர் சிலர் வந்தார்கள். கதவினைத் திறந்து அவர்களை அழைத்துச் சென்றார்கள். "மே...றாளஹாமி... மே...மாத்தயளா இன்ன கூடுவே .. சிங்களத்தில் விளக்கி..."இந்த ஐயாமார் இருக்கிற கூட்டுக்குள்ள வேறு யாரையும் போடவேண்டாம்." கட்டளை பிறப்பித்தார்.

"நான் உங்கட பைலைப் பார்க்கிறன். ஏச். கியு... வருவார். அவரிட்டயும் கதைக்கிறன். சரியான வேலையிருக்கு. கொஞ்ச நேரத்தில வந்து பார்க்கிறன்". சொல்லிவிட்டு நடந்தார். அவர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கணபதிப்பிள்ளை. நல்ல மனிதநேயமுள்ள அதிகாரி. ஆனந்தனை நன்றாக அறிந்தவர். பரீட்சைக் காலங்களில் இந்தப் பொலிஸ்நிலையத்தில்தான் பரீட்சை வினாப் பொதிகளை வைப்பது வழக்கம். கல்விவிடயமான கூட்டங்களில் பொலிஸ் உயரதிகாரிகள் கலந்து கொள்வார்கள். அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தனுக்குப் பலபொலிஸ் உயரதிகாரிகள் பழக்கமாக இருந்தார்கள். கணபதிப்பிள்ளையின் மனைவியும் ஒரு ஆசிரியை. அதனால் ஆனந்தனிடம் மிகவும் மரியாதை வைத்துள்ளவர். அவர் மூலம் ஆனந்தன் பொலிஸ்நிலையத்தில் இருக்கும் செய்தி ஆசிரிய சமூகத்துக்குப் பரவியது.

பத்து மணி. கணபதிப்பிள்ளை வந்தார். "சேர்...யோகதாசுக்குச் சொல்லியனுப்பி இருக்கிறன். அவர் இப்ப உங்களுக்கு வேண்டிய உடுப்புக்களக் கொண்டு வருவார். உங்களப் பார்க்கக் கவலயாக் கிடக்கு. கிழிஞ்ச சட்டை. அழுக்கான காற்சட்டை. தாடி மீசை. எத்தன நாளாய் குளிக்கல்ல''? அக்கரையோடு வினவினார். "இன்ஸ்பெக்டர்.... இது எனக்கு மட்டுமல்ல. நமது தமிழ் இளைஞர்களுக்கும், ஒரு தவவாழ்க்கை. இரண்டரை மாதங்களாக சுத்தமான சுகவாழ்க்கை அனுபவிக்கிறன். தினமும் சேவ் எடுப்பதில்லை. பல்தேய்த்து முகங்கழுவி, சோப் போட்டுக் குளிப்பதில்லை. உடைமாற்றுவதில்லை. பௌடர் போடுவதில்லை. பாய், படுக்கை விரித்துத் தலையணையில் உறங்குவதில்லை. ஆனால் எனக்குத் தினமும் பூசைநடக்கும். இப்ப அது குறைஞ்சிற்று. இதெல்லாம் எல்லாருக்கும் கிடைப்பதில்லை. என்னைப்போன்ற ஒருசிலருக்கே கிடைக்கிறது. இது ஒரு தவவாழ்க்கைதானே''? புன்சிரிப்போடு ஆனந்தன் விளக்கினான். அலக்சாந்தருக்குக் கண்கள் கலங்கின. பரமன் பார்த்துக் கொண்டிருந்தான்.

யோகதாஸ் வந்தார். ஆனந்தனைக் கண்டதும் கண்ணீர் விட்டு அழுதார். "சேர்....நாங்க நினைக்கேல்ல... இப்பதான் போனமூச்சி வந்தமாதிரிக் கிடக்கு''. அவரது கையில் சாரம், சவர்க்காரம், துவாய் இருந்தது. "சேர்...போட்டிருக்கிற உடுப்புக்களைத் தாங்க. நான் லோன்றிக்குக் குடுத்து எடுத்து வைக்கிறன்''. யோகதாஸ் கேட்டார். "யோகதாஸ்...இந்தக்கால்சட்டை சேட்டோடு கிட்டத்தட்ட இரண்டரை மாதங்கள் கிடக்கிறன். இது கின்னர்ஸ் சாதனை. என்ன''? சொல்லியவாறு யோகதாஸ் கொண்டுவந்த உடுப்புக்களை மாற்றினான். கிழிந்து அழுக்கடைந்த உடுப்புக்களைச் பேப்பரால் சுற்றிக் கொடுத்தான். கணபதிப்பிள்ளை வந்ததும் மூன்றுபேரையும் குளிப்பதற்கு வெளியில் வருமாறு அழைத்தார். பொலிஸ்காரர் சுற்றிக் காவலுக்கு நின்றார்கள். ஆளுக்கொரு குளியலைறைக்குள் புகுந்தார்கள். தண்ணீர் பட்டதும் இதமாக இருந்தது. ஆனால் ஆனந்தன் அந்தச் இதத்தை அனுபவிக்கவில்லை. உடலெல்லாம் வலித்தது. சோப்பைத் தலைக்குப் போட்டுத் தேய்த்தான். கைவிரல்களோடு கற்றை கற்றையாகத் தலைமுடி கழன்று வந்தது. தண்ணீரில் மிதந்து அடையலாகச் சென்றது. எவ்வளவு முடி? மனம் முனங்கியது. அந்தநேரத்திலும் மேரியை நினைந்துருகினான். மனம் சற்று நேரத்தில் எவ்வளவு தூரம் செல்கிறது. எத்தனையாயிரம் நினைவுகளைச் சுமந்து வருகிறது. அந்த நினைவுகள் எவ்வளவு சுகத்தைத் தருகிறது. அதேவேளை எத்தனை துயரங்களைச் சொல்லிச் செல்கிறது.

"அத்தான் எவ்வளவு அடர்த்தியான முடி. சுருள் சுருளாக என்னைக் கிறங்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கிறது‟. ஆனந்தனின் தலைமுடிக்குள் தனது விரல்களை விட்டு அளைந்து கோதிக் கொண்டே மேரி அனுபவித்துக் கூறியதை நினைவிலிருத்தினான். அவளின் ரசனையை அனுபவித்தவன். ”மேரி.. நீ இதனைக் கண்டால் எவ்வளவு கவலை கொள்வாய். நீ இதனைப் பார்க்காது விட்டது நல்லது‟. பெருமூச்செறிந்து தனது உணர்வுகளை உதிர்த்து விட்டான். காற்றோடு அவைகளும் கரைந்து போயின. குளித்து வெளியில் வந்தார்கள். ஆனந்தனுக்கு உடற்பாரம் குறைந்து காற்றாய் இருப்பதுபோல் ஒரு உணர்வு. பகல் உணவு வந்தது. பரமனின் மனைவி கொண்டு வந்திருந்தார். அவர் பரமனைப் பார்த்து அழுதார். அலக்சாந்தரையும், ஆனந்தனையும் பார்த்து ”உங்களுக்கும் இந்த நிலையா சேர்‟? கேட்டுக் கண்கலங்கினார்.

அதிபர்கள், ஆசிரியர்கள் எனப்பலரும் வரத்தொடங்கி விட்டார்கள். அதிபர் பாலசிங்கம் அற்புதமான பிறவி. காலையில் பெரிய வெந்நீர்க் குடுவையில் தேநீர் கொண்டு வருவார். இரவில் பலவிதமான உணவுவகைகளைச் சுமந்து தருவார். ”சேர் கடவுள் இல்லசேர். இருந்தா இந்த அக்கிரமங்களைப் பார்த்துக் கொண்டு இருப்பாரா? உங்களக் கூட்டுக்குள்ள கம்பிக்குப் பின்னால் காணும்போது எங்கட மனம் துடிக்குது சேர்‟. கண்ணீர் சிந்தியவாறே திருச்செல்வம் அதிபர் அழுதார். ”அதிபர் சின்னப்பிள்ளைகளாட்டம் அழுவதா‟? ஆனந்தன் அவரைத் தேற்றினான். ”திரு ......நான் இங்கிருந்து பார்த்தால் நீங்கதான் உள்ளே இருப்பது போல் தெரிகிறது‟. ஆனந்தன் நகைச்சுவையோடு கூறினான். ”எப்படி சேர்......உங்களால இப்படிக் கதைக்க முடியுது‟.? திருச்செல்வம் கேட்டார்”. சுண்ணாம்புக் காளைவாயில் நாவுக்கரசரைப் போட்டார்கள். அவருக்கு சுண்ணாம்புக் காளவாய் “வீசுதென்றலும், வீங்கிள வேனிலும், மூசும் வண்டறைப் பொய்கையும் போன்ற'தாயிருந்ததாகப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கிறீர்கள் அல்லவா? நமது மனதில் சத்தியம் நிறைந்துள்ளதால், வைராக்கியம் அப்பரின் மனநிலைக்குக் கொண்டு சென்றுவிடும்‟. தத்துவக் கருத்துக்களை உதிர்த்தான். வருகிறவர்களுக்கு ஆனந்தனே ஆறுதல் கூறினான்.

## 24

காலை கணபதிப்பிள்ளை வந்தார். ”இன்டக்கி உங்கட வாய்மொழி விளக்கம் எடுப்பாங்க. நீங்க மூன்று பேரும் செட்டிகுளத்தோடு தொடர்புபட்டுள்ளதால அங்கதான் கூட்டிப் போவாங்க. விளக்கம் எடுத்தபின் அடுத்த கிழமை எஸ்.பி. வந்ததும் விடுதலை செய்வதாகப் பேசிக்கொண்டார்கள்‟. சொல்லிவிட்டுப் போய்விட்டார். பொலிஸ் ஜீப் தயாராக நின்றது. மூவரையும் சில பொலிஸ்கரர்களையும் ஜீப் சுமந்தது. முன்னாசனத்தில் இன்ஸ்பெக்டர் திசநாயக்க இருந்தார். ஜீப் விரைந்து சென்றது. செட்டிகுளம் சோபை இழந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடந்தது. கிராமப் புறங்கள் இராணுவத்தாரின் சுற்றிவளைப்புக்களுக்கு உள்ளாகின. இளைஞர்கள் காடுகளில் தஞ்சமாகினார்கள்.

செட்டிகுளத்தில் பரமனின் வீடு இருந்தது. வீட்டில் ஜீப் நின்றது. அங்கு தேநீர் வரவழைக்கப் பட்டது. சிலபேரிடம் இன்ஸ்பெக்டர் கதைத்தார். பரமனின் இரண்டு சகோதரர்கள் வந்து இன்ஸ்பெக்டரோடு கதைத்தார்கள். "சரி ஆலங்குளம் வாடிவீட்டுக்குப் போவம்". இன்ஸ்பெக்டர் திசநாயக்க சொன்னார். ஜீப் கல்லாற்றைத்தாண்டியது. `மனிக் பாம்' கடந்து பறையனாளங்குளம் சந்தியை அடைந்தது. மோட்டார் சைக்கிளில் பரமனின் சகோதரர்கள் வந்து சேர்ந்தார்கள். மன்னார் - மதவாச்சி வீதியும், வவுனியா - மன்னார் வீதியும் இணையும் சந்தியது. மரங்கள் நிறைந்த சோலை. அதற்குள் அழகாக அமைந்த வாடிவீடு. வாடிவீட்டுக்குப் பொறுப்பாக விமலன் கடமையாற்றினான். அவனை ஆனந்தனுக்கு நன்றாகவே தெரியும். வாடிவீட்டின் எதிர்புறமாக வீதியைக் கடந்து ஆலங்குளக் கிராமத்துப் பாடசாலை. கனகசூரியன் அதன் அதிபராகக் கடமையாற்றினார். அவர் நல்லதொரு கவிஞருமாவார். க.பொ.த. சாதாரணதர வகுப்புவரையுள்ள பாடசாலை. ஆனந்தன் அடிக்கடி பாடசாலைக்கு வருகைதருவான். ஆசிரியர்களோடு சேர்ந்து கற்பிப்பான். வாடிவீட்டில் உணவினை உட்கொள்வான்.

அதிபர் ஓடிவந்து எட்டிப் பார்த்தார். ஆனந்தன் ஒருவாறு அவரை வழியனுப்பி வைத்தான். ஆனந்தன், அலக்சாந்தர், பரமன் மூவரும் வாடிவீட்டின் ஒரு மூலையில் இருந்தார்கள். இன்ஸ்பெக்டர் தனியாக ஒரு இடத்தில் கதிரையில் இருந்தார். மூன்று பொலிஸ்காரர்கள் ஒன்றாக ஒரு இடத்தில் இருந்தார்கள். இன்ஸ்பெக்டரின் முன்னாலுள்ள மேசையில் உயர்ரக மதுப்போத்தல்கள் இருந்தன. பொலிஸ்காரர்கள் மேசையிலும் வைக்கப்பட்டன. கிளாசில் ஊற்றிக் குடித்தாரகள். பரமனின் சகோதரர்களோடுதான் இன்ஸ்பெடர் கதைத்தார். அவர் இடைக்கிடை பொலிஸ்காரரைக் கூப்பிட்டு ஏதோ சொல்லுவார். "யேஸ் சேர்" போட்டுவிட்டு வருவார்கள். தமது மேசைக்கு வந்து தாங்களும் போடுவார்கள். போத்தல்கள் காலியாகும் வரை குடித்தார்கள்.

இன்ஸ்பெக்டர் நேரத்தைப் பார்த்தார். "போவம்" புறப்பட்டார்கள். செலவெல்லாம் பரமனின் சகோதரர்கள் கவனித்தார்கள். நேரே பரமன் வீட்டுக்கு ஜீப் விரைந்தது. மேசையில் சாப்பாடு தயாராக இருந்தது. செட்டிகுளம் மக்கள் பரமனின் வீட்டுக்குப் படையெடுத்திருந்தனர். மூவரையும் குளிக்கும்படி இன்ஸ்பெக்டர் கூறினார். மூவரும் கிணற்றடிக்குக் குளிக்க நடந்தார்கள். அவர்களால் நடக்க முடியாதிருந்தது. ஆனந்தனுக்குக் கால்களை நிலத்தில் வைக்கமுடியாதிருந்தது. அலக்சாந்தர் பொலிஸ்நிலையத்தில் பாதரோடு சரணடைந்ததால் அடியில்லாது தப்பமுடிந்தது. அடியின் வலி இப்போது தெரிந்தது. நொண்டியபடியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமனும், ஆனந்தனும் நடந்தார்கள். ஆனந்தனின் பாதங்கள் வீங்கியிருந்தன. பாதவிளிம்புகள் கருநீலநிறத்தில் தெரிந்தன. சனங்கள் பார்த்துக் கொதித்தார்கள். ஆனால் அவர்களால் ஒன்றும் செய்யவும், பேசவும் முடியாது. நெட்டைமரங்களாக நின்றார்கள்.

அவர்கள் குளித்து வரும்வரை பொலிஸ்காரர்கள் வீட்டின் பின்புறமிருந்து குடித்துக் கொண்டே இருந்தார்கள். "அவங்களுக்குச் சாப்பாடு குடுங்க." தங்கள் வீடுபோல் பொலிஸ்காரர்கள் உத்தரவு போட்டார்கள். போலிஸ்காரர்கள் இப்போது தங்கள் தரத்தினை விட்டு ஒன்றாக இறங்கி உறவாடினார்கள். சும்மா சொல்லக்கூடாது. தண்ணி அனைவரையும் சம அந்தஸ்து உடையவர்களாக்கி வீடும். இன்ஸ்பெக்டரின் தோளில் கைபோடும் அளவுக்கு அவர்கள் மாறியிருந்தார்கள். தனியான மேசையில் இன்ஸ்பெக்டரும் பொலிஸ்காரரும் இருந்து சாப்பிட்டார்கள்.

பரமனின் சகோதரர்கள் இன்ஸ்பெக்டரோடு அளவளாவினர். "சேர்..நீங்கதான்..பார்த்து ஏதாவது செய்ய வேணும்". அவர்கள் பலமுறை தயவுடன் விண்ணப்பம் செய்தார்கள். "அதற்காகத்தானே..இப்படி இங்கு கூட்டிவந்திருக்கிறம். பயப்பட ஒன்றுமில்லை. நான் போடுற றிப்போட்டிலதான் எல்லாம் இருக்கு. இன்னும் மூன்று நாளையால வெளியில வந்திருவாங்க" இன்ஸ்பெக்டர் பெருமையாகச் சொன்னார். ஆனால் அவர்கள் ஒன்றும் எழுதவில்லை என்பதை ஆனந்தன் புரிந்து கொண்டான். உணவு முடிந்ததும் இன்ஸ்பெக்டர் அப்படியே சாய்கதிரையில் சாய்ந்து உறங்கினார்.

ஐந்து மணிக்கு ஜீப் புறப்பட்டது. ஆறுமணிக்கு பொலிஸ் ஸ்ரேசனில் ஜீப் நின்றது. தங்களது மாளிகைக்குள் அடைந்து கொண்டார்கள். பசிக்குக் கொஞ்சம் சாப்பிடுவார்கள். இன்ஸ்பெக்டர் கணபதிப்பிள்ளையின் தயவு கிடைத்தது. கூட்டுக்குள் யாரையும் போடுவதில்லை. அக்கூடு மூவருக்கு மட்டும் ஒதுக்கப்பட்டிருந்தது. கண்களை மூடுவதும், திறப்பதும், திறந்து பின் மூடுவதும் தொழிலாக இருந்தது. பொலிஸ்காரர் என்ன கதைத்தாலும் தங்களைப் பற்றிக் கதைப்பது போல் உணருவார்கள். ஒவ்வொருவராய்க் கூப்பிட்டு வாக்கு மூலம் பெறப்பட்டது. இரண்டு நாட்கள் கழிந்துவிட்டன.

மூன்றாம் நாள் காலையில் கணபதிப்பிள்ளை வந்தார். ""சேர்.. றேமனைத் தெரியுமா.."? கேட்டார். ஆனந்தனுக்கு அவர் கேட்ட பெயருடைய ஆளைத்தெரியாது. "எனக்குத் தெரியாது". என்றான். "எனக்குத் தெரியும் சேர்.." பரமன் கூறினான். எனக்கும் தெரியும்". அலெக்சாந்தரும் கூறினார். "அவனப் பொடியள் போட்டுட்டாங்க. அவன் பொல்லாத ஆள். அவனால எத்தன அப்பாவிகள் ஆமிட்ட புடிபட்டு சித்திரவதைப் பட்டிருக்காங்க. இவனுக்கு ஏனிந்த வேலையெல்லாம்".? சொல்லிப் போட்டுப் போய்விட்டார். "அவன் ஆக்களக் காட்டிக் குடுக்கிறவன். அவனக் கண்டால் சனங்களுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயம். செலவுக்குக் காசிகேட்பான். கொடுக்காட்டி ஆமிக்குப் பிட்டிசன் அடிப்பான்''. பரமன் சொன்னான்.

ஆனந்தனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அத்தோடு பாவமாகவும் இருந்தது. அவனைத் தெரிந்திருந்தால் அறிவுரை கூறித்திருத்தியிருக்கலாம். மனதிலே கவலையை மூட்டிக்கொண்டான். பரமனின் மனைவி வந்தாள். நடந்தவற்றை ஒப்புவித்தாள். அவள் சென்றபின் பரமன் அதனைப் ஆனந்தனிடம் சொன்னான். "நேற்று இரவு பொடியன்கள் சிலர் நேமனைத் தேடி வந்தார்களாம். அவன் நல்ல வெறியில் இருந்திருக்கிறான். அவனைப்பற்றிய தகவல்களைத் திரட்டி விசாரித்தார்களாம். அவன் ஒப்புக் கொண்டிருக்கிறான். அவனை ஊர்ச்சந்தியில் ரெலிபோன் தூணில் கட்டிவைத்துச் சுட்டுப் போட்டுப் போய்விட்டார்கள். அவன்தான் நமக்கும் பிட்டிசன் அடிச்சவனாம்''. பரமன் சொல்லி முடித்தான்.

"என்னை அவனுக்குத் தெரியாது. அவன் ஏன் எனக்குப் பிட்டிசன் அடித்தவன். அப்படிச் செய்ய வாய்ப்பில்லையே''. ஆனந்தனுக்குச் சங்கடமாகியது. ஒரு உயிரை அழிப்பதற்கு இன்னொருவருக்கு என்ன உரிமையிருக்கிறது.? அழித்த உயிரை மீண்டும் வரவழைக்கமுடியுமா? இந்த மனிதப் பிறவியெடுப்பதே அரிதான விடயம். மனிதப்பிறவி எடுத்தாலும் கூன்குருடு நீங்கிப் பிறப்பது அரிது. இப்படிப் பாவச்செயல்களை மனிதர்கள் ஏன் செய்கிறார்கள்? அமைதியாக இருந்து சிந்தனையில் ஆழ்ந்தான். அலக்சாந்தர் கவலையில் மூழ்கியிருந்தார்.

கணபதிப்பிள்ளை வந்தார். " சேர்... எஸ்.பி வந்திருக்கிறார். ஐந்து பத்து நிமிசத்தில கூப்பிடுவார். அவர் கையெழுத்திட்டால் சரி. நீங்க போகலாம்''. அறிவித்து விட்டுச் சென்றார். பரமனுக்குச் சந்தோசம். ஆனால் ஆனந்தனுக்குச் சங்கடமாக இருந்தது. "அலக்சாந்தர்..! எனக்கு நம்பிக்கையில்லை. கதை மற்றப்பக்கமாகத் திருப்பிவிட்டால்? என்ன செய்வது"? ஆனந்தன் கூறினான். பரமன்ர கதையப்பார்த்தால் சிக்கல்போல் தெரிகிறது. "அவன்தான்நமக்கும் பிட்டிசன் அடிச்சது என்றால் அவனுக்கும் நமக்கும் தொடர்பு இருப்பதாக, இவங்கள் மாற்றிவிட்டால்''? ஆனந்தன் யோசனையோடு சொன்னான். "எனக்கும் இப்பதான் விளங்குது. என்ன நடக்கப்போகுதோ தெரியாது''. அலக்சாந்தர் பயத்தோடு சொன்னார்.

"இதில பயப்படுவதற்கு என்ன இருக்கிறது? யோகர் சுவாமிகள் அன்றே சொல்லிப்போட்டார்''. ஆனந்தன் சொன்னான். "என்னெண்டு சேர்''? அலக்சாந்தர் குறுக்கே புகுந்தார். "எல்லாம் எப்பவோ முடிந்த காரியம் என்று'' ஆனந்தன் சொன்னான். அலக்சாந்தருக்கு ஒன்றும் புரியவில்லை. அவனே தொடர்ந்தான். "எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது. எது நடக்கவேண்டுமோ அது நன்றாகவே நடக்கும். இது கீதாஉபதேசம். நடப்பது நன்றாகவே நடக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமும் பார்ப்போம்". ஆனந்தன் வரட்டுச் சிரிப்போடு முடித்தான்.

போலிஸ்காரர் வந்து கூப்பிட்டார். பொலிஸ்காரர் முன்னே செல்ல மூவரும் பின்னால் சென்றார்கள். "எஸ்.பி பொல்லாதவர். பயந்தவர்கள் போல் நடிக்கப் பாருங்க" போகும்போது பொலிஸ்காரர் சொன்னதிவை. "இவர்களும் நடிக்கிறார்களோ தெரியாது. நாடகமாம் இந்த உலகத்தில் நாமெல்லாம் நடிகர்கள்தானே". ஆனந்தன் மனதினிலே வைத்துக் கொண்டான். ஒரு அரசனுக்குள்ள மரியாதையைவிடவும் இந்த எஸ். பி ...க்கு இருந்தது. அவரைக் கண்டு பொலிஸ்காரர்கள் பயந்து நடுங்கினார்கள். எஸ்.பி. வெகு கம்பீரமாகத்தான் இருந்தார். அவருக்கு எதிரெதிராக நின்று கதைப்பதற்குப் பொலிஸ்காரர் பயந்தார்கள். அவருக்கு முன்னால் மூவரும் நின்றார்கள். அவர் கோவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவை முடிந்ததும் நிமிர்ந்து பார்த்தார்.

அவரது பார்வைக்கு முதலே இவர்கள் முந்திவிட்டார்கள். "குட் மோர்னிங் சேர்". ஆனந்தனும், அலெக்சாந்தரும் சேர்ந்து சொன்னார்கள். பரமன் அவர்களோடு சேர்ந்து கொண்டான். அவரது வாயசையவில்லை. பயங்கரப் பார்வையை வீசினார். ஏற இறங்கப் பார்த்தார். பேரைக்கேட்டார் சொன்னார்கள். "நீங்க பெரிய இது என்ற நினைப்போ"? மேசையில் தட்டியவாறே எழும்பினார். "ஆனந்தன்...அலெக்சாந்தர்....பரமன்...எல்லாரும்.. தமிழர் கூட்டணி..ஆக்கள். ஈழம் கேக்கிற பெடறல் பாட்டி... சப்போட்டர்.. நல்லாப் பேசி மக்கள ஏமாத்துறது". பெரும் சத்தத்தோடு கர்சித்தார். மேசை லாச்சியை இழுத்து ஒருகுறிப்பை எடுத்தார். "நீங்க இஞ்ச இருக்க...உங்கட ஆக்கள் றேமனைப் போட்டுட்டாங்க". சொல்லியவாறே கீழுதட்டைப் பற்களால் கடித்தார். அவரது பார்வையில் இந்தப் பாவிகள் பஞ்சாய் எரிந்தனர்.

"இன்ஸ்பெக்டர்...புட் தெம் பிகைன்ட் த பார். கூடுவென் தாண்ட. கூட்டுக்குள்ள போடுங்க" சொல்லிவிட்டுத் தனது கதிரையில் இருந்தார். இன்ஸ்பெக்டர் பொலிஸ்காரருக்கு உத்தரவிட்டார். பொலிஸ்காரர் கைகளைக் காட்டி அழைத்தார். கைகட்டி மௌனமாகி வந்தபடியே நடந்தார்கள். விதியை நோவதா? நாட்டை நோவதா? யாரை நோவது? "விதியே..விதியே.. தமிழச் சாதியை என்செயவென்று இருக்கிறாயடா" பாரதியின் வரிகளை மாற்றியபடி மனம்துடித்தது. பழையபடி கூட்டினுள் விட்டுப் பூட்டிவிட்டார்கள். இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்தச் சிறைவாசம். வருவதை எதிர்கொள்ளத் தயாராகி விட்டார்கள்.

இன்ஸ்பெக்டர் கணபதிப்பிள்ளை வந்தார். "இன்டைக்கென்று அவனப் போட்டுட்டாங்க... அந்த ஆத்திரத்தோட எஸ்.பி..இருக்கிறார். உங்கள்ள குற்றமில்ல. பயப்பிடாதங்க. இன்னும் கொஞ்ச நாட்களில விட்டிருவாங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்க இஞ்ச இருப்பது ஒருவகையில் நல்லதாய் போச்சு. வீடுதலையாகிப் போயிருந்தால், பழி உங்க தலையில விழுந்திருக்கும். இஞ்ச உங்களுக்குப் பிரச்சின இல்லாம பார்த்துக் கொள்வன்.'' அவரது வார்த்தைகள் தெம்பாயிருந்தன. "வேண்டியதைச் செய்துதர இதோ பண்டா நாளகாமி இருக்கிறார். இவர் நல்ல மனிசன். இவரிட்ட உதவியேதும் தேவைப்பட்டால் கேளுங்க''. பண்டாவை அறிமுகம் செய்தார். அவர் சென்று தனது கடமையில் ஈடுபட்டார்.

அன்று மாலை பாலசிங்கம் வந்தார். அவரது வார்த்தைகள் ஆறுதலைத் தந்தன. காலையிலும் மாலையிலும் தேநீர், உணவு வகைகள் என்று உதவிக் கொண்டே இருந்தார். "மனிதனுக்கு மனிதன் துன்பத்திலதான் சேர் உதவிகளச் செய்யவேணும். நீங்க காலயில நாலுமணிக்கு எழும்பி, வேலைகள முடித்துக் கொண்டு பாடசாலைகளில் ஏழுமணிக்கெல்லாம் நிற்பீங்க. உங்களப் பார்த்து நாங்களும் வேளைக்கே பாடசாலைகளுக்குப் போகப் பழகிற்றம். சுறுசுறுப்பாக ஓடியாடி வேலை செய்த உங்கள முடக்கிப் போட்டாங்க. நினைத்துப் பார்க்க வேதனையாக இருக்குது'' இது பாலசிங்கத்தின் சித்தாந்தம். அவரின் ஆதங்கம் புரிகிறது. அதற்காக மனமார நன்றியைத் தெரிவித்தான்.

"சேர்... இஞ்சயிருந்து டி.ஒ. அனுப்பாமல் பார்க்கவேணும்.'' பாலசிங்ம் தேநீரை பிளாஸ்கில் தந்தவாறே சொன்னார். "அதென்ன டி.ஓ.'' பரமன் கேட்டான். "டிற்றென்சன் ஓடர் அதாவது தடுத்து வைப்பதற்கான அனுமதி'' ஆனந்தன் விளக்கினான். " டி.ஓ போட்டால் மூன்று மாதமெடுக்கும் சேர். எனது நண்பர் ஒருவர் இருக்கிறார். அவரிட்டக் கதைக்கிறன். அவர் சட்டத்தரணி. அவருக்கு இதுல நல்ல அனுபவமிருக்கு''. எடுக்க வேண்டிய விடயங்களைப் பற்றி பாலசிங்கம் விளக்கினார். "பாலா...இதெல்லாம் தேவையில்ல. எப்படியும் வாறகிழமை நாங்க வெளியில வருவம் என்ற நம்பிக்கை எனக்கிருக்கு. இருந்து பாரப்பம்''. ஆனந்தன் உறுதியாகச் சொன்னான். சிரித்தவாறே ஆனந்தனைப் பார்த்தார். ஆனந்தனைப் பார்ப்பதற்கு அவருக்கு வேதனையாக இருந்தது. "சேர், நான் வாறன். சொல்லிவிட்டுச் சென்றார். அவர்போவதையே மூவரும் வைத்த கண்வாங்காது பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

## 25

நித்திரையும், விழிப்புமாக இரவு, பகல் கழியும். சாய்ந்திருத்தல். எழுந்து ஆறடி நீளம், இரண்டடி அறைப்பரப்பில் நடப்பது. சற்று நேரம் குந்தி யிருப்பது எனப் பொழுது மெதுவாகக் கழிந்து செல்லும். சூரிய ஒளி அவர்களைக் கண்டு ஒளிந்து கொண்டதா? அல்லது, சூரிய ஒளியை இவர்களுக்குக் காட்டாமல் சூரியன் மறைக்கிறதா? கேள்விகள் எழும். விடையும் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் விடிவு கிடைக்காது. பொழுது விடிந்து விட்டது. அதிகாலையிலேயே அவர் வந்திருந்தார். "நான்தான் சட்டத்தரணி சொர்ணன். மிஸ்டர் பாலசிங்கம் இரவு வந்து விசயத்தைச் சொன்னார். உங்கட சம்மதத்தக் கேட்டுப்போட்டு, நாளைக்கு கோட்ல ஆட்கொணர்வு மனுக்கொடுக்க யோசிக்கிறன். உங்கட விருப்பமென்ன''? சொர்ணம் அடுக்கிக் கொண்டு போனார்.

"நீங்க இவ்வளவு தூரம் அக்கறை காட்டி வந்ததற்கு நன்றி. அதற்கு என்ன செய்யவேணும்''? ஆனந்தன் அவரைப் பார்த்துக் கேட்டான். "நீங்க ஒண்ணும் செய்யத்தேவையில்ல. நான் எல்லாத்தையும் பார்த்துக் கொள்ளுவன். இது பொல்லாத கேஸ். அவசரகாலச் சட்டத்துக்குக் கீழ் பிடிச்சிருக்காங்க. அவங்கள் டி .ஓ போட்டால்....பிறகு உங்களக் கொழும்புக்கு அல்லது வேறெங்காவது கொண்டு போயிடுவாங்க''. சொர்ணம் சொன்னதைக் கேட்டு அலெக்சாந்தரின் விழிகள் பிதுங்கின. "என்ன அநியாயம் சேர் இது. நாங்க..அரசாங்க உத்தியோகம் செய்யுறம். பாடசாலையும், பிள்ளைகளும் என்று பாடுபடுறம். எங்களுக்கு ஏனிந்த நிருவத்தத் தாறாங்க''. அலெக்சாந்தர் சொற்கள் விம்மலூடாக வந்தன.

குற்றம் செய்பவர்கள் யாரோ. ஆனால் மாட்டிக் கொள்வது ஒன்றும் அறியாத அப்பாவிகள்தான். இதுதான் அன்றிலிருந்து இன்றுவரை நடக்கிறது. யாரையும் குறை சொல்லிக் குற்றமில்லை. "சேர்..இதுக்குச் செலவு எக்கச் செக்கமாகப் போகுமே. எவ்வளவு போகும்''? அலெக்சாந்தர் பயத்துடன் சட்டத்தரணியைப் பார்த்துக் கேட்டார். அவ்வளவு போகாது. இந்தப் பொலிஸ்காரர், சிறூழியர்கள், கோட் செலவென்று கொஞ்சம் போகும். "அவ்வளவுதான். செலவைப் பார்த்தால் சரிவருமா?" சொர்ணன் விளக்கினார்." "இல்ல சேர்." மன்னிச்சுக் கொள்ளுங்க. இப்படி ஆயிரக்கணக்கான அப்பாவிகள். போலிஸ் நிலையங்களிலும், பல சிறைக்கூடங்களிலும் கிடக்கிறாங்க. அவங்களப் போல நாங்களும் கிடந்திட்டுப் போறம். அந்த அப்பாவிகளுக்கு உதவிசெய்ய யாராவது முன்வாறாங்களா''? ஆனந்தன் கவலையோடு தெரிவித்தான். "உங்கள எனக்கு நல்லாத் தெரியும் என்றதாலதான் நான் வந்தனான். அத்தோடு மிஸ்டர். பாலசிங்கமும் நேற்று வந்து சொன்னார். உங்களுக்கு விருப்பமில்லயென்டால் விடுவம்''. சட்டத்தரணி சொர்ணன் இழுத்தார்.

"அதுக்கில்ல...சேர். தவறாக எடுக்காதீங்க. நீங்க வந்ததற்கு மிச்சம் நன்றி. நாளைக்குச் சொல்லுறன் சேர். குறை எண்ணாதீங்க''. ஆனந்தன் பவ்வியமாகக் கூறினான். "சரி... நீங்க மிஸ்டர் பாலசிங்கத்திடம் சொல்லிவிடுங்க. நான் வாறன்''. அவர் மெல்ல நடையைக் கட்டினார். "என்ன சேர்.. அவர் சொன்னதுபோல் மனுப் பண்ணுவமா''? அலெக்சாந்தர் ஆனந்தனைப் பார்த்துக் கேட்டார். "இஞ்ச பாருங்க... அலெக்ஸ் நாங்க வழக்கு, கோட், என்று போனால் இன்னும் சிக்கல் வரும். எக்கச்செக்கமாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவு வரும். அந்தச் செலவுக்கு என்ன செய்வது?. நாங்க அரசாங்க உத்தியோகத்தர்தான். ஆனால் எடுக்கிற சம்பளம் என்ன? வாழ்க்கைச் செலவுக்கே காணாது. கடனாளியாகப் போய்க் கொண்டிருக்கிறம். எந்த அரசாங்க உத்தியோகத்தர் வசதியாக வாழுறாங்க?. எல்லாரும் "பேச்சுப் பல்லக்கு தம்பி பொடிநடைதான்' என்றுதான் கிடக்கிறாங்க. பேசாமக் கிடப்பம்." ஆனந்தன் தனது ஆதங்கத்தை வெளியில் விட்டான்.

அவனது கண்கள்முன் ஆமிக்காரங்களின் அட்டகாசங்களும், சித்திரவதைக்குள் சிக்கித் தவிக்கும் அப்பாவிகளும் தெரிந்தனர். எந்த அரசியல்வாதி இவர்களைப் பற்றிக் கவலைப்படுகிறான்.? தேர்தல் காலங்களில் இளைஞர்களின் தலையில் தலைப்பகை கட்டிவிடுகிறான். மொழிவெறியையும், இனவெறியையும் தூண்டி விடுகிறான். "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்றும் 'தூக்கு மேடை பஞ்சணை மெத்தை' என்றும் அரசியல் சதுரங்கத்தில் பகடைக்காய்களாக்கி விளையாட விடுகிறான். அவர்களும் கோஷமிட்டு பலிக்கடாக்களாக்கி விடுகிறார்கள். விட்டில் பூச்சிகளாக விழுந்து மாட்டிக்கொள்கிறார்கள். அரசியல்வாதிகள் தாங்கள் சுகபோகங்களை அனுபவிக்கிறார்கள். அவர்களது சுகபோகங்களுக்காக அப்பாவி இளைஞர்கள் அணுவணுவாகச் சித்திரவதைக்குள் சிக்கிச் செத்து மடிகிறார்கள். இனவாத அரசியலால் நமது நாடு சகதியாகி விட்டது. மூவின இளைஞர்களும் சண்டையிட்டு மடியப் போகிறார்கள். பயங்கரவாதம் என்ற போர்வையில் மனித இனம் அழிந்துபோகும். ஆனந்தனது மனக்கடலில் புயல் வீசியது. கண்கள் சிவந்து கண்ணீர் கசிந்தது.

என்று இந்த இலங்கைத்தீவில் சமாதானப் புறா பறக்கும். எப்போது விடிவு வரும்? அவனது உள்ளம் கொதித்தது. "சேர் என்ன யோசனை"? அலெக்ஸாந்தர் கேட்டார். "அலெக்ஸ் கவலைப்படாமல் இருப்பம். நமது வாக்குமூலத்தைப் பதிந்து கொண்டார்கள்தானே? அந்த சீ.ஐ.டி. ஒபிசர் எங்களைக் கைது செய்த கப்ரனுக்கு ஏசியதை நினைத்துப் பார்க்கிறன். நாங்கள் நிரபராதியென்று அவர் முகம் சொன்னது. அவர் கட்டாயம் தனது றிப்போட்டைக் கொடுத்திருப்பார். எல்லாவற்றையும் ஒப்பிட்டுப் பார்த்துத்தான் மேல் நடவடிக்கை எடுப்பார்கள். எனக்கென்றால் நம்பிக்கை இருக்கிறது". "என்னெண்டு சேர்". அலெக்ஸாந்தர் சிறுபிள்ளையைப் போல் ஆனந்தனின் முகத்தைப் பார்த்தவாறே கேட்டார்.

"அலெக்ஸ்..நாங்கள் யாருக்கு என்ன குற்றம் செய்தம்?. நாங்கள் மனிதர்களுக்குச் சேவை செய்யிறம். மக்கள் சேவை மகேசன் சேவை என்பார்கள். எனக்குப் பல கனவுகள் உள்ளன. மலையக மக்களைப் பேரினவாதம் விரட்டியடித்தது. காந்தியம் செய்த சேவை அளப்பரியது. வன்னியில் நூற்றுக்கும்மேலான கிராமங்களில் மலையக மக்களைக் குடியமர்த்திய பெருமை காந்தியத்திற்கு உண்டு. டாக்டர் இராஜசுந்தரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேவிட் ஐயா, இன்னும் பல இளைஞர்களின் அரிய முயற்சியினால் காடுகள் கிராமங்களாகின. நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைக்கும் அந்த மக்களின் பிள்ளைகளின் வாழ்க்கையில் கல்வி ஒளிவீச வழி செய்யவேண்டும். இந்த வவுனியா மாவட்டத்தில் உள்ள அத்தனை கிராமங்களிலும் பாடசாலைகளை அமைக்கவேணும். அந்தக்கனவு மெய்ப்பட வேண்டும். அது மெய்ப்படும். அந்த நம்பிக்கை எனக்கு ஆன்ம பலத்தைக் கொடுத்துள்ளது. அலெக்ஸ்! இருந்து பாருங்க. எண்ணி இரண்டு கிழமைகளுக்குள் நமக்கு விடுதலை கிடைக்கும்". உணர்ச்சிசோடு உறுதியாக ஆனந்தன் கூறினான்.

அலெக்ஸாந்தார் ஆனந்தனை நன்றாக அறிந்தவர். ஆனந்தன் முதன்முதல் செட்டிகுளம் வந்ததையும், இரண்டு பாடசாலைகளைத் திறக்க நடவடிக்கை எடுத்துத் திறந்து வைத்ததையும், இரண்டு பாடசாலைகளில் பரீட்சை நிலையங்களை வைப்பதற்கு அனுமதியைப் பெற்றுக் கொடுத்ததையும் நினைத்துக் கொண்டார். அலெக்ஸாந்தர் செட்டிகுளம் மகாவித்தியாலயத்தில் அதிபராக இருந்தவர். பின்னர் அரசியல் சிக்கலால் பிரதி அதிபராக்கப் பட்டவர். அவரது செயற்திறன் மீண்டும் அதிபராகப் பதவியுயர்வு பெறச்செய்தது. அவரது மனத்திரை சற்று விரிந்தது.

அவர் சிந்தனையில் ஆழ்ந்தார். கல்விக் கட்டமைப்பு நன்றாகச் செயற்பட்டது. மாவட்டங்களில் கல்விக்குப் பொறுப்பாக மாவட்டக் கல்விப் பணிப்பாளர் இருந்தார். அவருக்கு அடுத்து பிரதம கல்வி அதிகாரி, வட்டாரக் கல்வி அதிகாரி எனப் பலர் இருந்தார்கள். வவுனியா மாவட்டம் நான்கு வட்டாரங்களாக எல்லையிடப் பட்டிருந்தது. முதன்முதல் ஆனந்தன் செட்டிகுளம் கல்வி வட்டாரத்தின் கல்வி அதிகாரியாக நியமனம் பெற்று வந்தான். முன்பின் தெரியாத இடம். அறிமுகம் இல்லாத மனிதர்கள். அதிபர்களையோ, அல்லது ஆசிரியர்களையோ அவன் அறிந்திருக்க வில்லை. அவர்களைச் சந்தித்திருக்கவும் இல்லை. அவனை யாரும் முதல் கண்டதும் இல்லை. ஒவ்வொரு கல்வி வட்டாரத்திலும் அதிபர்கள் சங்கம் இருக்கும். மாதம் ஒருமுறை அதிபர்கள் கூட்டமிருக்கும். அதிபர்களே கூட்டம் நடக்கும் திகதியைத் தீர்மானித்து அறிவிப்பார்கள்.

பாடசாலைகளின் வருடாந்த வேலைத் திட்டங்கள் பற்றிய குறைநிறைகள், தேவைகளை ஆராய்ந்து முடிவெடுக்கப்படும். சிலமாதங்களாக இந்தக் கல்வி வட்டாரத்துக்குக் கல்வி அதிகாரியில்லை. முதலிருந்தவர் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார். தற்காலிகமாக ஒருவர் வந்து போனார். கல்விச் சேவைகள் பாதிக்கப்பட்டன. புதிய கல்வி அதிகாரி வருவதை அதிபர்கள் அறிந்திருந்தார்கள். அதிபர்கள் கூட்டத்திற்காக வந்து கொண்டிருந்தனர். பாடசாலை தொடங்கு முன்னமேயே ஆனந்தன் பாடசாலைக் கேற்றைத் திறந்து பிள்ளைகளோடு அளவளாவிக் கொண்டிருந்தான். தன்னை யார் என்று அவன் காட்டிக் கொள்ளவில்லை. ஒரு ஆசிரியராக நடித்துக் கொண்டிருந்தான். பாடசாலைக்கு முதல் வருகை தருபவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலெக்சாந்தர்தான். அவர் அப்போது பிரதி அதிபராக இருந்தார். அவர்தான் சிரித்த முகத்தோடு வந்து விசாரித்தார். ஆனந்தன் அதிபரைச் சந்திக்க வந்திருப்பதாகக் கூறினான். அதிபர் வரும்வரை பாடசாலையைச் சுற்றி உலா வந்தான்.

அதிபர் வந்ததும் ஒன்றுகூடலுடன் பாடசாலை தொடங்கப்பட்டது. தூரத்தில் நின்றவாறே யாவற்றையும் அவதானித்தான். அதிபர் தனது அலுவலகத்துள் புகுந்து கொண்டார். அலெக்சாந்தர் ஆனந்தன் பக்கம் வந்தார். "சேர் கனநேரமாக நிக்கிறீங்க. வாங்க அதிபரைச் சந்திக்கலாம்". அழைத்தார். பின்னால் சென்றான். "சேர்.. இவர்..உங்களைப் பார்க்க வேணுமாம். கனநேரமாகக் காத்திருக்கிறார்". அலெக்ஸ் அதிபர் ரத்தினத்திடம் சொன்னார். ரத்தினம் அரசியல் செல்வாக்கில் அதிபராக வந்தவர். "அப்படியா.. இப்ப எனக்கு நேரமில்ல. அதிபர்கள் கூட்டமிருக்கு. இன்டைக்கென்று புதிய கல்வி யதிகாரியும் வாறார். கூட்டம் எப்பமுடியுமென்று தெரியாது. அதுதான் புறப்படுறன். நாளைக்கு வரேலுமா?. மிஸ்டர் அலெக்சாந்தர் இவரிட்ட என்ன விசயமென்று கேட்டு வையுங்க. நான் வாறன்." அதிபர் சொல்லிக் கொண்டே வெளியில் வந்தார். "அதுக்கென்ன நாளைக்குச் சந்திக்கிறன்". கூறியவாறே பின்னால் சென்றான். அதிபர் விறுவிறென்டு அதிபர்கள் கூட்டம் நடைபெறுமிடத்துக்கு நடந்தார். "இவர் இப்படித்தான்..சேர். சேர் உங்களுக்கு என்னால ஏதும் உதவி செய்யமுடியுமா"? அலெக்ஸாந்தர் பதிலுக்காகக் காத்திருந்தார். அவரின் நடத்தைகள் ஆனந்தனை வெகுவாகக் கவர்ந்தது.

அதிபர் ரத்தினம் சுறுசுறுப்பற்றவர். எல்லாவற்றிலும் ஒரு அசமந்தப் போக்கு. அதற்கான காரணத்தையும் புரிந்து கொண்டான். "மிஸ்டர் அலெக்சாந்தர் நீங்கள் அதிபர் கூட்டங்களுக்குப் போவதில்லையா"? ஆனந்தன் கேட்டான். "முதலில் நான்தான் அதிபராக இருந்தன். திடீரென இவர் கல்வித்திணைக்களக் கடிதத்தோடு அதிபராக வந்தார். அவருக்கும் கிறேட் இல்லை. நான் விலகிக்கொண்டன். கூட்டத்துக்கு அவர் கூப்பிட்டால் போவன்". அலெக்ஸாந்தர் பதிலளித்தார். "இன்றைக்குப் போகல்லையா"? ஆனந்தன் கேட்டான். "புதிய கல்வி அதிகாரி வாறாராம். வந்தபின் போகயிருக்கிறன்". அலெக்ஸ் சொன்னார். கூட்டம் முடியும்வரை நானும் உங்களோட வந்திருக்கலாமா? நடப்பதை அறிந்தால் நல்லதொரு நியூஸ் பத்திரிகையில் போடலாம்". ஆனந்தன் கூறியதும் அலெக்ஸ் சந்தோசப்பட்டார். "நல்லது சேர். எங்கட புதிய கல்வி அதிகாரியும் வாறார். அவரைப்பற்றியும் பத்திரிகையில் போடலாம். வாங்க போவம்". அழைத்தார்.

இருவரும் அதிபர் கூட்டம் நடக்கும் மண்டபத்துக்குச் சென்றார்கள். அதிபர்கள் ஒன்று கூடினால் கலகலப்பாக இருக்கும். தங்களது வீரப்பிரதாபங்களை விட்டுப் பார்ப்பார்கள். எல்லோரும் சேர்ந்து கதைப்பதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றும் விளங்கவில்லை. "சேர் எதுக்கும் ஒருக்கா இதில நில்லுங்க. உள்ளேபோய் எங்கட அதிபரிடம் ஒரு சொல்கேட்டுட்டு வாறன்". சொல்லியவாறு அலெக்ஸ் உள்ளே சென்றார். வரிசையாக நின்ற வேப்பைமரங்கள் நிழலை அள்ளி வீசின. வேப்பம்பூக்கள் சொரிந்து அழகூட்டின. வாசம் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. சூழலை அவதானித்தான்.. எதிர்ப்புறமாக ஜேசு கோயில். பாலைமரத்தின் கீழ் மாதாவின் அழகுச் சிலை. எங்கும் பயன்தரு மரங்கள். வன்னிக் காடு வளத்தைத் தன்னகத்தே பொத்தி வைத்திருந்தது. வளமான மண், தோட்டங்கள் நிறைந்து பயிர்கள் சிரித்தன. உழுந்தும் பயறு, எள்ளு என எங்கும் தானிய வகைகள். உழைப்பால் உயரும் மக்கள். ஆநிரைகள் என செட்டிகுளம் செழித்திருந்தது. கதிரைகளை அரக்கித் தங்களுக்கு விருப்பமான இடங்களில் அதிபர்கள் அமர்ந்து அமர்க்களப் படுத்தினார்கள்.

## 26

அலெக்ஸாந்தரின் "வாங்க சேர்" சத்தம் அவனைச் சுயநினைவுக்கு இழுத்தது. உள்ளே போனான். கண்களை வீசி அளந்தான். அதிபர்களது முகங்களைப் படித்தான். கல்வி அதிகாரியை வரவேற்க ஆயத்தமாகி யிருப்பதை அவதானித்தான். ஒரு வகுப்பறையின் வடிவில் தளபாடங்கள் இருந்தன. நான்கு கதிரைகள். அவற்றுக்கு முன்னால் பெரிய மேசை. மாணவர்கள் இருப்பது போல் அதிபர்கள் அமர்ந்திருந்தனர். ஆனந்தனைப் பற்றி அவர்கள் அலட்டிக் கொள்ளவில்லை. அவர்களது எண்ணமெல்லாம் கல்வி அதிகாரியிலேயே இருந்தன. செட்டிகுளப் பங்குத் தந்தை அருட்திரு.பிலிப் அடிகளார் வருவதை அலெக்ஸ் கண்டு கொண்டார். அலெக்ஸ் எழுந்து அடிகளாரிடம் சென்று "வணக்கம் பாதர் வாங்க. என்ன விசயம் பாதர்"? அவரிடம் விசாரித்தார்.

"வணக்கம் அலெக்ஸ். எங்க கல்வி அதிகாரி? அவர் காலயில என்னைச் சந்திக்க வந்திருக்கார். நான் வெளியில போயிருந்தன். அவர் பாடசாலையில் நிற்பதாகச் சொல்லியிருக்கார். நான் வந்ததும் சொன்னார்கள். அதுதான் வந்தனான்". விசயத்தைச் சொன்னார். "அவர் இன்னும் வரல்ல பாதர். அதுதான் காத்திருக்கிறம்". அலெக்ஸ் விளக்கினார். "இன்னும் வரல்லையா"? பாதருக்கு ஆச்சரியமாக இருந்தது. அவரது கண்கள் ஆனந்தனைத் தேடின. ஆனந்தன் அடிகளாரைப் பார்த்து விட்டான். எழுந்து வெளியில் வந்தான். "குட் மோர்னிங் பாதர். நான் ஆனந்தன். காலையில் உங்களைப் பார்த்து ஆசிர்வாதம் பெறலாம் என்று வந்தன். நீங்க வெளியில் போனதாகச் சொன்னார்கள். வாங்க பாதர் உள்ளே.." அழைத்தான்.

அலெக்ஸாந்தருக்குத் தன்னை யாரோ அலக்காகத் தூக்கி வாரி மேலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிந்து, அதள பாதாளத்தில் இருந்து விழும் உணர்வு ஏற்பட்டது. "காலையில் இருந்து யாரோடு கதைத்தேனோ அவர்தான் கல்வி அதிகாரி என்பதை அறிந்து கொள்ளவில்லையே. மரியாதையோடு அடக்கமும் உள்ள அதிகாரி. சே.. எவ்வளவு மடத்தனம்.'' தனக்குத்தானே சொல்லிக் கொண்டார். எண்ணியவாறே உள்ளே முன்னால் சென்றார். பிலிப் அடிகளாருக்கு நல்ல மரியாதை இருந்தது. சமயங்கள் எல்லாம் அன்புவழியைக் காட்டுவன. மனிதர்களைப் பாவச் செயல்களில் இருந்து காப்பாற்றி நல்வழிப்படுத்துவன, என்ற உன்னத நோக்கத்தைக் கொண்டவர். பாதரைக் கண்டதும் அதிபர்கள் எழுந்தார்கள். வணக்கம் சொன்னார்கள். அவரும் வணக்கத்தைத் தெரிவித்தார்.

பாதர் மேசையருகில் இருந்த கதிரையில் அமர்ந்தார். பக்கத்தில் அதிபர்சங்கத் தலைவர் யோகசாமி போயிருந்தார். செயலாளர் அதிபர் பாலசிங்கம். அவரும் சென்று இன்னொரு கதிரையில் இருந்தார். அதிபர் யோகசாமி தான் தலைமை வகித்தார். இரண்டு நிமிட மௌனப் பிரார்த்தனையோடு கூட்டம் தொடங்கியது. "இதுவரை நமது கல்வி அதிகாரி வந்து சேரவில்லை. பாதர் வந்திருக்கிறார். அவரது ஆசியோடு நமது கூட்டத்தைத் தொடங்குவோம். எப்படியும் கல்வி அதிகாரி வந்துவிடுவார்''. பிலிப் அடிகளாரை ஆசியுரை வழங்குமாறு அழைத்தார். அடிகளாருக்குச் சிரிப்பு வந்தது. "நமது மக்களும் இப்படித்தானே. எங்கும் நிறைந்திருக்கும் ஏகாந்தப் பரம்பொருளைத் தமக்குப் பக்கத்தில் வைத்துக் கொண்டு அவரைத்தேடி அலைகிறார்கள்''. மனதில் நினைத்துக் கொண்டு அடிகளார் எழுந்தார்.

"எனக்கு இன்றைக்குச் சந்தோசமாக இருக்கிறது. நமது பக்கத்திலேயே இறைவனை வைத்துக் கொண்டு அவனைக் காணவில்லை என்று தேடுகிறோம். நாம் நம்மை அறிந்து, நமது சூழலையும் புரிந்து தேடலில் ஈடுபடவேண்டும். ஒவ்வொருநாளும் புதிதாக வருகின்றன. கழிந்த நாட்கள் திரும்பி வருவதில்லை. புதிய நாட்கள் நம்முன்னே வந்து நிற்கின்றன. நாம்தான் அதனைப் பரிந்து நமது முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லவேண்டும். எங்களது செட்டிகுளம் கல்வி வட்டாரம் வளமுறவேண்டும். நல்லதொரு கல்விச் சமூகம் உருவாக வேண்டும் என்பதற்காக நமது மத்தியில் வந்திருக்கும் கல்வி அதிகாரி திரு.ஆனந்தன் அவர்களே! அதிபர்களே உங்கள் அனைவருக்கும் எனது வணக்கமும், நல்வாழ்த்துக்களும் உரித்தாகுக''. பாதர் கூறியதும் அனைவரது கண்களும் சுழன்றன.

எங்கே கல்வி அதிகாரி? யார்..? அவரா..? வினாக்கள் எழுந்தன. "இதோ உங்களோடு ஒருவராக அமர்ந்திருக்கும் இவர்தான் நமது கல்வி அதிகாரி திரு.ஆனந்தன்.'' கைகளால் சுட்டிக் காட்டினார். அனைவரது கண்களும் ஒரே நேரத்தில் ஆனந்தனை மொய்த்தன. யோகசாமி எழுந்து ஆனந்தனிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றார். சேர்! மன்னிச்சிக் கொள்ளுங்கோ. உண்மையில் நாங்கள் வேறு யாரோவென்று இருந்துவிட்டோம்.'' மன்னிப்புக் கேட்டு அவருக்காக ஒதுக்கப்பட்ட கதிரையில் அமருமாறு கேட்டுக் கொண்டார். அதிபர்கள் அனைவரும் ஒரே முகமாக அழைத்தார்கள்.

ஆனந்தன் மெல்ல எழுந்து கதிரையில் அமர்ந்தான். பாதர் தொடர்ந்தார். "செட்டிகுளம் கல்வி வட்டாரத்தில் இரண்டு புதிய பாடசாலைகளைத் திறப்பதற்கு இரண்டு வருடங்களாக முயற்சிக்கிறோம். ஆனால் இன்னும் திறந்தபாடில்லை. முதல்வேலையாக அவற்றைத் திறந்து தர ஆவனசெய்யவேண்டும். அடுத்ததாக இந்தப்பாடசாலையிலும் சுற்றுப்புறப் பாடசாலைகளிலும் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை நடத்துவதற்கான மத்திய நிலையம் செட்டீகுளத்தில் இல்லை. செட்டிகுளத்தில் அந்தப் பரீட்சை நடத்துவதற்குரிய மத்திய நிலையத்துக்கான அனுமதியையும் பெற்றுத்தரும்படி'' தனது ஆசியுரையோடு சேர்த்துக் கேட்டுக் கொண்டார்.

ஆனந்தன் தன்னைச் சுருக்கமாக அறிமுகம் செய்தான். அதிபர்கள் தங்களை அறிமுகம் செய்தார்கள். புன்னகையோடு அவர்களுக்கு வணக்கம் சொன்னான். பாடசாலைகளின் குறைகளைப் பட்டியல் படுத்திப் பாடசாலைவாரியாகப் பெற்றுக் கொண்டான். "பாடசாலைத் தேவைகளுக்காக நீங்கள் கல்வி அலுவலகம் செல்லவேண்டியதில்லை. அத்தேவைகளை என்னிடம் தாருங்கள். உடனேயே முடித்துத் தருவேன்.'' ஆணித்தரமாக முன்வைத்தான். முதற் கூட்டத்திலேயே அதிபர்களது நன்மதிப்பைப் பெற்றுக் கொண்டான். "பாதர் குறிப்பிட்ட இரண்டு விடயங்களும் அடுத்தமாதம் கைகூடும். அதனைச் செய்து தருவது எனது பொறுப்பு''?. என்றான். அதிபர்கள் ஆச்சரியமாகப் பார்த்தார்கள். அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. நம்பினவர்களும் உண்டு. நம்பாதவர்களும் இருந்தார்கள்.

"சேர்! மன்னிக்கவேணும். பீடிகையோடு அதிபர் முருகப்பா எழுந்தார். "நீங்க நினைப்பது போல் புதிய பாடசாலைகள் திறப்பது இலகுவானதல்ல. அதேபோல் செட்டிகுளத்தில் பரீட்சை நிலையம் வைப்பதற்கான அனுமதியும் பெறுவது முடியாத காரியம்''. எதையோ வீழ்த்திய பெருமையில் அவர் சொற்களை வீசினார். ஆனந்தன் சிரித்துக் கொண்டான். "நீங்கள் ஏன் எதிர்மறையாய் நினைக்கிறீர்கள். முடியும் என்று நம்புவோமே.'' ஆனந்தன் வழமையான பதிலை ஆறுதலாகக் கூறினான். "அதுக்கில்ல சேர், புகழுக்காகச் சொல்லிப்போட்டு செய்யாமல் விடக்கூடாது. இப்படிப் பல அதிகாரிகள் வந்தார்கள். அது செய்வேன். இது செய்வேன் என்று சொல்வார்கள். போய்விடுவார்கள். ஒன்றும் நடக்காது. பின் அதுபற்றிய பேச்சே இருக்காது. அதுதான் சொன்னேன்.'' முருகப்பா பதிலளித்தார்.

"அதிபர் முருகப்பா சொல்வதிலும் உண்மையில்லாமல் இல்லை. ஆனால், பாதர் நீங்கள் முன்வைத்த இரு கோரிக்கைகளையும் அடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதக்கூட்டத்தில் அறிவிப்பேன். சரி உங்களது வட்டார வேலைத் திட்டத்தின்படி விடுபட்ட வேலைகள் இருக்கின்றனவா‘‘? வினாவாகக் கேட்டு விடையை எதிர்பார்த்தான். அதிபர் பாலசிங்கம் எழுந்தார். "சேர்! வட்டார விளையாட்டுப் போட்டி அரைவாசியில கிடக்கு. அதைப்பற்றி வட்டார விளையாட்டுச் செயலாளர் திரு.அலெக்ஸாந்தர் கூறுவார். அலெக்ஸ் சேர், அதைப் பற்றிக்கூறுங்களன்‘‘. அலெக்ஸாந்தரைக் கேட்டுக் கொண்டார். அலெக்ஸாந்தர் எழுந்து விபரத்தை விளக்கினார். “கீற்ஸ்' முடிந்துவிட்டது. "பைன'லில் இன்னும் சில நிகழ்ச்சிகளும், பரிசுகளும் வழங்க வேண்டும். அதற்குரிய நிதி வளமும் இல்லை. என்ன செய்யலாம், சேர்? வினாவாக முடித்தார்.

"என்னன்ன செலவு வரும். உத்தேசமாகச் சொல்லமுடியுமா? கேட்டு விட்டுப் பதிலுக்காகக் காத்திருந்தார். "சேர்! விருந்தினர்கள், நடுவர்களது உபசரிப்பு, பரிசுப் பொருட்கள், இதர செலவுகளாக உத்தேசமாக இருபத்தைந்தாயிரம் தேறும்". அலெக்ஸாந்தர் சமர்ப்பித்தார். “அதிபர் சங்கத்தால் எவ்வளவு கொடுக்கலாம்". வினவினான். சங்கத்தின் பேரில் விளையாட்டுப்போட்டிக்காக ஏழாயிரம் இருக்கு." அலெக்சாந்தர் வாசித்தார். “சரி எப்போது விளையாட்டுப் போட்டியை வைக்கலாம்.? திகதியைத் தீர்மானியுங்கள்‘‘. கூறிக்கொண்டே தனது தினக்குறிப்பைப் புரட்டினான். "இன்று வியாழன் அடுத்தகிழமை வியாழன் பொருத்தமாக இருக்கும் சேர். எல்லா ஆயத்தங்களையும் செய்து விடலாம்‘‘. கரீம் அதிபர் சுட்டிக்காட்டினார். “அது சரிப்பட்டு வராது. மூன்றுகிழமையாவது வேண்டும்". மீண்டும் முருகப்பா குறுக்கிட்டார். "வேண்டாம் சேர். அதிபர் கரீம் கூறியபடி வியாழக்கிழமையே வைப்போம்‘‘. அதிபர்கள் ஏகமனதாகத் தீர்மானித்தார்கள்.

"அலெக்ஸ் ஏற்பாடுகளைக் கவனியுங்கள். ஐம்பது உணவுப் பொட்டலம் வேண்டும். அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன். பரிசுப் பொருட்களை புதன்கிழமை வாங்குவோம். வவுனியா மாவட்டக் கல்வி அலுவலகம் வரமுடியுமா‘‘? கேட்டுவிட்டு அலக்ஸ்சாந்தரைப் பார்த்தான். "ஓம் சேர்‘‘. அலெக்ஸாந்தரிடமிருந்து பதில் வந்தது. “பதினெட்டு வியாழன் விளையாட்டுப் போட்டி நடைபெறும். உங்கள் ஒத்துழைப்பைத் தாருங்கள்‘‘. அதிபர் யோகசாமிக்கு ஆனந்தனின் செயல்கள் அனைத்தும் பிடித்துக் கொண்டது. கூட்டம் முடியும்போது "அன்பானவர்களே உங்கள் பாடசாலைகளுக்குத் திடீர்விஜயம் செய்வேன். உங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யுங்கள். அத்துடன் எனது அலுவலகம் இந்தப் பாடசாலையிலேயே அமையும். உங்கள் தேவைகள் இங்கேயே நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்". நிறைவாகக் கூறி விடைபெற்றான்.

அதிபர்களது கூட்டம் முடிந்தது. பாதர் ஆனந்தனிடம் விடை பெற்றார். மெதுவாக ஏதோ சொன்னார். அவனால் தட்டமுடியவில்லை. சம்மதித்தான். அவர் சென்றுவிட்டார். அதிபர்கள் ஒவ்வொருவராக விடைபெற்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் அவர்களால் உடன் செல்லமுடியவில்லை. போக்குவரத்து மிகவும் அரிதாகவே நடைபெற்றது. செட்டிகுளம் மகாவித்தியாலயத்தின் ஒரு பகுதியில் சிறியதான அறையை பிரதேசக் கல்வி அலுவலகமாக மாற்றியமைத்தான். அதிபர் ரத்தினத்தின் உதவியோடு அலெக்ஸ் யாவற்றையும் செய்து முடித்தார். அதிபர் பாலசிங்கம் பூரணமாக ஒத்துழைத்தார். பல அதிபர்கள் கல்வி அலுவலக அறை ஒழுங்கு படுத்திக் கொண்டே உரையாடினார்கள். உரையாடல்கள் இடையே பலவற்றைப் பரிமாறிக் கொண்டார்கள்.

"செட்டிகுளம் பிரதேசத்தைப் பற்றித் தெரியாது. வஸ்போக்குவரத்தும் குறைவு. எப்படி பாடசாலைகளுக்கு இவர் திடீர் விஜயம் செய்வார். வஸ் வாறநேரம் எங்களுக்குத்தான் தெரியும்". முருகப்பாவின் குரல் ஓங்கி ஒலித்ததை ஆனந்தன் உள்வாங்கிக் கொண்டான். இப்படியும் மனிதர்கள் இருப்பார்கள். ஆனால் இவர்களிடம் இருக்கும் திறமைகளை இனங்காணவேண்டும். தக்க தருணத்தில் பயன்படுத்திக் கொள்ளலாம். மனதில் பதித்துக் கொண்டான். ஒரு மனிதனிடம் பலமும் உள்ளது. அதேபோல் பலவீனம் உள்ளது. அதனைப் போக்குவதற்குரிய சந்தர்பங்களை அறியவேண்டும். அதனைப் பயன்படுத்தும் சாதுரியத்தையும் அறிந்திருக்கவேண்டும். மனிதனிடமுள்ள மானிடத்தைக் கண்டுபிடித்துவிடலாம்.

துரிதகதியில் அலுவலகம் தயாராகிவிட்டது. அலுவலகத்தை ஒட்டியதுபோல் ஒரு அறை இருந்தது. அதனைத் தான் தங்குவதற்கென ஒதுக்கிக் கொண்டான். "அலெக்ஸ்! அழைத்தான். அலெக்ஸ் வந்தார். "எனக்கொரு உதவி செய்யவேண்டும். நான் வந்து தங்கும் நாட்களில் உணவு வசதிக்கு ஏற்பாடு செய்துதர வேண்டும். செய்யலாமா? கேட்டான். "அதற்கென்ன சேர். நான் ஒழுங்கு செய்யிறன்". அலெக்ஸ் ஏற்றுக்கொண்டார். பாடசாலை முடிந்து பிள்ளைகள் போய்க்கொண்டிருந்தார்கள். அதிபர்களும் சென்றுவிட்டார்கள். பிலிப் அடிகளார் செய்தியனுப் பியிருந்தார். அலெக்ஸ் ஆனந்தனை பாதரிடம் அழைத்துச் சென்றார். பகல் உணவுடன் பாதர் காத்திருந்தார். அலெக்ஸாந்தரையும் அவர் அழைத்திருந்தார். சேர்ந்து உணவருந்தினார்கள். உண்டபின் தனது திட்டங்களை விளக்கினான். பாதரிடம் திறக்கவேண்டிய பாடசாலைகளின் விபரங்களைப் பெற்றுக் கொண்டான். அடுத்தகிழமை சந்திப்பதாகக் கூறி விடைபெற்றான்.

## 27

அதிகாலையிலேயே சைக்கிள் ஓடுவது உடலுக்கு நல்ல பயிற்சியாகும். காலை வவுனியா மன்னார் வீதியால் சைக்கிளில் புறப்பட்டுவிட்டான். நெடிதுயர்ந்த பாலை, வீரை மரங்கள் பனிநீராடிக் காற்றில் அசைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தன. மூலிகைகளால் நிறைந்த வன்னிக் காட்டினைத் தழுவி காற்று வீசியது. அந்தக் காற்றைச் சுவாசிப்பதில் அலாதி இன்பம் பொங்கியது. களைப்பே தெரியவில்லை. அந்தக் காற்றுக்கு அத்தனை சக்தியிருந்தது. போகும் வழியில் கிராமங்களில் மக்கள் சுறுசுறுப்பாகத் தோட்டங்களிலும், வயல்களிலும் தங்கள் தொழில்களில் ஈடுபட்டுழைப்பதைப் பார்த்து ரசிப்பான். ஆநிரைகள் கூட்டங்கூட்டமாகப் படுத்திருந்து சூரியக்கதிர்களில் சுகம் காணும்.

பூவரசங்குளம் பாடசாலையில் அதிபர் சீனிவாசகம் தனது அலுவல்களில் ஈடுபட்டிருந்தார். ஆனந்தனைக் கண்டுவிட்டார். ஓடோடி வந்தார். "சேர் வணக்கம். இந்த அதிகால வேளயில வந்திருக்கிறியள். எங்கட அதிகாரிமார் பாடசாலயளுக்குப் பத்து மணிக்குப்பிறகுதான் வருவாங்க. வாங்க சேர். ஒரு ரீ குடித்துப் போகலாம்". அழைத்தார். ஆனந்தன் புன்னகைத்தான். சைக்கிளைவிட்டு இறங்கிப் பாடசாலைக்குள் போனான். பாடசாலை மகிழ்ச்சியான சூழலுடன் நிமிர்ந்து நின்றது. சுற்றிவர நோட்டம் விட்டான். "இன்று முதன்முதலில் உங்கட பாடசாலைக்கு வந்தது சந்தோசமாக இருக்கிறது. பாடசாலை அழகாகக் காட்சிதருகிறது". மனநிறைவோடு சொன்னான். சீனிவாசகம் மகிழ்ந்து போனார். அவரது மனைவியும் அசிரியர். அவர் சுடச்சுடப் பசும்பால் தேநீரைக் கொண்டு வந்தார். "குடியுங்க சேர்" அன்போடு சொன்னார்.

நீங்க அதிகாலயிலேயே பாடசாலையில் இருந்து வேலைசெய்வது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. வழியில் மூன்று பாடசாலைகளைப் பார்த்தேன். பாடசாலைகள் தூங்கிக்கிடக்கின்றன. இன்று ஆலங்குளம் சந்திவரையுள்ள பாடசாலைகளது நிலைகளை அறியப் புறப்பட்டிருக்கிறன். தேநீரைக் குடித்தவாறே தனது திட்டத்தைக் விளக்கினான். அவனது கையிலுள்ள வவுனியா மாவட்டப் பாடசாலைகளின் அமைவிட வரைபடத்தை சீனிவாசகம் கண்டுகொண்டார். பலஅதிபர்கள் மாட்டிக்கொள்வார்கள் என்பதை எண்ணித் தனக்குள் சிரித்துக் கொண்டார். அதிபரின் வேண்டுகோளுக்கிணங்கப் பாடசாலையைச் சுற்றிப் பார்த்தான். அதிபரின் கனவுகளைக் கேட்டறிந்தார். "சேர்! இதனை மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்த வேண்டும். இங்க ஏ.எல் வகுப்பு இல்லை. அதற்கும் அனுமதி வேண்டும். இங்கயிருந்து பிள்ளைகள் பல்கலைக் கழகம் செல்ல வழிசெய்யவேண்டும். அதுதான் சேர் எங்கட ஆசை". ஆனந்தனுக்கு அவரது ஆசைகளைக் கேட்கச் சந்தோசமாக இருந்தது.

"ஏன் அதிபர்களின் கூட்டத்தில் இவற்றை முன்வைக்க வில்லை".? ஆனந்தன் வினாவினான். "ஒரு விசயத்தை முன்வைக்கும்போது சகல ஆதாரங்களையும் இணைத்துக் கொடுக்கவேண்டும். அவற்றைக் கொண்டுவரல்ல. அதனால பேசாமல் இருந்தன். இப்ப எல்லாம் தயார் நாளைக்கு உங்களிட்டக் கொண்டு வந்து தாறன் சேர்." சீனிவாசகம் விளக்கினார். "எல்லாம் தயாரா? கிராமத்தின் வரைபடம், கடந்தகால பரீட்சைப் பெறுபேறுகள் எல்லாம் இருந்தால் தாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பம்''. கேட்டான். சீனிவாகம் ஆவணங்களை தயாராக வைத்திருந்தார். அவற்றை மேலோட்டமாகப் பார்த்தான். திருப்திப்பட்டுக் கொண்டான். அவரிடமே திருப்பிக் கொடுத்தான். "இந்தப் பாடசாலைக்கு ஒரு மண்டபம் இல்லை. இந்த வருடம் நடைபெறும் க.பொ.த. பரீட்சைக்கு இந்தப் பாடசாலையும் ஒரு பரீட்சை நிலையமாக இயங்கும். சரியா''? அவன் சொல்லும்போது சீனிவாசகம் அதிசயித்துப் போனார்.

"சரி நேரம் ஏழுமணி. விளையாட்டுப் போட்டி. ஆயத்தங்கள் தயாரா? நான் வரும்போது வாறன். எல்லாக் கடிதங்களையும் தாங்க. கொண்டு போகிறேன்". சொல்லிப் புறப்பட்டான். சைக்கிள் விரைந்தது. சீனிவாசகம் அவன் போவதையே அதிசயித்துப் பார்த்துக் கொண்டு நின்றார். சைக்கிள் ஓடிக்கொண்டிருந்தது. கால்கள் பெடலை மிதித்துக் கொண்டிருந்தன. கைகள் ஹாண்டிலில் விளையாடின. கண்கள் வழிகாட்டின. மனம் எண்ணக்கடலில் விரிந்து எதிர்காலத் திட்டக் கனவில் உலா வந்தது. எவ்வளவு தேவைகள் இருக்கின்றன? இவையாவற்றையும் நிறைவேற்றவேண்டும். எண்ணியவாறே சைக்கிள் ஓடினான். முன்னால் குருக்கள்புதுக்குளம் பாடசாலை தெரிந்தது. பாடசாலை இயங்கிக் கொண்டிருந்தது.

அதிபர் பாடசாலையிலேயே இருப்பவர். பிள்ளைகள் பாடசாலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். சைக்கிள் விரைந்தது. பூவரசங்குளத்தில் இருந்து அவனது கண்கள் இயற்கைத்தாவரங்களை அவதானித்து வந்தன. அவை படிப்படியாக மாறிவருவதை அவதானிக்கத் தவறவில்லை. உயர்ந்த மரங்கள் உயரத்தில் குறைந்து செல்வதை அவதானித்தான். கிளைகள் நிறைந்ததாகத் தெரிந்தன. இலைகள் அகன்ற தாவரங்களும், முட்செடிகளும் காணப்பட்டன. குளங்களையண்டி மருதமரங்களின் நிறைந்திருந்தன. வேம்பு பரவலாகக் காணப்பட்டன. காட்டுப்பூக்கள் கண்களைப் பறித்தன. பிராமனாளங்குளம் தெரிந்தது. முன்னால் தெரிந்த சந்தியில் காலையூன்றினான். கிராமங்களுக்குச் செல்லும் அம்புக் குறிகளைப் பார்த்தான்.

வலப்பக்கமாகச் சைக்கிளைத் திருப்பினான். கிராமங்கள் பிரதான வீதியிலிருந்து விலகியிருந்தன. ஆட்டுமந்தைகள் அலைந்து திரிந்தன. ஊர்மனைகள் தெரிந்தன. பெரியதம்பனை குளம்தொட்டு வளம்பெருக்கும் பழம்பெரும் கிராமம். பெரிதொரு கிராமம். பாடசாலை தெரிந்தது. உள்ளே சென்றான். ஊர்மாடுகள் பாடசாலை வளவினுள் காவல் செய்தன. பாடசாலையின் ஒருபுறத்தில் மாணவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். பாடசாலை அலுவலகம் மூடிக்கிடந்தது. ஆசிரியர்கள் யாருமில்லை. புதியதொரு ஆள் தங்கள் பாடசாலைக்கு வந்ததை அறிந்து பிள்ளைகள் ஓடிவந்தார்கள். விசாரித்தார்கள். "நான் உங்களின் ஆசிரியர்தான். வாருங்கள்'' அழைத்தான். பிள்ளைகள் அனைவரும் வந்தார்கள். மாடுகளை அப்புறப்படுத்தினான். எங்கும் சாணம் குவிந்து கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவ தலைவர்களை அழைத்தான். வந்தார்கள். பக்கத்திலுள்ள வீடுகளுக்குப் போய் மண்வெட்டி, குப்பைவாரி போன்றவற்றை எடுத்துவருமாறு கூறினான். நொடிப்பொழுதில் வந்தன. தானும் ஒருமண்வெட்டியை எடுத்தான். குழிகள் தோண்டப்பட்டன. அவற்றுள் சாணம் தஞ்சமாகியது. பிள்ளைகள் அனைவரும் இயங்கினார்கள். ஆசிரியர் மாதவன் வந்தார். அவரும் சேர்ந்து கொண்டார். அரைமணி நேரத்தில் பாடசாலை பளிச்சிட்டது. ஒன்றுகூடலை நடத்தினான். மிகவும் அழகாகத் தேவாரம் பாடினார்கள். அறிவுக் கதைகளைக் கூறினான். பலவினாக்களைத் தொடுத்தான். பாடசாலையின் நிலையினைப் புரிந்து கொண்டான். ஆசிரியரிடம் தான் யாரென்பதைக் கூறினான்.

"அதிபர் இன்று வரமாட்டார் அவர் கல்வி அலுவலகம் செல்வதாகச் சொன்னவர். இன்றைக்குப் பதிலதிபராக சின்னத்துரை ஆசிரியர் பொறுப்பெடுத்தவர். அவரிட்டத்தான் பாடசாலைத் திறப்பு. அவர் இப்ப வந்திருவார்." மாதவன் கூறும்போதே தூரத்தில் சின்னத்துரை வருவதைக் கண்டுவிட்டார். "அதோ வாறார்" மாதவன் காட்டினார். "மாஸ்டர். நான் யாரென்டு சொன்னால் அவர் திரும்பிப் போயிருவார். அதிபரைச் சந்திக் வந்தவர் என்று சொல்லுங்க. மாஸ்டர் நீங்க வழமையாகப் போடும் நேரத்தைப் பதியச்சொல்லுங்க பரவாயில்லை. பாவம் பிந்தி வரும் ஆசிரியர்களையும் காப்பாற்றத்தானே வேண்டும். சரியா"? ஆனந்தன் முன்னெச்செரிக்கை விடுத்தான். பிள்ளைகள் வகுப்புக்களை நோக்கிச் சென்றார்கள்.

சின்னத்துரை நேரே அலுவலகதுக்குச் சென்றார். மாதவனோடு ஆனந்தனும் சென்றான். ஆனந்தன் கூறியது போல் சின்னத்துரையிடம் ஒப்புவித்தான். "அதிபர் கல்வி அலுவலகம் சென்றிருக்கார். நாளைக்குத்தான் வருவார். கதவினைத் திறந்தவாறே கூறினார். உள்ளே போய் அலுமாரியினைத் திறந்து ஆசிரியர்களின் வரவுப் பதிவேட்டினை எடுத்து அதில் தனது ஒப்பத்தை இட்டு நேரத்தை எட்டு மணியெனக் குறிப்பிட்டார். மாதவன் அவரின் பின்னால் கையெழுத்திட்டார். ஆனந்தனின் கண்கள் வரவேட்டின் குளறுபடிகளைக் கண்டு கொண்டன. "அதிபர் எப்ப கல்விஅலுவலகம் போனவர்.? அவர் எங்க இருக்கிறவர்? போனால் இன்டக்குச் சந்திக்கலாமோ?" ஆனந்தன் வினவினான். "அவர் வவுனியாவிலதான் இருக்கிறவர். ஒவ்வொரு நாளும் வந்து போறவர். அவரின் வீட்டு விலாசம் தெரியாது. மாதவன் மாஸ்டர்! உங்களுக்குத் தெரியுமா"? சின்னத்துரை மாதவனிடம் கேட்டார். மாதவனும் தெரியாது என்று தலையை ஆட்டினார்.

பஸ் பாடசாலைப் படலையில் நின்றது. சில ஆசிரியர்கள் இறங்கி வந்தார்கள். அவர்களுக்கு ஆச்சரியம். அவர்கள் வரும்போது பிள்ளைகள் விளையாடுவார்கள். இன்று வகுப்புக்களில் ஆசிரியர்கள் இல்லை. ஆனால் வகுப்புக்கள் அமைதியாக இருக்கின்றன. குதுகலிப்போடு அலுவலகத்தில் நுழைந்தார்கள். அதே நேரத்தைப் பதிந்தார்கள். "என்ன மாஸ்டர் இன்றைக்குப் பிள்ளைகள் ஒழுங்கா வகுப்புகளில் இருக்கிறாங்க. அதிபரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்ல. வேலைகள் கொடுத்தீங்களா"? சொல்லிக் கொண்டு ஆசிரியர்கள் இளைப்பாறும் அறைக்குள் சென்றார்கள்.

"மாஸ்ரர் இப்ப உங்கட நேரம் என்ன?" ஆனந்தன் கேட்டான். சின்னத்துரை தனது மணிக்கூட்டைப் பார்த்தார். "எட்டரையாகிறது". சின்னத்துரை பதிலளித்தார். "மிஸ்டர் மாதவன் உங்கட நேரமென்ன? பாடசாலை மணிக்கூட்டில் தெரியும் நேரமென்ன?" மாதவனைப் பார்த்துக் கேட்டான். "பத்தரையாகிறது" மாதவன் பதிலளித்தான். "மாஸ்டர் தயவுசெய்து அந்த ஆசிரியர் பதிவேட்டைத் தாங்க". ஆனந்தன் கேட்டான். "உங்களுக்கு அதெல்லாம் எதுக்கு. வந்த லேலையப் பாரத்திட்டுப் போங்க"? சின்னத்துரை சினத்தோடு பதிலளித்தார். மாதவன் அவர் காதுகளில் ஓதினான். சின்னத்துரை நிலைமையைப் புரிந்து கொண்டார். "மன்னிச்சிக் கொள்ளுங்க சேர். நான் யாரோ என்று நினைச்சிட்டன்". வரவேடு ஆனந்தன் கைகளுக்குத் தாவியது.

ஆசிரியர்கள் கொண்டுவந்த உணவையுண்டு களைப்பைப் போக்கினர். இன்னும் வகுப்புக்களுக்குப் போகவில்லை. "அதிபர் இன்று பாடசாலைக்கு வந்திருக்கிறார். ஏழு மணிக்குக் கையெழுத்திட்டிருக்கிறார். வெளியில் போயிருக்கிறார். சின்னத்துரை மாஸ்டர் பத்துமணிக்கு வந்து அலுவலகம் திறந்து எட்டுமணியென வரவு பதிந்துள்ளார். ஆனால் ஏழரை மணிக்கு வந்த மாதவன் மாஸ்டர் எட்டுமணிக்கு வரவினைப் பதிந்துள்ளார். பத்தரை மணிக்கு வந்த ஆசிரியர்கள் எட்டு மணிக்கு தங்கள் வரவினைப் பதிந்துள்ளார்கள். நான் ஏழேகாலுக்கு வந்து பிள்ளைகளோடு சேர்ந்து பாடசாலையைத் சுத்தம் செய்தேன். சரி லொக் புத்தகத்தை எடுங்கள்". கேட்டான். சின்னத்துரையருக்கு வெயர்த்து விட்டது. அதனையெடுத்துக் கொடுத்தார்.

ஆனந்தனுக்குச் சிரிப்பாக வந்தது. "வியாழன் அதிபர்களது கூட்டத்துக்கு உங்கள் அதிபர் வந்தார். அதற்குப்பின் அவர் பாடசாலைக்கு வரவில்லை என்பது எனக்குத் தெரியும். நான் அவரைப் பலமுறை வவுனியாவில் கண்டிருக்கிறேன். வரவுப் பதிவேட்டில் கையெழுத்திட்டிருக்கிறார். ஆனால் அவர் பாடசாலைக்கு வரவில்லை. உண்மையாக அவர் சென்ற புதன் வந்திருக்கிறார். அதன்பிறகு அவர் வரவில்லை. நான் வந்தபின்தான் அலுவலகம் திறபட்டது. அவரது ஆவி வந்து கையெழுத்திட்டுச் சென்றிருக்கலாம் எனச் சந்தேகம் வருகிறது. கூடுவிட்டுக் கூடுபாயும் விக்கிரமாதித்தன் கதையைக் கேள்விப் பட்டிருக்கிறேன். வியாழன், வெள்ளி, இன்று திங்கட்கிழமை மூன்று நாட்களும் அதிபர் வரவில்லை. ஆனால் அதிபர் உங்களுக்குத் தெரியாமல் கையெழுத்திட்டு விட்டுப் போயிருக்கிறார்." சின்னத்துரையின் முகத்தில் வெயர்வை அரும்பியது.

"மிஸ்டர் சின்னத்துரை நீங்கதான் அவருக்காக பதில் கடமை பார்க்கிறீங்க. இல்லையா? என்ன நடந்தது. உண்மையைச் சொல்லுங்க. பிழைவிடுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித இயல்பு. ஆனால் அதையுணர்ந்து திருந்தவேண்டும். இல்லையா? மிஸ்டர்.மாதவன் ஆசிரியர்கள் இன்னும் வகுப்புக்குப் போகவில்லை. அவர்களை வரச் சொல்லமுடியுமா''? சொன்னதும் மாதவன் வெளியில் சென்றார். மாதவன் செய்தியைத் தெரிவித்தான். ஆனால் வந்திருப்பது யாரென்று சொல்லவில்லை. பிரதி அதிபர் வரச்சொன்னதாகவே சொன்னார். அவர்கள் அலுவலகத்துக்குள் வந்தார்கள். சின்னத்துரையர் அவர்களை இருக்கும்படி கூறினார். அவரே தொடங்கினார்.

"அதிபர் புதன்கிழமை தான் வருமட்டும் பாடசாலைக்குப் பொறுப்பாக இருக்கும்படி கூறிச் சென்றவர். ஆனால் இன்றுவரை வரவில்லை. இன்றுவரை அவர் ஒவ்வொருநாளும் கையெழுத்திட்டுச் சென்றிருக்கிறார். லொக்புத்தகத்திலும் இன்று கல்வி அலுவலகம் செல்வதாக எழுதிக் கையெழுத்திட்டுச் சென்றுள்ளார். நானும், நீங்களும், பத்து அல்லது பத்தரை மணிக்கு வந்து எட்டுமணியென்று நேரத்தைப் பதிந்து விட்டு பன்னிரெண்டு மணிக்குப் போய்விடுகிறோம். இதனால் நமது பிள்ளைகள் தமது கல்வியில் பின்னடைந்துள்ளார்கள். இதற்கான மாற்றொழுங்கினை நாம் மேற்கொள்ளவேண்டும். என்ன செய்யலாம் என்று நீங்களே சொல்லுங்கள்''. கூறிவிட்டு மெல்ல இருந்தார்.

ஆசிரியர்களுக்கு மனதுக்குள் கோபம். "ஒரு வெளியாரை வைத்துக் கொண்டு இப்படிக் கதைப்பது நல்லதல்ல''. திருமதி.கார்த்திகேசு வீறாப்பாகச் சொன்னார். ஆனந்தனுக்குச் சிரிப்பு வந்தது. "நாம் பிழைவிடுகிறோம் என்பதை ஏற்றுக் கொள்ளவேணும். இதைத்தான் இவ்வளவு நாளும் செய்து கொண்டு வந்திருக்கிறோம். இங்கு இருப்பவர் வெளியாளல்ல. நமது பாடசாலைக்கு மிகவேண்டியவர். நமது கல்வி அதிகாரி. காலையில் அவர் வந்து பாடசாலையைச் சுத்தஞ்செய்து தொடங்கியும் வைத்தார். மாதவன் மாஸ்டரும் அவருக்கு ஒத்தாசை செய்திருக்கிறார். அவர் தானொரு கல்வி அதிகாரியென்று காட்டிக் கொள்ளவில்லை. நமது தவறுகளைச் சுட்டிகாட்டி, திருந்துவதற்கான வழிவகைகளைக் காட்டவே வருகை தந்துள்ளார்''. சின்னத்துரை கூறியதை ஆசிரியர்கள் உள்வாங்கியதை அவர்களது முகங்கள் காட்டின. "சேர்! எங்களை மன்னித்துக் கொள்ளுங்கள். இன்றிலிருந்து நாங்கள் உண்மையாக உழைப்போம்''. ஏகமனதாகக் கூறினார்கள். இப்படியொரு மாற்றத்தைத்தான் ஆனந்தன் எதிர்பார்த்தான்.

"நான் உங்களில் ஒருவன். நானும் ஆசிரியராக இருந்துதான் இந்தநிலைக்கு உயர்ந்துள்ளேன். நாமெல்லோரும் கூடி ஏழைமாணவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிப்போம். உங்கள் மனமாற்றம் தொடரவேண்டும். நன்றி. உங்கள் வகுப்புக்களுக்குச் சென்று கடமையைச் செய்யுங்கள்'' கூறிவிட்டு. லொக் புத்தகத்தில் தனது வருகையைப் பதிந்து, அதிபர் வெளியில் சென்றுள்ளார். என எழுதி ஐந்து வரிகள் இடம் விட்டுக் கையொப்பத்தினை இட்டான். "மிஸ்டர் சினத்துரை இன்று மாலை அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைக் காலை அதிபரை அலுவலகத்தில் என்னைச் சந்திக்குமாறு செய்தியை அனுப்புங்கள். அவரைக் காப்பற்ற வேண்டுமானால் உடனடியாக வரச் சொல்லுங்கள். நான் வாறன்" கூறிச் சைக்கிளில் தாவியேறிப் புறப்பட்டான். அவனையே ஆசிரியர்கள் பார்த்தவாறு நின்றார்கள்.

## 28

வெயில் வன்னிக் காட்டிலும் தனது சேட்டையைக் காட்டியது. பூவரசங்குளத்துச் சந்தியில் இருந்த கடையில் புகுந்தான். நல்ல கறிவணிஸ் தெரிந்தது. சாப்பிட்டான். காய்ச்சிய பசும்பால் கிடைத்தது. வயிறு நிரம்பியது. முடிந்ததும் பாடசாலையினுள் நுழைந்தான். அதிபர் சீனிவாசகம் எழுந்து வந்தார். "சீனிவாசகம் நமது விளையாட்டுப் போட்டிக்குச் சில பரிசுப் பொருட்கள் வேண்டுமே. என்ன செய்வது''? விசாரித்தான். "சேர்! நீங்க சொல்லமுதலிலேயே நானும் அலெக்ஸாந்தரும் அவற்றைச் சேர்த்து விட்டோம். ''சந்தோசத்தோடு சீனிவாசகம் சொன்னார். "விளையாட்டுப் போட்டிக்குரிய ஆயத்தங்கள் எல்லாம் தயார். வியாழன் நீங்கள் வந்தால் சரி. ஆனால் நடுவர்களுக்கு எப்படியும் உணவு கொடுக்கவேணும். அதுதான் முடியவில்லை.'' சீனிவாசகம் விளக்கினார். ஆனந்தனுக்கு உச்சி குளிர்ந்தது. "உணவை நான் பார்த்துக் கொள்ளுவேன்''. ஆனந்தன் கூறினான்.

"சரி கடிதங்களைத் தாருங்கள். உடனே போய் அவற்றைக் கொழும்புக்கு அனுப்ப வேணும்". விரைவு படுத்தினான். சீனிவாசகம் எல்லாம் தயாராக வைத்திருந்தார். "சேர்! சாப்பிட்டுட்டுப் போங்களன். சாப்பாடு தயாராக இருக்கு''. சீனிவாசகம் முறுவலோடு அழைத்தார். "ஐயய்யோ, இப்பதான் அந்தக் கடையில சாப்பிட்டேனே. இனிச்சாப்பிட இயலாது. பிறகு பார்ப்போம். நன்றி. நான் வாறன்". கடிதங்களைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

கால்கள் பெடலை மிதித்தன. விளையாட்டுப் போட்டிக்குரிய உணவுபற்றிய சிந்தனையில் ஆழ்ந்தான். சாளம்பைக் குளம் வித்தியாலயம் வாருங்கள் என்றழைத்தது. அதிபர் கரீம் புன்னகையோடு வரவேற்றார். பாடசாலையைச் சுற்றி வலம் வந்தான். கண்கள் தேவைப்பாடுகளை ஆராய்ந்தன. "சேர் விளையாட்டுப் போட்டிக்குரிய ஆயத்தங்கள் நடக்குது. உணவுப்பார்சல்கள் பத்து எங்கள் பாடசாலை தரும். அலெக்ஸாந்தரிடம் கூறிவிட்டேன். பயப்படத்தேவையில்லை''. கரீம் அதேசிரிப்போடு கூறினார். அவரை அன்போடு பார்த்தான். நன்றி கூறினான். நல்ல மனிதர்கள் உலகத்தில் ஏராளம் உண்டு. அவர்களை நாம்தான் இனம்காணத் தவறிவிடுகிறோம். "மிஸ்டர் கரீம் நான் அவசரமாக அலுவலகம் போகவேணும். நான் வருகிறேன்." கூறிப்புறப்பட்டான். சேர்! சாப்பிட்டுங்களன். சாப்பாடு தயாராக இருக்கு. அதிபர் அழைத்தார். வேண்டாம் கரீம் சாப்பிட்டுட்டன். இன்னொரு நாளைக்குப் பாரப்போம். நான் வாறன்''. புறப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியில் சுணங்காமல் நேரே கல்வித்திணைக்களத்துக்குச் சென்றான். தனது அறையில் உடலைக் கழுவினான். உடைகளை மாற்றிக் கொண்டு அலுவலகத்துக்குள் புகுந்து கடிதங்களைப் பார்வையிட்டுத் தேவையான பதில்களைத் தயாரித்தான். திறக்கவேண்டிய இரு பாடசாலைகளின் கோவைகளைப் பார்வையிட்டான். எஸ்.ஓ.படிவங்கள் சரியாகப் பூரணப்படுத்தப் படவில்லை. வரைபடங்கள் இல்லை. குறைபாடுகளைச் சரிசெய்தான். கல்விப்பணிப்பாளருடன் கலந்தாலோசித்தான். எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி உரையாடினான். ஆனந்தனது செயற்பாடுகள் கல்விப் பணிப்பாளர் சிவபாததத்துக்குப் பிடித்து விட்டது. அவன் தயாரித்த கடிதங்களுக்கு தனது ஒப்பத்தையிட்டு அவனிடமே கொடுத்தார். அவற்றை கல்வி அமைச்சுக்கு அனுப்பினான்.

தான் சென்றுவந்த பாடசாலைகளின் நிலையை அறிக்கையாகத் தயாரித்தான். அறிக்கையை கல்விப் பணிப்பளருக்குக் கோவைப்படுத்தினான். நேரம் ஐந்து மணியைத் தாண்டியிருந்தது. தனது அறையில் தினசரிகளைப் புரட்டியபடி இருந்தான். கதவில் யாரோ தட்டுவது தெரிந்தது. "சேர்! மே ஐ கம் இன்..சேர்''. மெல்லிய சத்தம் வந்தது. "ஓ..யெஸ். கம் இன்'' கூறியவாறு கதவினைத் திறந்தான். அங்கே முருகப்பா நின்றிருந்தார். மெதுவாக உள்ளே வந்தார். "வாங்க மிஸ்டர் முருகப்பா'' அழைத்துக் கதவினை மெல்ல மூடினான்.

முருகப்பா திடீரென ஆனந்தனின் கால்களைப் பிடித்துக் கொண்டார். "இதன்ன மிஸ்டர் முருகப்பா? காலை விடுங்க. எழும்புங்க. நான் பெரிய மனிதனல்ல. உங்களப்போல சாதாரண மனிதன். உங்கட வயதென்ன. எனது வயதென்ன? நீங்க போயும் போயும் என்ர காலில விழுவதா?. எழும்புங்க''. அவரைப் பிடித்து எழுப்பினான். "சேர்! இதுதான் முதலும் கடைசியும். நான் விட்டபிழைகளை உணர்ந்து கொண்டேன் சேர். என்னை மன்னிச்சிக் கொள்ளுங்க. இனிமேல் என்ர கடமையச் சரியாகச் செய்வன். அதிபர் கரிமோட கதைச்சனான் சேர். அவர்ர பாடசாலையில் இருந்து விளையாட்டுப் போட்டிக்கு உணவுப் பார்சல் தருவதாகக் கூறினார். எங்கட பாடசாலையில இருந்து நாப்பது பார்சல் வரும். அது என்ர பொறுப்பு''. உண்மையில் முருகப்பாவின் கண்கள் கலங்கியிருந்தன.

ஆனந்தனின் மனம் வருந்தியது. வயதில் முதிர்ந்த ஒருவர் தனது காலில் விழும்படி தான் நடந்து கொண்டதற்கு வருந்தினான். அவனது மனதில் போராட்டம். அவர் தனது குற்றங்களை மறைப்பதற்காக இப்படி நடந்து கொண்டார். தனக்குத் தானே தேற்றிக் கொண்டான். "வியாழன் விளையாட்டுப் போட்டி கலகலப்பாக நடைபெறும். நான் வாறன் சேர்''. கூறிவிட்டு அவர் போனார். அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். மனிதர்கள் தமது குறைகளைத் தாமே உணர்ந்து கொண்டால் இந்த உலகத்தில் குற்றங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருகாது. அதேவேளை அவர்களுக்கு உரியமுறையில் தெளிவு படுத்தி அவற்றைப் பெரிதாக்கி மனங்களை நோகச்செய்யாமலும் இருக்கவேண்டும். முருகப்பா தொடர்ந்து செய்து வந்த இச்செயற்பாடுகளை இனியும் செய்யமாட்டார். ஆனால் அதனைச் சரியாக நெறிப்படுத்த வேண்டும். சந்தர்ப்பங்கள்தான் அனைவரையும் ஆட்டிப்படைக்கின்றன.

விளையாட்டுப் போட்டி ஆனந்தன் எதிர்பார்த்ததற்கு மேலாக சிறப்பாக நடந்தது. கல்விப்பணிப்பாளர் திரு.சிவபாதம் வித்தியாசமானவர். பொதுவாக நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதைத் தவிர்த்துக் கொள்வார். ஆனால் ஆனந்தன் அழைத்தபோது வந்து விட்டார். அவரது வாயாலேயே "இரண்டு புதிய பாடசாலைகள் அடுத்த மாதம் இந்த கல்வி வட்டாரத்தில் திறபடும். அத்துடன் இரண்டு பாடசாலைகளில் பரீட்சை நிலையங்கள் அமையும். நேற்றுத்தான் திரு.ஆனந்தன் அதற்கான கடிதங்களை முறைப்படி தயாரித்து எனது அனுமதியைப் பெற்று கல்வி அமைச்சுக்கு அனுப்பியிருக்கிறார். அவரது முயற்சிக்கு எனது பாராட்டுக்கள். அவருக்கு ஒத்தாசை கொடுக்கும் அதிபர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன்". எனக் கூறினார். அருட்திரு.பிலிப் அடிகளார் கல்விப் பணிப்பாளருக்கு நன்றி தெரிவித்தார்.

"அலெக்ஸ் என்ன யோசனை"? ஆனந்தன் அவரைப் பார்த்துக் கேட்டான். "இல்லை சேர். முருகப்பாவை நினைத்துக் கொண்டேன். விளையாட்டுப் போட்டிக்கு ஒரு சதமும் தரமாட்டேன் என்று அடம்பிடித்தவர், ஐம்பது உணவுப் பார்சல் தந்தாரே. அதை நினைத்தேன்". ஆனந்தன் கொடுப்புக்குள் சிரித்தான். "முருகப்பா நல்ல மனிசன். ஆனால் ஒருவிதமான போக்கு. அவரை நீதான் ராசா என்றால் எல்லாம் செய்வார். பொதுவாக நமது கல்வி வட்டாரத்தில் உள்ள அதிபர்கள் எல்லோரும் நல்லவர்கள்தான்". சிரித்துக் கொண்டே ஆனந்தன் கூறினான். "சேர் நீங்க எல்லாரையும் நம்பியிருக்கிறீங்க. ஆனால் இரண்டு மூன்று பேர் நமக்கு ஆப்பு வெச்சிருக்காங்க". பரமன் கூறினான்.

"சேர், எல்லா அதிபர்களும் வந்து பார்த்துப் போனாங்க. ரத்தினத்தாரும், லிங்கரும் வரல்லயே. பார்த்தீங்களா? இவங்கதான் பிட்டிசத்துக்குப் பின்னால் இருப்பதாகப் பரவலான கதை". பரமன் குறிப்பிட்டான். "யாரையும் நாங்க குற்றம் சொல்லக்கூடாது. இதனை நாம் அனுபவிக்கவேணும் என்டு இருக்கு. அதை அனுபவிக்கிறம். எல்லாம் நன்மைக்கே. நாம் பட்ட துன்பத்தை பிறர்படும்படி செய்யவோ, நினைக்கவோ கூடாது". ஆனந்தன் அறிவுரைத்தான் அலெக்ஸாந்தர் ஆனந்தனைப் பார்த்தார். ஆனந்தன் சிரித்துக் கொண்டு நின்றான்.

யோகதாஸ் வந்தார். மாற்றுடைகளைக் கொடுத்தார். "சேர், உங்கள பொலிஸ் கைது செய்துள்ளதாகவும், செட்டிகுளம் கல்வி வட்டாரம் வெற்றிடமாக இருப்பதாகவும், அதற்காகத் தற்காலிகமாக வேறு ஒருவரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமித்து, அனுமதிக்காகக் கல்வி அமைச்சுக்குக் கடிதம் அனுப்பியாச்சு. அவர்தான் இப்ப கடமைசெய்கிறார். பாருங்க சேர் இவங்கட குணத்த. ஆறுதலாகக் கடிதம் அனுப்பியிருக்கலாம்தானே?''. கலங்கியவாறு யோகதாஸ் கூறினார். ''யோகதாஸ் சரியானதைத்தான் கல்விப் பணிப்பாளர் செய்திருக்கிறார். கட்டாயம் ஒருவர் அந்த வேலைகளைக் கவனிக்கவேண்டும். அடுத்தது கல்வி அமைச்சுக்குத் தெரிவிக்க வேண்டியது அவரது கடமை. அதனை நாங்கள் ஏன் பெரிதுபடுத்தவேணும்.? வாறகிழமை எங்கள விடுவாங்க. வேறென்ன விசேசம்?'' மனதினில் கவலை இருந்தாலும். அதனை வெளிக்காட்டாது யோகதாசுக்குப் பதில் கூறினான்.

''யாரைப் போட்டிருக்கிறார்''? கேட்டான். ''ஐயாத்துரையரப் போட்டிருக்கிறார்'' யோகதாஸ் பதிலளித்தார். ''எங்களிடம் பலவீனங்கள் நிறையவே உண்டு. தகுதியான தகைமையுள்ளவர்களை உரிய பதவிக்கு நியமிப்பதில்லை. இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்கள்தான் கல்வி அதிகாரியாக நியமனம் பெறவேண்டும். ஆனால் அதற்கு எதிர்மாறாக நியமனங்கள் நடக்குது. கல்வி உலகம் சீரழிவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். அடுத்தது கல்வி அமைச்சும், அரசாங்கமும் கல்விச்சேவையை அலட்சியம் செய்வதாகும். பாடசாலைக்கு கல்வி மேற்பார்வைக்குச் செல்பவர் பாடசாலைகளில் உள்ள அதிபர், ஆசிரியர்களைவிடவும் தகைமையுடையவராக இருக்க வேண்டும். அப்போதுதான், அவர்கள் மரியாதை செலுத்துவார்கள். இவற்றுக்குக் காரணம் அரசியல்வாதிகள்தான். இந்தநிலை என்று மாறும்.'' பெருமூச்செறிந்து கூறினான்.

அதிபர் பாலசிங்கம் இரவு உணவினைச் சுமந்து வந்தார். ''எங்களால எவ்வளவு பேருக்குத் துன்பம்''. ஆனந்தன் கவலையோடு சொன்னான். ''ஏன் சேர் அப்படிச் சொல்றீங்க. இது எங்கட கடமை. நாங்க சந்தோசப்படுறம் சேர். உங்களுக்குச் சேவைசெய்யக் கொடுத்து வைத்திருக்க வேணும். உங்களால வவுனியா மாவட்டம் பல நன்மைகளைப் பெற்றுள்ளது. நீங்க விரைவில் வெளியில் வந்து சேவைசெய்ய வேணும். இதுதான் எங்கள் எல்லோரதும் பிரார்த்தனை''. பாலசிங்கம் சொல்லும்போதே அவரது நா தளதளத்தது. ,,சேர், சட்டத்தரணி வந்தாரா? என்ன சொன்னார்?'' வினவினார். ''அடுத்த கிழமை பார்க்கலாம் என்று சொன்னன். அடுத்த கிழமை நாங்க வெளியில வருவோம் என்ற நம்பிக்கை இருக்கு. எங்களால நீங்களும் அலைவதுதான் சங்கடமாயிருக்கு''. ஆனந்தன் விளக்கினான்.

''டி.ஒ. போடாட்டிச் சரி. போட்டாத்தான் சேர் சிக்கல். உங்கட விருப்பம்போல செய்வம் சேர். பகல் என்ன சாப்பிட்டிங்க.? உணவைக் கொடுத்தவாறே பாலசிங்கம் கூறினார். ''பகல் அலெக்ஸ் வீட்டிலிருந்தும், பரமன் வீட்டிலிருந்தும் உணவு வந்தது. நல்ல சாப்பாடுதான். ஆனால் சாப்பிடேலாது''. ஆனந்தன் பதிலளித்தான். ''வேறென்ன சேர் வேணும்.''?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலசிங்கம் கேட்டார். "ஒன்றுமே வேண்டாம். சுதந்திரமாக வெளியில் வரவேண்டும்" புன்னகையோடு ஆனந்தன் சொன்னான்

## 29

ஒருகிழமை கடந்துவிட்டது. அதிபர்கள், ஆசிரியர்கள் என்று பொலிஸ் ஸ்ரேசனுக்குப் படையெடுத்த வண்ணம் இருந்தனர். அவர்களுக்குப் பதில் சொல்வதே பெரும்சிரமமாக இருந்தது. "எப்பசேர் விடுவாங்களாம். ஏன் இன்னம் விடல்ல." இப்படிப் பல கேள்விகளுக்குப் பதில் சொல்வதில் திண்டாடினான். பலர் பொலிஸ் நிலையத்துக்கு வருவதில் இருந்து தவிர்த்திருந்தார்கள். துணிவுள்ளவர்கள் மட்டும் வந்தார்கள். யோகதாஸ் மாலை வந்து "சேர் உங்கட வீட்டயிருந்து வந்தது". ஒரு கடிதத்தைக் கொடுத்தார். அதனை வாங்கிப் பார்த்தான். கடிதத்தில் முத்திரை இல்லை. விலாசமும் இல்லை "யார் தந்தது". கேட்டான். "செல்வராசா அதிபர் தந்தவர்." யோகதாஸ் பதிலளித்தான். ஆறதலாகப் பார்க்கலாம். அதனை வைத்துக் கொண்டான்.

பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருப்பவர்களை எந்தநேரமும் பார்க்கமுடியாது. காலையில் ஆறுமணியிலிருந்து ஏழுமணி வரை பார்க்கலாம். மாலையில் ஐந்து மணியிலிருந்து ஆறுமணிவரையும் பார்க்க வரலாம். இப்போது யாரும் பார்க்கவர முடியாத நேரம். கடிதத்தைப் பிரித்தான். அவன் கண்கள் குளமாயின. மேரி எழுதியகடிதம். வாசிக்க வாசிக்கக் கண்களில் இருந்து கண்ணீர் ஆறாகப் பெருகி நெஞ்சுச் சட்டையை நனைத்தது. ஆனந்தன் இப்படித் தேம்பி அழுததைப் அலெக்ஸ் பாரத்ததில்லை. அவரது கண்களும் கலங்கின. "எல்லாவற்றையும் அதிபர் செல்வராசா வந்து கூறினார். என் உயிர் துடித்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் விரைவில் வருவீர்கள் என்று சொன்னார்கள். எனக்கும் நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கையில் காத்திருக்கிறன்". அப்படியே மேரி எதிரே நின்று ஒப்புவித்துக் கொண்டிருந்த உணர்வினைப் பெற்றான்.

மேரி வந்தால் தனது இந்தப்பரிதாப நிலையைக் கண்டால் துடிதுடித்துப் போவாள். அவள் தாங்க மாட்டாள் என்பதை அறிவான். அதனால் அவள் அதனைப் பார்க்கக் கூடாது என்பதில் கவனமாக இருந்தான். அத்துடன் அவளையும் மிரட்டுவார்கள். அதனால் என்னகாரணம் கொண்டும் தன்னோடு தொடர்பு கொள்ளவேண்டாம் என்று அறிவித்திருந்தான். ஆனால் அதிபர் செல்வராசாவும், இரத்தினராஜாவும் திருகோணமலைக்குப் புறப்பட்டு விட்டார்கள். ஆனந்தன் வீட்டுக்கே சென்று மேரியிடம் ஆறுதல் வார்த்தை கூறியிருக்கிறார்கள். அவள் வெந்து, மனம் நொந்து, அழுது புரண்டு கடிதம் எழுதியிருக்கிறாள். "எனது மனைவிக்குத் துயரத்தைத் தூண்டிவிட்டார்கள். அவளை அழவைத்துவிட்டார்கள்" என்று ஒருபக்கம் கோபம் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபக்கம் அவர்கள்மேல் பேரன்பு துளிர்த்தது. "என்மேல் உள்ள அன்பின் காரணத்தினால்தானே அவ்வளவு தூரம் சென்று அறிவித்துள்ளார்கள்". அவர்களை எண்ணி நெக்குருகினான்.

கணபதிப்பிள்ளை வந்தார். "சேர் எப்படி இருக்கிறீங்க. நாளைக்கு எஸ்.பி. வருவார். ஹெட்குவாட்டர்ஸ் இன்ஸ்பெக்டர் நல்ல மனுசன். இரவு கதைச்சவர். தான் எஸ்.பி யோட ரெலிபோனில கதைச்சவராம். பொய்யான பிட்டிசமாம். உங்களில குற்றமில்லையாம். அவர் வந்ததும் விடுவதாகச் சொன்னார். பயப்பிடாமல் இருங்க". கூறிவிட்டுச் சென்றார். மூவரும் ஆளையாள் பார்த்தார்கள். "சேர், நீங்க இப்படிக் கவலைப்பட்டதை நான் பார்த்ததேயில்ல. எனக்கும் அழுகை வந்தது." அலெக்ஸாந்தர் கவலையோட கூறினார். வாழ்க்கை என்பது, உண்டு உறங்கியிருப்பது மட்டுமில்லை. அதனை ரசித்து அனுபவிக்கவும் வேண்டும். மனிதனுக்கு மட்டும்தான் வாழத்தெரியும். பிறவிப் பயனையிட்டுச் சிந்திக்கவும் செய்கிறான்.

விலங்குகளின் வாழ்க்கை வட்டம் குறுகியது. இவ்வுலகில் பல்லாயிர உயிரினங்கள் உள்ளன. ஆனால் அவை உண்டுறங்கி, இனப்பெருக்கம் செய்து மாண்டு மடிந்து போகின்றன. மனிதர்கள் பலர் விலங்குகளாகவே இருந்துவிட்டுச் செல்கின்றனர். காக்கிச் சட்டை போட்டவர்கள் எல்லோரும் இரும்பு மனம் படைத்தவர்கள் இல்லை. அவர்களுள் நல்லவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். சிலவேளைகளில் அவர்கள் இரும்பாக இதயத்தை மாற்றிக் கொள்கிறார்கள். கொள்ளத்தான் வேண்டும். ஆனால் இரும்பான இதயங்களைக் கொண்டவர்களிடம் சட்டம் கைமாறி விடுவதால் மனித அவலங்கள் உருவெடுக்கின்றன. ஆனந்தன் சற்று நிம்மதியானான். கனவுகளை மெய்ப்படுத்துவதில் அவனுக்கு இறைவன் பக்கபலமாக இருந்து உதவுகிறான். நல்லனவற்றைச் சிந்தித்து, நலிவுற்றோருக்கு நல்லனவற்றைச் செய்வதற்கு முனையும்போது வெற்றி வருவது உறுதி.

"சேர் நம்ம மூன்றுபேரையும் ஒன்றாக விடுவாங்களோ தெரியாது. நான் பிந்தி வந்தபடியால் என்னைப் பிந்தித்தான் விடுவாங்கபோலத் தெரியுது. அலெக்ஸ் கவலையோடு சொன்னார். "ஏன் வீணாகக் கவலைப்படணும். வருவதை எதிர் கொள்ளவேணும். கவலைய விடுங்க. மூன்றுபேரையும் விடுவாங்க". ஆனந்தன் ஆறுதல் கூறினான். நாட்களை எண்ணிக்கொண்டிருந்தனர். குந்தியிருக்க ஒருசிறு மேடை. எழும்பி கைகால்களை அசைக்க இன்னொரு சிறிய இடம். வேளைக்கு உணவு. ஒரு வேலையும் செய்யவேண்டியதில்லை. நல்ல ஓய்வு. வேறென்ன வேண்டும். அதனால்தான் இதனை மாமியார் வீடு என்று சொல்கிறார்களோ?

மனிதர்கள் தங்கள் இன்பத்துக்காகப் பறவைகளைப் பிடித்து அவற்றின் இறக்கைகளை வெட்டிக் கூண்டுக்குள் அடைத்து பாலும், பழமும், உணவும் கொடுத்து மகிழ்கிறார்கள். ஆனால் அந்தப் பறவைகள் மகிழ்கின்றனவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைப்பற்றி யாராவது சிந்தித்ததுண்டா? மனிதர்களை இப்படிக் கூண்டுகளில் போட்டு உணரவைத்தால் பறவை இனங்களுக்கும் சுதந்திரம் கிடைக்கும். இங்கு எல்லாம் கிடைத்தாலும் மனதில் சுதந்திர உணர்வும், மகிழ்ச்சியும் இல்லையே. வருடக்கணக்காகச் சிறையில் வாடும் இளைஞர்களையிட்டுச் சிந்தித்தான். அவர்களுக்கு எப்போது சுதந்திரம் கிட்டும்?

பொழுது விடிந்து மணி ஒன்பதாகியது. போலிஸ் நிலையம் உசாரானது. சிங்களத்தில் "உசார். ஹேட்குவாட்டர்ஸ் இன்ஸ்பெக்டர் வருகிறார்". போலிஸ்காரர்கள் உசாராகி சலூற் அடித்து நின்றார்கள். அவர் அறைக்குள் போனதும் கடமைகள் தொடங்கின. இன்ஸ்பெக்டர் திசநாயக்க வந்தார். "பரமன் என்ட" அழைத்தார். பரமன் ஹெட்குவாட்டர்ஸ் இன்ஸ்பெக்டர் அறைக்குள் சென்றான். ஏன் அழைத்துச் சென்றார்கள் என்பது தெரியாது. சற்று நேரத்தில் பரமன் வந்தான். விசாரித்தார்கள். "நீ வீட்டுக்குப் போகலாம் என்றார்கள். ஒரு புத்தகத்தில் கையெழுத்துப் போட்டன். போகச் சொன்னார்கள். எனக்குக் கவலையாயிருக்கு சேர். நான் வாறன் சேர்". பரமன் கூறிவிடை பெற்றான். "பரமன் இங்கிருந்து போகவேணும். மீண்டும் வரக்கூடாது. போங்க. நாளைக்கு அல்லது நாளை மறுநாள் நாங்களும் வெளியில் வந்துவிடுவம்". வாழ்த்துக் கூறினான். பரமன் போவதைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

பரமனின் சகோதரர்கள் பணத்தை அள்ளி வீசியிருந்தார்கள். பரமனுக்கு எதிரான குற்றங்கள் ஏதுமில்லை. பரமனை எப்பவோ விட்டிருக்கலாம். இன்ஸ்பெக்டர் திசநாயக்காதான் இழுத்தடித்ததை அறிந்து கொண்டான். அவனுக்குரிய கோவையை ஹெட்குவாட்டர்ஸ் இன்ஸ்பெக்டருக்குச் சமர்ப்பிக்கவில்லை. இன்றுதான் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுள்ளார். பரமனுக்கு விடுதலை கிடைத்துவிட்டது.

இன்ஸ்பெக்டர் கணபதிப்பிள்ளை வந்தார். "உங்கட விளக்கத்தை எழுதியவர்களாலதான் உங்களுக்கு பிந்துதுபோலக் கிடக்கு. நான் அதைப் பார்த்துச் சொல்லுறன். ஏஸ்.பி.நாளைக் காலை வந்ததும் கோவைகள் மேசையில் இருந்தால் கையெழுத்துப் போடுவார். இனிக்கவலப்படத் தேவையில்ல. கஸ்டகாலம் எல்லாம் கடந்து போச்சு. நான் பின்னேரம் வாறன்". அவர் போய்விட்டார். விடுதலை உறுதியாகியது. இருவரும் ஆளையாள் பார்த்தபடி இருந்தார்கள். மதிய உணவு வந்தது. உண்டார்கள். குந்தியிருந்து உரையாடினார்கள். சீமேந்து மேடையில் சாய்ந்தார்கள். நாளை எண்ணிக் கொண்டிருந்தார்கள்.

"சேர் எப்படி புதிய பாடசாலைகளுக்கு அனுமதியெடுத்தீர்கள்"? அலெக்ஸ் கேட்டார். "பாடசாலை திறப்பதற்கென்று சில படிவங்கள் உள்ளன. அவற்றைச் சரியாக நிரப்பி, கேட்கப்பட்ட ஆவணங்களைச் சரியாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தால். அனுமதி கிடைக்கும். கல்வி அமைச்சில் எனது நண்பர் இருக்கிறார். அவரும் உதவி செய்தார். பரீட்சை நிலையத்துக்குரிய அனுமதியும் அப்படித்தான். வெளியில் போனதும் முதல்வேலையாகக் கிராமங்களில் புதிய பாடசாலைகளைத் திறக்க வேணும். "தெருவெங்கும் பள்ளிகள் கட்டுவோம். கல்வி இல்லாத பேர்களை இல்லாது செய்வோம்' என்று பாரதி கண்ட கனவை மெய்ப்படச் செய்ய வேணும். வவுனியா மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிறையவே உண்டு. அதனை கல்வி அமைச்சுக்கு எடுத்துச் செல்லவேண்டும். இவற்றை விரைவில் முடிக்க வேண்டும்''. ஆனந்தன் அடுக்கிக் கொண்டே சென்றான்.

கதைத்துக் கொண்டே சற்றுக் கண்ணயர்ந்தார்கள். இன்ஸ்பெக்டர் கணபதிப்பிள்ளை வந்தார். "சேர் வாக்குமூலம் எடுத்த பொலிஸ்காரரிட்ட சொல்லி இருக்கிறன். அவங்க இன்னும் கோவையை முடிக்கல்ல. கெதிபண்ணிச் செய்யச் சொல்லியிருக்கிறன். அனேகமாக இரவுக்கு முடிச்சிருவாங்க என்று நினைக்கிறன். அப்ப இருங்க நான் வாறன்''. அவர் சென்றுவிட்டார். அவர் அடிக்கடி வந்து பார்ப்பது பெரிய ஆறுதலாக இருந்தது. மாலையானதும் வழமைபோல் பாலசிங்கம் வந்தார். உரையாடினார்கள். நடந்த விடயங்களைக் கூறினார்கள். பாலசிங்கத்துக்குச் சந்தோசம். "நல்ல காலம் சேர். டி.ஓ போடாதது. நான் கோயிலுக்குப் போய் ஒவ்வொரு நாளும் மன்றாடி வாறன். இறைவன் அருள்பாலிப்பான்''. உணவைக் கொடுத்தபடியே கூறினார். அவர் சென்றுவிட்டார்.

உணவின் பின் அதிபர்களைப் பற்றிய சிறிய உரையாடல் வந்தது. அதிபர் முருகப்பாவின் வீரதீரத்தைப் பற்றி உரையாடினார்கள். அவர் வந்து தனது கதைத்த முறைகளைப் பற்றிக் கூறினான். ஆனால் கால்களைப் பிடித்ததைப் பற்றிக் கூறவில்லை. "அதுவும் ஒரு வழியில் உதவி செய்திருக்குச் சேர். இல்லாட்டி விளையாட்டுப் போட்டிக்கு உணவு கிடைத்திருக்காது''. அலெக்ஸாந்தர் சொல்லிச் சிரித்தார். அந்த வேதனைகள் மத்தியிலும் சிறிது சிரிப்பு வந்து தலைகாட்டிச் சென்றது. கதைத்துக் கொண்டே சற்று உறங்கினார்கள். உறங்குவதும், விழிப்பதுமாக இரவு கழிந்தது.

காலை வழமைபோல் வந்தது. சொல்லி வைத்ததுபோல் பாலசிங்கம் தேநீர், காலை உணவோடு வந்தார். "நான் ஒருவகையில் கொடுத்து வைத்தவன்தான். அன்பான தாய்தந்தை கிடைத்தார்கள். எனது மனதுக்கேற்ற மனைவி கிடைத்தாள். இரண்டு குழந்தைகள் கிடைத்தார்கள். துன்பத்திலும் உதவும் நல்ல மனிதர்கள் கிடைத்திருக்கிறார்கள். கடவுள் துன்பத்தைக் கொடுப்பதும் ஒருவகையில் ஒரு பரீட்சைதானோ? அப்போதுதானே இவற்றைப் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது''. மனதுள் சிந்தனை வளர்ந்தது. "இன்று ஏதும் விஷேசம் நடக்குமா''? மனதுக்குள் கேட்டுக்கொண்டான். "சேர்..இன்றைக்கு அல்லது நாளைக்கு விடுவார்களாம். நான் சார்ஜனிடம் விசாரித்தன்''. பாலசிங்கம் தேநீரை ஊற்றிக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இரண்டு பேரையும் ஒன்றாக விடுவது சாத்தியப் படாதாம்". பாலசிங்கம் சொன்னார். "ஏனாம்?" அலெக்ஸ் கேட்டார். "ஒரு கோவை செய்யிற பொலிஸ்காரர் இன்றைக்கு வரல்லையாம். லீவாம். யாருடையதென்று தெரியாது. ஒருவரை விடுவார்களாம். நான் பின்னேரம் வந்து பாரக்கிறன் சேர்". கூறிவிட்டுச் சென்றார். இப்போது இருவருக்கும் யோசனை பிடித்து விட்டது. "முதலில் அலெக்ஸ் போகவேண்டும். அலெக்ஸ் பாவம். இளகிய மனம். நான் பிறகு போகலாம்". ஆனந்தன் மனதினுள் எண்ணிக் கொண்டான்.

அலெக்ஸ் யோசனையில் ஆழ்ந்தார். "சேர் நீங்கள் முதலில் போனால் நல்லது சேர். வெளியில் இருந்து எனது கோவை வேலையை முடிப்பீர்கள்". அலெக்ஸ் கூறினார். ஆனந்தனுக்குச் சிரிப்பு வந்தது. "நமக்குள்ள ஒற்றுமையைப் பார்த்தீர்களா? நான் நீங்க போகவேணும் என்று எண்ணுறன். நீங்க, நான் போகவேணும் என்று எண்ணுறீங்க. சரி யார் முதலில் போனாலும் சரிதான். முந்தினாலும், பிந்தினாலும் எப்படியும் வெளியில் போனால் போதும்" ஆனந்தன் கூறினான். பொலிஸ் ஸ்ரேசன் உசாரானது. ஹேட்குவாட்டர்ஸ் இன்ஸ்பெக்டர் முதலில் வந்தார். வேலைகள் தொடங்கின. பத்து மணிக்கு மீண்டும் உசாரானது. ஏஸ்.பி வந்துவிட்டார்.

சற்று நேரத்தால் இன்ஸ்பெக்டர் திசநாயக்கா வந்தார். அறைத்திறப்பை வைத்திருந்த பொலிஸ்காரரை அழைத்தார். அவர் வந்து கதவினைத் திறந்தார். "குட் மோர்னிங் மிஸ்டர் ஆனந்தன். கம் அவுட். யூ ஆர் றிலீஸ்ட் ருடே" வெளியில் வரும்படி அழைத்தார். ஆனந்தனின் முகம் கறுத்துவிட்டது. அலெக்ஸாந்தரின் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது. அழத்தொடங்கி விட்டார். அலெக்ஸாந்தரின் விடுதலையைப் பற்றிக் கேட்டான். "கோவை தயாரில்லை. நாளைக்கு அவர் விடுதலையாவார்". இன்ஸ்பெக்டர் ஆங்கிலத்தில் சொன்னார். "இன்ஸ்பெக்டர் நானும் நாளைக்குப் போகிறேனே. அனுமதி தருவீங்களா"? இன்ஸ்பெக்டர் புன்னகைத்தார். "மிஸ்டர் ஆனந்தன் உங்களுக்கு நான் சட்டத்தைச் சொல்லித் தரத்தேவையில்லை. அப்படிச் செய்யேலாது." அவர் ஆங்கிலத்தில் விளக்கினார். இன்ஸ்பெக்டர் கணபதிப்பிள்ளை வந்தார்.

"சேர்..நீங்க போங்க. நான் அவரைப் பார்த்துக் கொள்ளுவன். இன்றைக்கு இரவுக்கு அந்தப் பொலிஸ்காரரை வரச் சொல்லிப்போட்டன். ஹெட்குவாட்டரஸ் இனஸ்பெக்டரும் ரெலிபோனில இப்ப கதைச்சவர். நாளைக்கு வந்து கூட்டிப்போங்க". விளக்கமாகச் சொன்னார். ஆனந்தனுக்குச் சங்கடமாக இருந்தது. "சேர் நீங்க போங்க. நளைக்கு வாங்க. நான் சமாளித்துக் கொள்ளுவன்". அலெக்ஸ் கூறினார். திசநாயக்கா அவசரப் படுத்தினார். காலையில் வருவதாகச் சொல்லிப்புறப்பட்டான். இன்ஸ்பெக்டர் கணபதிப்பிள்ளையின் கைகளைப் பிடித்துக் கண்ணில் ஒற்றி விடைபெற்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் வந்தான். காலையில் வந்து றிளீஸ் கடிதத்தை எடுங்க. நான் எச்.கியுவிடம் கையெழுத்து எடுத்து வைக்கிறன்'' அவர் விடை கொடுத்தார்.

## 30

திசநாயக்க அருகில் வந்தார். சரளமாக ஆங்கிலத்தில் உரையாடினார். "மிஸ்ரர் ஆனந்தன். நீங்க இப்படியே வெளியில் போனால் உங்களப் புலி என்று மீண்டும் பிடித்துக் கொண்டு வருவாங்கள். வாங்க ஜீப்பில போவம். ஏறுங்க'' அவரது கட்டளை சரியாகப்பட்டது. ஏறினான். ஜீப் சலூனுக்குச் சென்றது. அவர் இறங்கச் சொன்னார். "முதலில் சேவ் எடுப்போம். பிறகு குளிப்போம். ஒரு இடத்தில் சாப்பிடுவோம். பிறகு உங்கள் அலுவலகத்தில் விட்டுவிடுகிறேன். சரியா''? விளக்கினார். சலூனுக்குள் சென்றார். சேவ் எடுத்து விடுமாறு சொன்னார். அவர் தானும் சேவ் எடுத்தார். கண்ணாடியில் அப்பொழுதுதான் தனது முகத்தை ஆனந்தன் பார்த்தான். ஒவ்வொரு நாளும் சேவ் எடுத்துப் பழகியவன். இப்போது தாடி மீசை தன்பாட்டில் விருப்பம்போல் வளர்ந்திருந்தது. அவனை அவனாலேயே நம்பமுடியாதிருந்தது. பயங்கரத் தோற்றத்தில் இருந்தான்.

சலூன்காரர் முதலில் அடையாளம் காணவில்லை. சேவ் எடுத்தபின்தான் கவனித்தார். "சேர் நான் முதல் மட்டுக்கட்டல்ல இப்பதான் தெரியுது''. அனுதாபத்தோடு சொன்னார். இன்ஸ்பெக்டரே காசைக் கொடுத்தார். முதலில் சலூன்காரர் வேண்டாமென்றார். இன்ஸ்பெக்டர் வற்புறுத்திக் கொடுத்தார். சலூன்காரர் பெற்றுக்கொண்டார். முடிந்ததும் வாடிவீட்டுக்கு ஜீப் சென்றது. கருணாமுர்த்தி காத்திருந்தார். ஆனந்தனை "வாங்க சேர்'' என்று வரவேற்றார். "சேர் இந்த அறையைப் பாவியுங்க. குளிப்பதற்கு ஏற்றவசதிகள் இருக்கு. நல்லாக்குளிச்சிட்டு வாங்க. உங்கட உடுப்பும் இருக்கு. யோகதாஸ் கொண்டு வந்து வெச்சவர்''. அன்புடன் கூறினார். ஆனந்தன் அறையினுள் புகுந்து குளித்தான். உடல் சுகமாக இருந்தது. "பாவம் அலெக்ஸ்" நினைத்துக் கொண்டான். தனக்காக எத்தனைபேர் உதவுகிறார்கள். அவர்களை அடிமனதிருத்தி நன்றி நவின்றான். குளித்து உடைகளை மாற்றி வெளியில் வந்தான். இன்ஸ்பெக்டர் 'பியரில்' லயித்திருந்தார். "மிஸ்ரர் ஆனந்தன் இது நல்லது கொஞ்சம் எடுங்க''. இன்ஸ்பெக்டர் அழைத்தார். "நோ..தாங்கியு பழக்கமில்லை இன்ஸ்பெக்டர். நீங்க எடுங்க'' பதிலளித்தான்.

பகல் சாப்பிடும்போது இரண்டு மணியாகியிருந்தது. சாப்பாடு முடிந்தது. கருணாமூர்த்தியை அழைத்தான். பில்லைக் கேட்டான். "சேர் மன்னச்சிக் கொள்ளுங்க... இதெல்லாம் எனது கணக்கு. உங்களுக்குச் செய்யாட்டி யாருக்குச் செலவழிக்கிறது''. சொல்லிக் கொண்டே தனது வேலைகளில் கருணாமூர்த்தி ஈடுபட்டார். இன்ஸ்பெக்டர் ஜீப்பில் ஏற்றி கல்வித் திணைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களத்தில் விட்டு விடைபெற்றார். யோகதாஸ் ஓடிவந்து கட்டிப்பிடித்து அழத்தொடங்கி விட்டார். ஆனந்தனுக்குப் பெரும் சங்கடமாக இருந்தது. அலுவலகத்தில் உள்ளவர்கள் எழுந்து ஓடிவந்து நலம் விசாரித்தார்கள். பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்வம் பாய்ந்து வந்தார். அவரது கண்கள் கண்ணீரைப் பொழிந்தன. பெரிய கூட்டமே கூடியிருந்தது. "அரசினரின் விருந்தாளியாக அழைக்கப் பட்டிருந்தேன். நல்ல விருந்து தந்தாங்க. போதும் போதும் என்றாகியது. அலுத்து விட்டது. அனுப்பிவிட்டாங்கள். வந்திற்றன்". தனது நகைச்சுவையோடு அனுபவத்தை எடுத்து விட்டான்.

நேரே கல்விப் பணிப்பாளரிடம் சென்றான். ஆனந்தனைக் கண்டதும் அவருக்குச் சொல்லவொண்ணா மகிழ்ச்சி. "வாங்க மிஸ்ரர் ஆனந்தன். எப்படி இருக்கிறீங்க"?. மேசையில் இருந்த மணியை அழுத்தினார். கேட்டதும் சந்திரன் வந்தார். சந்திரன் ஆனந்தனோடு மிகுந்த பாசமுடையவர். அவரது மனைவி கலா பொலிஸ் நிலையத்துக்கு வந்து அழுதேவிட்டார். "சந்திரன்! ஏ.ஓ.வைக் கூப்பிடுங்க". சந்திரன் அவரை அழைக்கப் போனார். ஏ.ஓ பாலசிங்கம் வந்தார். பாலசிங்கம் மிகநல்ல மனிதநேயங்கொண்ட நிர்வாகி. எல்லாரோடும் அன்பாகப் பழகுவார். "ஏ.ஓ. மிஸ்ரர் ஆனந்தன் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார் என்று கல்வி அமைச்சுக்கு அறிவியுங்க. எக்கவுண்டன் இல்லையா? வரச் சொல்லுங்க. ஆனந்தனது சம்பளப் பட்டியலைத் தயாரித்து சம்பளத்தைக் கொடுக்கச் சொல்லுங்க". ஒரு கனவுபோல் நடந்தேறிக் கொண்டிருந்தது. ஆனந்தன் கேட்கமுதலேயே கல்விப் பணிப்பாளர் யாவற்றையும் செய்து விட்டார். நன்றி கூறி வெளியில் வந்தான். தான் கடமையேற்றுள்ளதாகக் கடிதம் தயாரித்துக் கொடுத்தான்.

அலுவலகக் கடமைகள் முடிந்து அனைவரும் போய்விட்டார்கள். ஆனந்தன் தனது அறையில் இருந்தான். அதிபர் பாலசிங்கம் தேடிக்கொண்டு அலுவலகம் வந்து விட்டார். "சேர் அலெக்ஸ் தனியத்தான் இருக்கிறார். கண்டதும் கண்கலங்கினார். வருத்தம்தான். என்ன செய்யிறது? ஆறுதல் சொல்லி உணவும் கொடுத்து விட்டுத்தான் வருகிறேன். அவரின் கோவையை உரிய பொலிஸ்காரர் வந்து பூரணப்படுத்துகிறார். கதைச்சனான். நாளைக்குக் கட்டாயம் விடுவார்களாம்." பாலசிங்கத்தின் சொற்கள் சற்று ஆறுதலாக இருந்தது. "இப்ப பொலிஸ் நிலையம் போகேலாது. காலையில போய் பாருங்க சேர்". கூறியதும் பாலசிங்கம் விடைபெற்றுச் சென்றார். யோகதாஸ் வந்தார். "யோகதாஸ் .... வாங்க... என்ன புதினம்"? விசாரித்தான். "இப்ப கந்தோர் முன்னமாதிரி இல்ல சேர். எல்லாரும் பயந்து பயந்து இருக்கிறாங்க. எங்கும் பிரச்சினைதான். இளைஞர்கள்தான் கஸ்டப்படுகிறார்கள். தாய் தந்தைமார் அதைவிடப் பயந்து சாகிறார்கள். தங்கட பிள்ளயள வெளிநாட்டுக்கு அனுப்ப ஓடித்திரியுறாங்க. ஏழைகள் எங்க சேர் போகுங்கள்"? கவலையோட நாட்டு நடப்பைக் கூறினார். எப்படி இருந்த நாடு. இப்படிப்போயிற்று. மாலை ஐந்து ஆறுமணிக்கு ஊரெல்லாம் அடங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகிறது. நகரிலும் சனநடமாட்டம் குறைந்து வருகிறது. இராணுவ நடமாட்டம்தான் அதிகரித்திருந்தது. யோகதாஸோடு சேர்ந்து உண்டான். சரியான அயர்வாக இருந்தது. உடலெங்கும் வலித்தது. நீட்டி நிமிர்ந்து உறங்கிவிட்டான். வழமைபோல் உறக்கம் கலைந்தது. நேரத்தைப் பார்த்தான். அதிகாலை நான்குமணி. கண்களை மூடியபடி தியானத்தில் ஆழ்ந்தான். இரவு முழுவதும் விடாத மழை பெய்தது. எங்கும் மழைநீர் வெள்ளமாக ஓடியது.

தியானம் முடிந்து கண்களைத் திறந்தான். கதவு தட்டப்பட்டது. மெதுவாகத் திறந்தான். "குட்மோர்னிங்.. காவ் சம் ரீ." இரண்டு கைகளிலும் தேநீரக் கோப்பைகளோடு பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வம் நின்றார். அவரைப் பார்க்க சிரிப்பாக இருந்தது. தலையில் துவாயால் மூடியபடி மழையில் நின்றார். "நல்லமழை பெய்திருக்கு என்ன சேர்?. உள்ளே வாங்க சேர்" அழைத்தான். அவர் தேநீர் கோப்பைகளோடு வந்தார். ஒன்றை அவன் பெற்றுக் கொண்டான். கோப்பையை மேசைமேல் வைத்துவிட்டுத் தலையைத் துடைத்தார். கதிரையில் இருந்து உரையாடிக் கொண்டே தேநீரைக் குடித்தார்கள். "வீட்டுக்குப் போகவில்லையா"? செல்வம் கேட்டார். "நாளைக்குப் போகவேணும் சேர். இன்றைக்கு நிறைய வேலையிருக்கு. பொலிஸில் 'றிளீஸ்' கடிதம் எடுக்கவேண்டும். சம்பளம் எடுத்துக் கொண்டுதான் போகவேணும்". பதிலளித்தான்.

"வீட்டுக்கு அறிவிச்சிங்களோ"? அடுத்த வினாவைத் தொடுத்தார். "இல்லை சேர். அதிர்ச்சி இன்பம் கொடுக்க வேணும். அதிலதான் ஒரு சுகமிருக்கு சேர். சிரித்தவாறே கூறினான். "நல்லா அடிச்சவங்களோ"? தொடர்ந்தார். "அங்குள்ள இளைஞர்களோடு ஒப்பிடுகையில் அவ்வளவு இல்லை. என்டாலும் சும்மா சொல்லக்கூடாது சேர். நல்ல 'சாப்பாடு தந்தாங்க' சுவையோடு சொன்னான். "நல்லா மெலிஞ்சிட்டிங்க". கவலையோடு சொன்னார். நேரம் போனது தெரியவில்லை. அவர் தனது அறைக்குச் சென்றுவிட்டார். அலுவலகம் தொடங்கி விட்டது. கல்விப் பணிப்பாளர் சிவபாதம் அழைத்தார். அவரது அறைக்குள் சென்றான். "மிஸ்ரர் ஆனந்தன், ஒருகிழமைக்கு லீவு போட்டுட்டு வீட்டுக்குப் போய்வாங்க. அது 'டியூட்டி' லீவாக இருக்கட்டும். அதச்சொல்லத்தான் கூப்பிட்டனான். சம்பளம் இன்றைக்கு எடுக்கலாம்". அவர் முடித்தார். "சேர்.. இன்றைக்கு பொலிஸில் 'றிளீஸ்' கடிதம் எடுக்க வேணும். பழைய கோவைகள் கிடக்கு அவற்றை முடித்ததும் நாளைக் காலையில வீட்டுக்குப் போகிறேன் சேர்". விளக்கினான். "நல்லது. உங்கட விருப்பம் போல் செய்யுங்க". கூறிவிட்டு அவர் தனது கடமையில் மூழ்கினார்.

சில கோவைகளைப் பார்வையிட்டு ஒன்பதரை மணிக்கு வெளியில் வந்தான். யோகதாஸின் சைக்கிளையும், குடையையும் எடுத்தான். மழை பெய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது. சைக்கிளில் ஏறி பொலிஸ் நிலையம் சென்றான். இன்ஸ்பெக்டர் கணபதிப்பிள்ளை அவனுக்காகக் காத்திருந்தார். ,'றிளீஸ்' கடிதத்தைக் கொடுத்தார். பிரித்துப் பார்த்தான். கடிதத்தில் 'சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காகக் கைது செய்து விசாரணையின் பின் எந்தவிதக் குற்றமுமில்லை என்பதால் விடுவிக்கப் பெற்றுள்ளார். அவரது பணியைத் தொடரலாம். ஆட்சேபனையில்லை. என்று எழுதியிருந்தது. இன்ஸ்பெக்டர் கணபதிப்பிள்ளை புன்னகைத்தார். சேர் நீங்க செய்த உதவிக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறேன். மிகவும் நன்றி''. மனமுருக நன்றி சொன்னான். "சேர் உங்களுக்கு உதவிகள் செய்வதற்கு நாங்க கொடுத்து வைச்சிருக்க வேணும். அவ்வளவுதான் எனக்குச் சொல்லமுடியும்''. இன்ஸ்பெக்டர் கணபதிப்பிள்ளை கூறினார்.

"அலெக்ஸாந்தர் இன்னும் கொஞ்ச நேரத்தில் வருவார். கோவையை கையெழுத்துக்குப் போட்டாச்சு''. அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஒரு பொலிஸ்காரர் அவரிடம் கோவையைக் கொடுத்தார். அது அலெக்ஸாந்தரின் கோவை. "நில்லுங்க அவரைக் கூட்டிவாறன்''. சொல்லிக் கொண்டே சென்றார். சற்றுநேரத்தில் அலெக்ஸாந்தர் புன்னகையோடு ஓடிவந்து ஆனந்தனைக் கட்டித்தழுவினார். கண்களிலிருந்து கண்ணீர் பெருகி ஆறாய் ஓடியது. "இந்தாங்க உங்கட றிளீஸ் கடிதம்''. இன்ஸ்பெக்டர் கணபதிப்பிள்ளை கடிதத்தையும் கொடுத்தார். அலக்சாந்தரரின் கடிதத்தையும் கொடுத்தார். "சந்தோசமாய்ப் போய்வாங்க''. விடை கொடுத்தார். அலெக்ஸாந்தரின் மனைவி வந்திருந்தார்.

"அலெக்ஸ் நான் நாளைக்கு ஒரு கிழமை லீவில வீட்டுக்குப் போய்வரப்போறன். நீங்க சுகமாக வீடுபோய்ச் சேருங்க''. அலெக்ஸாந்தரின் மனைவியைப் பார்த்து "அலெக்ஸாந்தரை நல்லாப் பார்த்துச் சாப்பாடு கொடுங்க. நான் பிறகு வாறன்''. புன்னகைத்தவாறே சொன்னான். அலெக்ஸாந்தரின் தம்பி யோகன் வானில் வந்தார். அலெக்ஸ் மனைவியுடன் அதில் ஏறிக் கொண்டார். கையசைத்து வழியனுப்பினான். நேரே அலுவலகம் சென்று ஏ.ஓ. பாலசிங்கத்திடம் 'றிளீஸ்' கடிதத்தை ஒப்படைத்தான். "இதுான் அவசியமானது. இதன் பிரதிய இப்பவே கல்வி அமைச்சுக்கு அனுப்பிவிடுறன். இனிப்பயமில்லை''. அவர் கடிதத்தைப் பெற்று அதற்குரிய நடவடிக்கையில் ஈடுபட்டார். தனது அலுவலக அறையினுள் புகுந்து கடமைகளில் மூழ்கினான். பல அதிபர்களும், ஆசிரியர்களும் அவனைப் பார்ப்பதற்காக வந்திருந்தனர். அவர்களுக்கெல்லாம் நன்றி கூறினான். அடுத்த கிழமை பாடசாலைகளுக்கு வருவதாக வாக்குறுதியளித்தான். அவர்கள் சென்றபின் நிதிப்பகுதிக்குள் நுழைந்தான்.

கணக்காளர் திருநாவுக்கரசு அருமையான மனிதர். அவர் ஆனந்தனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பளக் காசோடு காத்திருந்தார். "வாங்க மிஸ்ரர் ஆனந்தன்! சம்பளத்தை அவனிடம் கொடுத்தார். மூன்று மாதச் சம்பளம் அவனை எட்டிப் பார்த்தது. நன்றி கூறினான். "மிஸ்ரர் ஆனந்தன்! உங்களுக்கு ஒன்று சொல்லுறன். என்ன காரணம் கொண்டும் இப்ப இடமாற்றம் கேட்கவேண்டாம். இடமாற்றம் கேட்டால் 'சட்டி சுடுதென்டு, அடுப்புக்குள் பாய்ந்த கதையாகும்' என்றார். "ஏன் அப்படிச் சொல்லுறீங்க. நான் இடமாற்றம் கேட்கல்லையே" வியப்போடு கேட்டான். "காரணத்தோடதான் சொல்லுறன். உங்கள அனுப்பிப் போட்டு இப்ப ,அக்ரிங்கா' பார்க்கிறவர் அதற்கான வேலையில ஈடுபட்டிருக்கார்". ஒரு குண்டைத்தூக்கிப் போட்டார். "அப்படி நடக்காது. பயப்படாதீங்க. எனக்குப் பலகனவுகள் இருக்கின்றன. அவற்றை மெய்ப்பட வைத்து விட்டுத்தான் இந்த மாவட்டத்தை விட்டுப் போவன்". ஒரு புன்னகையுடன் கூறினான்.

"உண்மையில நான் சந்தோசப்படுறன்". திருநாவுக்கரசு நன்றியுடன் கூறினார். அவருக்கு ஆனந்தனின் செயற்பாடுகள் பிடித்திருந்தன. கணக்காளரைப் பலருக்குப் பிடிக்காது. எல்லாம் சரியாக இருக்க வேண்டும் என்பதில் அவர் கொஞ்சம் கெடுபிடிதான். நிதி மிகவும் முக்கியமானது. அதில் குளறுபடிகள் ஏற்பட்டால் மோசடிகள் உருவாகும். அதனால் அவர் இறுக்கமாக இருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் அவரது செயற்பாடுகள் ஆனந்தனுக்குப் பிடித்திருந்தன. ஏதாவது ஒரு வழியில் ஒத்தகருத்து இருந்தால்தானே நட்பு உருவாகும் அல்லது முரண்பாடு முறுக்கி முன்னால் நிற்கும். மழை விடாது பெய்து கொண்டிருந்தது. வானம் இருண்டு கிடந்தது. இந்த மழையிலும் அதிபர், ஆசிரியர்கள் வந்தவண்ணம் இருந்தார்கள். அதிபர் முருகப்பா அழுதேவிட்டார். அவரைத் தேற்றுவதில் படாத பாடுபட்டான். ஒருவாறு நன்றி கூறி அனுப்பி வைத்தான்.

வீட்டுக்குப் போகும் வேலைகளில் ஈடுபட்டான். ஆயத்தங்களைச் செய்தான். குளிர்காற்றோடு மழை பொழிந்தது. விடியும்வரை காத்திருந்தான். உணவின்பின் உறங்கினான். அதிகாலை வேளைக்கே எழும்பி விட்டான். ஆறரை மணிக்கு ஆயத்தமானான். யோகதாஸ் பஸ்நிலையத்துக்கு வர உதவினார். ஏழுமணிக்கு திருகோணமலைக்குப் போகும் பஸ் இருந்தது. ஏறிக் கொண்டான். பஸ் புறப்பட்டது. ஈரற்பெரியகுளத்தில் நின்றது. பயணிகள் இறங்கினார்கள். தங்கள் மூட்டைமுடிச்சுக்களைச் சுமந்து கொண்டு ஒருவர்பின் ஒருவராக நடந்தார்கள். இராணுவமும், பொலிஸ்காரரும் மூட்டைமுடிச்சுக்களைப் பரிசோதித்தார்கள். தனித்தனியாக ஆட்களைத் தடவிப் பார்த்தார்கள். அடையாள அட்டைகளைப் பார்த்துப் பதிந்தபின் நடக்கச் சொன்னார்கள். பல இராணுவத்தினர் வரிசையாக நின்று பார்த்தனர். ஆனந்தனுக்கும் பரிசோதனை நடந்தது. அடையாள அட்டை பதியப்பட்டது. முடிந்ததும் ஆனந்தன் நடந்தான். இராணுவத்தினர் பார்த்துக் கொண்டிருந்தனர். அவனுக்கு அடித்தவர்கள் யாரையும் அங்கு காணவில்லை. இறுதியாக ஜீப் நின்றது. ஜீப்பின் முற்பகுதியில் அவன் ஏறியிருந்தான். தூரத்தில் போன வாகனங்கள் திரும்பிக் கொண்டிருந்தன. லொறிகள் மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்க்கொண்டிருந்தன. வெள்ளம் வீதியைப் பரவி ஓடுகிறது. பஸ் போகமுடியாது என்ற செய்தி பரவியது. எப்படியும் போகவேண்டும் என்று பலர் தீர்மானித்தார்கள். நடத்துனர் பஸ் கட்டணத்தைத் திருப்பிக் கொடுத்தார். நடந்து மதவாச்சிவரை போனால் அதிலிருந்து பஸ் பிடிக்கலாம். கதைத்துக் கொண்டார்கள். ஆனந்தன் தீர்மானித்து விட்டான். அவர்களோடு சேர்ந்து நடந்தான்.

சில வழிப்பறிகள் நடந்து கொண்டிருந்தன. பலரின் பொருட்கள் சூறையாடப்பட்டன. வவுனியாப் பொலிசுக்குத் தகவல் கிடைத்தது. அங்கிருந்து பலபொலிஸ்காரர்கள் லொறிகளில் வந்து கொண்டிருந்தனர். மழை தூறிக்கொண்டிருந்தது. அந்தக் கொமாண்டரின் கழுகுக்கண்கள் ஆனந்தனைக் கண்டு கொண்டன. "ஹலோ பிறன்ட் கோமத சப்ப சனிப்ப? எப்படி சுகம்"? நக்கலாகக் கேட்டான். ஆனந்தன் மௌனியானான். அவன் ஏதோ கெட்ட வார்த்தைகளைக் கொட்டினான். "உன்ர அதிர்ஸ்டம் இப்ப தப்பிட்டாய். எப்பயாவது உன்ன வேட்டையாடுவம். போ". என்றான்.

ஆனந்தனுக்குக் கண்கள் சிவந்து கோபம் பொங்கியது. மேரியை நினைத்துக் கொண்டான். "அவளைப் போய் பார்த்து ஆறுதல் கூறவேண்டும். எனது பிள்ளைகளைப் பார்க்கவேணும்". மனம் கூறிக்கொண்டிருந்தது. "இவன் மடையன் கிடக்கிறான்". ஒரு அலட்சியப் பார்வையை வீசிவிட்டு நடந்தான். அவனால் சரியாகக் கால்களைப் பதித்து நடக்க முடியாதிருந்தது. அடிபட்ட கால்கள் வலித்தன. கல்நாவ கிராமவீதியால் வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது. ஆட்களை இழுத்துக் கொண்டு வெள்ளம் பாய்ந்தது. போகமுடியாது என்ற நிலை வந்து விட்டது. சனங்கள் குழுமி நின்றார்கள். வெள்ளம் வடிந்தபாடில்லை.

மழை விட்டிருந்தது. நேரம் பகல் ஒருமணியைத் தாண்டியிருந்தது. வவுனியாவில் இருந்து லொறிகளில் பொலிஸ்காரர்கள் வந்து குவிந்தார்கள். சனங்களிடம் விசாரித்தார்கள். வழிப்பறி வெள்ளம் பாய்வதற்கப்பால் நடைபெறுவதாகச் சனங்கள் கூறினார்கள். லொறிகள் ஒன்றன் பின் ஒன்றாக மெதுவாக நகர்ந்தன. ஒரு லொறியில் இருந்து "மாத்தயா கொகத யன்ன. எங்க போறது"? குரலொன்று ஒலித்தது. ஆனந்தன் பார்த்தான். அவன் அடையாளம் கண்டுகொண்டான். தனது முறைப்பாட்டை அனுதாபத்தோடு பதிந்த பொலிஸ்காரர் பிரியாங்க. "மதவாச்சி" என்றான். லொறி சற்று நின்றது. "நகின்ட. ஏறுங்க" பிரியாங்க சொன்னான். ஆனந்தன் ஏறிக் கொண்டான். லொறி ஊர்ந்து சென்றது. மதவாச்சிக்கு வந்து விட்டான். லொறி திரும்பியது. நன்றி கூறி இறங்கிக் கொண்டான்.

மதவாச்சியில் இருந்து திருகோணமலைக்கு பஸ் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுராதபுரத்துக்குப் போய் அங்கிருந்து போகலாம் என்ற செய்தியை அறிந்தான். அனுராதபுரம் சென்றான். பஸ் மூன்று மணிக்கு வரும் என்றார்கள். மூன்றரை மணிக்கு பஸ் வந்தது. ஏறிக் கொண்டான். ஆறரை மணிக்குத் திருகோணமலையை அடைந்தது. அங்கிருந்து கிண்ணியா பஸ்சில் ஏறினான். ஏழரை மணிக்குக் கிண்ணியாத்துறையைக் கடந்து இருளில் நடந்தான். எட்டரை மணியிருக்கும். மெதுவாக வீட்டை எட்டிப் பார்த்தான். வீட்டில் பிள்ளைகள் சூழ மேரி அழுதகண்ணும் சிந்திய மூக்குமாக இருந்தாள். அசோக வனத்தில் சீதைசிறையிருந்ததைக் கம்பர் அழகாகச் சொல்வார். புகைபடிந்த ஓவியமாகக் காட்டுவார். அதனை நிஜமாகக் கண்டான். அவனது கண்கள் கண்ணீரைச் சொரிந்தன.

உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டான். அவன் இருளில் நின்றதை யாரும் கவனிக்க வில்லை. அங்கிருந்து திரும்பி படலைவரை சென்றான். மீண்டும் நேரே வெளிச்சம் படும்படி நடந்து வந்தான். "மேரி" அழைத்தான். மேரி திடுக்கிட்டுத் திரும்பினாள். ஆனந்தன் அவள் முன்னே நின்றான். தான் காண்பது கனவா? அல்லது நிஜமா? "அத்தான் வந்திற்றிங்களா"? ஓடோடி வந்து அவனது கால்களைக் கட்டிக்கொண்டு தேம்பித்தேம்பி அழுதாள். "எனது உடல்பொருள் ஆவியெல்லாம் நீங்கதான். என்ர கனவெல்லாம் நீங்கதான். என்ர கனவு மெய்ப்படவேண்டும் என்று வேண்டாத தெய்வங்கள் இல்லை. அந்தக் கனவு எனக்கு முன் மெய்ப்பட்டு நிற்கிறது. இறைவனே இணைபிரியாத வரம் வேண்டும்." இறைவனை மன்றாடினாள்.

பிள்ளைகள் அவனைக் கட்டிப்பிடித்துக் கொஞ்சினார்கள். மேரியின் அழுகை ஓயமட்டும் அப்படியே நின்றான். ஓய்ந்தபிறகு அவளைத் தூக்கிவாரி அணைத்தான். அந்த அணைப்பில் அவனது துயரங்கள் எல்லாம் தவிடுபொடியாகின. "அப்பா வந்திட்டார்". பிள்ளைகள் கூத்தாடினார்கள். வாங்கி வந்த பொருட்களைப் பிள்ளைகளுக்குக் கொடுத்தான். அரைநொடியில் செய்தி ஊரெல்லாம் பரவியது. சொந்தங்கள் ஒன்று கூடினார்கள். தனது அனுபவங்களை மனதுக்குள் போட்டுப் புதைத்துவிட்டு அவர்களோடு அளவளாவினான். இன்றுதான் மேரியின் முகத்தில் புன்னகை பூத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் நூல்கள்

1. இன்பக் கனிகள் - சிறுவர் பாடல்கள்
2. பாட்டுப் பாடுவோம் - சிறுவர் பாடல்கள்
3. காகமும் தம்பியும் - சிறுவர் பாடல்கள்
4. பாடி ஆடுவோம் - சிறுவர் பாடல்கள்
5. கடலும் காவேரியும் - சிறுவர் பாடல்கள்
6. சின்னச் சின்னப் பாட்டு - சிறுவர் பாடல்கள்
7. மனதுக்கினிய பாட்டு - சிறுவர் பாடல்கள்
8. ஆனந்தமான பாட்டு - சிறுவர் பாடல்கள்
9. சகோதரராய் வாழ்வோம் - சிறுவர் பாடல்கள்
10. ஆடி மகிழ்வோம் - சிறுவர் செயல் விளையாட்டு
11. பூஞ்சிட்டுக்கள் - சிறுவர் கதைகள்
12. சின்னத்தேவதைகள் -சிறுவர் கதைகள்
13. கண்ணனும் இராமனும். சிறுவர் கதைகள்.
14. தங்க மாம்பழம் - சிறுவர் கதைகள்
15. பளிங்குத் தீவு சிறுவர் நாவல்
16. பயங்கொள்ளலாகாது பாப்பா சிறுவர் நாவல்.
17. காட்டில் கலவரம்.- சிறுவர் நாவல்
18. உல்லாசப் பயணம் - சிறுவர் நாவல்
19. மனதில் உறுதி வேண்டும் - சிறுவர் நாவல்
20. வாக்கினிலே இனிமை வேண்டும் -இளைஞர் நாவல்
21. கேணிப்பித்தன் கவிதைகள் - கவிதைத் தொகுதி.
22. அந்த ஆவணி ஆறு சிறுகதைகள்
23. வம்மிப் பூ - சிறுகதைகள்
24. கேணிப்பித்தன் கதைகள்
25. அற்புதமான வானம் - சிறுவர் கதைகள்
26. சிறகு வைத்த கதைகள் - சிறுவர் கதைகள்.
27. துணிச்சல் மிக்க சுந்தரி சிறுவர் நாவல்
28. சுனாமி தந்த உறவு. சிறுவர் நாவல்.
29. ஏன் வந்தாய் - சிறுகதைகள்
30. அனர்த்த முகாமைத்துவம் ஒரு அனுபவ அணுகுமுறை
31. கனவு மெய்ப்பட வேண்டும் - நாவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியர் ...



கேணிப்பித்தன் ச.அருளானந்தம் அவர்கள் நாடறிந்த எழுத்தாளர். சிறுவர்களுக்காகப் பலநூல்களை எழுதி பல சாகித்திய விருதுகளைப் பெற்றவர். திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஆலங்கேணிக் கிராமத்தில் பிறந்தவர். ஆசிரியர், அதிபர் கல்விப்பணிப்பாளர் எனச் சேவையாற்றியவர். கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, பத்தியெழுத்து, நாடகம் எனப் பலதுறைகளிலும் ஈடுபட்டுழைப்பவர். முன்பள்ளிக் கல்வியில் ஆர்வம் கொண்டவர். ஆரம்பப் பிள்ளைப் பருவக் கல்வியில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். கலாபூஷணவிருது, ஆளுநர் விருது. கிழக்குப் பல்கலைக்கழக இலக்கிய முதுமானிப்பட்டம் ஆகியவற்றைப் பெற்றவர். இதுவரை 30 நூல்களை எழுதியுள்ளார். இந்நூல் அவரது முப்பத்தோராவது நூலாகும்.

'வாக்கினிலே இனிமை வேண்டும்' என்ற இவரது நாவல் 'றுகுணுப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் திரு. தம்மிக ஜயசுந்தர' அவர்களால் சிங்களத்தில் மொழிபெயர்ப்புச் செய்யப்படுகிறது. 'கனவு மெய்ப்பட வேண்டும்' என்ற இந்த நாவல் அற்புதமான கதையினைக் கொண்டது. நாமெல்லோரும் அவசியம் படிக்கவேண்டியது. வவுனியா மாவட்டத்தின் இயற்கைச் சூழலில் தோய்ந்து மெய்மறக்கவைக்கிறது. தமிழர் சமூகம் படும் அவலங்களைச் சித்தரித்துக் காட்டுகிறது. வேற்றுமையிலும் ஒற்றுமையை வற்புறுத்துகிறது. ச.அ.அருள்பாஸ்கரன் அவர்களது அட்டைப்படத்துடன் நல்ல படிப்பினையை வாசகர்களுக்குத் தருகிறது. கலாநிதி, கேணிப்பித்தன் ச.அருளானந்தம் அவர்களது நூல்களைத் தமிழ்கூறும் நல்லுலகம் வரவேற்று ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவரது இலக்கியப் பணி தொடர வாழ்த்துகிறேன்.

மனிதநேயஅமைப்புக்களின்
கூட்டமைப்பு (CHA)
திருகோணமலை

"தேசகீர்த்தி" வ.கலைச்செல்வன்
மாவட்ட அதிகாரி

9789555145138

...ERS (PVT) LTD. TEL : 2439401, 4907221

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org